திருச்சிற்றம்பலம்

# இந்திரகீல்புரப் பெயர்த்
# திருக் கழிப்பாலைப் புராணம்.

இஃது

யாழ்ப்பாணம், நீர்வேலி
திருவாளர், ச. சிவப்பிரகாசபண்டிதர் அவர்களால்
பாடப்பெற்றது.

இது
சிதம்பரம்
சி. பழநியப்ப முதலியார் தேவாரபாடசாலையின்
(50 ஆண்டு நிறைவு) பொன்விழா நினைவாக
தேவாரபாடசாலை அதிபரும்,
திருக்கழிப்பாலை தேவஸ்தான நிர்வாகியும் ஆகிய
திரு. சிவசங்கர சின்னைய முதலியார் அவர்களால்
வெளியிடப் பெற்றது.

15 DEC 1954
MADRAS
53

கிராஸ்வேவ் பிரஸ், சிதம்பரம்.

ஜய வருடம்

1954

உரிமை
தேவார பாடசாலை
அமைச்சுக்கே உரியது.

விலை ரூ. 1—8—0
தபாற் செலவு வேறு.

O23:38·211/93
N54
104820

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

## நால்வர் துதி.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி. (உமாபதிசிவம்)

## கணபதி.

திருச்சிற்றம்பலம்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.
(பண்-வியாழக்குறிஞ்சி-சம்பந்தர்)

## முருகன்.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடனடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே.

சமர சூரபன்மாவைத் தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்ப மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடையார்களே.
(திருக்குறுந்தொகை-அப்பர்)

## பைரவர்.

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோல கால பைரவனாகி வேழம்
உரித்துமை யஞ்சக்கண்டு ஒண்டிரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.
(திருநேரிசை-அப்பர்)

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
(பண்-கௌசிகம்-சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்.

---

B

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1954
MADRAS

# இந்திரகீலபுரப் பெயர்த்
# திருக் கழிப்பாலைப் புராணம்.

இஃது
யாழ்ப்பாணம், நீர்வேலி
திருவாளர், ச. சிவப்பிரகாசபண்டிதர் அவர்களால்
பாடப்பெற்றது.

---

இது
சிதம்பரம்
சி. பழநியப்ப முதலியார் தேவாரபாடசாலையின்
(50 ஆண்டு நிறைவு) பொன்விழா நினைவாக
தேவாரபாடசாலை அதிபரும்,
திருக்கழிப்பாலை தேவஸ்தான நிர்வாகியும் ஆகிய
திரு. சிவசங்கர சின்னைய முதலியார் அவர்களால்
வெளியிடப் பெற்றது.

---

Accn. No: 104820

கிராஸ்வேடு பிரஸ், சிதம்பரம்.

176p

ஜய ௵
1954

உரிமை
தேவார பாடசாலை
அதிபர்க்கே உரியது.

விலை ரூ. 1—8—0
தபாற் செலவு வேறு.

B

**இப்புராணம் கிடைக்குமிடம்:**

1. திருக்கழிப்பாலை தேவஸ்தானம்,
   சிவபுரி P. O.
   (தென்னார்க்காடு ஜில்லா).

2. சி. ப. தேவாரபாடசாலை,
   ஸ்ரீ மெய்கண்டார் நூல்நிலையம்,
   114, செங்கழுநீர்ப் பிள்ளையார்கோவில் தெரு,
   சிதம்பரம்.

**இத்தலம்:**

சிதம்பரம் புகைவண்டி நிலையத்தின் தென்கிழக்கு மட்சாலை வழியாக 2-மைல் சென்று சிவபுரியை (திருநெல்வாயில்) அடைந்தால் அத்தலத்திற்குத் தென்புறம் திருக்கழிப்பாலைத் தலம் இருக்கிறது.

104820

C

உ

சிவமயம்.

# நன்றியறிதலுரை.

திருக்கழிப்பாலை என்னும் தலம் சிவநெறிக்குரவர்களால் பாடப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. இத்தலத்துப் பதிகங்கள் இணையற்ற இனிய செந்தமிழ் நடையில் அமைந்திருப்பதோடு சைவசமயத்தின் தலைசிறந்த உண்மைகளை உறுதியாக விளக்கும் பெற்றியும் வாய்ந்துள்ளன. இதன் பெருமையை விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்.

இக்கோவிலின் நிர்வாகம் பண்டுதொட்டு என் குடும்பத்தார்க்கு உரியதாய் இருந்துவருவது என் குல முன்னோர்கள் செய்த சிவபுண்ணியப் பேறேயாகும். இக்கோவில் நிர்வாகப் பொறுப்பை யான் ஏற்றது முதல், ஆண்டிற்கு ஒருமுறை இலட்சார்ச்சனை ஒன்றை நடத்திவருகின்றேன். அங்ஙனம் சென்ற ஆண்டில் நடத்தியபொழுது என் தேவாரப் பாடசாலையின் ஆசிரியர் உயர்திரு இராமலிங்க ஓதுவாரவர்கள் இத்தலத்திற்குத் தமிழில் புராணம் ஒன்று இருப்பதையும் அதை என் முன்னோர்கள் அச்சிட்டு நாட்டிற்கு உதவவேண்டுமென்னும் விருப்புடையராய் இருந்ததையும் என்னிடம் கூறினார்கள். புராணம் என்பது பழைய வரலாறு ஆதலாலும் அதை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்பது என் முன்னோர்களின் பெருவிருப்பு என்பதையும் அறிந்த யான் அதைச் சிறந்த முறையில் அச்சிடவேண்டிய முழுப் பொறுப்பையும் ஓதுவாரவர்களிடமே ஒப்படைத்தேன். ஓதுவாரவர்கள் இடையறாத ஊக்கங்கொண்டு வேண்டுவனவற்றைக் குறைவறச் செய்து அச்சுக்குக் கொடுக்கும் நிலையில் புராணத்தை வைத்திருந்தனர். இதை அறிந்த கீழைத் திருக்கழிப்பாலை திருவாளர்களான சி. பழநியப்ப முதலியார், பித்தர்புரம் சி. இராமலிங்க முதலியார், ஆச்சாள்புரம் ஆ. ப. ஆறுமுக முதலியார், மேலைத் திருக்கழிப்பாலை V. சாமியப்ப முதலியார் ஆகியோர் யான் கேட்காமலே புராணத்தை அச்சிடுவதற்குப் பொருளுதவிசெய்து என்னை ஊக்கினார்கள். இவர்களுடைய இந்த அறச்செய்கை "என்னானும் ஒருதவி தன்னான் முடிவதெனின் தானே முடித்தல் தலை" என்னும் ஆன்றோர் வாக்கை என் நினைவிற்குக் கொண்டுவந்து என்னை மகிழ்வித்தது. இவர்கள் அனைவர்க்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்,

இப்புராணத்திற்குப் பயன்படக் கூடிய அளவில் பெரிய புராண விரிவுரையில் எழுதியுள்ள உரைகளையும் குறிப்புக்

களையும் சேர்த்துக்கொள்ளுமாறு உத்தரவு தந்தும் பாயிரம் உதவியும் உள்ள கோவை, சிவக்கவிமணி, உயர்திரு C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கட்கும்; திருக்கழிப்பாலைத் தேவாரப் பாசுரங்கள் இரண்டினுக்கு விரிவுரை எழுதி உதவியவரும், சிதம்பரம் சிவஞான திருத்தளியில் வசித்து வந்தவர்களுமாகிய இறைவன் திருவடி நீழல் எய்திய, ஸ்ரீலஸ்ரீ செப்பறைச் சுவாமிகள் அவர்கட்கும், பதினோராந் திருமுறையில் இத்தலத்தைப் பற்றி வந்துள்ள இரண்டு பாடல்களுக்கு உரை எழுதித் தந்த செந்தமிழ்ப் புலமையும், சிவநெறிப் பற்றும் சான்ற திருவாளர்களான பண்டித அ. கந்தசாமிப்பிள்ளை, வித்துவான் ந. சிவப்பிரகாச தேசிகர் வித்துவான், வெள்ளைவாரணர் ஆகியோர்க்கும், எளிய, இனிய, செந்தமிழில் இப்புராணத்திற்கு வசனம் (உரை நடை) எழுதி உதவியும், அச்சுப்பிழைகளைத் திருத்திக் கொடுத்தும் இன்னும் வேண்டுவனவற்றை உடனிருந்து உதவி புரிந்த மெய்கண்ட வித்யாசாலை ஆசிரியரும் இயற்றமிழ்ப் புலவருமாகிய திரு. P. A. கிருஷ்ணசாமிப்பிள்ளை, கல்வெட்டுக்களைப் படித்துப் பொருட் சுருக்கம் எழுதி உதவிய, கல்வெட்டு ஆராய்ச்சியாளரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறை ஆசிரியருமாகிய, வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார். முன்னுரை எழுதி உதவிய உயர்சைவத் திரு S. சச்சிதானந்தம் பிள்ளை B. A. L. T., உபோற்காதம் எழுதி உதவிய பிரமஸ்ரீ புராணரத்னம், உபந்யாஸ சரபம், ஸம்ஸ்கிருத விசாரதா C. S. ஸச்சிதானந்த தீக்ஷிதர், பிழை திருத்தம் செய்துதந்த வித்துவான் வி. சண்முகயிர தேசிகர், இந்நூலை விரைவில் அச்சிட்டு உதவிய சிதம்பரம், கிராஸ்லேடு அச்சக உரிமையாளர்க்கும் என் உளம் கலந்த நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்புராண நூலையும், திருக்கழிப்பாலைத் தேவாரப் பாடல்கள் இரண்டினுக்குச் செப்பறை சுவாமிகள் எழுதிய விரிவுரையையும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் பொன்னேபோல் பாதுகாத்துத் தக்க சமயத்தில் அதை எனக்குத் தெரிவித்து என் முன்னோர் உள்ளக் கருத்தை நிறைவேற்றி வைத்த என் பாடசாலை ஆசிரியர் உயர்திரு இராமலிங்க ஓதுவாரை யான் என்றும் மறவேன். அவர் அருஞ்செயலைப் பாராட்டுகின்றேன்.

ஒன்றிற்கும் பற்றாத என்னை, இச்சிவப் பணியில் ஈடுபடுத்திய அம்மையப்பனைப் பன்முறையும் வணங்குகின்றேன்.

சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக.

இங்ஙனம்,

சிதம்பரம். 4—12—1954.

சிவசங்கர, சின்னையா முதலியார்,
கோவில் பொறுப்பாளர்.



திரு. சிவசங்கர சின்னைய முதலியார்,
திருக்கழிப்பாலைக் கோயில் 3-வது நிர்வாகி,
புராணம் வெளியிட்டவர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கழிப்பாலைப் புராணப் பாயிரம்.

---

திருக்கழிப்பாலைப் புராணம் என்னும் இந்நூலைப் பதிப்பிக்கும் உரிமையாளர்களாகிய சிவபுண்ணியச் செல்வர்கள் இதற்கு ஒரு பாயிரம் எழுதும்படி அடியேனைப் பணித்தார்கள். அடியேன்பால் வைத்த அன்பின் பெருக்கினால் அவர்கள் தேடும் இச்சிவபுண்ணியத்தில் இதன் மூலம் அடியேனுக்கும் ஒரு பங்குதர விசைந்ததும் அவர்களது பெருந் தன்மையே யாகும.

தலச் சிறப்பு:— திருக்கழிப்பாலை என்பது சோழ நாட்டில் தேவாரம் பெற்ற பதிகளுள் காவிரியின் வடக்கில் நான்காவது பதியாகும். மூவர் பாடலும் பெற்ற சிறந்த பெருமையுடையது. இத்தலம் முன்பு கொள்ளிடம் வடகரையில் கடலருகில் அமைந்திருந்தது. கடல் கொள்ளப்பட்டுச் சிதைந்துபோன படியால் அம்மூர்த்திகளைச் சிவபுரி என்னும் பதியில் கொண்டுவந்து. சிறுகோயில் அமைத்து அன்பர்கள் தாபித்து வழிபாடு செய்து வணங்கி வந்தார்கள். அத்திருக் கோயிலே இப்போது நாம் காணவுள்ளது. சுவாமி பால்வண்ணநாதர் என்று வழங்கப் பெறுவர். அதற்கேற்றபடியே அமிர்த மயமாகிய அழகிய தூய வெண்மை நிறத்துடன் விளங்குவது அவரது மூலலிங்கத் திருமேனி. அதனை அடுத்துக் கருப்பகிருகத்தில் அம்மையும் அப்பனுமாகக் கபிலமுனிவருக்குக் காட்சி யளித்த மணவாளநம்பி திருக்கோலம் சிறந்து விளங்குகின்றதை இன்றும் காணலாம். மணவாளநம்பி என்ற இத்தலத்து இறைவரின் சிறப்புப் பெயர் சேக்கிழார் பெருமானால் பெரிய புராணத்துள் "சினவிடை. யேறுகைத் தருளு மணவாள நம்பிகழல் சென்று தாழ்ந்து," என்று திருநாவுக்கரசுநாயனார் புராணத்துள் (173) வைத்துப் போற்றப்பட்டுள்ளது. "கழிப்பாலை" என்ற பெயர் இது கடலருகே கடற்கழிப் பக்கம் அமைந்தது என்று பொருள்படும் "உவர்கொண்ட கழிப்பாலை யுள்ளதுமே" என்பது ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு. இரங்கல் "நெய்தல்" என்ப இலக்கண மாதலின் நெய்தற்றிணைக் குரிய கடல் சார்ந்த நிலத்தில் உள்ள இப்பதியைப் போற்றிய தேவாரத் திருப்பதிகங்கள் தமிழ் அகப்பொருளில் தலைவனைப் பிரிந்த தலைவியிரங்கும் அகத்துறைப்பொருளை உட்கொண்டு அமைந்திருப்பது காணலாம்.

புராணம் :- இப்புராணம் வடமொழியிலிருந்து தமிழில் 42 ஆண்டுகளின்முன் யாழ்ப்பாணத்து நீர்வேலி திரு. சிவப்பிரகாச பண்டிதரால் இயற்றப்பட்டது. கடவுள் வாழ்த்து முதல் முடிபுரை ஈருக ஒன்பது பகுதிகளைக்கொண்டு 276 இனிய செந்தமிழ்ச்செய்யுட்களில் நிறைவேறியுள்ளது. இதனுள் "கபிலன்றவநிலை" என்பது சிறந்த பகுதி. சிவபெருமான் உமாதேவியாருக்கு இத்தலப் பெருமையைச் சொன்னபடியினைச் சூதமுனிவர் நைமிசாரணி முனிவர்களுக்கு எடுத்துக் கூறியதனையே வரலாறு இப்புராணத்தின் அமைப்பாகும். இத்தலத்தில் வழிபட்டோர் அடையும் இம்மை மறுமைப் பெரும் பயனையும் ஞானசித்திபெற்று வீட்டின்ப மடைதலையும் இப்புராணம் விரித்துக் கூறுகின்றது. இவை திருஞானசம்பந்தப் பெருமானது அருள்மெய்த் திருவாக்கானும், அரசன் திருவாக்கினானும் உறுதிபெற உபதேசிக்கப் பெற்றன. "இணையார் கழலேத்த இடர்கெடுமே" "அடியார்க் கடையா அவலம் அவையே." "இறையார் கழலேத்த இடர்கெடுமே" "எதிர்கோள் மொழியா லிரந்தேத்து மவர்க்கதிரும் வினையாயின ஆசறுமே" "உனவார் கழலே தொழுதன்னு மவர்க் கிலதாம் வினைதான்" என்பன வாதியாய் வரும் தேவாரங்கள் காண்க.

ஆசிரியர் :— இப்புராணத்தை இனிய செந்தமிழ்ச் செய்யுள்களால் இயற்றியவர் யாழ்ப்பாணத்து, நீர்வேலி திரு. சிவப்பிரகாச பண்டிதர் என்னும் புலவர் சிகாமணி யாவார். இவர் இற்றைக்கு 50 ஆண்டுகளின்முன் வாழ்ந்தவர். இவர் யாழ்ப்பாணத்தில் சைவ சித்தாந்த சிவஞான பானுவாய் விளக்கமாய் அறியப்பட்ட சிவசங்கர பண்டிதருடைய குமாரர். 'தந்தையே குருவுமானவர்' என்றபடி ஐம்பெருங் குரவர்களுள் ஒருவர் என்று சொல்லப் பெறுந்தன்மையில் தமது தந்தையாரிடத்தே வடமொழி தென்மொழி யென்னும் இரு மொழிகளை நன்கு கற்றுத் தேர்ச்சியடைந்தவர். இவர் பலநூல்களையும், மொழிபெயர்ப்பு, உரைநூல்களையும் இயற்றியுள்ளார். சிவபூசா துரந்தரர். சிவபெருமானிடத்துப் பதிந்த அன்புடையவர் என்பது இப்புராணத்துள் பெருமானையும் இறைவியையும் நாயன்மார்களையும் கூறும் அருமைப் பாட்டினால் நன்கு விளங்கும். சோழநாட்டுச் சிறப்புக் கூறும் பகுதியால் இவரது ஆழ்ந்த சிவபத்தி புலனாகும். யாழ்ப்பாணத்துப் பெருமக்கள் திருத்தில்லையில் வந்து அம்பலவாணரை வழிபடுதலிலும் அதன் பொருட்டே அங்கு வசித்தலிலும் பெருவிருப்புடையவர்கள். ஞானப்பிரகாசத் திருக்குளமும் அதனைச் சூழ்ந்து அவர்கள் நிலையாக வாழும் இடங்களும் இன்றும் அதற்குச் சான்று பகர்கின்றன. அவர்களின் அந்தப் பேரார்வத்தான் நாம் ஸ்ரீ ஆறுமுக



நாவலர் சபாபதி நாவலர் [illegible] பண்டிதர் அம்பலவாண நாவலர் இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் முதலாகிய உத்தமோத்தமப் பேரறிவாளிகளின் அரிய உபகாரங்களை இன்றும் பெற்று வாழ்வதற்கு ஏதுவாய் உள்ளது. இத்தல புராணம் பெற்றதும் இவ்வாறேதான். இவ்வாசிரியரும் தமது வாழ்க்கையில் பிற்காலத்தில் சிதம்பரத்தில் வந்து தங்கியிருந்தார். அப்போது கழிப்பாலைத் திருக்கோயிற் பரம்பரைத் தருமகருத்தரும் சிதம்பரம் தேவார பாடசாலைத் தாபகருமாகிய சிவபுண்ணியப் பெருஞ்செல்வர் திரு. பழநியப்ப முதலியார் அவருடைய சீலத்தையும் புலமையினையும் அறிந்து அவரையணுகி வடமொழியிலிருந்த இப்புராணத்தை இனிய தமிழ்ச் செய்யுள் வடிவத்தில் ஆக்கித் தரும்படி வேண்டினர். அவரும் இசைந்து இதனை ஆக்கித்தந்தார். அதன் பின்பு அவர் திருமறைக் காட்டுக்குச் சென்று வழிபட்டிருந்து சிவபதமடைந்தனர் என்று தெரிகிறது. திருமறைக்காட்டில் யாழ்ப்பாணத்துச் சைவமரபின் தேசிகர் எழுந்தருளியுள்ளார்கள். ஆதலின் அவர் அங்குப்போய் வழிபட்டுத் தங்கியிருந்தது அடியார் நடுவுளிருத்தலை விரும்பும் அவரது குருபத்தியினை விளக்குகிறது. இப்புராணத்துள் தமக்கு வித்தியா குரவராயிருந்த தந்தையாரையும் தமது சிவதீட்சா குருவாகிய அருணாசலசிவாய தேசிகரையும், தமது தந்தையாரின் தீட்சாகுரு வித்தியா குருவாகிய இருவரையும் போற்றுகின்ற திறத்தாலே அவரது குருபத்தித் திறன் நன்கு விளங்கும்.

புராணம் பாடுவித்தவர் :— இப்புராணத்தைப் பாடுவித்தவர் சிவபுண்ணியப் பெருஞ்செல்வராகிய திரு. பழனியப்ப முதலியார். திருக்கழிப்பாலைப் பரம்பரைத் தருமகருத்தர். இவரே நமது தமிழ் நாட்டில் முதல் முதல் தேவார பாடசாலை தாபித்தவர். அது இன்றளவும் இடையறாது நடைபெற்று வளர்ந்து வருகின்றது. அதற்கு அண்மையில் இற்றைக்கு ஒரு மாதத்திற்குமுன் பொன் விழாவும் கொண்டாடப் பெற்றதை யாவரும் நன்கறிகுவர். அதன் அறிக்கையில் இவரது வரலாறும் இவர் குடும்பத்தவர் இன்றளவும் விளக்கமாய் நடத்திவரும் சிவபுண்ணியச் செயல்களும் நன்கு அறிவிக்கப்பெற்றிருக்கின்றனவாதலின் இங்கு விரிக்கப்படவில்லை. இவரால் பரிபாலிக்கப்பட்டு எல்லா வகையாலும் பெருஞ் சிறப்புடைய இத்தலத்திற்குத் தலபுராணம் தமிழில் இல்லாமையை ஒரு குறைவாக எண்ணிக் கவலை கொண்டே இவரது கவலையே நமக்கு இப்புராணத்தைப் பெறுவித்தது. இக் குடும்பத்தினர் இன்றும் இத்திருத்தலத்துக்குப் பற்பலவாகிய திருப்பணிகளும் நித்தியம் நைமித்திகங்களாகிய சிறப்புக்களையும் செய்து சிவவாழ்வில் வாழ்கின்றார்கள். பாடசாலையையும் இக் கோயிலையும்

தங்கள் இரண்டு கண்கள் போலக்காப்பாற்றி வருகின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

பதிப்புச் சிறப்பு:— இனி, இப் பதிப்பைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லி இதனை நிறைவாக்குகின்றேன். இப் பதிப்புப் புராணம் பாடுவித்த பெரியாரின் பேரனும் பாடசாலையின் அதிபரும் இக்கோயில் பரம்பரைத் தருமகருத்தரு மாகிய திரு. சிவசங்கர பிள்ளைய முதலியாரவர்களால் செய்யப்பெற்றது. இவரும் தமது பாட்டனார்போன்றே சிவபுண்ணியங்களில் பேரார்வ முடையவர். சிவ புண்ணியங்களைச் சிறக்கச் செய்து கண்டு மகிழும் பேராசையுடையவர், இவர் செய்துவரும் சிவபுண்ணியச் செயல்களின் சிறப்புக்களும் டை பொன்விழா அறிக்கையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சிவச் சார் புடைய பதிபுண்ணியங்களையேயன்றி உலக உபகாரங்களாகிய பசு புண்ணியங்களிலும் ஈடுபட்டுச் செய்துவருகின்ற தன்மையுடையவர்கள் இப் புராணத்தைத் தமிழில் பெறுதற்கு இவரது பாட்டனாருக்கு எத் தனை ஆர்வமிருந்ததோ அதைவிடப் பேரார்வம் இவருக்கு அதனைச் சிறக்க அச்சிட்டு எல்லாரும் எளிதில் படிக்க அளிக்கின்ற செயலில் உள்ளதாகும். அதுபற்றியே இப் பதிப்பில் இத் தலத்தைப் பற்றித் தெரியவேண்டிய எல்லாச் செய்திகளையும் இதிற் சேர்த்திருக்கிறார். தலத்தேவாரப் பதிகங்களும் 11-ம் திருமுறைப் பாட்டுக்களும், மூவர் முதலிகள் இங்கு வந்து வழிபட்ட வரலாறுகள் 12-ம் திருமுறையாகிய பெரிய புராணத்துட் பேசப்பெறும் பாடல்களும் பிறவும் உரைக் குறிப்புக்களுடனும் உரைகளுடனும் பதிக்கப்பட்டுள்ளன. செய்யுளில் படிக்க இயலாதவர்களுக்காகப் புராண வசனச் சுருக்கமும் சேர்க்கப் பட்டுள்ளது. தலப்படங்களும் இதனை அணிசெய்கின்றன.

இவர்களும் இவர் குடும்பங்களும் மரபினரும் இவர்கள் செய்து வரும் உத்தமோத்தமமாகிய சிவபுண்ணியங்களும் நீடுவாழ்ந்து வளர்ந் தோங்குக. இப்புராணப் பதிப்பு அன்பர்களுக்கு நலஞ்செய்து நின்று நிலவுக. பால்வண்ணநாதர் திருவருள் சிறக்க. அன்பர்களும் வையகமும் துன்பம் நீங்கி இன்ப மடைக.

கோயமுத்தூர்,
சேக்கிழார் நிலயம்,
26—10—54.

அடியார்க் கடியேன்,
சிவக்கவிமணி,
C. K சுப்பிரமணிய முதலியார், B. A.





திரு. ப. இராஜரத்தினவேலு முதலியார்,
திருக்கழிப்பாலைக் கோயில் 2-வது நிர்வாகி,

உ

திருச்சிற்றம்பலம்.

# உபோற்காதம்.

முழுமுதற் கடவுளின் திருவருள் உலகில்; தானே க்ஷேத்ர உருவமாய் அமைந்து ஆங்காங்கு தனது சகுணரூபமான த்யானத்தை மக்கள் அநுபவிக்கவே நிர்மாணம் செய்வதுபோல் அமைவது வழக்கம். அம்மாதிரி விஷயங்களை நூல்மூலமாக அடிப்படைகொண்டுள்ளதை ஒருமையம் நாராயணன் வியாஸர் என்னும் பௌராணிகரை நியமித்தார். அதுகாறும் உலகில் க்ஷேத்ரம் என ஏற்பட்டது இல்லை எனவே முற்றிலும் கூற இடமுண்டு.

அப்பெருமைகளை நாராயணன் அம்சமாககொண்ட வியாஸர் அநேகக்ரந்தம் என பெயர்பெற்று விளங்க பதினெண் புராணங்களையும் எழுதினார். அதோடு நில்லாமல் சௌனகர் முதலிய முனிவர்களைக் கொண்டு சொல்வதுக்கும் பரவுதலாயிற்று.

தானே ஆட்கொண்ட புராணங்களுள் மிக்க சிறப்புற்று விளங்கும் "கழிப்பாலை" என்றும் பெயர்பெற்ற க்ஷேத்ரம் கபிலரின் தவம் காரணமாக உண்டானது என புராணம் கூறுகிறது.

இத்தலத்திற்கு "இந்த்ரகீலம்" என்ற இடுகுறி பெயர்; ஆனந்த தாண்டவம் செய்யும் ஈசனது இடதுகண் பார்வை இந்த க்ஷேத்ரத்தில் விழுவதால் மிக்க மேன்மை உள்ளது என எண்பிக்கிறது. காணவும், துதிக்கவும், விசாலமான முக்தி அடைய வழியும் உடைய ஸ்தலம் என பார்வதிக்கு பரமசிவன் சொல்வது என நன்கு புராணம் கூறுகிறது. இதையே வியாச முனிவரும் வடமொழி நூலினால் முக்ய கருத்தாக வெளியிட்டதை மொழி பெயர்த்து பாசுரமாக அடைத்தது என ஆசிரியர் சொல்வதுபோல் பதினெண் புராணகதையில் இது சேர்க்கப் பட்டுள்ளது என சொல்லாமலே விளங்கும்

சிதம்பர புராணத்தில் கூறுகையில்; கொள்ளிடத்திற்கு பெயர் வடமொழியில் "ஸ்ரீ நீபுரமஹாநதி" என விளங்கும். அதன் வடபாகத்தில் இத்தலம் அமைந்துள்ளது மிக்க விசேஷத்தை காட்டுகிறது.

கபிலர் அவதாரம் ஸாக்ஷாத் விஷ்ணு உருவம் என பாகவதம் முதலான நூல்கள் கூறும். அவரது அம்சங்களைப் பற்றி விவரிக்கையில்;

க்ருதயுக ஆரம்பத்தில் இருந்தார் என கூறுவது மிகச்சான்று. அங்ஙனம் உண்மை கூறுமிடத்து அடுத்த திரேதாயுகத்தில் ராமர் உண்டானார் என்பதும், சகரமஹாராஜனது யாக ஸம்ரக்ஷணகாலத்தில் இக் கோவில் ஏற்பட்டதாகவும் கூறுகிறது மிக்க பொருத்தமே. பின்பு அன்று முதல் இன்றுவரை விசேஷ பெருமைதரும் இவ்விடத்தில் திருஞான ஸம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார், ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள், சேக்கிழார் இந்நால்வரும் பாடப்பட்டது என்றால் மிக்க விசேஷ பலனை தரக்கூடியது என்றே ஐயமறக்கூற முன்வரவேணும்.

மூர்த்தி, தீர்த்தம், க்ஷேத்ரம், இம் மூன்று மஹிமையும் ஒருங்கே அமையப்பெற்ற இடம். மற்றும்; ஆதியில் பாசுபத அஸ்திரம் வாங்க அர்ஜுனன் தவம் செய்யுங்கால்; அவனுக்கு அநுக்ரஹிக்கவே முழுமுதற்கடவுள் தனது பத்னியுடன் பசு பாசம், நீங்கிய பதியான நான் உள்ளேன் என இறைவன் உண்மையாகவே வேடுவன், வேடுவச்சி உருவம் எடுத்து தபஸை கலைக்க தனது வாசஸ்தலமாக திருக்கழிப்பாலை என்ற இடத்தை வைத்துக்கொண்டார். அந்த இடத்தை அமைத்து அங்கிருந்து திருவேட்களம் என்ற திருப்போர்களத்திற்கு புறப்பட எத்தனித்த இடம் இத்தலம் ஆதலால் இதற்கு ஓர் தனிமையான சிறப்பும் காண்கிறது.

அவ்விடத்தில் அர்ஜுனனுக்கு அநுக்ரஹித்த பின்பு இவ்விடம் பெயர் பெற்ற ஸ்தலமாக ஆயிற்று.

மற்றும், சிதம்பர க்ஷேத்ரமான்மியத்தின் உத்தர காண்டத்தில் உள்ளது என்று; வ்யாஸர் சொல்லி உள்ளதும் குறிப்பிடத்தக்க விஷயம். ஆதியில் ஈசனது திருவுருவங்களில் இவ்விடம் முக்ய கருத்தாக வெளியிட்டிருப்பது க்ஷேத்ர மான்மிய கோட்பாடினாலும் நன்கு விளங்குகிறது.

“திருக்கழிப்பாலை புராணம்” பாசுரங்கள் முறையில் 276-பாடல்கள் அமையப்பெற்றது. அதை நீர்வேலி, ஸ்ரீ சிவப்ரகாச பண்டிதரின் ஆர்வமே ஈசனது குறைவில்லா உருவ ஆனந்த மநுபவிக்க; தானே ஆட்கொள்ளும் வண்ணம் எழுதி இருப்பது நான் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். அவர் எழுத வில்லை, சொல்லவில்லை, என தோன்றுகிறது. தன் புராணத்தை எழுத பெயரினாலேயே சிவப்பிரகாச பண்டிதர் என்னும் உருவம் அடைந்து தோன்றினாரோ? என்றும் நன்றாக புலப்படுகிறது.

இப்புராணம் தவிர; மற்றும் அநேக 16-நூல்கள் இவ்வாசிரியர் எழுதி உள்ளார் என்றும் தெரியவருகிறது. இப்பெருமையை நன்கு



தெளிவுபடுத்தும் வண்ணம் அமைக்க ஸ்ரீ பழநியப்ப முதலியார் வகையறா தர்மபரிபாலனம் செய்துவரும் மிக்க மேன்மையை உலகம் நன்கு அறிந்து வருகிறது. இதுகாறும் பரம்பரையாக வந்தவர்கள் எல்லாம் செவ்வனே பரிபாலித்து வருவதை உற்று நோக்குங்கால்; நான்காவது வர்ணத்தர்களே தர்மசிந்தனை, இஷ்டாபூர்த்தம் என வடமொழியில் சொல்வதுபோல் கோவில்கட்டும் பணியும், தர்மகைங்கர்யமுமே முக்யம், என கருதி செய்கிறது மிக்க போற்றுதலுக்கு உரிய விஷயம்.

இவ்விதமே பின் வரும் சந்ததிகளும் அவ்வாறே பணியில் ஈடுபட்டு தர்மத்தை காப்பார்கள் என்பதும் திண்ணம். “காப்பதுவிரதம்” என்ற பழமைப்படி நடத்தி வருகிறது போற்றுதலுக் குரிய விஷயம்.

முக்யமாக நூல் எழுதி 45 வருஷத்திற்கு பிறகு அதை அச்சிட முன்வந்திருப்பது முக்யமாக போற்றுதற்குரிய விஷயம். உலகில் படித்தல், சொல்லுதல், எழுதுதல், இவைகளைவிட அச்சிட உதவி செய்வதே மேல் என ஸூதஸம்ஹிதையிலும் மற்றும் நூல்களிலும் போற்றுதல் காண்க.

அப்பணியை மேற்கொண்ட ஸ்ரீ சிவ, சின்னையா முதலியார் அவர்களுக்கு ஈசன் மேன்மேலும் புகழும், தர்மசிந்தனையும், கொடுத்து அவர்களது குடும்பத்தையும், பணியையும் வ்ருத்தி செய்ய அருள்புரிவாராக!

“தென்னாடுடைய சிவனே போற்றி”

திருச்சிற்றம்பலம்.

புராணரத்னம், உபந்யாஸசரபம், ஸம்ஸ்க்ருத விசாரதா,
C. S. ஸச்சிதானந்த தீக்ஷிதர்,
நெ. 6, தெற்கு ஸந்நிதி,
சிதம்பரம்.
13—11—1954.

உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்திற்குக் கீழ்த் திசையிலுள்ளதோர் தலம் திருக்கழிப்பாலை. இதற்கு இந்திரகீலபுரம் என்னும் பெயரும் உள்ளது. இது மூவர் முதலிகளால் அருளிச்செய்யப்பட்ட எட்டுத் திருப்பதிகங்களைப் பெற்ற பெருமையுடையது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இத் தலத்தின் பழைய வரலாறுகளைச் சைவப் பெரும்புலவராகிய யாழ்ப்பாணம் நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதர் இந்திரகீலபுரப் பெயர்த் திருக்கழிப்பாலைப் புராணம் என்னும் இந்நூலிற் பாடியுள்ளார். பாடல் தொகை 276.

இதனைப் பாடுமாறு வேண்டியவர் இத் தலத்தின் தேவகோட்டத்துப் பரம்பரைத் தருமகர்த்தரும், குருலிங்க சங்கம பத்தியாற் சிறந்த சிவஞானச் செல்வரும், பெருநிலக்கிழாரும், சிதம்பரத்தில் தேவார பாடசாலையொன்றை என்றும் நிலைவு முறையில் தாபித்த சைவ வள்ளலுமாகிய திரு சி. பழநியப்ப முதலியார் என்னும் பெருமகனாராவர். இவர் ஆதரவில், இப் புராண ஆசிரியர் சிதம்பர தலத்துத் திருமடமொன்றில் தங்கியிருந்து கி.பி. 1912ல் இதனைப் பாடினார் என்று அறியப்படுகிறது. இவ்வாசிரியர் வரலாற்றுச் சுருக்கமும் அவர் தந்தையார் மாண்பும் இப்புத்தகத்தின் 73, 74-ம் பக்கங்களில் காணவுள்ளன.

இப் புராணத்திற்கு முதனூல் ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரமான்மிய உத்தர காண்டம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இது கடவுள் வாழ்த்து, அவையடக்கம், திருச்சோழ நாட்டுச் சிறப்பு, புராண வரலாறு, தல விசேடம், தீர்த்த விசேடம், கபிலன தவநிலை, இந்திரகீல நாமகரணம், கபிலனருட்பேறு, முடிபுரை என்னும் பத்துப் பகுதிகளையுடையது. சைவசித்தாந்தக் கருத்துக்கள் பல ஆங்காங்கே இவற்றில் பொதிந்துள்ளன. நூலின் நடையும் அழகியது, இனியது.

இத் தலத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் சிறப்புக்கள் பற்பல. அவற்றுள், திருமால் இலக்குமி தேவியோடும் இங்குப் போந்து வழிபட்டு "வல்லபம் பெற்று மறையின் மாபாடியம் வகுத்தான்" என்பதும், பதஞ்சலி முனிவர் மாபாடியமாம் மோடியோக நூலையும்,



சைமினி முனிவர் பூர்வ மீமாஞ்சையையும் இத் தலத்திருந்துகொண்டு இயற்றினர் என்பதும், கபில முனிவரும் "அரிய ஞானமே தங்குமா சாத்திரந்தான்செயற்கு அருள் பொங்குமா தவம் செயப் பொருந்தும் நற்றலம்" இத் திருக்கழிப்பாலையே என்றுணர்ந்து, இங்கே பன்னெடுங் காலம் பெருந்தவம் புரிந்தார் என்பதும் சிறப்புவகையில் கவனிக்கற்குரியன.

இந் நூலின் அநுபந்தங்களாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள் பின்வருமாறு:— (1) புராண வசனச் சுருக்கம், (2) திருக்கழிப்பாலையைக் குறிக்கும் சம்பந்தர் திருவிலம்பையங் கோட்டூர் தேவாரப் பாசுரம் ஒன்று, (3) திருக்கழிப்பாலையில் அவர் அருளிய தேவாரப் பதிகங்கள் இரண்டு (குறிப்புரையுடன்), (4) திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் இத் தலத்தைக் குறிக்கும் திருச்செய்யுட்கள் மூன்று (உரையுடன்), (5) திருநாவுக்கரசு சுவாமிகள் இங்கு அருளிச்செய்த திருப்பதிகங்கள் ஐந்து (குறிப்புக்களுடன்), (6) சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் ஒன்று (குறிப்புரையுடன்), (7) இத் தலத்திற்குச் சுவாமிகள் வந்து வணங்கினதைக் கூறும் பெரிய புராணச் செய்யுள் (பொழிப்புரையுடன்), (8) இப் பதிகத்தின் முதல் பாசுரத்திற்குச் சிவப்பிரகாசதேசிகர், சிவக்கவிமணியவர்கள், ஸ்ரீ செப்பறைச் சுவாமிகள் ஆகிய மூவர் குறிப்புரைகள், (9) பிற தலத் தேவாரங்களில் இத் தலத்தைக் குறிக்கும் ஐந்து பாசுரங்கள், (10) பதினோராம் திருமுறையில் உள்ள சிவபெருமான் திருவந்தாதியில் இத் தலத்தின் பெயர் வரும் பாசுரம் இரண்டு (மூன்று புலவர்கள் வரைந்த உரைகளுடன்), (11) "ஊனுடுத்தி" எனத் தொடங்கும் திருத்தாண்டகத்துக்குச் செப்பறைச் சுவாமிகள் தந்த விரிவுரை (25 பக்கம்), (12) "செற்றதோர் மனமொழிந்து" எனவரும் திருதாண்டகத்திற்கு ஷை சுவாமிகள் தந்த விரிவுரை (3 பக்கம்), (13) ஸ்ரீ செப்பறைச் சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம், (14) இத் தலப் பதிகங்களுள் ஆறனுக்குச் சிதம்பர நடராஜ ஓதுவாமூர்த்திகள் தந்த குறிப்புரை, (15) திருக்கழிப்பாலைத் தலபுராண ஆசிரியர் வரலாற்றுச் சுருக்கம்.

இந் நூலின் அநுபந்தங்களில் சிறப்புவகையில் பாராட்டுதற்குரிய விஷயம் ஒன்றுண்டு: அது, 'ஊனுடுத்தி' எனவரும் திருத்தாண்டகத்துக்கு ஸ்ரீ செப்பறைச் சுவாமிகள் சொன்ன அரிய விரிவுரையை ஸ்ரீ நடராஜ ஓதுவாமூர்த்திகள் எழுதிவைத்திருந்ததும் அதனை இங்கு வெளியிட்டிருப்பதும் ஆகும். புலமை சான்ற தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் செய்யும் அரிய சொற்பொழிவுகளிலும், நடத்தும் வகுப்புகளிலும், பெரும்பாலோர் அறிவிற்குப் புலப்படாத அரும் பெரும் உண்மைகளும்

நயங்களும் செறிந்துள்ளன. அவை எழுத்து வடிவில் வாராமல் மறைந்துபோகும் பெருங்குறை தமிழகத்தில் காண்கின்றது. இதனை நீக்குதற்கு ஓர் வழிகாட்டியாக ஸ்ரீ ஓதுவாமூர்த்திகள் விளங்குகின்றார்கள். அங்ஙனமே இந்த அரிய குறிப்புக்களைச் சேர்த்து அச்சேற்றி உலகிற் களித்துள்ள நல்லோர்களும் சிறந்த வழிகாட்டிகளாவர். இவர்கட்கெல்லாம் தமிழகத்தின் தனி நன்றி உரியது. இவர்களைப் பின்பற்றித் தக்கார்பலரும் இத்தகைய அறிவுமணிகளைப் பொறுக்கித் தருமாறு புலவர்களை ஊக்கி, அவற்றை நல்ல முறையில் அச்சிட்டு வழங்குதல் பெரியதோர் அறமாகும். இத்தகைய நலம் புரியும் புலவர்கள் செல்வர்கள் கூட்டம் பெருகுவதாக.

இந் நூல் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இப் புராணத்தை, இத்தலத்திலேயே, லக்ஷார்ச்சனைச் சிறப்பு இம் மாதம் நடைபெறுங்கால், வெளியிடச் சிவ-சின்னையா முதலியாரவர்கள் ஏற்பாடுசெய்திருப்பது பாராட்டத்தக்கதே. சிவாலய பரிபாலனம், திருமுறைப் பாராயணம், சைவப் பிரசாரம் முதலிய பதி புண்ணியச் செயல் புரிவதில் தமது முன்னோர்களைப் பின்பற்றிப் புகழ் பெற்றுள்ள இவர்களும், இவர்கள் குடும்பத்தினரும், தந்தை பழநியப்ப முதலியார் தேவார பாடசாலையின் பொன் விழாவை மிகச் சிறந்த முறையில் கொண்டாடித் திருமுறை மணம் கமழச் செய்தார்கள். இப் புண்ணியர்கள் எல்லோரும், இவர்கள் பின்சந்ததியினரும், சிவப் பணியும் தமிழ்ப் பணியும் இடைவிடாதாற்றி, "மாதவஞ் செய்த தென்றிசை" என்னும் புகழ்மொழி நம் நாட்டிற்கு என்றும் உரியதாய் இருத்தற்கு உதவும் அறம் வளர் செல்வர்களாய் இலகி, அம்பலவாணர் அருளால் நீடாயுளுடன் இனிது வாழ்வார்களாக.


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்  
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க  
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க  
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

சென்னை,  
15—11—1954.

ச. சச்சிதானந்தம் பிள்ளை,  
B. A., L. T.



திரு. ப. ஆறுமுக முதலியார்,  
ஆச்சாள்புரம்.



திரு. சி. பழநியப்ப முதலியார்,  
கீழைத்திருக்காட்டுப்பள்ளி.

உ

**ஆர்சான்புரம், திருவாளர் ப. ஆறுமுக முதலியார் அவர்கள்**

எழுதியது

# பழைய ஸ்தலமும், புதிய கோயிலும்.

---

திருக்கழிப்பாலை என்னும் ஸ்தலத்தின் பெயர் அக்கோயில் இருந்த கிராமத்திற்கு வழங்குவதாயிற்று. இத்தலம் ஆதியில் தற்காலம் இருக்கும் கோயிலின் ஈசான திசையில் 2½ மைல் தூரத்தில் உள்ள மேலைத்திருக்கழிப்பாலை என்னும் படுகைக் கிராமத்தில், கொள்ளிட நதி ஓரமாக உள்ள பெரிய கோயிலாக இருந்தது. இவ்விடத்தில் கொள்ளிடம் உத்தரவாகினியாகத் தெற்கு வடக்காகச் செல்கிறது.

19-ம் நூற்றாண்டில் ஒரு நாள் மேற்படி கோயில் சிவாச்சாரியார் கனவில் ஸ்ரீ பால்வண்ணநாதர் தோன்றிக் கொள்ளிடத்தில் வெள்ளம் வருவதாகவும், தம்மைப் பெயர்த்து எடுத்து மேற்கே மேடாக உள்ள இடத்திற்கு எடுத்துச் செல்லுமாறும், அப்படிப் போகுங்கால் எவ்விடத்தில் தாம் அதிகக் கனமாக இருப்பது கண்டு ஆட்கள் அழுத்துகிறதாகச் சொல்லுகிறார்களோ அவ்விடத்தில் தம்மை வைத்துப் பூசிக்கும் படியாகக் கட்டளையிட்டு மறைந்தருளினார். உடனே அருச்சகர் எழுந்து ஊராரை எழுப்பி, சுவாமியின் கட்டளையைத் தெரிவித்து, உடனே வயிரவர், மூல லிங்கம், அம்பாள் ஆகிய முக்கியமான மூர்த்திகளைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு மேற்கே நோக்கி வரும்போது தற்போதுள்ள இடத்தில் வந்ததும், தூக்கிவந்தவர்கள் சுவாமியின் கனம் அதிகமானபடியால் அவ்விடத்திலேயே வைத்துவிடச் சிவாச்சாரியர் பூசை செய்வித்தார்.

பிறகு உடனே புறப்பட்டுச் சென்று கோயிலைப்பார்க்க, கோயிலைச் சுற்றிலும் வெள்ளமும், மதில் சுவர்கள் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போவதையும் கண்டார்கள். வெள்ளம் வடிந்த பின்பு, கருப்பக்கிரகமும் கோபுரவாசலும்தான் மிஞ்சி நின்றன. பாக்கியுள்ள இடத்தில் பெரிய மடுவும் உண்டாகி விட்டது. இந்த மடு சென்ற 10 வருஷமாகத்தான் மணல் அடிக்கப்பட்டுக் கொஞ்சம் தரையும் தெரிகிறது. இப்பொழுதும் மேற்படி நதிக்கரையிலும், சமுத்திரக்கரையிலுமாக இக்கோயிலின் உடைந்த விக்கிரகங்களும், மண்டபக் கற்களும், சிதறிக் கிடப்பதைக் காணலாம். ஆலயம் இருந்த இடத்தில் ஒரு ஆல விருக்ஷம்

இருப்பதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதுவும் நிச்சயம் என்று சொல்ல முடியவில்லை. அதோடு திருக்கழிப்பாலை என்ற கிராமத்தை, இரண்டாகப் பிரித்துக் கீழ் மேல் என்று பெயர்வைத்தும் வழங்குகிறார்கள். இதுபோது ஊரும் சிறப்பு அற்று விளங்குகிறது.

உதாரணமாக, இதைப் போலவே 20 ஆண்டுகளுக்கு முன்பு கொள்ளிடம் தென்கரையில் இருந்த விசேஷ விஷ்ணு ஸ்தலமாகிய வடரங்கம் அரங்கநாத சுவாமி ஆலயமும் கொள்ளிட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுக் கருப்பக்கிரகம் மட்டும் எஞ்சி நிற்பதைக் காணலாம்.

மேலே சொன்ன அநச்சகர் வெள்ளத்தில் போனது போகப் பாக்கியுள்ள விக்கிரகங்களான விநாயகர், அதிகாரநந்தி, நந்தீஸ்வரர், சண்டேஸ்வரர், விஷ்ணு, லக்ஷ்மி, கண்ணப்பர், அப்பர் முதலிய மூர்த்திகளையும் எடுத்துவந்து வைத்துப் பூசை செய்துவந்தார். அவர் காலத்தில் கால பைரவர் மூர்த்திகரமாக இருந்தபடியால், அவர் சன்னிதியில் வியாதியஸ்தர்களும், பேய் பிசாசு பிடித்தவர்களும், வந்து நனை மடைந்து வந்தபடியால் இக்கோயிலுக்குப் பைரவர் கோயில் என்றும் பாலையப்பர் கோயில் என்றும் பெயர் உண்டாயிற்று. சில ஆண்டுகள் கழித்த பிறகு 1906ஸு தென்நாட்டில் ஆலயத் திருப்பணி செய்வதில் அதிக ஆர்வம் கொண்டுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் ஒருவரான திரு. அரு. அரு. அருணாசலஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் இவ்விடம் வர, அவர்கள் ஊரார்களுடைய வேண்டுகோளின் பேரில் தற்காலம் உள்ள கோயிலைக் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டு பழைய கோயிலில் எஞ்சி நின்ற கருப்பக்கிரகம் கோபுரம் முதலிய வற்றின் கற்களை இலக்கம் போட்டுக்கொண்டு வந்து போனவைகளுக்கு வேறு கற்கள் சேர்த்துக் கோயில்கட்டி ஓர் தீர்த்தக் கிணறும் நாற்புற மதிலும் கட்டுவித்தார்கள். அப்போது பிரமா, துர்க்கை, சூரியன், சந்திரன் ஆகிய மூர்த்திகளையும் செய்தும் வைத்தார்கள். அப்பொழுது சிவபுரியில் உள்ள ஒரு முருக பக்தர் வைத்துப் பூசித்துவந்த சண்முகரையும் வைத்தார்கள். பிறகு மூர்த்திகளுக்கு எல்லாம் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் செய்தார்கள்.

அதற்கு மேலைத் திருக்கழிப்பாலைப் பெருங்கலக்கிழார் தன வந்தரும், சிவபக்தரும் ஆகிய திரு சி. பழநியப்ப முதலியாரை, கும்பாபிஷேகத்துக்கு வேண்டிய சமித்து, தருப்பை, இளநீர், தேங்காய் முதலியவைகள் தந்து உதவுமாறும், வந்திருந்து கும்பாபிஷேகத்தை நடத்திவைக்குமாறும், கேட்டுக்கொண்டார்கள். அதன் படியே ஸ்ரீமான் பழநியப்ப முதலியார் உதவி செய்து தன் குடும்பத்தோடும் வந்திருந்து கும்பாபிஷேகத்தைப் பூர்த்தி செய்தார்கள்.



பிறகு செட்டியார்கள் முதலியாருக்கு வேண்டிய மரியாதைகள் செய்து, முதலியார் அவர்களே, தங்கள் கிராமத்திலிருந்த ஸ்ரீ பால் வண்ணநாதர் தம் பரிவார சகிதம் இங்கு எழுந்தருளி இருக்கிறார். அவருக்கு எங்களால் ஆன திருப்பணிகள் செய்து கோயில்கட்டிக் கும்பாபிஷேகமும் செய்துவிட்டோம். இனிமேல் தாங்கள் தான் ஆலயத்திற்கு நித்திய நைமித்தியங்களை நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதைக்கேட்ட பழநியப்ப முதலியார் அக மகிழ்ந்து, இந்தப் பதி புண்ணியமும் நம்மிடம் வருகிறதோ, அதுவும் திருவருள் ஆணை போலும் என்று அன்போடு ஏற்று அன்று முதல் ஆலய நிர்வாகத்தையும், சிதம்பரத்தில் முன்பு தான் ஏற்படுத்திய தேவாரபாடசாலையையும் தன் இரண்டு கண்கள் போலப் பாவித்துப் பரிபாலனம் செய்து வருவாராயினர். கோயில் 4 கால பூசைகள் நடந்து வருவதற்கு ஏர்பாடு செய்தார். சுற்றத்தார்களையும் அழைத்துவந்து, ஆலயத்தின் பெருமையையும் சிவதருமத்தின் அருமை பெருமை களையும் எடுத்துக் கூறி இவ்வாலயத்தில் வருகிற விசேஷ புண்ணிய காலங்களில் நீங்களும் இயன்ற அளவு குறைந்த திட்டத்தில் கட்டளைகள் செய்துவாருங்கள் என்று கூறிக் கட்டளைகளையும் செய்து வர ஏற்பாடு செய்தார்கள். தம் பாடசாலை மாணுக்கர்களும் வந்து ஆலயத்தில் தேவார பாராயணம் செய்யவும் ஏற்பாடு செய்தார்கள். அவருடைய பத்தினியார் அமிர்தத்தணணியும், மேற்படியார் தம்பி பத்தினியான சுப்பாண்ணியும் சேர்ந்து ஒரு வெண்கல ஆராய்ச்சி மணி வார்ப்பித்துக் கோயிலில் கொண்டுவந்து கட்டினார்கள். உற்சவ மூர்த்திகளான சோமாஸ்கந்தர், அம்பாள், கணபதி, சண்டேசுரர், மட்டும் முன்பே இருந்தபடியால், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிர மணியரும், சிவகாமி நடராஜர் விக்கிரகங்களும் செய்து வைத்துச் சிவபதம் அடைந்தார்கள்.

அதன் பிறகு அடுத்த டிரஸ்ட்டியான அவர் மூத்த குமாரர் ப. இராஜரத்தினவேலு முதலியார் மேற்படி கோயிலைப் பார்த்து வரும் போது, நவக்கிரகங்களும், சம்பந்தர் சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், முதலிய கற்சிலை மூர்த்திகளைச் செய்தும், மேல்புறப் பிரகாரத்தில் உள்ள மண்டபம், உற்சவ மண்டபம், சண்முகர் கர்ப்பக்கிரகம், பள்ளியறை முதலியவைகளைக் கட்டிப் பள்ளியறையிலுள்ள சிவசக்தி விக்கிரகங்களையும், முன்பு தகப்பனார் செய்துவைத்திருந்த விக்கிரகங்களையும், ஸ்தாபித்துச் சம்புரோக்ஷணை செய்தும், கோயிலைப் புதுப்பித்தும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும் செய்தார்கள்.

அடுத்தபடியாக இளையகுமாரர் ப. சிவசங்கர முதலியார் டிரஸ்டியாகவந்து பார்க்கும்போது பைரவர், சண்முகர் இரு மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தன மருந்து சாத்திக் கும்பாபிஷேகம் செய்தார்கள்.

அவருடைய முதல் குமாரர் சி. பழநியப்ப முதலியார் மேற்பார்வை காலத்தில் ஷை கோயில், அத்தியயனம் மணியம் முதலிய வேலை பார்த்து வந்தவரும், கோயில் சேவையில் ஈடு பட்டவரும், ஆதி ஸ்தாபகரின் அபிமான முள்ளவரும் ஆன பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாமி சாஸ்திரிகள் யாசக மூலமாகப் பொருள் சேர்த்து, ஸ்ரீ ராஜகோபுரம் கட்டினார். ஆனால் அவர் கும்பாபிஷேகம் செய்யுமுன்பு சிவபத மடைந்து விட்டார்.

அதன் பிறகு திரு. சிவசங்கர சின்னையா முதலியார் டிரஸ்டியாக வந்த காலத்தில் கோயிலைப்போய்ப் பார்த்தும் புதுப்பித்தும், ஆண்டு தோறும் லெக்ஷார்ச்சனை செய்துகொண்டும், தருமத்தைச் செவ்வையாக நடத்தியும் வருகிறார்கள்.

இக்கோயிலில் உள்ள சிற்பங்களைப் பார்த்தால் பழைய காலத்தில் செய்த சிற்பக்கலையின் புராதன கவர்ச்சியும், தற்காலம் செய்தவைகளின் நவீனக் கவர்ச்சியும் விளங்குமாறு நன்றாகப் புலப்படும். முன் கோபுர வாசலில் உள்ள நந்தி உரு பழைய ஆலயத்தின் சுற்றுப்புற மதில் சுவரில் இருந்த நந்தியே என்று கூறுகிறார்கள். (இது ஒன்று மாத்திரம் மாதிரிக்காக வைத்தார்கள்போலும்) அதுவும் திருவுருவே, அதுவன்றியும், வாயிற்படிப்பக்கம் உள்ள துவாரபாலகர்களையும் பார்த்தாலே, ஆதியில் உள்ள ஆலயத்தின் அளவு பிரமாணம் நன்கு தெரியவரும். தென் நாட்டிலுள்ள ஒன்றிலாகிலும் இவ்வளவு பெரிய துவாரபாலகர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. பைரவர் மூர்த்தமும் பெரிய உருவில் உள்ளதேயாகும்.

இத்தல புராணத்திலும் மூவர் பாடல்களிலும், பைரவர் கண்ணப்பர், விஷ்ணு, லக்ஷ்மி ஆகிய நால்வரையும் பற்றிச் சிறப்பாகப் பாடியிருப்பதால், இவர்களைத் தவிர பாக்கியுள்ள விக்கிரகங்களை வெள்ளம் அடித்துக்கொண்டு போனதும் இவைகள் தங்கியிருப்பதும், சுவாமியின திருவுள்ளம்போல் தெரிகிறது. இத்தலத்தின் மூலவர் பால் போன்ற வெண்மை நிறமுள்ளதோடு பின்னப்பட்டும், ஆன்மகோடிகளுக்கு அருள் சுரந்து காட்சி அளிக்கிறார். பின் பக்கம் உள்ள மணவாள நம்பி ஆகிய பார்வதி பரமேஸ்வரர் புன்முறுவல் பூத்த முகத்தோடு காட்சியளிப்பதை உற்று நோக்கினால் தெரியவரும். ஆகையால் இம் மூர்த்திகளை உள்ளன்போடு தரிசித்தவர்களுக்குச் சித்தி கிட்டும் என்பது திண்ணம்.

---



உ

# திருக்கழிப்பாலைச் சிவன்கோவில் கல் வெட்டுக்கள்.

## கோவில் இதுபொழுது நிலைபெற்றுள்ள இடமும் காரணமும்:-

பண்டு, இக்கோவில், திருக்கழிப்பாலையில் கொள்ளிடப் பேராற்றின் கரைக்கு அருகில் இருந்தது. அது அவ்வாற்றின் வெள்ளப் பெருக்குகளால் இடிக்கப்பெற்று முற்றிலும் அழிந்துபோகும் நிலையில் இருந்ததை அறிந்த சிவநெறிச் செல்வர்கள் அக்கோவில் கற்களைக்கொண்டுவந்து திருநெல்வாயில் (சிவபுரி) சிவன்கோவிலுக்குத் தென்பால் திருக்கோவில் கட்டுவித்துத் திருக்கழிப்பாலை இறைவர், இறைவியார் முதலானவர்களை அதில் எழுந்தருளுவித்துள்ளார்கள். எனவே திருக்கழிப்பாலைக்கோவில் நிலைபெற்றுள்ள இடம் சிவபுரியாகும்.

## கோவிலின் அமைப்பு முறை:-

கோவில் கிழக்கு நோக்கியது. கர்ப்பஇல், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. மகாமண்டபத்தின் வடபால் திருக்காம கோட்டம் (அம்மன் கோவில்) தெற்கு நோக்கிய சந்நிதியுடன் திகழ்கின்றது. கர்ப்ப இல்லினது புறச் சுவர்களின் நடுப்பகுதிகளில் தென்பால் அறம் உரைத்த நாயனாரும், (தட்சிணாமூர்த்தியும்); மேல்பால் இலிங்கோற்பவரும்; வடபால் பிரமதேவரும் இருக்கின்றனர். இவர்களுள் இலிங்கோற்பவர், அறம் உரைத்த நாயனார் இவர்களின் திருமேனிகள் காண்பார் உள்ளத்தை இழுக்கும் பெற்றிவாய்ந்தவைகள். கர்ப்ப இல்லினது விமானத்துத் தென்புறத்தில் அறம் உரைத்த நாயனார், மேற்குப்புறத்தில் திருமால், வடபுறத்தில் பிரமதேவர், கிழக்குப் பக்கத்தில் சிவபெருமான் இவர்களின் கல்படிமங்கள் இருக்கின்றன. இவற்றுள் சிவபெருமான் யானை வாகனத்தின்மீது எழுந்தருளியிருப்பது "ஐராவணம் ஏறாது ஆனேறேறி அமரர் நாடாளாதே ஆரூராண்ட அயிராவணமே" என்னும் திருநாவுக்கரசு பெருந்தகையாரது திருவாக்கை நம் அனைவர்க்கும் நினைவு படுத்துகின்றது.* மகாமண்டபத்தின் கிழக்கு வாசலடியில்

* ஐராவணம் என்பது ஆயிரம் தந்தங்களையுடைய யானையாகும். இது தேவதேவனாகிய சிவபெருமானுக்கு வாகனமாக உரியது. ஒரு சிலர், இப்படிமம் விமானத்தின் கீழ்த்திசையில் இருப்பதால் இந்திரன் எனக் கூறுவர். அது பொருந்தாது. என்னை? இந்திரனுக்குச் சூலம் ஆயுதம் ஆமாறில்லை. இங்குள்ளபடிமத்தின் கையில் சூலம் ஆயுதம் இருத்தலின்.

தென்பால் ஒருவரும், வடபால் ஒருவரும் ஆக இரு வாயில் காவலாளர்களின் (The door keepers) கற்படிமங்கள் இருக்கின்றன. அவர்கள் ஒவ்வொருவர்க்கும், முறையே, இரண்டு, இரண்டு கைகள் இருக்கின்றன. அப்படிமங்களின் சிற்பத்திறனை நேரிற்கண்டு மகிழ்தற்குரியதேயன்றி எழுதும் தரமுடையதன்று.

கோவிலுக்கு ஒரே திருச்சுற்றுலை (பிராகாரம்) இருக்கின்றது. அச்சுற்றுலையில் பரிவார தேவதைகளுக்குத் தனித்தனி கோவில்கள் இருக்கின்றன. மேற்குப் பிராகாரத்துத் திருமாளிகையில், திருநாவுக்கரசர், கண்ணப்பர், திருமால், இலக்குமி, மெய்ப்பொருள் நாயனார் இவர்களின் பழைய பிரதிமங்கள் இருக்கின்றன. இவைகளின் சிற்ப வேலைகள் பெரிதும் பாராட்டற்குரியனவாகும். வடக்குப் பிராகாரத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும், சண்டேசுவர நாயனாரது பிரதிமம் மிக்க வனப்பு வாய்ந்ததுடன், பழமையும் உடையதாகும். திருக்கோவிலின் வாயிலை ஒருசிறு கோபுரம் அணிபெறச் செய்கின்றது. விமானத்திலுள்ள கல்படிமங்களைப்பற்றி நுனித்து ஆராயுமிடத்துப் பழங்காலத்தே திருக்கழிப்பாலையில் இருந்த கோவில் விமானப்படியே இக்கோவில் விமானம் முதலியவைகளும் கட்டப் பெற்றிருக்கவேண்டுமென்பது புலப்படும். விமானத்தின் மேற்குப் பக்கத்தில் திருமால் திருமேனியும், மகாமண்டபத்தின வாசலடியில் இரண்டு கைகளோடு கூடிய துவாரபாலகரின் படிமங்களும், இருப்பனகொண்டு, இக்கோவில் திருக்கழிப்பாலையில் இருந்தபொழுது, பல்லவமன்னர்களின் திருப்பணியை முதலில் பெற்றுப் பின்னர் சோழமன்னர்களின் திருப்பணியைப் பெற்றதாதல்வேண்டும். இங்ஙனம் சோழர் திருப்பணியைப் பெற்றதென்பது கர்ப்ப இல்லின் பின்புறத்தில் இலிங்கோற்பவர் இருப்பதால் துணியப்படும்.

## கோவிலில் கல்வெட்டுக்கள் இருக்கும் இடம் :-

இத்திருக்கோவிலில், அர்த்தமண்டபம், கர்ப்பஇல் இவைகளின் தெற்கு, மேற்கு, வடக்குப் புறசுவர்களிலும், கர்ப்பஇல்லின் உள் சுவரிலும், அம்மன் கோவிலின், கர்ப்பஇல், அர்த்தமண்டபம் இவைகளின் உள் சுவர்களிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகள் அனைத்தும் துண்டு, துண்டாகவுள்ள கற்களில் தொடர்ச்சி இல்லாதனவாய் உள்ளன. அவைகளைத் தனித்தனியே படித்து எழுதி, ஒருவாறு பொருத்தி, இச் சுருக்கம் எழுதலாயிற்று.

## கல்வெட்டுக்களில் கண்ட செய்திகள் :-

இத்திருக்கோவிலில் முதலாம் இராசராசசோழன் (கி. பி. 985—1014); அவனுடைய மகன், முதலாம் இராசேந்திரசோழன் அல்லது



கங்கைகொண்டசோழன் (கி. பி. 1014—1042) இவர்காலத்துக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளுள் முதலாம் இராசராச சோழனது கல்வெட்டு "திருமகள்போலப் பெருநிலச் செல்வியும்," எனவும்; முதலாம் இராசேந்திர சோழனுடைய கல்வெட்டுக்கள் "ஸ்வஸ்திஸ்ரீ பூர்வதேசமும் கங்கையும் கடாரமுங்கொண்ட" எனவும்; "ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னிவளர இருநில மடந்தையும்" எனவும் தொடங்கப் பெறுகின்றன.

முதலாம் இராசராசன் கல்வெட்டு, திருக்கழிப்பாலை உடைய மகாதேவர்க்கு நாடோறும் ஒரு திருநுந்தாவிளக்கு எரிப்பதற்கு மூலதனமாக ஒரு குறிப்பிட்ட தொகையுள்ள காசை அக்கோவில் பண்டாரத்தில் (பொக்கிஷசாலையில்) ஒடுக்கி, அதனுடைய பொலிசை (வட்டி) யைக் கொண்டு அந்த விளக்கினுக்கு நாடோறும் உழக்கு நெய்யால் சந்திர சூரியர் உள்ளவரை எரிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருத்தலைக் குறிப்பிடுகின்றது. முதலாம் இராசேந்திரன் கல்வெட்டு, திருக்கழிப்பாலையுடைய மகாதேவர்க்கு, உச்சியம் போதைக்குத் திருவமுது செய்தருளுகைக்கு நிலம் விட்டதைக் குறிப்பிடுகின்றது.

மற்றொரு துண்டுக் கல்வெட்டு திருக்கழிப்பாலையுடைய மகாதேவர்க்குத் தாராவிளக்கு ஒன்றும் தண்ணீர் குடித்தருளுதற்கு வெள்ளி வட்டில் ஒன்றும், கொடுக்கப்பட்டுள்ள செய்திகளைப் புலப்படுத்துகின்றது. வெள்ளி வட்டில், தாராவிளக்கு இவைகளின் நிறைகளும் குறிக்கப் பெற்றுள்ளன. அந்நிறைகளை உணர்த்தும் பகுதி கிடைத்திலது. வெள்ளிவட்டில் முதலியவைகளை எவரேனும் எடுத்துக்கொண்டு அவைகளுக்குப் பதிலாக குறைந்த நிறையுள்ளவைகளை வைத்துவிடலாமல்லவா? அங்ஙனம் நேராவண்ணம் நிறையையும் குறித்திருப்பது பெருமகிழ்ச்சியை அளிக்கும் செய்தியாகும்.

அம்மன்கோவிலின் உள்பக்கமுள்ள துண்டுக் கல்வெட்டினால் இராசராசநல்லூர், பொன்மேஞ்ச சோழசதுர்ப்பேதி மங்கலம், இவ்வூர்களில் நிலம் விடப்பெற்ற செய்திகள் குறிக்கப் பெற்றுள்ளன.

அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் ஒரு துண்டுக் கல்வெட்டில் காணப்பெறும் பகுதி கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

வரி.

(1) ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போல பெருநிலச்
செல்வியும் தனக்கே யுரிமை........

(2) பாடிபு நுனமபாடிபு தடிகைபாடியுங் குடமலை
நாடுங் கொல்லமுங் கலிங்கமு.........

(3) நித்தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழி
உள் எல்லாயாண்டுத் தொழு........

வரி.

(4) இராஜராஜதேவர்க்கு யாண்டு ௨௰௬ திருக்கழிப் பாலை உடைய மஹாதே.........

(5) ன் இ தேவர்க்கு திருநொந்தாவிளக்கு+ எரிக்க இத்தேவர் பண்டாரத்து வைத்தகாசு.........

(6) சைக் காசால் நிசதம் உழக்குநெய்.........

முடிப்புரை :-

இங்ஙனம் தொடர்பற்றுக் கிடக்கும் துண்டுக்கல் வெட்டுக்களை எல்லாம் எழுதி, அவைகளை ஒருவாறு பொருத்திப் புராணத்தில் இச் சருக்கத்தைச் சேர்ப்பதற்கு எழுதச் செய்தவர் தேவாரத்தைப் பண் முறையோடும், பொருள் உணர்ச்சியோடும் பாடவல்லுநரும், சிதம்பரம் பழநியப்ப முதலியார் தேவாரப் பாடசாலை ஆசிரியருமாகிய உயர்திரு இராமலிங்க ஓதுவாரால் என்னை நன்கு அறியப்பெற்ற கோவில் பொறுப்பாளர் (Trustee) உயர் சைவத்திரு சிவசங்கரசின்னைய முதலியார் ஆவர். இவர் ஆண்டில் இளைஞராயினும் அறிவில் முதிர்ச்சி யுடையாராய், இக்கோயிலை நன்கு புரந்து வருவதோடு, இக்கோயில் புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்னும் பேரார்வம் மிக்கு விளங்குகின்றார். ஒரு புராணத்தை எழுதச்செய்து அதை வெளியிடுவது, ஒரு கோவிலைக்கட்டி, கும்பாபிடேகம் செய்யும் புண்ணியத்திற்குச் சமம் என்பர் பண்டையோர். கோவில் எதற்கு? என்று பேசப்படும் இக்காலத்தே, மக்களிடையே பக்தியைப் பரப்பு வதற்கு அன்பர் முதலியாரின் முயற்சி பாராட்டற்குரியதாகும்.

இங்ஙனம்,
சைவசித்தாந்த வித்தகர், வித்துவான்,
**வை. சுந்தரேச வாண்டையார்,**
ஆசிரியர்,
தமிழ் ஆராய்ச்சித்துறை,
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

---

சில குறிப்புக்கள் :-

நுந்தாவிளக்கு = எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும் விளக்கு அல்லது தூண்டாவிளக்கு (Perputual lamp)

படிமம் = தெய்வத்தன்மை பொருந்திய உரு.

சதுர்ப்பேதிமங்கலம் = சில சிற்றூர்களைத் தன்னகத்துக் கொண்ட ஊராகும். இதை இக்காலம் வட்டத்துக்கு ஒப்பாகச் சொல்லலாம்.

+ = இது ஒன்று என்பதைக் குறிக்கும் அடையாளமாகும்.

உ

சிவமயம்.

# பதிப்புரை.

பேரன்புடையீர் !

உலகெலாம் அறிந்த உயரிய தில்லையம்பதிக்குக் கீழ்த்திசை யிலுள்ள திருக்கழிப்பாலை என்னும் தலம், அப்பர், சம்பந்தர், சுந்தரர் இவர்களால் பாடப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. இத் தேவாலய நிர்வாகம், சிதம்பரத்தில் தேவாரப்பாடசாலையை நிறுவிய திரு. சி. பழநியப்ப முதலியாரின் குடும்பத்தார்க்கே உரியது. இதற்குத் தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலில் வடமொழியில் புராணம் இருக்கின்றது. அதற்குப் பழநியப்ப முதலியார் ஒரு பிரதி ஒன்றை எழுதி, வாங்கி அதை அக்காலம் பாடசாலை ஆசிரியராக இருந்த எனது ஆசிரியப் பெருந்தகையார் திரு. நடராஜ ஓதுவாரிடம் கொடுத்து இரு மொழி களிலும் வல்ல தக்காரைக்கொண்டு புராணத்தைத் தமிழில் மொழி பெயர்த்துச் செய்யுள் வடிவில் ஆக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

எனது ஆசிரியப் பெருந்தகையாரும், அக்காலம் சிதம்பர தரிசனத் திற்கு, யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்து சிதம்பரம் ஞானப்பிரகாச குளத்து வடக்கு மடத்தில் தங்கியிருந்த, சிவநெறிப்பற்று மிக்காரும் இருமொழிப் புலமை வாய்ந்தவருமாகிய யாழ்ப்பாணம் திரு. சிவப் பிரகாசப் பண்டிதரிடம் புராணத்தைக் கொடுத்துத் தமிழில் பாடித் தருமாறு வேண்டினர். அதற்குப் பண்டிதர் அவர்களும் இசைந்து, தில்லையிலிருந்து சேக்கிழார் பெரிய புராணம் பாடியருளினர். தமக்கும் இப்பதியிலிருந்து, ஒரு புராணம் பாடும்பேறு கிடைத்ததே என்று மகிழ்ந்து, திருவருள் துணைகொண்டு நல்லவேளையில் புராணத்தைத் தொடங்கினார்கள். அதுபொழுது எனது ஆசிரியப் பெருந்தகையார் ஒவ்வொருநாளும் சென்று, புராணம் எவ்வளவு முற்றுப்பெற்று வரு கின்றது என்பதை ஆவலோடு அறிந்து வந்ததோடு, அமையாது, பாட சாலையில், மாணவர்களாகிய எங்களிடம் "பண்டிதரவர்கள் புராணத்தை விரைந்து பாடுகின்றார்கள். பாடல்கள் கற்பனை நயமுடையதாகவும் யாப்பு இலக்கணம் முற்றும் அமையப்பெற்றதாகவும் இருக்கின்றன" என்று மகிழ்ச்சியுடன் கூறுவார்கள். பண்டிதரவர்களுக்கு நாடோறும் பசுப்பால் கொடுத்துவரும்படி, எனக்கு ஆசிரியர் கட்டளையிட்ட

வண்ணம் யானும் செய்துவந்தேன். பண்டிதர் பல நாட்கள் கழித்துத் தங்கள் பிறப்பகமாகிய யாழ்ப்பாணத்திற்குச் சென்றார்கள்.

அதன் பிறகு பல ஆண்டுகள் கழித்துப் புராணம் பாடச்சொன்னவர்களும், கொடுத்தவர்களும், புராணம் பாடிய பண்டிதர் அவர்களும், பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினர்.

யான் தேவாரப்பாடசாலைக்கு ஆசிரியனாக வந்தேன். சில ஆண்டுகள் கழிந்தபிறகு எனக்குப் புராணத்தைப் பற்றிய நினைவு வந்தது. உடனே, மடக்கு மடத்திற்குச் சென்று அங்கிருந்த சுவாமிகளிடம் "யாழ்ப்பாணம் சிவப்பிரகாசப் பண்டிதர் முன்பு இங்கிருந்து திருக்கழிப்பாலைப் புராணத்தைப் பாடிக்கொண்டிருந்தார்களே. அவர்கள் என் வரவில்லை. புராணத்தை கொடுக்கவில்லை" எனக் கேட்டேன். அதற்குச் சுவாமிகள் "பண்டிதர் காலமாகிவிட்டார். அவர் மகன் நடராஜ பண்டிதர் இருக்கிறார். அவர்க்கு எழுதிக் கேட்டால் தெரியும்" என்று கூறி அவர் விலாசத்தையும் கொடுத்தருளினார்கள். நடராஜ பண்டிதர்க்கு யான் கடிதம் எழுதினேன். அதற்கு அவர் "இந்திரநீலபுரப் பெயர்த் திருக்கழிப்பாலைப் புராணம் இருக்கிறது. என் தந்தையார் சிவப்பிரகாசப் பண்டிதர் கையால் எழுதியது. நீங்கள்தான் அதற்கு உரியவர்களோ? புராணப் பாடல்கள் நன்றாக இருக்கின்றன என எனக்கு எழுதினார்கள். அச் செய்தியை அக்காலம் பாடசாலைப் புரவலராக இருந்த உயர்திரு ப. இராஜரத்தினவேல் முதலியாரிடம் தெரிவித்தேன். அதற்கு அவர்கள் "புராணத்தை அனுப்புமாறு எழுதுங்கள்" என்று அன்போடு கூறினார்கள். உடனே புராணத்தைப் பாடச் சொன்னவர் நாங்கள் தாம் பிரதியை அனுப்புங்கள் என்று பல அடையாளங்களோடு யாழ்ப்பாணத்திற்கு எழுதினேன். உடனே நடராஜ பண்டிதர் புராணத்திற்கு ஒரு பிரதி எழுதி அனுப்பினார். அது வந்ததும் யாங்கள் பெரிதும் மகிழ்ந்தோம். உடனே முதலியாரவர்கள், பண்டிதர்க்கு அன்பளிப்பாக ஒரு தொகையை அனுப்பினார்கள். அப்புராணம் என்னிடமே இருந்து வந்தது.

அக்காலத்தில் சிதம்பரத்தில் தங்கிக்கொண்டிருந்த உயர் சைவத்திருவாளர் சாமிநாத பண்டிதரிடம் புராணத்தைக் காட்டினேன். பண்டிதரவர்கள் படித்துப் பார்த்து மிகமகிழ்ந்து புராணம் பாடியவர்களைப் பாராட்டிப் பேசிவிட்டு "எழுத்துப் பிழைகள் இருக்கின்றன.



உதாரணமாக—ஒரு செய்யுள்.

இப்புராண ஆசிரியர் திருச்சோழநாட்டுச் சிறப்புக் கூறுகையில் நான்கு ஆசிரமிகளைப்பற்றியும் கூறுகின்றார், அப்பகுதியில் பிரமசாரி இயல்பைக் கூறும் செய்யுள் நயம் என்னுள்ளத்தைக் கவர்ந்தது. அதனை இங்குக் காண்க.

போதுசெப தப்பாரே போலிநறுஞ்சந் தப்பாரே
மாதர்முகம் பாராரே வருபுலவின் பாராரே
ஓதலென்று மொழியாரே யுறுதியில மொழியாரே
மேதகுசோ ணாடாரும் வியன்பிரம சாரிகளே. (34)

இதன் பொருள் :- சோழநாட்டில் வாழ்கின்ற பிரமசாரிகள் சந்தியாகாலங்களில் தவறாமல் செபம் செய்வார்கள். அழகுள்ள நல்ல சந்தனக் கலவையைத் தடவிப் பூசிக்கொள்ள மாட்டார்கள். பெண்களுடைய முகங்களை இச்சித்துப் பார்க்க மாட்டார்கள். பஞ்சேந்திரிய இன்பங்களை நுகரமாட்டார்கள். எந்த நேரத்திலும் படித்துக்கொண்டே இருப்பார்கள். பயனற்ற சொற்களைப் பேசிப் பொழுது போக்காமல் பயனுள்ள சொற்களையே பேசுவார்கள்.

என்றிவ்வாறு பொருளமைத்துச் செய்யுள் அழகும் பொருள் அழகும் தோன்றப் பாடியுள்ளார். இதனால் பிரமசாரி இவ்வாறு இருக்க வேண்டும் என் ஆகம விதியை எளிய கவிநடையில் செய்து தந்த ஆசிரியர் அவர்களை என்றென்றும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறு பல செய்யுட்கள் இப் புராணத்துள் உள்ளன. கண்டு மகிழுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ மௌனைச் சுவாமிகள் எழுதிய உரை இங்கு இரண்டு தேவாரத்திற்கு வந்துள்ளது. இன்னும் 49 தேவாரங்களுக்கு எழுதிய விரிவுரை என்னிடம் உள்ளது. விரைவில் வெளிவருமாறு இறைவன் அருள் புரிவானாக. வணக்கம்.

வயிரவக்கடவுள் துதி.

வெண்பா.

திருக்கழிப் பாலைச் சிவனார்பால் வன்னார்
பெருக்கருள் வேதப் பெயாளர்—திருக்குமார்
காக்குங் கடவுளானார் கால வயிரவரை
நீக்கமிலா நெஞ்சே நினை. (சு. இரா.)

இங்ஙனம்,

சு. இராமலிங்க ஓதுவார்,
சி. ப. தேவார பாடசாலை ஆசிரியர்,
சிதம்பரம்.

ஆதலால் அதன் மூலக் காப்பியை அனுப்புமாறு அவர் மகனார்க்கு எழுதுங்கள்'' என்று கூறினார்கள். யானும் எழுதினேன். அவரும் மூலக்காப்பியை அப்போது அனுப்பி வைத்தனர். அவர்க்கு எங்கள் நன்றி என்றென்றும் உரியதாகும். அதன் பிறகு ஒரு முறை, திரு. நடராஜ பண்டிதர் சிதம்பரத்திற்குத் தரிசனத்திற்கு வந்தவர், பாடசாலைக்கு வந்து ''புராணம் அச்சாகிவிட்டதோ'' என்று கேட்டனர். 'திருவருளால் விரைவில் ஆகும்' என்றேன். நற்கருமங்கள் தக்கார் தானே.

அச்சிட்டு இப்புராணத்தை உலகிற்கு உதவவேண்டுமே என்ற எண்ணம் எனக்குத் தோன்றும் பொழுதெல்லாம் ஸ்ரீபால்வண்ணநாதர் திருவடிகளை வணங்கி விண்ணப்பித்து இருந்தேன். ''அடுத்து முயன்றாலும் ஆகும் நாள்'' வரவேண்டுமல்லவா?

இதுபொழுது பாடசாலையைப் புரந்துவருபவரும், சிவ புண்ணியச் செல்வருமாகிய உயர்திரு, சிவசங்கர சின்னைய முதலியாரவர்கள் திருக்கழிப்பாலை இறைவர்க்குச் சென்ற ஆண்டில் இலட்சார்ச்சனையை நடத்தினார்கள். அதுபொழுது யான் இத்தலபுராணத்தை அச்சிட்டு உலகிற்கு உதவுவது சிறந்த சிவபுண்ணியமாகும்; தங்கள் முன்னோர் கருத்தும் அதுவே என்பதைத் தெரிவித்துக் கொண்டேன். ஆச்சாள் புரம், திரு. ப. ஆறுமுக முதலியார் அவர்களும் அதை அச்சிடுதல் சிறந்தது என்று கூறினார்கள். திருவருள் முன்னிற்க சிவசிங்க சின்னையா முதலியார் அவர்கள் தங்கள் முன்னோர்களின் கருத்தில் தோன்றிய புண்ணியங்களில் இதுமாத்திரம் தடைப் பட்டிருக்க வேண்டும்; நல்ல முறையில் திருக்கழிப்பாலைத்தேவாரங் களும், மற்றும் திருமுறைகளிலுள்ள பாடல்களும் அவை களுக்குப் பொருள் விளங்குமாறு குறிப்புக்களும், புராணசைனமும், கல்வெட்டுக்களும் சேர்க்கவேண்டுமெனத் தெரிவித்துப் புராணத்தை அச்சிடுமாறு உத்தரவு தந்தார்கள். அதோடு அமையாது, அடிக்கடி ''எவ்வளவு ஆயிற்று, இப்போது நடப்பது என்ன? இனி என்ன ஆக வேண்டும்;'' எனச் சேக்கிழார் புராணம் பாடிக்கொண்டிருக்கும்போது, அநபாயசோழமன்னன் விசாரித்தறிந்தமாதிரி விசாரித்து நின்று புராணத்தை அச்சிட்டு முற்றுப் பெறுவித்தார்கள். அவர்கள் வயதில் இளைஞராயினும், அறிவில் முதிர்ச்சியுடையவர்கள். இவர்கள் சிவ புண்ணியங்களைச் செய்துகொண்டு, வேதநாயகி உடனுறை பால்வண்ண நாதர் அருளால் வேண்டும் நலமெலாம் பெற்று நீடுவாழுமாறு அப் பெருமானைப் பன்முறையும் வணங்குகின்றேன்.



ஸ்ரீ. சீ. இராமலிங்க முதலியார், பிச்சாபுரம்.



ஸ்ரீ. V. சாமியப்பா முதலியார், மேலத்திருக்கழிப்பாலை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

"கழிப்பாலைக் கிரண்டஞ்சோ டொன்று" என்னும் பழம்பாடற்படி இத்தலத்திற்கு 2—5—1—ச. அ சு. முறையாக சம்பந்தர் 2 திருப்பதிகங்களும் அப்பர் அடிகள் 5 திருப்பதிகங்களும் சுந்தரர் ஒரு திருப்பதிகமும் ஆக 8 திருப்பதிகங்கள் உள்ளன.

அவையன்றியும் வேறு தலப்பதிகங்களிலும் இத்தலத் திருப்பெயர் வந்தனவற்றையும் எடுத்து இதனோடு சேர்க்கப் பட்டிருக்கின்றன.

சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தரும், அப்பர் அடிகளும் இத்தலத்திற்கு வந்து வணங்கிப் பதிகம்பாடிய விபரம் கூறும் செய்யுள்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன

கோவை - வழக்கறிஞர், சிவகவிமணி திரு C K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A. பெரியபுராண விரிவுரையில் இத்தலத் தேவாரங்களுக்கு எழுதியுள்ள பதிகக் குறிப்பு, பாட்டுக்குறிப்புகளும் அவர்கள் அனுமதி பெற்றுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு காண்க

---

## திருத்தொண்டர் புராணம்.

### திருஞானசம்பந்தசுவாமிகள் புராணத்தில் 167ம் செய்யுள்.

கைம்மான் மறியார் கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம்பாடி விரைக்கொன்றைச்
செம்மாலை வேணித்திருவுச்சி மேவியுறை
அம்மானைக்கும் பிட்டருந் தமிழும்பாடினார்.

கைம்மான் ......... பாடி = திருக்கரத்தில் மான்கன்றை ஏந்திய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கழிப்பாலையினுள் சேர்ந்து மெய்த்தன்மையுடைய மாலையாகிய சொற்பதிகத்தைப் பாடினார் என்று சேக்கிழார் கூறுகின்றபடியால் திருஞான சம்பந்தர் இத்தலத்திற்குப்பாடிய இரண்டு திருப்பதிகங்களும், இங்கே காண்க.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழிப்பாலை.

## முதற்றிருமுறை.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

பண்—குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

திருமலர்க் கொன்றையான் நின்றியூர் மேயான்
    தேவர்கள் தலைமகன் திருக்கழிப்பாலை
நிருமல னெனதுரை தனதுரையாக
    நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்
கருமலர்க் கமழ்சுனை நீண்மலர்க் குவளை
    கதிர்முலை யிளையவர் மதிமுகத் துலவும்
இருமலர்த் தண்பொய்கை யிலம்பையங் கோட்டூர்
    இருக்கையாப் பேணியென் னெழில் கொள்வ
                                        தியல்பே.

இது திரு இலம்பையங்கோட்டூர்த் தலத்திருப்பதிகமாயினும் திருக்கழிப்பாலை நிருமலன் என்று எடுத்தாண்டிருப்பதாலும் முதற்றிருமுறையிலுள்ளதாலும் முதற்கண் சேர்க்கப்பெற்றது. சம்பந்தர் தேவாரத்தை வேதத்துக்குச் சமமாகக்கொண்டு இறைவன் மகிழ்கின்றார். என்பதை எனதுரை தனதுரையாக என்பதால் அறிந்து மகிழ்க.

---

## இரண்டாம் திருமுறை.

பண்—இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

புனலா டியபுன் சடையா யரணம்
அனலா கவிழித் தவனே யழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளாய்.
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே. (1)



துணையா கவொர்தூ வளமா தினையும்
இணையா கவுகந்தவனே யிறைவா
கணையா லெயிலெய் கழிப்பா லையுளாய்
இணையார் கழலேத் தவிடர் கெடுமே. (2)

நெடியாய் குறியாய் நிமிர்புன் சடையின்
முடியாய் சுடுவெண் பொடி முற் றணிவாய்
கடியார் பொழில்சூழ் கழிப்பா லையுளாய்
அடியார்க் கடையா வவலம் மவையே. (3)

எளியா யரியாய் நிலநீ ரொடுதீ
வளிகா யமெனவெளிமன் னியதூ
ஒளியா யுனையே தொழுதுன் னுமவர்க்
களியாய் கழிப்பா லையமர்ந் தவனே. (4)

நடநண் ணியொர்நா கமசைத் தவனே
விடநண் ணியதூ மிடறா விகிர்தா
கடனண் ணுகழிப் பதிகா வலனே
உடனண் ணிவணங் குவனுன் னடியே. (5)

பிறையார் சடையாய் பெரியாய் பெரியம்
மறையார் தருவாய் மையினா ருலகிற்
கறையார் பொழில்சூழ் கழிப்பா லையுளாய்
இறையார் கழலேத் தவிடர் கெடுமே. (6)

முதிருஞ் சடையின் முடிமேல் விளங்குங்
கதிர்வெண் பிறையாய் கழிப்பா லையுளாய்
எதிர்கொண் மொழியா லிரந்தேத் துமவர்க்
கதிரும் வினையா யினவா சறுமே. (7)

எரியார் கணையா லெயிலெய் தவனே
விரியார் தருவீழ் சடையா யிரவிற்
கரிகா டலினாய் கழிப்பா லையுளாய்
உரிதா கிவணங் குவனுன் னடியே. (8)

நலநா ரணனான் முகனண் ணலுறக்
கனலா னவனே கழிப்பா லையுளாய்
உனவார் கழலே தொழுதுன் னுமவர்க்
கிலதாம் வினைதா னெயிலெய் தவனே. (9)

தவர்கொண் டதொழிற் சமண்வே டரொடுந்
துவர்கொண் டனநுண் டுகிலா டையரும்
அவர்கொண் டனவிட் டடிகள் ளுறையும்
உவர்கொண் டகழிப் பதியுள் குதுமே. (10)

கழியார் பதிகா வலனைப் புகலிப்
பழியா மறைஞா னசம்பந் தனசொல்
வழிபா டிவைகொண் டடிவாழ்த் தவல்லார்
எழியா ரிமையோ ரொடு கேடிலரே. (11)

திருச்சிற்றம்பலம்.

இப்பதிகம் இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடியது. இத்தலத்து இறைவனை நினைத்தவர்கள் வணங்கியவர்கள் பாவம் நீங்கித் திருவடி உறுவர் என்று ஒவ்வொரு திருப்பாட்டிலும் பயன் கூறுகின்றார். இப்பத்துப் பாடல்களையும் ஓதுகின்றவர்கள் தேவர்களுக்கு ஒப்பாக என்றும் அழியாமல் வாழ்வார்கள் என்றும் கூறுகின்றார்.

## மூன்றாந் திருமுறை

பண்—கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வெந்த குங்கிலி யப்புகை விம்மவே
கந்த நின்றுல வுங்கழிப் பாலையார்
அந்த முமள வும்மறி யாததோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே. (1)

வானி லங்க விளங்கு மிளம்பிறை
தான லங்க லுகந்த தலைவனார்
கானி லங்க வருங்கழிப் பாலையார்
மான லம்மட நோக்குடை யாளொடே. (2)



கொடிகொ ளேற்றினர் கூற்றை யுதைத்தனர்
பொடிகொண் மார்பினிற் பூண்டதொ ராமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையுள்
அடிகள் செய்வன வார்க்கறி வொண்ணுமே. (3)

பண்ண லம்பட வண்டறை கொன்றையின்
தண்ண லங்க லுகந்த தலைவனார்
கண்ண லங்க வருங்கழிப் பாலையுள்
அண்ண லெங்கட வுள்ளவ னல்லனே. (4)

ஏரி னாருல கத்திமை யோரொடும்
பாரி னாருட னேபர வப்படுங்
காரி னார்பொழில் சூழ்கழிப் பாலையெம்
சீரி னார்கழ லேசிந்தை செய்ம்மினே. (5)

துள்ளு மான்மறி யங்கையி லேந்தியூர்
கொள்வ னாரிடு வெண்டலை யிற்பலி
கள்வ னாருறை யுங்கழிப் பாலையை
உள்ளு வார்வினை யாயின வோயுமே. (6)

மண்ணி னார்மலி செல்வமும் வானமும்
எண்ணி நீரினி தேத்துமின் பாகமும்
பெண்ணி னார்பிறை நெற்றியொ டுற்றமுக்
கண்ணி னாருறை யுங்கழிப் பாலையே. (7)

இலங்கை மன்னனை யீரைந் திரட்டிதோள்
துலங்க வூன்றிய தூமழு வாளினார்
கலங்கள் வந்துல வுங்கழிப் பாலையை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே. (8)

ஆட்சி யாலல ரானொடு மாலுமாய்த்
தாட்சி யாலறி யாது தளர்ந்தனர்
காட்சி யாலறி யான்கழிப் பாலையை
மாட்சி யாற்றொழு வார்வினை மாயுமே. (9)

செய்ய நுண்டுவ ராடையி னாரொடு
மெய்யின் மாசு பிறக்கிய வீறிலாக்
கையர் கேண்மையெ னோகழிப் பாலையெம்
ஐயன் சேவடி யேயடைந் துய்ம்மினே. (10)

அந்தண் காழி யருமறை ஞானசம்
பந்தன் பாய்புனல் சூழ்கழிப் பாலையைச்
சிந்தை யாற்சொன்ன செந்தமிழ் வல்லவர்
முந்தி வானுல காடன் முறைமையே. (11)

திருச்சிற்றம்பலம்.

பதிகக்குறிப்பு — திருக்கழிப்பாலையார் சாந்தம் மேவியவர்; அவர் தலைவர்; அவர் செய்வன ஆர்க்கும் அறிவொண்ணா; அவர் கழல் சிந்தை செய்து அடைமின். அவ்வாறு தொழுவார் வினைமாயும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு—(1) சாந்தமே. சிவம் சாந்தம் என்பது வேதம்—(2) அலங்கல்—கண்ணி "மாதர்ப்பிறைக் கண்ணி" (தேவா.) (4) நலப்பட வண்டுபண் அறை என்க. பண்நலம்—பண்ணின் தன்மை என்றலுமாம் (6) பலி கள்வனார்—பலிகொள்ள என்று வந்து வளையும் நிறையும் உள்ளமும் கவர் கள்வன்—(7) மண்ணும் விண்ணும் பெறவேண்டின் ஏத்துமின் மண்ணுக்கும் விண்ணுக்கும் இவரே தலைவர் என்று எண்ணி என்றலுமாம்—(8. கலங்கள் வந்து உலவு—கடற்கரையில் உள்ள தலம் (9) தாட்சி—வணக்கம்—(11) சிந்தையால்—சிந்தனையோடு.

---

உ

சேக்கிழார் நாயனார் பாடியருளிய திருத்தொண்டர் புராணத்துள்ள திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலே 171—173—174 செய்யுள்களும் அதன் பொழிப்புரையும்.

மேவிய பணிகள் செய்து விளங்குநாள் வேட்களத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச் சென்றுமுன் வணங்கிப்பாடிக்
காவியங் கண்டர் மன்னுந் திருக்கழிப்பாலை தன்னின்
நாவினுக் கரையர் சென்று நண்ணினார் மண்ணோர்வாழ.



(பொழிப்புரை) இவ்வாறு பொருந்திய திருப்பணிகளைச் செய்து விளங்கும் நாட்களில், திருவேட்களத்தில் எழுந்தருளிய இடபத்தை யுயர்த்திய கொடியினையுடைய சிவபெருமானைத் திருமுன்பு சென்று வணங்கிப்பாடி நீலமலர் போலும் நிறமுடைய அழகிய கண்டமுடைய பெருமான் நிலைபெற்று எழுந்தருளிய திருக்கழிப்பாலையில் சென்று திருநாவுக்கரசு நாயனார் மண்ணுலகத்தார் வாழும் பொருட்டு நண்ணினார்.

காவியங்கண்டர்—காவி—நீலமலர் அதன் நிறத்துக்கு வந்தது பண்புவமை.

திருக்கழிப்பாலை தன்னில் சென்று நாவினுக்கரசர் மண்ணோர் வாழ நண்ணினார் என்க.

மண்ணோர் வாழ்வடைதலாவது, அவரைப் பின்பற்றி அடைந்து துதித்துய்தல்.

வேறு.

173. சினவிடையே றுகைத்தேறு மணவாள நம்பிகழல்
சென்று தாழ்ந்து,
"வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே;
யென்கின் றாளென்"று
அனையதிருப் பதிகமுட னன்புறுவண் டமிழ்பாடி,
யங்கு வைகி,
நினைவரியார் தமைப் போற்றி நீடுதிருப்புலியூரை
நினைந்து மீள்வார்.

174. மனைப்படப்பிற் கடற்கொழுந்து வளைசொரியுங்
கழிப்பாலை மருங்கு நீங்கி,
நனைச்சினைமென் குளிர்ஞாழற் பொழிலூடு
வழிக்கொண்டு நண்ணும் போதில்,
"நினைப்பவர்தம் மனங்கோயில் கொண்டருளும்
அம்பலத்து நிருத்த னாரைத்
தினைத்தனையாம் பொழுதுமறந் துய்வனோ?"
எனப்பாடித் தில்லை சார்ந்தார்.

173 (இதன் பொருள்) கோபமுடைய இடப ஏற்றினை ஊர்ந்து ஏறும் மணவாள நம்பியாகிய இறைவருடைய பாதங்களைச் சென்று வணங்கி; அழகிய பவளம்போன்ற வாயினைத் திறந்து வானவர்க்கும் தானவனுகியவரே! என்கின்றாள் என்று சொல்கின்றாள் என்று; அத்தகையதாகிய திருப்பதிகத்துடனே; அன்புபொருந்தும் வண்மையுடைய தமிழ்மாலைகளைப் பாடி; அத்தலத்திற்றங்கி, நினைப்பதற்கும் அரியவராகிய சிவபெருமானைத் துதித்து; திருநீடுகின்ற புலியூரை நினைத்துக் கொண்டு மீள்வாராகி,

(174) இ—ள்—மனைகளின் முற்றங்களில் கடலலைகள்; சங்குகளைச் சொரிகின்ற திருக்கழிப்பாலையினை நீங்கி அரும்புகளையுடைய கொம்புகளோடு கூடிய குளிர்ந்த புன்னைகள் அடர்ந்த சோலைகளின் வழியாகச்சென்று அணைகின்றபொழுதில்; நினைப்பவர்களுடைய மனத்தையே கோயிலாகக் கொண்டு வீற்றிருந்து அருள்புரியும் திருவம்பலக் கூத்தரைச் சிறிது பொழுதும் மறந்தால் நான் உய்வேனே? என்ற கருத்துடைய திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டே திருத் தில்லையைச் சேர்ந்தார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டன. (விரிவுரை) மனைப்படப்பு—வீடுகளின் முற்றங்கள். கடற்கொழுந்து—கடலினின்று மேலெழுந்து முன் வரும் அலைகள்.

173 (விரிவுரை) சினவிடை ஏறு உகந்து ஏறும் மணவாள நம்பி கழல். "நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்—வேண்டு நடைநடக்கும் வெள்ளேறு ஏறி" (தாண்—வெண்காடு) என்றபடி விடையினை ஊர்ந்து தெருவே வந்து நாயகனுகி உள்ளத்தைக் கவர்ந்து சென்ற அகப்பொருட்டுறையில் பதிகம் பாடியருள்கின்றாராதலின் ஆசிரியர் இவ்வாறு விடையினை வைத்துத் தொடங்கியதுடன், மணவாள நம்பி என்று தன்மையாற் குறித்தருளினர். "பழியிலான் புகழுடையன் பானீற்றன் ஆனேற்றன் என்கின்றாளால்" என்று இப்பதிகத்துட் கூறுதலும் காண்க.



வனபவள வாய்........... என்று—இது திருப்பதிகத்தின் தொடக்கமும் பதிகக் குறிப்புமாம்.

அனைய திருப்பதிகம்—அன்னவாகிய பல கருத்துக்களைப் பதிக முழுவதும் கூறிய பதிகம்.

திருப்பதிகமுடன் அன்புறு வண்தமிழ்பாடி—நாயனுர் திருக்கழிப்பாலையில் வைகிய நாட்களில் இவ்வாருக அருளிய பதிகங்கள் பலவாம். அவற்றுள், திருத்தாண்டகம் திருநேரிசை, திருக்குறுந்தொகை திருவிருத்தம். என்றவற்றில் ஒவ்வொன்றே இப்போது நமக்குக் கிடைத்துள்ளன. இவையெல்லாம் அன்புமேலீட்டினுல் உண்ணிறைந்து மேல்வழிவன போன்றன என்பார் அன்புறு என்றும், வண்மையால் பற்பல வளங்களையும் தருதலால் வண்தமிழ் என்றும், தமிழுக்குச் சிறப்பாயுரிய அகப்பொருட் சுவை மிக்கிருத்தலின் தமிழ்பாடி என்றும் கூறினுர்.

அங்கு வைகி—திருக்கழிப்பாலையில் நாயனுர் சிலகாலம் தங்கினுர் என்பது திருப்பதிகங்களாற் கருத உள்ளது.

நினைவரியார்—நினைத்தற்கும் அரியவர். உயர்வு சிறப்பும்மை தொக்கது. 'உலகெலா முணர்ந்தோதற் கரியவன்" என்றது காண்க. உயிர்ப்போத உணர்வினுக்கு அரியவன்-எட்ட முடியாதவன் என்பது. இது நடுநிலைத் தீபமாய் கழிப்பாலை யிறைவனையும் தில்லை யிறைவனையும் குறித்தது காண்க.

## நான்காம் திருமுறை (1).

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருக்கழிப்பாலை.

பண்—காந்தாரம்.*

திருச்சிற்றம்பலம்.

வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
    தானவனே யென்கின் றாளாற்
சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு
    வெண்ணீற்ற னென்கின் றாளால்
அனபவள மேகலையொ டப்பாலைக்
    கப்பாலா னென்கின் றாளாற்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
    சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (1)

* இதனையுஞ் சிலர் குறிஞ்சி யென்பர்.

வண்டுலவு கொன்றை வளர்புன்
சடையானே யென்கின் றாளால்
விண்டலர்ந்து நாறுவதோர் வெள்ளெருக்க
நாண்மலருண் டென்கின் றாளால்
உண்டயலே தோன்றுவதோ ருத்தரியப்
பட்டுடைய னென்கின் றாளாற்
கண்டயலே தோன்றுங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (2)

பிறந்திளைய திங்களெம் பெம்மான்
முடிமேல தென்கின் றாளால்
நிறங்கிளருங் குங்குமத்தின் மேனி
யவனிறமே யென்கின் றாளால்
மறங்கிளர்வேற் கண்ணாண் மணிசேர்
மிடற்றவனே யென்கின் றாளாற்
கறங்கோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (3)

இரும்பார்ந்த சூலத்த னேந்தியோர்
வெண்மழுவ னென்கின் றாளாற்
சுரும்பார் மலர்க்கொன்றைச் சுண்ணவெண்
ணீற்றவனே யென்கின் றாளாற்
பெரும்பால னாகியோர் பிஞ்ஞக
வேடத்த னென்கின் றாளாற்
கரும்பானல் பூக்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (4)

பழியிலான் புகழுடையன் பானீற்ற
ஞனேற்ற னென்கின் றாளால்
விழியுலாம் பெருந்தடங்கண் ணிரண்டல்ல
மூன்றுளவே யென்கின் றாளாற்
சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே யென்கின் றாளாற்
கழியுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (5)



பண்ணார்ந்த வீணை பயின்ற
விரலவனே யென்கின் றாளால்
எண்ணார் புரமெரித்த வெந்தை
பெருமானே யென்கின் றாளாற்
பண்ணார் முழவதிரப் பாடலொ
டாடலனே யென்கின் றாளாற்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (6)

முதிருஞ் சடைமுடிமேன் மூழ்கு
மிளநாக மென்கின் றாளால்
அதுகண் டதனருகே தோன்று
மிளமதிய மென்கின் றாளாற்
சதுர்வெண் பளிக்குக் குழைகாதின்
மின்னிடுமே யென்கின் றாளாற்
கதிர்முத்தஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (7)

ஓரோத மோதி யுலகம்
பலிதிரிவா னென்கின் றாளால்
நீரோத மேற நிமிர்புன்
சடையானே யென்கின் றாளாற்
பாரோத மேனிப் பவள
மவனிறமே யென்கின் றாளாற்
காரோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (8)

வானுலாந் திங்கள் வளர்புன்
சடையானே யென்கின் றாளால்
ஊனுலாம் வெண்டலைகொண் டூரூ
பலிதிரிவா னென்கின் றாளாற்
றேனுலாங் கொன்றை திளைக்குந்
திருமார்ப னென்கின் றாளாற்
கானுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (9)

அடர்ப்பரிய விராவணனை யருவரைக்கீ
ழடர்த்தவனே யென்கின் றாளாற்
சுடர்ப்பெரிய திருமேனிச் சுண்ணவெண்
ணீற்றவனே யென்கின் றாளால்
மடற்பெரிய வாலின்கீ ழறநால்வர்க்
கன்றுரைத்தா னென்கின் றாளாற்
கடற்கருவி சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. (10)

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு:- தலைவனைப் பிரிந்த தலைவியினது மெலிவு கண்டு செவிலி அல்லது தாய் கூறிய துறையாக அகப் பொருட் சுவையில் அமைந்தது இத்திருப்பதிகம். "மலைப் படப்பிற் கடற்கொழுந்து வளைசொரியுங் கழிப்பாலை" (1439) என மேல்வரும் பாடிற் குறிப்பிடுகின்றபடி இத்தலம் நெய்தல் நிலஞ் சார்ந்தது; "இரங்கல் நறு நெய்தல்" என்று திணை இலக்கணம் வகுத்தபடி பிரிவின் இரங்குதல் இத் திணைக்குரிய பொருளாயிற்று. தலைவனைக்கண்டு இளைத்த தலைவி, அவனது பிரிவு நினைந்து அதுவே நினைவாயிருப்பாள்; அவனது உருவெளிப்பாடு கண்டோ அன்றிக் காணாதோ அவனது அழகினையும் நலங்களையும் பிதற்றி இரங்கி மெலிவாள் அது கண்டும், தன்னை மறந்து பிதற்றி அவள் கூறும் சொற்களைக் கேட்டும், செவிலியும் தாயரும் இவள் இத்தலைவனைக் கண்டு இளைத்தனளோ என்று ஐயுற்றுத் தெளிந்து மேல் ஆவன துணிகுவர். இக் கருத்துப் பட இப் பதிக முழுமையும் வருவன காண்க. "அழகனே கழிப்பாலைப் பெம்மண்ணலே, யிகழ்வதோ வெனை யென்று கொளென்னுமே" என்ற குறிப்புட்கொண்ட கருத்துடைய இத்தலக் குறுந்தொகைத் திருப்பதிகத்தினையும் நாயனார் இவ்வாறே அகப்பொருட்டுறையின் வைத்தோதி யருளினார். "கழிப்பாலைச் சேர்ப்பனாரே" என்ற திருநேரிசைக் குறிப்பும், 'கழிப்பாலை மேயகபாலப்பனார், மாயக்குரம்பை நீங்க வழிவைத் தக்கவழியே போதுநாமே' என்ற இத்தலத் திருத்



தாண்டகக் குறிப்பும் இக்கருத்துப் போலும்! சேர்ப்பன்— நெய்தனில மக்களின் பெயர்.

குறிப்பு இத் திருப்பதிகம் ஆசிரியரது திருமனத்தில் பதிந்து அதனைக் கவர்ந்ததாதலின் முன் கூறிவந்த யாப்பினை மாற்றி இங்கு இந்த யாப்பினிற் சரிதஞ் சொல்லப் புகுகின்றார். பின்னர்ச் "செய்யமா மணியொளி சூழ்" (1489) என்றும், "சித்த நிலாவுந் தென்திருவாரூர்" (1500) என்றும் சரிதம் கூறப்புகும்யாப்பு வகைகளும், இவ்வாறு முன் வந்தனவும் பின் வருவனவும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) வன பவள வாய்—அழகிய பவளம் போன்ற வாய். வாய் திறந்து—மனத்தினுள் வைக்கலாற்றாமையின் வாய்திறந்துங் கூறுகின்றாள். "இலவவிதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்றாமையின்வறிதே இன்ன சொன்னாள்" (320) என்ற தன்மைகாண்க. உந்து ஆனவன்—மேலானவன் இடுக்கண் செய்யும் பகைவன் என்ற குறிப்புமாம். (3) பிறந்திளைய திங்கள்—மூன்றாம் பிறை—(4) பெரும் பாலன்—மிக்க இளமை காட்டுபவன்—பெருந்தடங்கண் இரண்டல்ல மூன்றுளவே—கண்களைக் கூறியது அக்கண்ணினோக்கத் துட்பட்டு அலைந்த குறிப்பு. விழியுலாம் என்ற குறிப்பும் அது. கண் மூன்று என்றது விரகத்துட் படுவோர், நெற்றிக் கண்ணாற் காமனை முனியும் கருத்தன் என்றுட்கொள்ளும் குறிப்பு — (7) மின்னிடுதல் – ஒளிவிட்டு விளங்குதல் — (8) ஓரோதம்—வேதம் பிரணவம்.

---

## நான்காந் திருமுறை (2).

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நங்கையைப் பாகம்வைத்தார் ஞானத்தை நவிலவைத்தார்
அங்கையி லனலும்வைத்தா ரானையி னுரிவைவைத்தார்
தங்கையின் யாழும்வைத்தார் தாமரை மலரும்வைத்தார்
கங்கையைச் சடையுள்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 1

விண்ணினை விரும்பவைத்தார் வேள்வியை வேட்கவைத்தார்
பண்ணினைப் பாடவைத்தார் பத்தர்கள் பயிலவைத்தார்
மண்ணினைத் தாவநீண்ட மாலினுக் கருளும்வைத்தார்
கண்ணினை நெற்றிவைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 2

வாமனை வணங்கவைத்தார் வாயினை வாழ்த்தவைத்தார்
சோமனைச் சடைமேல்வைத்தார் சோதியுட் சோதிவைத்தார்
ஆமனெய் யாடவைத்தா ரன்பெனும் பாசம்வைத்தார்
காமனைக் காய்ந்தகண்ணார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 3

அரியன வங்கம்வேத மந்தணர்க் கருளும்வைத்தார்
பெரியன புரங்கண்மூன்றும் பேரழ லுண்ணவைத்தார்
பரியதீ வண்ணராகிப் பவளம்போ னிறத்தைவைத்தார்
கரியதோர் கண்டம்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 4

கூரிருள் கிழியநின்ற கொடுமழுக் கையில்வைத்தார்
பேரிருள் கழியமல்கு பிறைபுனற் சடையில்வைத்தார்
ஆரிரு ளண்டம்வைத்தா ரறுவகைச் சமயம்வைத்தார்
காரிருள் கண்டம்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 5

உட்டங்கு சிந்தைவைத்தா ருள்குவார்க் குள்ளம்வைத்தார்
விட்டங்கு வேள்விவைத்தார் வெந்துயர் தீரவைத்தார்
நட்டங்கு நடமும்வைத்தார் ஞானமு நவிலவைத்தார்
கட்டங்கந் தோண்மேல்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே 6

ஊனப்பே ரொழியவைத்தா ரோதியே யுணரவைத்தார்
ஞானப்பேர் நவிலவைத்தார் ஞானமு நடுவும்வைத்தார்
வானப்பே ராறுவைத்தார் வைகுந்தற் காழிவைத்தார்
கானப்பேர் காதல்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 7

கொங்கினு மரும்புவைத்தார் கூற்றங்கள் கெடுக்கவைத்தார்
சங்கினுண் முத்தம்வைத்தார் சாம்பலும் பூசவைத்தார்
அங்கமும் வேதம்வைத்தா ராலமு முண்டுவைத்தார்
அங்குலும் பங்கும்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 8



சதுர்முகன் றானுமாலுந் தம்மிலே யிகலக்கண்டு
எதிர்முக மின்றிநின்ற வெரியுரு வதனைவைத்தார்
பிதிர்முகன் காலன்றன்னைக் காறனிற் பிதிரவைத்தார்
கதிர்முகஞ் சடையில்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 9

மாலினு ணங்கையஞ்ச மதிலிலங் கைக்குமன்னன்
வேலினன் வெகுண்டெடுக்கக் காண்டலும் வேதநாவன்
நூலினு னேக்கிநக்கு நொடிப்பதோ ரளவில்வீழக்
காலினு லூன்றியிட்டார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 10

திருச்சிற்றம்பலம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு :- (1) ஞானத்தை நவில — இறைவனை நவில்வதே ஞானத்தின் குறிக்கோள், தாமரை — இறைவனது திருவடிகளில் தாமரை மலரைக் கையிற் கொண்டணையவும் உள. தாமரை போன்ற திருவடிகளை என் உள்ளத்தினுள் என்றலுமாம். கங்கை—கங்கை குறுந்தொகை 6-ம் பாட்டுப் பார்க்க — (2) பத்தர்கள் பயில — "சிவபத்தர் களோடிணங்குக" என்பது சிவஞான போதம், 12-ம் சூத்திரம், இரண்டாம் அதிகரணம். பயிலுதல் கூடியிருத்தல். இணங்குதல். கண்ணினை நெற்றிவைத்தார் — 'விழிபுலாம் பெருந் தடங்கண்" (காந்தாரப்பதிகம்) என்ற குறிப்பு (3) வாமன் — வாமனனுய் வந்த விட்டுணு திருமாணிக்குழியிற் பூசித்தனன். சோதியுட் சோதி — "அருக்கனிற் சோதி யமைத்தோன்". "மாவேறு சோதி" திருவாசகம். சிவபூசையில் சூரிய மண்டலத்துள் விளங்கும் சதாசிவ மூர்த்தியைச் சூரிய பூசையில் வணங்குதல் காண்க. ஆமனே — ஆ — மன் — ஐ = ஆனைந்து. பாசம் — கட்டும் தன்மை குறித்து நின்றது — (5) ஆரிருள் அண்டம்—"அண்டமாரிருளூடு கடந்தும்பர், உண்டுபோலுமோ ரொண்சுடர்" — (6) நட்டங்கு நடம் :- நட்டு — உயிர்களுக்கு இரங்கி. ஞானம் — ஞானம் (7) ஊனப்பேர் — பசு. பாசத்தாற் கட்டுண்டது என்ற பெயர். நடு குறிக்கோள். நிலைத்த இன்பம். வானப் பேராறு — கங்கை. ஆறு — வழி என்று கொண்டு, உயிர்கள் செல்லும் வையங்கதி என்றலுமாம் — (8) அரும்பினும் கொங்கு என்று மாற்றுக. கொங்கு—வாசனை. "மூகைத்த

"மலரின் வாசம்போல்" (1218) சங்கீனும் முத்தம் - கட்டி னுக்குள் வீடுபேறு. என்பது குறிப்பு. கங்குல் - பகல் - துன்ப வின்பம் — (9) கதிர்முகம் - பிறைக்கீறு.

---

## நான்காம் திருமுறை (3).

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

நெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிச்சென்று
கைதை மடற்புல்கு தென்கழிப் பாலை யதனுறைவாய்
பைதற் பிறையொடு பாம்புடன் வைத்த பரிசறியோம்
எய்தப் பெறினிரங் காதுகண் டாய்நம் மிறையவனே. (1)

பருமா மணியும் பவளமு முத்தும் பரந்துந்திவரை
பொருமால் கரைமேற் றிரைகொணர்ந் தெற்றப் பொலிந்
இலங்குங்
கருமா மிடறுடைக் கண்டனெம் மான்கழிப் பாலையெந்தை
பெருமா னவனென்னை யாளுடை யானிப் பெருநிலத்தே. (2)

நாட்பட் டிருந்தின்ப மெய்தலுற் றிங்கு நமன்றமராற்
கோட்பட் டொழிவதன் முந்துற வேகுளி ரார்தடத்துத்
தாட்பட்ட தாமரைப் பொய்கையந் தண்கழிப் பாலையண்ணற்
காட்பட் டொழிந்தமன் றேவல்ல மாயிவ் வகலிடத்தே. (3)

* * * * (4)
* * * * (5)
* * * * (6)
* * * * (7)
* * * * (8)
* * * * (9)
* * * * (10)

திருச்சிற்றம்பலம்.

இப்பதிகத்துள் * இக்குறியுள்ள பாடல்கள் செதலரித்து விட்டன (முன் எடுத்த வரலாறு நினைக்க).



பதிகப்பாட்டுக் குறிப்பு:- இத்திருப்பதிகத்தில் மூன்று பாட்டுக்களே கிடைத்துள்ளன. ஏனையவை செதலரித் தழிந் தனபோலும்! (1) நெய்தற் குருகு - நெய்தற் பறவை. கைதை மடல் - தாழைப்பூ மடல். பிறை பாம்புடன் வைத்த - பகைப் பொருள்களை ஒருங்கு வைத்தும், பிறையின் வளர்ச்சிக்கு இடையூறாகியதை அதனுடன் வைத்ததும் குறிப்பு — (2) மணி-பவளம்-முத்து - கடல்படு மணிகள். திரை - கடல் அலை. (3) நாட்பட்டிருந்து - நீண்டநாள் உலகில் வாழ்ந்து. இன்பம் எய்தலுற்று - உலகபோகம் துய்த்து. கோட்பட்டு - கொள்ளப்பட்டு. தாட்பட்ட - நீண்ட தாளினையுடைய, இறைவனது தாள்களிற் சூட்டப்படும் தன்மையுடைய என்றலுமாம். வல்லம் - வலிமையுடையோம். வலிமையாவது நமன்றமர்களின் துன்பத்தினின்று நீங்குதல்.

---

## ஐந்தாந் திருமுறை.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண்ணி நாமங்க ளோத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
அண்ண லேயறி வானிவ டன்மையே. (1)

மருந்து வானவ ருய்யநஞ் சுண்டுகந்
திருந்த வன்கழிப் பாலையு ளெம்பிரான்
றிருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்து ரைக்கிலு மென்சொற் பழிக்குமே. (2)

மழலை தான்வரச் சொற்றெரி கின்றிலள்
குழலி னேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலையெம் மண்ணலே
இகழ்வ தோவெனை யேன்றுகொ ளென்னுமே. (3)

செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மைய லாகி மதிக்கில ளாரையுங்
கைகொள் வெண்மழு வன்கழிப் பாலையெம்
ஐய னேயறி வானிவ டன்மையே. (4)

கருத்த னைக்கழிப் பாலையுண் மேவிய
ஒருத்த னையுமை யாளொரு பங்கனை
அருத்தி யாற்சென்று கண்டிட வேண்டுமென்
றொருத்தி யாருள மூசல தாடுமே. (5)

கங்கை யைச்சடை வைத்து மலைமகள்
நங்கை யையுட னேவைத்த நாதனார்
திங்கள் சூடித் திருக்கழிப் பாலையான்
இங்கு வந்திடு மென்றிறு மாக்குமே (6)

ஐய னேயழ கேயன லேந்திய
கைய னேகறை சேர்தரு கண்டனே
மையு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
ஐய னேவிதி யேயரு ளென்னுமே. (7)

பத்தர் கட்கமு தாய பரத்தினை
முத்த னைமுடி வொன்றிலா மூர்த்தியை
அத்த னையணி யார்கழிப் பாலையெம்
சித்த னைச்சென்று சேருமா செப்புமே. (8,

*    *    *    * (9)

பொன்செய் மாமுடி வாளரக் கன்றலை
அஞ்சு நான்குமொன் றுமிறுத் தானவன்
என்செ யான்கழிப் பாலையு ளெம்பிரான்
றுஞ்சும் போதுந் துணையென லாகுமே. (10)

திருச்சிற்றம்பலம்.

**இப்பதிகத்துள் * இக்குறியுள்ள பாடல் சிதலரித்து விட்டது. (ஏடு எடுத்த வரலாறு நினைக்க).**



பதிகப்பாட்டுக் குறிப்பு :- (2) பரிந்து உரைக்கிலும் என் சொற்பழிக்குமே-செவிலி கூற்று தாய் கூற்றெனினுமாம். "மாதியன்று மனைக்கிரு வென்றக்கால், நீதிதான்சொல நீயெனக் காரெனும், சோதியார்தரு தோணி புரவர்க்குத் தாதியாவனு னென்னுமென்னையலே" (குறுந்தொகை) என்ற இவ்வாறே கொண்ட அகப்பொருட்டுறையுள் வைத்த திருவாக்கினையும் இங்கு ஒப்பிடுக. (3) மொழி – மொழியுடையவள். கூறிய – கூறியவற்றை. (4) மதிக்கிலள் ஆரையும் – உத்தம நாயகிகள் தம் நாயகரையன்றிப் பிறரை மதியார்; சிவனுக்காட்பட்ட அன்பர் தன்மையுமிதுவே. (5) அருத்தி – ஆசை; மிக்க அன்பு; ஊசலாடுமே – மனம் அங்குத் தலைவனைக் காணச் செல்ல இழுக்க பிறர் காணில் நகைப்பர் என்ற உலகச்சொல் இங்கு இழுக்க ஊசலாடுதல். (6) கங்கை – நங்கை. இருவரையும் உடனே வைத்தவராதலின் என்னையும் உடன் வைப்பர் என்பது கருத்து (10) அஞ்சும் நான்கும் ஒன்றும் – பத்துத்தலைகளையும். துஞ்சும் போதும் – பிரிவினால் உயிர்போந் தறுவாயுள் நிற்கு நிலைக் குறிப்பு.

---

## ஆறாம் திருமுறை.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து
வொள்ளெலும்பு தூணா வுரோம மேய்ந்து
தாமெடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பலபடைத்தார் தாம ரையினார்
கானெடுத்து மாமயில்க ளாலுஞ் சோலைக்
கழிப்பாலை மேய கபா லப்பனார்
வானிடத்தை யூடறுத்து வல்லைச் செல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (1)

முறையார்ந்த மும்மதிலும் பொடியாச் செற்று
முன்னாமாய்ப் பின்னாமாய் முக்க ணெந்தை
பிறையார்ந்த சடைமுடிமேற் பாம்பு கங்கை
பிணக்கந்தீர்த் துடன்வைத்தார் பெரிய நஞ்சுக்
கறையார்ந்த மிடற்றடங்கக் கண்ட வெந்தை
கழிப்பாலை மேய கபா லப்பனார்
மறையார்ந்த வாய்மொழியான் மாய யாக்கை
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (2)

நெளிவுண்டாக் கருதாதே நிமலன் றன்னை
நினைமின்க ணித்தலுநே ரிழையா ளாய
ஒளிவண்டார் கருங்குழலி யுமையா டன்னை
யொருபாகத் தமர்ந்தடியா ருள்கி யேத்தக்
களிவண்டார் கரும்பொழில்சூழ் கண்டல் வேலிக்
கழிப்பாலை மேய கபா லப்பனார்
வளிவுண்டார் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (3)

பொடிநாறு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடிநாறு கமலத்த ராரூ ராதி
யானஞ்சு மாடுமா திரையி னார்தாங்
கடிநாறு பூஞ்சோலை கமழ்ந்து நாறுங்
கழிப்பாலை மேய கபா லப்பனார்
மடிநாறு மேனியிம் மாய நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (4)

விண்ணானாய் விண்ணவர்கள் விரும்பி வந்து
வேதத்தாய் கீதத்தாய் விரவி யெங்கும்
எண்ணானா யெழுத்தானாய் கடலே ழானா
யிறையானா யெம்மிறையே யென்று நிற்குங்
கண்ணானாய் காரானாய் பாரு மானாய்
கழிப்பாலை யுள்ளுறையுங் கபா லப்பனார்
மண்ணானாய் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (5)



விண்ணப்ப விச்சா தரர்க ளேத்த
விரிகதிரா னெரிசுடரான் விண்ணு மாகிப்
பண்ணப்பன் பத்தர் மனத்துள் ளேயும்
பசுபதி பாசுபதன் றேச மூர்த்தி
*கண்ணப்பன் கண்ணப்பக் கண்டு கந்தார்
கழிப்பாலை மேய கபா லப்பனார்
வண்ணப் பிணிமாய யாக்கை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (6)

பிணம்புல்கு பீறற் குரம்பை மெய்யாப்
பேதப் படுகின்ற பேதை மீர்காள்
நிணம்புல்கு சூலத்தர் நீல கண்ட
ரெண்டோள ரெண்ணிறைந்த குணத்தி னாலே
கணம்புல்லன் கருத்துகந்தார் காஞ்சி யுள்ளார்
கழிப்பாலை மேய கபா லப்பனார்
மணம்புல்கு மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (7)

இயல்பாய வீசனை யெந்தை தந்தை
யென்சிந்தை மேவி யுறைகின் றானை
முயல்வானை மூர்த்தியைத் தீர்த்த மான
தியம்பகன் றிரிசூலத் தன்ன கையன்
கயல்பாயுங் கண்டல்சூழ் வுண்ட வேலிக்
கழிப்பாலை மேய கபா லப்பனார்
மயலாய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (8)

செற்றதோர் மனமொழிந்து சிந்தை செய்து
சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தை யுள்ளால்
உற்றதோர் நோய்களைந்திவ் வுலக மெல்லாங்
காட்டுவா னுத்தமன்றா னோதா தெல்லாங்
கற்றதோர் நூலினன் களிறு செற்றான்
கழிப்பாலை மேய கபா லப்பனார்
மற்றிதோர் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (9)

* கண்ணப்பர் திருவுருவம் இத்தலத்தில் உள்ளது. மிகப்பழமையானது.

பொருதலங்க னீண்முடியான் போர ரக்கன்
புட்பகந்தான் பொருப்பின்மீ தோடா தாக
இருநிலங்க ணடுக்கெய்த வெடுத்தி டுதலு
மேந்திழையா டான்வெருவ விறைவ னோக்கிக்
கரதலங்கள் கதிர்முடியா றஞ்சி னோடு
கால்விரலா லூன்று கழிப்பா லையார்
வருதலங்க மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. (10)

திருச்சிற்றம்பலம்.

இப்பதிகத்து 1–9-ம் பாடல்களுக்கு ஸ்ரீ செப்பறைச் சுவாமிகள் விரிவுரை இதன் பிற்பகுதியில் உள்ளது காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :- (1) தாமெடுத்த கூரை – உடம்பு. "மாயக்குரம்பை". (3) வல்லைச் செல்லும் வழி. இம்மையும் மறுமையுந் தாண்டி வீட்டையடையும் சிவநெறி. கபாலப் பனார் – பிரமன் கபாலத்தைக் கையில் ஏந்தியவர். ஊழி முதல்வர் என்ற குறிப்பு "புன்சடைக் கீறு திங்கள் வைத்த வன்கை வைத்தவன் கபால் மிசை, ஊறுசெங் குருதியா னிறைத்த காரணம்" என்ற நாலாயிரப் பிரபந்தமும் (சந்த விருத்தம்) இக்கருத்தை விளக்குகின்றது காண்க. முன்னுமாய்ப் பின்னுமாய் – எல்லாப் பொருளுக்கு முன்னுள்ளவன்; பின்னேயுமிருப்பவன். "முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" (திருவாசகம்). பிணக்கம் – பகைமை. மறையார்ந்த வாய்மொழி – வேதாகமங்கள். (3) வளி – மூச்சுக்காற்று. (4) பொடி – திருநீறு. மடிநாறு – மடி – மடிதல்; சாதல். முதனிலைத்தொழிற் பெயர்; மடிநாறுதல் – அழியுந் தன்மை விளங்குதல். (5) இப்பாட்டு ஐயப்பாடு. (6) விண்ணப்ப – வானுலக வாசிகளாகிய நாயனார் கண்ணப்பரைத் துதிக்கும் இடங்களுள் இது ஒன்று. (7) பிணம் – பிணத்தன்மை சாகும் – அழியும் தன்மை. கணம் புல்லன் – அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவர். (8) இயல்பாய ஈசன் – "ஈசனவ னெவ்வுயிர்க்குமியல்பானான் சாழலோ," (திருவாசகம்) இயல்பு என்றது ஈசனுந்தன்மை. தலைவனுந்தன்மை.



எவராலுந் தரப்படாது, தன்னியல்பானே அமைந்தது என்றதாம். எந்தை தந்தை என் சிந்தை மேவி — வழிவழி சிவனடிமைத்திறத்துள் நின்ற குடிமை. முயல்வான் – உயிர்கள் ஈடேறும்படி ஐந்தொழிலை என்ஞான்றும் இயற்றுபவன். தியம்பகன் – திரியம்பகன், முக்கண்ணன். (9) இவ்வலக மெல்லாங் காட்டுவோன் – உலகங்கள் – புவனங்கள் போகங்கள். முதலாகிய தத்துவங்களின் உண்மை நிலை எல்லாங் காட்டுபவர், ஓதாதேல்லாம் கற்றதோர் நூலினன் — முற்றறிவுடையவன். (10) ஆறஞ்சு – கரதலங்கள் இருபதும் முடிகள் பத்துமாக முப்பது.

---

## ஏழாந் திருமுறை.

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பண் – நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செடியேன் றீவினையிற் றடுமாற்றங் கண்டாலும்
அடியா னாவனென்று தொழித றகவாமே
முடிமேன் மாமதியும் மரவும் முடன்றுயிலும்
வடிவே தாமுடையார் மகிழுங் கழிப்பாலையதே. (1

எங்கேனும் மிருந்துன் னடியே னுனைநினைந்தால்
அங்கே வந்தென்னொடு முடனாகி நின்றருளி
இங்கே யென்வினையை யறுத்திட் டெனையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. (2)

ஒறுத்தாய் நின்னருளில் லடியேன் பிழைத்தனகள்
பொறுத்தா யெத்தனையும் நாயேனைப் பொருட்படுத்துச்
செறுத்தாய் வேலைவிட மறியாம லுண்டுகண்டங்
கறுத்தாய் தண்கழனிக் கழிப்பாலை மேயானே. (3)

சுரும்பார் விண்டமல ரவைதூவித் தூங்குகண்ணீர்
அரும்பா நிற்குமனத் தடியாரொடு மன்புசெய்வன்
விரும்பே னுன்னையல்லா லொருதெய்வ மென்மனத்தாற்
கரும்பா ருங்கழனிக் கழிப்பாலை மேயானே. (4)

ஒழிப்பா யென்வினையை யுகப்பாய் முனிந்தருளித்
தெழிப்பாய் மோதுவிப்பாய் விலையா வணமுடையாய்
கழிப்பால் கண்டடங்கச் சுழியேந்து மாமறுகிற்
கழிப்பா லைமருவுங் கனலேந்து கையானே. (5)

ஆர்த்தா யாடரவை யரையார் புலியதண்மேற்
போர்த்தா யானையின்றோ லுரிவைபு லாறுறக்
காத்தாய் தொண்டுசெய்வார் வினைக ளவைபோகப்
பார்த்தா னுக்கிடமாம் பழியில்கழிப் பாலையதே. (6)

பருத்தாள் வன்பகட்டைப் படமாகமுன் பற்றியதள்
உரித்தா யானையின்றோ லுலகந்தொழு முத்தமனே
எரித்தாய் முப்புரமு மிமையோர்க ளிடர்கடியுங்
கருத்தா தண்கழனிக் கழிப்பாலை மேயானே. (7)

படைத்தாய் ஞாலமெலாம் படர்புன்சடை யெம்பரமா
உடைத்தாய் வேள்விதனை யுமையாளை யோர்கூறுடையாய்
அடர்த்தாய் வல்லரக்கன் றலைபத்தொடு தோணெரியக்
கடற்சாருங்கழனிக் கழிப்பாலை மேயானே. (8)

பொய்யா நாவதனாற் புகழ்வார்கண் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கேயொத்த தேவர்பிரான்
செய்யா னுங்கரிய நிறத்தானுந் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான்கழிப் பாலையதே. (9)

பழிசே ரில்புகழான் பரமன் பரமேட்டி
கழியார் செல்வமல்குங் கழிப்பாலை மேயானைத்
தொழுவா னவலர்கோ னூர னுரைத்ததமிழ்
வழுவா மாலைவல்லார் வானோருல காள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு:- (1) செடி - பாவம் (குற்) குணமின்மை; தீவினையின் - தீவினைகளால்; ஐந்தாம் வேற்றுமை இன்னுருபு ஏதுப் பொருட்டு. தடுமாற்றம் - பிறப்பிறப்புப் பௌவத்தில் கறங்கும், சகடக்காலும் போல மாறிமாறி உழத்தல். கண்டாலும் - கண்டு; ஆல் - அசை. ஆவ - ஐயோ; இரக்கப்



பொருள் குறிப்பதோர் இடைச்சொல். "ஆவ எந்தாய்," (சிற்-கோவை) ஆ! ஆ! எனது எனினும் அமையும். ஈண்டும் அப்பொருட்டாய இடைச்சொல்லே. எனது - என்று திருவுளம் பற்றியருளாமல். ஒழிதல் - பராமுகமாய், வாளாவிருத்தல். தகவு - நடுவுநிலைமை; "தக்கார் தகவிலார்" என்பது" (திருக்குறள்) ஆமே - ஏகாரம் எதிர்மறை. மாதி - ஈண்டுப் பிறைத்திங்கள்; "மாமதியன்னான் வளர்கின்றான்" (சீவக.) என்றாற்போல. மதியும் அரவும் உடன் துயிலும் - "பாம்போடு திங்கள் பகைதீர்த்தாண்டாய்" (திருநா. தே.) என்பதறிக. கழிப்பாலையதே - கழிப்பாலையே. அது - பகுதிப் பொருள் விகுதி. மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் இடம் கழிப்பாலையே என்க. கழிப்பாலை யென்னும் பெயர்க் காரணம். "கழிப்பால் கண்டடங்கச் சுழியேந்து மாமறுகிற், கழிப்பாலை" "கடற்சாருங்கழனிக் கழிப்பாலை" "கழியார் செல்வமல்குங் கழிப்பாலை" என இப்பதிகத்துள் முறையே 5, 9, 10-ஆம் திருப்பாடல்களுள் கூறுமாறு பற்றியுணர்ந்து கொள்க.

(2) "எங்கேனும் யாதாகி யிருந்திடினும் தன்னடியார்க்கு, இங்கே யென்றருள்புரியும் பெருமானார்" (திருஞா. தே.) "என்னுளே யுயிர்ப்பாய்ப்புறம் போந்துபுக்கு" (திருநா. தே.) "எங்கே போவேனாயிடினும் அங்கேவந்தென் மனத்தீராய்" (சுந். தே) என்பவற்றுடன் இப்பாசுரத்தை ஒப்பிட்டுக் காண்க. எனை ஆளும் - அடியேனைக்காத்தருளும்; கங்கா நாயகன் - வடமொழிச் சந்தி; என்றொடும் உடனாகி - "உலகெலாமாகி வேறாய் உடனுமாய்" (சிவ. சித்தி.) "தானாய், வேறாய் உடன் ஆனானிடம்" (திருஞா. தே)

(3) அருளில் ஒறுத்தாய் - இது மறக்கருணையெனப்படும், "நப்பாநாடி அத்தக ஒறுத்தி" (புறம்) பிழைத்தனகள் - கள் விகுதிப்பொருள் விகுதி - விகுதிமேல் விகுதி என்பர்; செறுத்தல் - தண்டித்தல்; மறியாமல் - திரும்பாமல்; கறுப்பு - நிறப்பண்பு (தொல்.)

(4) தூங்குதல் - தங்குதல், "தூங்காமற்றூங்கி" என்றுமாம். அரும்பா - அரும்பி - தோன்றி. "அரும்பித்த செஞ்ஞாயிறு" (திருநா. தே.) கண்ணீர் - ஆனந்தக் கண்ணீர்.

விரும்பேன் உன்னையல்லால் ஒரு தெய்வம் என்மனத்தால் — "உன்னேன் பிறதெய்வம் உன்னையல்லால் எங்கள் உத்தமனே." (திருவாசகம்) மனத்தால் - மனத்தில்; உருபுமயக்கம்; "காலத்தினாற்செய்த நன்றி" (திருக்குறள்) என்பதிற்போல. கருப்பாருங்கழனி — "நிலத்துக்கணி யென்ப நெல்லுங்கரும்பும்" (நான்மணிக்கடிகை).

(5) தெழித்தல் - உரப்புதல் - அதட்டுதல் - முழக்குதல் - வினை (கன்மமலம்) பரிபாக மெய்தற்பொருட்டு அதனை முதிர்விப்பாய் எனினுமாம். இப்பொருளில் தெழித்தல் - முதிர்வித்தல். (சிவ-சித்தி சிவ-முனிவர்) "ஓதுவித்தாய்............... மோதுவிப்பாய் உகப்பாய் முனிவாய்" (திருநா. தே.) விலையாவணம் - ஆளடிமை முறிச்சீட்டு. நம்பிகள் வரலாற்றின் அகச்சான்று. கழிப்பால் - உவர்க்கழியின்மருங்கில். கண்டல் - தாழை. கழிப்பால் - நெய்தற் பூக்களின் பக்கத்தே; கண்டல்கள் தங்க என்றுமாம்.

(6) வினைகள் - சஞ்சிதவினைகள்; திருவருள் நோக்கால் போவது அதுவேயாகலின். பார்த்தான் - அருணோக்கஞ் செய்தவன்; நயனதீக்ஷை என்பர். "முன்னவன் கண்டது முதனூலாகும்" (தொல்) என்றாற்போலச் செய்தவன் எனினுமாம். "ஆர்த்தவ ராடரவம்மரை மேற்புலி யீருரிவை, போர்த்தவனானையின் றோலுடல் வெம்புலால் கையகலப், பார்த்தவன்" (சு. தே. திருநின்றவூர்-நட்டராகம் 6) என்பதுடன் ஒப்பிடுக.

(7) பகடு எருது. படம்-சீலை. இடபம் எழுதிய கொடிச்சீலை என்க. இனி யானைப்பகடு - ஆண்யானை; வேழம் - களிறு எனக்கொண்டு, வேழத்தின் அதளைப் படமாகப் பண்டு உரித்தாய் என்பதும் ஒன்று. அதள் - தோல்; படம் - ஆடை; கருத்தா - கர்த்தனே!

(8) பொன் - செம்பொன்னிறம்; வேள்வி - தக்கன்வேள்வி; உடைத்தாய் - அழித்தாய்; கந்தபுராணம் தக்கயாக சங்காரப் படலத்தானறிக.



(9) பொய்யா - மறவாமல் - தவறாமல்; "வான் பொய்ப்பினுந்தான் பொய்யா" மனம் - உயிர்; மெய் - சத்து; செய்யான் - பிரமன் - செம்பொன் என்பதுமறிக; இனி, செய் - வயல் - பிருதிவி - எனக்கொண்டு அதற்குரியவன் என்றுமாம்.

(10) பழிசேரில் புகழான் — "பழியிலான் புகழுடையான்" (திருநா. தே.) சேர் - சேர்தல்; முதனிலைத் தொழிற்பெயர்; சேர்தல் இல்லாத புகழ். "இறைவன், பொருள்சேர்புகழ்" (திருக்குறள்) இட்டி - வேள்வி, கழி - கடலுக்கு ஆகுபெயர்; செல்வம் - முத்து, பவளம் முதலிய கடல்படு பொருள்கள்; தொழுவான் - தொழுது; வானீற்று வினையெச்சம்; நாவலர்கோன் - திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவன்; நாவலர்களுக்குத் தலைவன் எனினுமாம். தமிழ்மாலை, மாலை - பூமாலை போன்ற பாமாலை; உவமையாகு பெயர். தமிழ்மாலையை வழுவாமல் ஓதவல்லார் எனவே ஆதியோடந்தமாகத் தொடர்ந்து முற்றும் ஓதவேண்டுமென்க. இது இப்பதிகத்தின் பலசுருதி. வானோர் உலகு ஆள்பவர் - இந்திரராவர், இத்தலத்திற்கு இந்திரகீலபுரம் என்னும் பெயருண்மையும் அறிக. (செடியேன் முதற் குறிப்பு)

---

இக்குறிப்பு — சிதம்பரம், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. க. சிவப்பிரகாசதேசிகர் அவர்கள் தந்துதவியது.

---

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்
### திருக்கழிப்பாலை வந்து வணங்கிய தன்மையைச்
### சேக்கிழார்பெருமான்
### கூறியருளிய செய்யுள் இது.

அந்நாளிற் றம்பெருமான் அருள்கூடப் பணிந்தகன்று
மின்னார்செஞ் சடைமுடியார் விரும்புமிடம் பலவணங்கிக்
கன்னாடு வெயில்புடைசூழ் கழிப்பாலை தொழுதேத்தித்
தென்னாவ லூர்மன்னர் திருத்தில்லை வந்தடைந்தார். (166)

சிவக்கவிமணி
C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள் விரிவுரை.

பொழிப்புரை:— (திருக்குருகாவூரில் தெரிசனம்செய்து அங்கிருந்த சுந்தரர்) அந்நாளிலே தமது பெருமானது திருவருள் விடை பெற்று அங்கு நின்றும் நீங்கிப்போய், ஒளி விளங்கும் சிவந்த சடையினையுடைய இறைவர் விரும்பி வீற்றிருக்கும் இடங்கள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு கல்லினலியன்ற அழகிய மதிற்பக்கத்திற் சூழ்கின்ற திருக்கழிப்பாலையினைத் தொழுது துதித்து தென்னாவலூரில் அவதரித்த தலைவராகிய நம்பிகள் திருத்தில்லை நகரின்கண் வந்து அடைந்தார்—என்பது.

கல்நாடும் எயில் - கல் எயில் - நாடும் எயில் - என்று தனித் தனிக் கூட்டுக: கல் எயில் - கல்லாலியன்ற மதில். நாடும் - நாடத் தக்க; அழகிய.

கழிப்பாலை - திருக்கழிப்பாலையினை: கன்றுடு மெயில் புடைசூழ் கழிப்பாலை, இத்திருக்கோயில் முன்னர்ப் பெருந் திருக்கோயிலாகக் கொள்ளிட நதியின வடகரையில் இருந்தமை அறியப்படும்; அஃது ஆற்றின் வெள்ளத்தில் அழிவுபட்டமையால், இப்போது சிவபுரியில் (3 திருநெல்வாயில்) சிறு தனி ஆலயமாகத் தாபிக்கப்பட்டுள்ளது.

இத்தருணம் பாடிய திருப்பதிகம் "செடியேன்" என்பது அதன் குறிப்பு வருமாறு:—

பதிகக் குறிப்பு:— என்னை விலை ஆவணமுடையான்; என் வினை தீர்த்தாட்கொண்டவன்; அவனது இடம் கழிப்பாலையதே.

(செடியேன்—2-வது குறிப்பு C. K. S.)

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) செடியேன் - குற்றமுடையவன்; ஆவ - இரக்கச்சொல்; தகவாமே - தகவன்று; வினை எதிர்மறை குறித்தது; மதியும் அரவும் உடன் துயிலும் - துயிலுதல் - ஈண்டுத் தங்குதல் என்ற பொருளில் வந்தது; பகைப்பொருள்களைப் பகைதீர்த்துடனிருக்கவைத்தல் இறைமைக்குணம்; "பாம்போடு திங்கள் பகை தீர்த்தாண்டாய்" (தேவா); அதுபோல் என்வினையின் கொடுமை தீர்த்து உடன் வைக்கவேண்டும் என்பது குறிப்பு; வடிவே - ஏகாரம் தேற்றம்; மேல் 3-5-பாட்டுக்களு மிக்கருத்தன; —(2) இறைவர் தமக்குச் செய்த பேரருளை வியந்து போற்றியது;—(3) நின் அருளில் ஒறுத்தாய் - அருட்குணங் காரணமாக என் குற்றங் கண்டபோது ஒறுத்தாய் - தண்டித்தாய்; ஒறுத்தல் - அருட்குணம்; "ஒறுத்தா லொன்றும் போதுமே" (திருவா); மேல் 5-வது பாட்டும் பார்க்க;



"தந்தைதாய்...அடித்துத் திய பந்தழ மிடுவர்...இந்த நீர் முறைமை யன்றோ வீசனுர் முனிவுமென்றும்" (சித்தி. 2-15); அறியாமல் - பிறர் அதன் கொடுமையினை அறியாதபடி: —(4) சுருர்பார்...அடியார் - அடியார்களிலக்கணம்; அடியாரோடும் - தொண்டரோடு கூடுதல் - அணைந்தோர் தன்மை; (போதம்-12 சூத்.) சைவத்திறத்தின் ஞான நூல்களுட்கண்ட அரிய உண்மைகளுள் ஒன்று; விரும்பேனுன்னை யல்லால் - எதிர்மறை உறுதி குறித்தது;—(5) விலை ஆவணமுடையாய் - ஆவணங் காட்டி ஆட்கொண்டமை; "மோதுவிப்பா ரிகப்பாய் முனிவாய்" (தேவா.); வினைகளவை போகக் காத்தாய் - என்க; பார்த்தாயுனக்கு என்பது பார்த்தானுக்கு - என நின்றது;—(7) பருத்தாள் வன்பகடு - யானை; பரு - பரிய; வன் - வலிய; பகடு - ஈண்டு யானை என்ற பொருளில் வந்தது; படம் - போர்வை; —(8) உடைத்தாய் - அழித்தாய்; —(9) மெய்யே நின்றெரியும் விளக்கு - சத்துச் சொரூபமாக நிலைபெற்று ஒளிவிடும் விளக்கு;—(10) சேர்இல் - சேர்தல் இல்லாத; சேர் - முதனிலைத் தொழிற் பெயர்; சேர்தல்; கழியார் செல்வம் - கடற்கழியின் வழி வந்து சாரும் முத்து-பவளம் முதலிய மணிகளும் ஏனைக் கடல்படு பண்டங்களாகிய செல்வங்களும்.

---

## திருக்கழிப்பாலை

(செடியேன்—3-வது-குறிப்பு, ஸ்ரீ செப்பறைச்சுவாமிகள் சொல்லி ஸ்ரீ நடராஜஓதுவா மூர்த்திகள் எழுதியது)

பண்—நட்டராகம் (சுந்.)

1. கழிப்பாலை மகிழும் வடிவுடையீரே! நீர், பாவியேன் தீவினையாற் கலங்கினலும் (வேறுபட்டாலும்) நம் அடியவன் அவன் ஆ. ஆ. எனது நீக்குதல் தகுதியாகுமோ?

2. இங்கே......கழிப்பாலை மேயானே நீ, நின்றருளி = அருளுக. "ஊனக்கண் பாசமுணராப்பதியை ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி." நாடி = நாடுக. என்பதுபோல வியங்கோட்பொருள்.

3. செறுத்தாய்......மேயானே! நின்னருளால் ஒறுத்தாய் பொறுத்தாய், (அது உமது கடமை எதனுலெனில்) கறுத்தாயாதலால்.

செறத்த + ஆய் = கோபித்துவந்த + நண்ணிதாகிய. ஆய் = ஆன. ஒறுத்தாய் = தண்டித்தாய்.

4. மேயானே......விரும்பேன். எதனுலெனில்? அன்பு செய்வனுதலால். அரும்பா நிற்கும் மனம் = தோன்றி நிற்றற்குரிய மனத்தையுடைய.

5. கையானே......ஆவணமுடையாய்! நீ. மோதுவிப்பாய் + ஒழிப்பாய் (எ. க.) முனிந்து என் வினையை மோதுவிப்பாய் = என் வினையைக்கொண்டு தாக்குவிப்பாய். உகந்து என் வினையை தெழித்து ஒழிப்பாய் = விரும்பி என் வினையை முதிர்வித்து ஒழிப்பாய்.

உகப்பாய்-தெழிப்பாய் = உகந்து தெழித்து என எச்சமாக்குக. கழிப்பால்கண்டு அடக்கு அச்சுழியேந்துமாமறுகின் = கழியினிடத்து தோன்றி அடக்குகின்ற அச்சுழிகளையுடைய விதிகள் பொருந்திய.

6. கழிப்பாலையையே விரும்பிப்பார்த்த உனக்கு அது இடமாகும். அப்படி இடங்கொண்ட நீ ஆர்த்தாய் - போர்த்தாய் - போகக் காத்தாய் (எ. க.) உரிவைத்தோல்.

7. மேயானே-கருத்தா-உத்தமனே = உரித்தாய் + எரித்தாய் (எ. க.) பருத்தாள்வன் பகட்டைப்பற்றி யானையின்தோல்பட மாகும்படி அதன் உரித்தாய். யானை + அதன் = அதின் + அதை 2-ம் சுட்டுகள்.

7. கருத்தா எரித்தாய் எனவும் கர்த்தனே எனவும் கொள்ளலாம் = கருத்துக்கொண்டு எரித்தாய் அல்லது இறைவனே.

8. உடைத்தாய் = தகர்த்தாய்.

9. பிரான்-அரியான்-கழிப்பாலையை மகிழ்வான் (எ. க.)

10. சேரில் = சேர்தலில்லாத. வழுவாத்தமிழ்மாலை வல்லார்.

---



## வேறு தலத் தேவாரங்களிலும், திருக்கழிப்பாலைத் திருநாமம் வரப்பெற்ற பாடல்கள்.

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

திருக்ஷேத்திரக் கோவை

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லை யம்பலம் வல்லம் நல்லம்
வடகச்சியும் அச்சிறு பாக்கம் நல்ல
கூரூர்குட வாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ் கழிப் பாலைதென் கோடிபீடார்
நீரூர்வயல் நின்றியூர் குன்றியூரும்
குருகா வையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர் நன்னீள் வயல் நெய்த் தானமும்
பிதற்றாய் பிறை சூடிதன் பேரிடமே. (1)

திருவதிகை வீரட்டானம்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

காப்புத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தெய்வப் புனற்கெடில வீரட்டமும்
செழுந்தண் பிடவூருஞ் சென்றுநின்று
பவ்வந்திரியும் பருப் பதமும்
பறியலூர் வீரட்டம் பாவநாசம்
மவ்வந்திரையு மணிமுத்தமும்
மறைக்காடும் வாய்மூர் வலஞ்சுழியும்
கவ்வைவரிவண்டு பண்ணே பாடுங்
கழிப்பாலை தம்முடைய காப்புக்களே. (2)

## திருவாரூர் அரநெறி திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

காலனைக் காலாற்காய்ந்த கடவுள் தன்னைக்
    காரோணங் கழிப்பாலை மேயான் றன்னைப்
பாலனுக்குப் பாற்கடலன் றீய்ந்தான் றன்னை
    பணியுகந்த வடியவர்கட் கினியான் றன்னைச்
சேலுகளும் வயலாரூர் மூலத்தானம்
    சேர்ந்திருந்த பெருமானைப் பவளமீன்ற
ஆலவனை யரநெறியி லப்பன் றன்னை
    அடைந்தடியே னருவினைநோ யறுத்தவாறே. (3)

## க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணிப்படிக் கரை வாள்கொளிப்புத்தூர்
    வக்கரை மந்தாரம் வாரணாசி*
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
    விளமர் விராடபுரம் வேட்களத்தும்
பெண்ணை யருட்டுறைதண் பெண்ணாகடம்
    பிரம்பில் பெரும்புலியூர் பெருவேளூருங்
கண்ணை களர்க்காறை கழிப்பாலையுங்
    கயிலாய நாதனையே காணலாமே. (4)

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

நாட்டுத் தொகை.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அண்டத் தண்டத்திப் புறத்தாடு மமுதனூர்
தண்டந் தோட்டந்தண்டங் குறைதண்ட லையாலங்காடு
கண்டன் முண்டல்கள்சூழ் கழிப்பாலை கடற்கரை
கொண்டல் நாட்டுக்கொண்டல் குறுக்கைநாட்டுக்
                    குறுக்கையே. (5)

---

* வாரணாசி - காசி.



## 11-ம் திருமுறை—பரணதேவநாயனார் அருளிய

## சிவபெருமான் திருவந்தாதி.

தாமென்ன நாமென்ன வேறில்லை தத்துறவில்
தாமென்னை வேறாத் தனித்திருந்து—தாமென்
கழிப்பாலை சேருங் கறைமிடற்றார் என்னோ
கழிப்பாலை சேருங் கடன். (34)

## இப்பாடலுக்கு முதலாவது உரை.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பகுதி

திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் தந்துதவியது.

மென்கழிப்பாலை சேரும் கறைமிடற்றார் - மென்கழியாகிய கரும்பின் சாறுபோன்றினிக்கும் பாலைப் பண்ணினைப் பாடவல்ல நஞ்சக் கறை பொருந்திய திருமிடற்றினையுடைய இறைவர், தாம் என்ன நாம் என்னவேறில்லை - கடவுளாகிய தாமென்றும் உயிர்களாகிய நாமென்றும் இருதிறமாகப் பிரித்துரையாதபடி நம்முடன் பிரிவறக் கலந்திருப்பவ ராயினும், தத்துறவு இல்தாம் - வருத்தம் சிறிதுமில்லாததாம், என்னைத்தனித்து வேறாஇருந்து - தம்மைக் காதலித்து வருந்துபவ ளாகிய எளியேனைத் தனித்திருந்து வருந்தச்செய்து என்னை விட்டு வேறாக நீங்கியிருந்து, தாம் கழிப்பாலை சேரும்கடன் என்னோ - தாம் மட்டும் திருக்கழிப்பாலை யெனுந்திருத்தலத்தைச் சேர்ந்து இனிதமர்ந் திருத்தல் முறையாதல் எவ்வாறு?

திருக்கழிப்பாலையிறைவனைக்காமுற்ற தலைமகள் அவ்விறைவாது பிரிவாற்றாது வருந்திக் கூறுவதாக அமைந்தது இத்திருப்பாட்டு. இதன்கண் மென்கழியென்றது மெல்லிய கழையாகிய கரும்பினை. பாலை - பாலையென்னும் பண். கருப்பஞ்சாறு போன்றினிக்கும் பாலைப் பண் என்றது சிவபெருமான் பாடிய சாமமாகிய இன்னிசையினை. 'பாலையாழ்ப்பாட்டுகந்தான்' என ஆளுடைய பிள்ளையாரும் 'பாடினார் சாமவேதம்' என ஆளுடைய அரசரும் இறைவனைப் போற்றுதல் காண்க. இறைவன் திருமிடறு பாலையாழாகிய இவ்வின்னிசையும் நஞ்சக்கறையும் பொருந்தி விளங்குமியல்பினை 'யாழ்கெழுமணிமிடற் றந்தணன்' எனவரும் அகநானூற்றுக் கடவுள்வாழ்த்தால் அறியலாம்.

"தாமென்ன..................."

## ஷை பாடலுக்கு இரண்டாவது உரை.

கோவைப் பேரூர்

திரு பண்டிதர் அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் தந்துதவியது.

நுதலியது— "உலகெலாம் ஆகிவேறாய் உடனுமாய் நிற்கும்" இறைவனது தன்மை பாராட்டப்படுகிறது. அஃதாவது :— இறைவன் ஆன்மாக்கள்தோறும் கலந்திருத்தலினால், அவையே யாகியும், பொருட்டன்மையால் அவற்றின் வேறு ஆகியும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாகியும், நிற்கும் உண்மை.

பதப் பொருள் :- தத்து - கலந்து நிற்கின்ற, உறவில் - சம்பந்தத்தால், தாம் என்ன - நாம் என்ன வேறுஇல்லை - பதியென்றும் பசுவென்றும் வேறு இல்லை (அப்படியிருந்தும் பொருள் தன்மையால்) தாம் - பதியாகிய இறைவன், என்னை - ஆன்மாவாகிய என்னை, வேறு ஆ - வேறு ஆக, தனித்து இருந்து - தான் தனியே இருந்தும், தாம் என்ன - தானே என்று சொல்லும்படியான, கழிப்பாலை - திருக்கழிப்பாலை யென்னும் பதியில், சேரும் - எழுந்தருளியுள்ள, கறைமிடற்றான் - சிவபெருமான், (மீளவும்) கழி - வேறாக ஒதுக்கப்பட்ட பாலை - பான்மையையுடைய ஆன்மவர்க்கத்தை, சேரும் - சேர்ந்து உடனாய் நிற்கும், கடன் - தன்மை, என்னே - வியப்பாயுள்ளது.

கலப்புத்தன்மையால் - உயிரும் உடம்பும்போல ஒன்றாயிருக்கும் இறைவன், பொருட்டன்மையாற் கண்ணும் அருக்கனும்போல வேறாக இருந்தும், உயிர்க்குயிராம் தன்மையால், கண்ணொளியும் ஆன்மபோதமும், அத்துவிதமாய்க் கலந்திருக்கும் தன்மை யென்னே யெனப் பாராட்டியவாறு.

குறிப்பு :- தத்துதல் - கலத்தல் என்னும் பொருளிலும், கடன் - தன்மையென்னும் பொருளிலும் வந்தது லட்சிதலட்சணை. கழிபாலை - வினைத்தொகை எதுகை நோக்கி மிக்கது; கழித்தலையுடையபாலை யென்று வேற்றுமைத் தொகையாகினும் ஆம்.

தாம் என் கழிப்பாலை - என்ற கருத்து - மூர்த்திமானாகிய இறைவன் தீர்த்த சொரூபமாயிருப்பது போலவே ("சென்றாடு தீர்த்தங்களானார் தாமே") தலசொரூபமாகவும் இருக்கின்றான் என்பது. இதனை "காழ்புனற் காஞ்சித் தீர்த்தமாய்ப் பேரூர்க்கடி வரைப்பாய் மூர்த்தியும் .....ஆகி.....யருளும் வித்தகா" என்ற கச்சியப்பமுனிவர் வாக்காலும் அறிக.



பாலை - பான்மை; ஐ - பண்புப் பெயர்விகுதி. தொன்மையென்ற சொல் - தொல்லையென்று வருதல் போலப் பான்மை யென்ற சொல் பாலையென வந்தது. இருந்தும் - என்ற சொல்லில் உம்மை விகாரத் தாற் றொக்கது.

"தாமென்ன........................"

## ஷை பாடலுக்கு மூன்றாவது உரை.

(திரு.வித்துவான் ந. சிவப்பிரகாச தேசிகர்)

தாமென் கழிபாலை சேரும்கறைமிடற்றான் தாம் - பரவிய இனிமை மிக்க திருப்பாற்கடலிற் றோன்றிய விடந்தங்கிய நீலகண்டராகிய எனது நாயகர்தாம், என்னைவேறா தனித்து இருந்து - நாயாகிய அடியேனைவிட்டுப் பிரிந்து தனிமையுற்றிருந்து. தத்துற இல் - (யாண்டும்) போக்கு வரவு புரிதல் இல்லை. (இங்ஙனம் என்னில் தாதான்மியமாய்க் கலந்து அத்துவிதமாயிருத்தலினாலே) தாம் என்ன நாம் என்ன வேறு இல்லை - பரம்பொருளாகிய சிவம்தாம் என்னவும், ஆன்மாக்களாகிய யாங்கள்தாம் என்னவும் இரண்டாகப் பிரிந்து வேறுபட்டிருத்தல் இல்லையாம் (அங்ஙனமாகவும் எமது நாயகன் எம்மைவிட்டுப் பிரிந்து) கழிப்பாலை சேரும்கடன் என்னோ - திருக்கழிப்பாலை யென்னும் ஓர் தலத்தைத் தமக்குரிய இருக்கையாக வரைந்துகொண்டு ஆண்டு எழுந்தருளியிருக்கும் முறைமைதான் யாதோ ?

தலைவனைப்பிரிந்த தலைவிகூற்றாக அமைந்துள்ளது இச்செய்யுள். இறைவன் யாண்டும் நீக்கமின்றி நிற்றலின், தத்துறவுஇல் என்றார். தத்துறவு - தாவுதல் - போதல் வருதல் "தாவியவன் உடலிருந்துங் காணாத தற்பரனை" (திருஞா. தே.) "போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே" (திருவாசகம்) சிவோகம் பாவனையால் அவன் இவனாய் நின்ற நிலைபற்றி, தாமென்ன நாமென்ன வேறில்லை என்றார்; "உடையார் ஒருவர் தமர்நாம்" "நாமார்க்குங் குடியல்லோம்......எண் குணத்துளோமே" (திருநா. தே.) என்பவற்றாலுணர்க. தா - பரப்பு. மென்மை - இனிமை. கழி - மிகுதி. பரவியவேகம் மிக்க கறைசேரும் மிடற்றான் எனினுமாம். பால் - பாற்கடலைக்குறித்தது; ஆகுபெயர் வேறுஇல்லை - இரண்டில்லை; அத்துவிதன் என்றபடி - சைதன்னியனாகிய என்னைவிட்டு, அசேதனமாகிய கழிப்பாலையைச் சேருங்கடன் என்னோ என்க. கழிப்பாலை - என்பது தொனியால் இழிவுகுறித்து நின்றது.

கரியார்தாஞ் சேருங் கலைமறிகைக் கொண்டே
கரியார்தாஞ் சேருங் கவாலி—கரியாகி
நின்ற கழிப்பாலை சேரும் பிரான்நாமம்
நின்ற கழிப்பாலை சேர். (63)

## இப்பாடலுக்கு முதலாவது உரை

அண்ணாமலைநகர்ப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பகுதி

திரு க. வெள்ளைவாரணனார் அவர்கள் தந்துதவியது.

கரியார்தாம் சேரும் கலைமறி - உள்ளத்தே வஞ்சனையுடையாராகிய தாருகாவனத்து முனிவர்கள் தாமென்னும் அகந்தையினாற்செய்த அபிசார யாகத்திலிருந்து தோன்றித் தன்பாற்சேர்ந்த கலைமான் கன்றினை, கைக்கொண்டு - தன்கையிலேந்தி, கரியார்தாம் சேரும் கவாலி - கரிய திருமேனியையுடையவராகிய திருமால் தன்னொரு பாகத்திற் சேரப்பெற்று விளங்கும் கபாலி யென்னுந் திருநாமத்தினை யுடையவனும், கரியாகி நின்ற கழிப்பாலை சேரும்பிரான் - உலகப் பொருள்களெல்லாந் தீந்து கரியாகிய பெருஞ் சுடுகாட்டகத்தே சேர்ந் தாடும் பெருமானுமாகிய சிவபெருமான், நாமம் நின்ற கழிப்பாலை - புகழுடன் நிலைபெற எழுந்தருளிய திருக்கழிப்பாலை யென்னுந்திருப் பதியினை, சேர் - நெஞ்சமே இடைவிடாது நினைந்து போற்றுவாயாக.

இதன்கண் 'கரியாகி நின்ற கழிப்பாலை' யென்றது, மகாசங்கார காலத்தே எல்லாவுலகும் வெந்து நீறாகிய நிலையிலமைந்த பேரிமப்புறங் காட்டினை.

"கரியார்தாஞ்..................."

## 2-வது உரை-பண்டிதர் அ. க. அவர்கள்.

நுதலியது—"குறிகளும் அடையாளமும் கோயிலும், நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்" உணர்த்தி ஆன்மாவை வழிப்படுத் தியது.

குறி - கவாலி யென்பதனாலும், அடையாளம் - கலைமறிக்கைக் கொண்டு. என்பதனாலும், கோயில் - கழிப்பாலை என்பதனாலும், நெறி - நாமம் நின்று - என்பதனாலும், அவர் நின்றதோர் நேர்மை - கரியாகி, நின்ற என்பதனாலும் உணர்க.



(பதப் பொருள்):- கரியார் தாம் - பாவிகளாகிய தாருக வனத்து முனிவர், சேரும் - சேர்த்திய (ஏவிய), கலைமறி - மான்கன்றை, கைக்கொண்டே - கையில் ஏந்தியே, கரியார் தாம் - பெருமை பொருந் திய மெய்யடியார்கள், சேரும் - சரண்புகுதற்குக் காரணமாய் விளங்கும், கவாலி - கபாலியென்னும் பெயரையுடையவனும், கரியாகி - "மண்ணின் மிசைவாழ்வார்கள் பிழைத்தாலும், வந்தடையில்" காப்பவன் தானே யெனற்கு எடுத்துக்காட்டாகி, நின்ற - விளங்குகின்ற, கழிப்பாலை சேரும் - திருக்கழிப்பாலை யென்னும் பதியில் எழுந்தருளியுள்ள, பிரான் - தலைவனுமாகிய சிவபிரானின், நாமம் - பெயராகிய திருவைந் தெழுத்தில், நின்று - நிற்கும் முறையில் நின்று, இப்பாலை - (பாலை நிலம்போல் வெம்மையுடையதும், பயனற்றதும் ஆகிய) இப்பாச வாழ்க்கையில், சேர் - சேர்தலாகிய விருப்பை, அகழ் - நெஞ்சே நீ வேரோடும் கல்லி யெறிவாயாக.

குறிப்பு:— (கரியாகி) நின்ற - பிரான் (கழிப்பாலை) சேரும் - பிரான் எனவும், பிரான் நாமம் நின்று இப்பாலை சேர் (தலை) அகழ் எனவுங் கொண்டு கூட்டுக.

கரியார் - பாவிகள்; கருமையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர்: பாவத்தின் நிறம் கருமை, புண்ணியத்தின் நிறம் வெண்மை யென்றும் கூறுதல் மரபு. இரண்டாம் அடியில் கரியார்—என்ற சொல்லில் கருமை-பெருமையென்னும் பொருளது. "கருந்தனம் கைத்தலத்த" என்புழிப்போல (குமரகுருபரர்.) முதலடியிற்— சேரும்—என்ற சொல்லில் பிறவினை விகுதி தொக்கது.

கொல்லவந்த மானைத் தாங்கிய தண்ணளியை நினைந்து அடியார் சரண்புக நின்றவன் என்பதனைக் கலைமறிக்கைக்கொண்டே கரியார் சேரும் கவாலி என்பதனாற் குறித்தார்; இன்னும் அடியார்சேரும் கவாலியென்பது - கபாலம் ஏந்திப் பிச்சையெடுப்பானைப் போன்றான் எனினும், "குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும் படகொள்பாயும் பூவணையும் தருவான்" என்ற உண்மைத் தன்மையில் ஈடுபட்டுச் சேர்வர் அடியார் என்பது குறித்ததுமாம், கவாலி - தலத்து இறைவன் திருப்பெயர் "கழிப்பாலைசேரும் கபாலப் பனார்" (அப்பர்.)

திருவைந்தெழுத்தின் ஓதும் முறை நிற்கும்முறை இரண்டில் பிரான் நாமம் நின்று என நிற்கும் முறை கூறவே, அதற்குமுன் நிகழ் வதாகிய ஓதும் முறையும் கூறியதாயிற்று. பாலை-பாச வாழ்க்கைக்கு

உவமையாகுபெயர். சேர்—என்ற சொல் முதனிலைத் தொழிற்பெயர். அகழ்—என்பது பகுதியே நின்று எவற்பொருண்மை யுணர்த்தியது. நின்ற - காலவழுவமைதி.

"கரியார்தாஞ்...................சேர்."

## 3-வது உரை ந. சிவ. அவர்கள்.

சேரும் - (காரணகாரியங்களாய்ப்) பொருந்திய, பாலை - (மண் முதல் நாதமீறாய தத்துவப்) பகுதிகள் யாவற்றையும், கழிநின்ற - கடந்து நின்ற, பிரான்தாம் - சொரூப சிவமாகிய தாமே, கரி - கரி யுரியாகிய ஆடையையும், ஆர் - ஆத்திப்பூ மாலையையும், கலைசேரும் - வேதமாகப் பொருந்திய, மறிகை - மான்கன்றையேந்திய திருக்கரத் தினையும், சேரும் - (தமக்கே) உரிய, கவாலி நாமம் - கபாலி என்னுந் திருப்பெயரினையும், கொண்டு - மேற்கொண்டு. தாம் - தாமே, கரி யார் - (இவ்வண்ணமாக அங்கம், சாங்கம், உபாங்கம், பிரத்தியாங்கங் களுடன், குறிகளும், அடையாளமும், கோயிலுங்கொண்டு, குரு, லிங்க, சங்கமத்திருமேனி கொண்டெழுந்தருளுவர் என்பதற்குச்) சான்றா யிருப்பர். கரியாகி நின்ற - (அதற்குச்) சான்றாயிரா நின்ற. கழிப்பாலை - திருக்கழிப்பாலை யென்னுந் தலத்தை, சேர் - (நீ) சென்று காண்பாயாக.

தமக்கெனவூரும் பேரும், உருவுமில்லாத தத்துவாதீத சொரூப சிவம் உயிர்களின்மேல் முகிழ்த்த பெருங்கருணையினாலே, அவற்றை மேற்கொண்டு, குருலிங்க சங்கமக்கோலமாய்த் தடத்த நிலையில் நின்று அருளுவர். அதற்குக் கரியாய் நிற்கும் தலம் திருக்கழிப்பாலையாகும். அங்குச்சென்று நீ காண்பாயாக; என உள்ளத்தை முன்னிலைப்படுத்தி அறிவுறுத்தியது இச்செய்யுள்; சொரூபசிவம், தடத்தசிவமாயிற்றென்ற வாறு.

நின்ற கழிப்பாலைசேரும் பிரான் - உண்மைநிலையில் நிற்கும் சொரூபசிவம். இதை ஆசிரியர் தொல்காப்பியனார் கந்தழி என்னும் பெயராற் குறிப்பர். (கந்து + அழி = கந்தழி - பற்றுக்கோடற்ற பரம் பொருள்.) திருவள்ளுவனாரும் "பற்றுக பற்றற்றான்" என்றார். "சார் பின்றேற்றான்றது தானருவாய் எப்பொருட்கும், சார்பெனநின் றெஞ் ஞான்றும் இன்பந் தகைத்தரோ, வாய்மொழியான் மெய்யான் மனத் தான் அறிவிறந்த, தூய்மையதா மைதீர் சுடர்." (தொல் - பொருள், நச் - மேற்) என்பதனானும் அறிக.



இனி, இத்தொடருக்கு எப்புவனங்களையுங்கடந்து என்றும் நின்று நிலவும் சிவலோகத்தில் விளங்கும்பிரான் எனக்கோடலும் ஒன்று. இப் பொருளில் நின்ற கழிப்பாலை - சிவலோகம் என்க. "வானகழி தான் கெழுமி" (சிற் - கோவை) "கோகழியாண்ட கோவேபோற்றி" (திருவாசகம்) "நிலத்துக்கு மேலாறு நீடுலகத் துச்சித், தலத்துக்கு மேலேதான் என்பர்........பதி" (நம்பியாண்டார் நம்பி) என்பன காண்க. அவ்விறைவன் குருலிங்கசங்கமமாய் நின்று அருளுதலை "அருபரத் தொருவன் அவனியில்வந்து, குருபரனாகி யருளிய பெருமையை" (திருவாசகம்) "குறிகளும் அடையாளமுங் கோயிலும், நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும், அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும், பொறியிலீர்மனம் என்கொல் புகாததே" (திருநா. தே.) "தாபர சங்கமங்கள் என்றிரண் டுருவினின்று, மாபரன்பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்" (சிவ. சித்தி.) "தம்முதல் குருவுமாய்" "அவர்வேடமும், ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" (சிவ. போதம்) "நடமாடுங்கோயில் நம்பர்க்கொன்றீயில், படமாடுங்கோயில் பரமர்க் கங்காமே" (திருமந்திரம்) என்பவற்றானறிக. இவற்றால் அம் முத்திறத்திருவுருவங்களும் இறைவன் திருமேனியேயாதல் பெறப் படும். இத்தலத்தில் இம் மூன்று வடிவங்களும் ஒருங்கே சிறந்து திகழ்தல்பற்றி இங்ஙனம அருளினார். அவையாவன :-

1. குரு - அம்பிகையுடன், மான், மழு, நீலகண்டம், முக்கண் முதலியவற்றுடன் விளங்கும் மணவாள நம்பியின் திருக்கோலயாம். இறைவன் திருக்கரத்துள்ளமான் வேதசொரூபம் என்பர். அதுதெரித் தற்பொருட்டு, கலைமறி என்றார். கலை - வேதம்; "வேதமான்மறி எந்துதல் மற்றதன், நாதன்நான் எனவிற்றுமாறே" (பட்டினத் தடிகள்) என்பதுங்காண்க. குருவாயுபதேசித்த தென்றிசைக்கடவுளின் திருக்கரத்தில் "வேதபுத்தகம்" (திருவிளை-புராணம்.) இருத்தல் அறிக. "மறிசேர்கையினனே மதமாவுரிபோர்த்தவனே, குறியே யென்னுடைய குருவே" என்னும் ஆளுடைய நம்பிகளின் திருவாக் காலும் இப்பாடலின் முதற்பாதத்தாற் புலப்படுத்தப்பட்டுள்ள குரு வுருவின் இயல்பை ஓர்ந்துணர்க.

2. இலிங்கம் - சிவலிங்கம்; இத்தலத்துச் சிவபிரான் திருநாமம் பால்வண்ணநாதர், கபாலப்பனார், எனபன. கபாலப்பனார் என்பதன் சுருக்கமே கபாலி - கவாலி என்பது; ஏகதேச நாமக்கிரகணம் என்பர். கபாலம் - மண்டைஓடு. இம்மூர்த்தியைக் காண்பாருக்கு

இப்பெயர்களின் காரணம் நேரில் புலனாகும். சிவக்குறி, பால்போன்ற வெண்மை நிறமும், அதன் உச்சியில் கபாலம்போன்ற அமைப்பும் உள்ளதாய் இருத்தல் இன்றுங் காணத்தக்க சான்றுகள்.

3. சங்கமம் :- சிவனடியார் திருவேடம். இதனையே திருமூலர் "நடமாடுங்கோயில்" என்றார். கவாலி - என்பது சிவனையும், வைரவக்கடவுளையும் உணர்த்தும் (பிங்கலம்) கபாலம் - பிரமகபாலம் - சுவர்ணம், மாணிக்கங்கள் நிறைந்த பாத்திரம். அதனைத் திருக்கரத்திற் சிறப்பாகக்கொண்டவர் வைரவராதலின் கபாலி எனப் பெயர்பெற்றார். பகரவகரங்கள் பேதமின்றி ஒத்துவரும் என்னும் விதிபற்றி கபாலி - கவாலி என்றாயிற்று. வைரவமூர்த்தம் சங்கமவேடத்தைக் குறிக்கும் என்பர். சிறுத்தொண்டர்பாற் சிவபெருமான் வைரவவேடத்துச் சங்கமராய்ச் சென்றருளிய வரலாறும் ஈண்டுக்கருதுக. இத்தலத்தில் வைரவமூர்த்தியின் சாந்நித்தியம் சிறப்பாக இன்றும் பொலிவுபெற்றுள்ளது. அதுபற்றி இத்தலம் இன்றும் "வைரவன் கோயில்" என்றே பிரசித்த நாமத்தால் வழங்கியறியப்படுகிறது.

இங்ஙனமாக இம்மூத்திறத்திருமேனிகளும் இத்தலத்தில் ஒருங்கே சிறந்திருத்தலையறிக. இவ்வண்ணம் காணத்தகும் மற்றொரு தலம் சீகாழியாகும். அங்கு ஆளுடையபிள்ளையாருக்கருளிய திருத்தோணியப்பரும், பிரமபுரீசரும், சட்டைநாதரும் முறையே குருலிங்கசங்கமக் கோலமாய் எழுந்தருளியுள்ளார். கலைக்கரியார் - உடையாக யானையுரியையுடையவர். கலை - ஆடை. என்பது மொன்று. கரியவன் - இந்திரன் - வைரவக்கடவுட்குப் பெயராகக் கூறப்பட்டிருத்தலின் இந்திரகிலபுரம், வைரவகோயில் என்றும் இத்தல வரலாற்றுடன் பொருந்தவுரைத்துக் கோடலுமாம். இப்பொருளில் - கரியார் - இந்திரன்; வைரவர். சேர் - சென்று காண்பாயாக என்பது குறித்து நின்றது. ஆளுடைய அரசுகள் அருளியவாறு ஆகமவளவையானன்றி, இத்தலத்தில் அவற்றைக் காட்சியளவையா (பிரத்யக்ஷப்பிரமாணத்தா)லேயே அறியலாமென்பார் 'கரியாகி நின்ற கழிப்பாலை சேர்' என்றார்.



# திருக்கழிப்பாலை.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து
ஒள்ளெலும்பு தூணா வுரோம மேய்ந்து
தாமெடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பல படைத்தார் தாமரையினார்
கானெடுத்து மாமயில்க ளாலுஞ் சோலை
கழிப்பாலை மேய கபாலப்பனார்
வானிடத்தை யூடறுத்து வல்லைச் செல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே. (1)

இதற்கு

சிதம்பரம் சிவஞானத் திருத்தளி ஸ்ரீ செப்பறைச் சுவாமிகள் விரிவுரை சொல்ல ஸ்ரீ நடராஜஓதுவாமூர்த்திகள் எழுதியது.

(பொழிப்பு) :- விலாவெலும்பு, வாய் முதலிய துவாரம் ஒன்பது, தசை, மயிர் என்பவற்றை முறையே, தூண், வாயில், பித்தி, வேயும் ஓடு என்னும் உறுப்புக்களாகவும், இவை ஒழிந்தொழிந்த ஏனை உடலுறுப்புக்கள் ஏனை இல்லுறுப்புக்களாகவும் கொண்டு இயைத்தெடுத்த வீடாகிய இம் மனித உடல், உயிர் ஒதுக்குக்குடி வைகி வாழு மோரிடம் தான். ஆகலான் அவ்வுட லுடையராய நோய் முதலிய சனங்கள் தம்மோ டியைந்து வைகினன்றி, வெருள்வ ராயின் அது கைவிட்டுப் பிறிதொன்றிற் சேறல் வேண்டுமன்றோ? அதனால், அதன்கண் வாழ்வார் வாழுங்கால் அதனைத் துச்சில் என்றுணர்ந்து, ஏனைப்புக்கில் புகுதற்குரியன செய்தல் வேண்டும் அங்ஙனம் செய்யாதார் கலங்கற் கேதுவாய வேறு செய்தவரேயாவர். அற்றேல் அங்ஙனம் துச்சிலா மாயின் ஏனைப் புக்கிலாவது யாதெனின் :- அண்டபிண்டம் அவை சமமென்ப. ஆகலான், அவற்றுள் பிண்டமாகிய இவ்வுடலுள் சிறந்த உறுப்பாய இதய தாமரையின் நீங்காது நின்றுணர்த்தியருளும் அந்தர்யாமியே அப்புக்கி லென் றறிக. அற்றேல், அத்தாமரையுடையார் இவரென இதனுள் வைத்துக்காண்டல் அரிதாயிற்று. எளிதாய்க் காணுமாறு.

எனை அண்டத்துள் வைத்துக் காட்டுக. எனின், அவ்வண்டம் எனப்படும் இவ்வுலகினுட் சிறந்த தலமாய திருக்கழிப்பாலையுள் எழுந்தருளி வைகும் கபாலக்கடவுளே அவரென எளிதின் அறிந்துகொள்க. அற்றேல் மேலது கலங்குநிலை யெனவே, இப்பேறு கலங்கா நிலை யென்பதூஉம் தானே போதரும். இனி நாம் மேற்செய்து கொண்டவற்றைச் செய்வ தென்னை? அல்லதூஉம் அவரை எய்தற் குரிய தோர் ஆறென்னை? அவ்வாறு செய்தார் யார்? எனின், அவ்வறம் பாவமிரண்டும் அவற்றின் பயனும் பற்றறக் கழியுமா றொழிக்க ஒழித்து மேற் போதற்குரிய வழி அருள்வழியேயாம். அதுவும் அவரே செய்து வைத்தருளினர். அற்றேல், அவர் அது செய்தற்குரிய இயைபு என்னை எனின், உயிர் பிறவிக் கடலுள் வீழாது தாங்குங் கடப்பாடு உடைய தலைவர் அவரே யாகலான். இங்ஙனம் இரங்கி மேற்போதற் குரிய அவ்வழி வைத்தருளிய அக்கடவுட்கு நாமும் அவ்வழிச்செல்லும் கடப்பாடுடைய ராகலான் இனி இவ் விருவினை வழிச்செல்லாது அவ்வழியே சென்றெய்தி மீளாது ஆண்டே வைகி வாழுதும் (எ-ம்.)

இங்ஙனம் வகுத்தோதற்பாலனவற்றை விரிவஞ்சித் தொகுத்தோதியருளினர்.

விசேடவுரை :- எலும்பு தூணாக என வருதலின் ஒழிந்த வாயில் ஊன் மயிர் என்பனவற்றையும் அவ்வாறெடுத்துக் கொண்டுரைக்க. பித்தி ஒருவனுடுத்த உடை போறலின், அதுபற்றி வைத்து எனது உடுத்தி என்றார். ஊன் பித்தியாதல் "பொத்தையூன் சுவர்" என வருமாறு பற்றியும் அறியப்படும். ஒண்மை - என்றது ஈண்டு வன்மையை. மரத்துக் கேற்ப வயிரமெனக்கொள்க. வல் எலும்பு என்றா ராயினர் மேல்வாயில் என்றாற்போல அஃது அவ்விரண்டற்கும் பொதுமையிற் சேறற்பொருட்டு. இல்லுறுப்பு எவற்றினும் அதன் பாரமனைத்தும் தாங்கும் தூண் வயிர முடைத்தாதல் போல, உடலுறுப் பெவற்றினும், என்புக்கு வன்மையுண்மை யறிக எலும்பு என்றது ஈண்டு எற்புழிக்கோடலான், விலாவெலும்பின்மேல் நின்றது. இஃது ஏகதேச உருவகம்.

"தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்திஇரு
காலாலெழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார்க் கையிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதுளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே"

என்பது முற்றுருவகம். (கந்தரலங்காரம்)



தூண் என்பது அநுவதித்தற்கண் வந்தது. கூரை ஆகுபெயர். வளை என்பதும் அது. தூணாக என்பது ஈறுகெட்டு நின்றது. தவிரப் போவார் என்பது இது நிகழாநிற்க இது நிகழ்ந்தது என்னும் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. பெறுதற்கரிய மானுடப் பிறவி பெற்றும் வைத்தும், இதன் பயனெய்தாது வறிது போவாரென்பார் தவிரப் போவார் என்றார். தவிர்ந்து போவாரென்னு ராயினர். தம்மொடு நட்புடையது போல் தாங் கருதிய அவ் வுடல் தான் நட்கவும் அது நட்பின்றி ஒழிதல் ஒருதலை என்ப துணர்த்தற் பொருட்டு.

தயக்கம் - கலக்கம். தயக்கத்துக்கேதுவாய இருவினையைத் தயக்கம் என்றார். அறந் தானாக, பிறிதொன்று தானாக இவ் வுடலொடு நின் றீட்டிய வினை, அவ் வுலகத்துட் செலுத்தித் தப்பாது தம் பயனைப் பயந்தேவிடும் என்பார், படைத்தார் என இறந்த காலத்தாற் கூறினார். தீவினைபோல் நல்வினையும் பிறவிக் கேது வாகலானும், அல்லதூஉம், ஈண்டுப் போல் ஆண்டும் பகை முதலிய துன்பங்கள் ஒப்பு வுண்மை யானும், அதுவும் கலக்கமே யன்றிக் கலங்காமை அன்மையின், அது பற்றி அதனையும் உளப்படுத்து "தயக்கம் பல படைத்தார்" என்றார். இருள்சேர் இருவினை என்பதும் அது. நில வுலகம் போல் துறக்க நிரயங்களும் தனித்தனிப் பலவேறு பாகுபாடுடைமையின் அவற்றிற் கேதுவாய அவ் வினையும் அவ்வாறு பலவேறு திறப்படும் என்ப துணர்த்தற்கு "பல படைத்தார்" என்றார்.

மண்முதல் நாளம் எனவும், இறைவன் இதயமலரின் வைகுவோன் எனவும், வரும் பலவேறு சுருதிகள்பற்றி மேலுருவகஞ் செய்து வைத்த கூரையுட்பட்ட இதய தாமரை யென்பதுதானே போதருமென்னுங் கருத்தால் சொல் பல்காமைப் பொருட்டு இதயம் ஒழித்து ஒழிந்து நின்ற "தாமரை" எடுத்துக்கொள்ளப்பட்டது. மேல் இறைவன் பிண்டத்தின் வைகும் இடமாய இதய கமலம் பெறப்பட்டுக் கிடத்தலின், எனையது அண்டத்தின் வைகும் இடமாதல் பெற்றாம்.

கழித்திருப்பாலைக் கபாலப்பனார் என வைத்தோதாது கழிப்பாலை மேய கபாலப்பனார் என்றார், பிறாண்டு எல்லாம் இங்ஙனம் மேவாமை உணர்த்தற்கு. திரு வென்பது சொல்லெச்சம் - கோவின்பால் நிற முடைமையின் கபாலப்பனார் எனக் காரணக் குறியாயிற்று. பிறவாறு உரைப்பாருமுளர்.

பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போறலின் ஒப்புக் கூறினர், அது "யாதனுசரீரம் போறல்" என்புழி அவ்வுரை யேத்துடையார்

உரைத்தவாறு பற்றியும் அறிக. வானிடம் இருபெயரொட்டுப் பண்புத் தொகை. அறுத்து-என்பது மலமறுத்து என்றாற்போல நின்றது. ஊடு - உபசாரம் அதனால் அவ்வழிப்படும் கட்டுப்பாடுடையோம் என்பது, அவாய் நிலையான் வந்தது.

நாம் போதும் என இயையும். உயிரனைத்தையும் உளப்படுத்துப் பன்மைப் பாலாற் கூறினார் "நான்பெற்ற வின்பம் பெறுக இவ் வையகம்" என்பதும் அது.

கன்—ஒலிக் குறிப்பு. அது எதுகை நோக்கித்திரிந்து நின்றது. கான் = இசை என்பாருமுளர். அளி முதலியனபோல மயூரம் அவ் விசைக்குரிய தொன்றன்மையின் அது பொருந்தாமை அறிக.

கண்டமா—என்றது நீல நிறத்தை. அது நீலச்சிகண்டி என்பதனானும் அறிக. இனி மாமயில் = ஆண்மயில் என்றலும் ஒன்று.

ஆலல் = மயிலுக்கேயுரியதோர் குரல்.

சோலை = ஆக்காதே ஆகும் பலவேறு மரங்களானாய தொகுதி விசேடம். எனவே ஆக்க ஆகுவன கூறவேண்டாவாயிற்று,

*கபால + அப்பனார் = என்றது திரிந்து நின்றது. வடநூல் முடிவென்னினும் அமையும்.

கழிப்பாலை = கழியின் பகுதிப்படுவதோர் தலவிசேடம்.

மேவிய = என்பது இடைக்குறைந்து நின்றது. இனி மேய = என்பது விரும்பிய என்னினுமாம்.

அறுத்துச் செல்லும் வல்லை வழி என இயையும், வல்லமை = சத்தி. அது வல்லை எனத் திரிந்து நின்றது. வல்லவற் குரியவள், வல்லபை, வல்லவன் சத்தன் என்பன ஒரு பொருட் கிளவி வல்லபை = சத்தி என்பதும் அது. ஐ—பெண்பால் உணர்த்ததும் விகுதி.

அநாதியாய அவா ஒரு சிறி துள தாயினும் பழைய இயற்கையாகிக் கலக்கம்பல படைத்தலின், அது பற்றறக் கழிக்கற் பாற்று என்பார் அறுத்து என்றொழியாது, "ஊடறுத்து" என்றார்.

மலநடையைப் பிரித்தமையின் "வழியே" என்னும் ஏகாரம் பிரிநிலை. ஏனையது ஈற்றசை.

---

* பாகதச் சிதைவு.



## வேறு பொருள்.

உயிர், தம்மை நோக்கிச் செய்யும் வழிபாடு அகம், புறம் என இரு வேறு திறப்படுதலின், அவற்றை அவ் வாற்றான் ஏன்று கோடற் பொருட்டு இறைவன் எழுந்தருளி வைகும் இடமும், அன்னணம் அகம், புறம் என இருவேறு திறப்படும். அவற்றுட் புறவழிபாடு ஏன்று கோடற் கேற்ப வைகும் புற இடமாகிய திருக்கழிப்பாலை எனப்படும் சிறந்த தலத்தின் கண்ணாய திருத்தளியுள் எழுந்தருளி வைகும் கபாலப் பெருமான், விலா எலும்பு முதலிய உடலுறுப்புக்கள் தூண் முதலிய இல்லுறுப்புக்களாக, இவைத் தொடுத்துத் தந்தருளிய வீடாகிய இம்மனித வுடலைக் குடிவைகி வாழும் இடமாகக் கைக் கொண்டு, மேல் அமைந்து கிடந்த அறம் முதலிய உறுதிப் பொருள் உடையராய் அவற்றை ஈட்டல் துய்த்தல் கட்கு வேண்டும் பணி புரியும் முப்பொறி முதலிய ஏவலாளர் கைவரப்பெற்று, அவ்வற வழியான் வாழ்ந்து இவ் வுடலொழியப் போவார் மேலீட்டிய பசு நல்வினை, பல வேறு திறப்படுதலின், அவற்றைத் துய்த்தற்கேற்பப் பல வேறாய மேலுலகங்களையும் படைத்தருளினார்.

இனி ஏனை அக இடம் எனப்படும் அவ் உடல் உறுப்புள் ஒன்றாய்ச் சிறந்த இதய கமலத்தின் எழுந்தருளி வைகும் அக்கடவுள். நிரயத் துன்பத்தை நோக்கத் துறக்கப்போகம் இன்பம் ஒப்பத் தோன்றினும், அப்போகத்துக் கேதுவாய பசு நல்வினை மல நடையாய்ப் பின்னும் பிறவிக் கேதுவாய் உண்மையான் அதுவும் அவனை எய்தற் குரிய வழி யன்மையான் துன்பமேயாம். ஆகலான் அவற்றிற் கேதுவாய அப்பசு நல்வினையும் பற்றறக் கழியுமாற்றாற் கழித்து மேற் சேறற்குரிய நேரிய வழி எனப்படும் அருள்வழி வைத்தலாய தம் கடப்பாடு செய்தருளினார். அதுசெய்த அக்கடவுட்கு நாம் அவ்வழிப்படும் கடப்பாடுடையராகலான் இனி அறவழிச் செல்லாது அவ்வழியே சென்று எய்துவோம். (எ-ம்).

கழிப்பாலை மேய கபாலப்பனார்................படைத்தார் தாமரையினார் எனக் கூட்டுக.

இனி நாம் "அருள்வழிப் படுவோம்" என்பது ஆசிரியரானேதப் படும் பொருள். எனவே, சித்தாய ஆன்மா அசித்தாய் அநாதியே தன்னோடியைந்த ஆணவ மலத்தின் இயைபை யொழித்து அதனோடு ஒன்றாய் சித்தாய் நின்ற தன்னோடியைந்துக் கோடற்கண் உளதாய இரக்க மிகுதியானே அவ் காரணமல பரிபாக மாமாறுசெய்து அதனை யொழித்தற்கு வேண்டும் பலவேறு உபாயங்களை அறிந்து, அவ்வுபாய

ஆற்றானே அவ்வுயிர்க்கு உற்பத்தி முதலியன செய்து, கலை முதலிய தத்துவங்களாய கருவிகளான், அதனைச் சிறிது சிறிதாக நீக்குங்கால், அஃது நசியாத சித்தாயினும், அம்மலத்தான் மறைதலின் ஒருகாலே முழுதொருங் குணர்த்தின் உணர மாட்டாமையான் அதுபற்றிக் கட்டு வீடுகளைச் சிறிது சிறிதாய் உணர்ந்து உணர்ந்து மேற்போமாறு அதற் கேதுவாய அப்பல் வேறு உபாயங்களையும் வேதாகமமென்னும் நூன் முகத்தானுரைத்து வைத்தருளி இங்ஙனம் உயிரைத் தன்கண் ஈர்த்துக் கோடற்கேற்ப எண்ணிறந்த பலவேறு உபாயங்களை யெல்லாம் தனது சத்தி சங்கற்ப சந்நிதி மாத்திரையானே செய்யாதே செய்தருளினன். யாம் மெய்நெறிதெளிந்து அந்நெறி சேரற் பொருட்டு. என்ற வாறாயிற்று.

ஞாயிறு, கண்ணுக்கு இவ்வுலகப் பொருளைக் காண்டற்குரிய வழி யாகிய தன் ஒளியை வைத்து அவ்வழியானே அங்ஙனம் காட்டும். அவற்றை அங்ஙனம் காணுந் தொழில் கண்ணுக்கே உரிய தன்றி அவற்றைக் காட்டும் அஞ்ஞாயிற்றுக்குரிய தொன்றன்று அதுபோல் அவ்வேதத்துள் ஈசன் "அசேதனந்தளித்திடான்" என்பதுபற்றி நாம் அசேதனமாதல் பெற்றாம். பெறவே இறைவன் அங்ஙனம் அறி வுடையன வாய அவ்வான்மாக்கள் கட்டு வீடு அறிதற்குரிய வழியாகிய வேதாகம வழிவைத்து அவ்வழியானே இது கட்டு இது வீடு என அவற்றை அறிவுறுத்தருளும். அங்ஙனம் அறிவுறுத்தருளியவற்றை இஃது எமக்குரியதொன்று. இஃது எமக்குரிய தொன்றன்று. என அங்ஙனம் அறியுந்தொழில் அவ்வான்மாக்கட்கே உரிய தொன்றன்றி அங்ஙனம் அறிவுறுத்தும் அவ்விறைவற்குரிய தொன்றன்று. ஆகலான் இங்ஙனம் தமக்குரிய கடனாய இதனைச் செய்தது நாம் தயங்கித் தவி யாது தாங்குதற் பொருட்டு. ஆகலான், அது செய்தார்க்கு எதிர் செய்யக் கிடக்கும் எங்கடனானது நாம் அவ்வருள் வழிப் படுவதாய அப்பணி செய்து கிடப்பதே யாம். ஆகலால், அவ் வருள்வழிப் படுத் தலே அவற்குரியதோர் கடனன்றி அவ்வருள் வழிப்பட்டுச் சேறல் அவற்குரியதோர் கடனன்மையான் புக்கில் புகுதற்பொருட்டு நாம் செய்யக் கிடப்பது ஒன்று உளதாவதேயன்றி இலதாவதின்று என மாணாக்கனுக்குத் தெரித்துணர்த்தியவாறு. (எ-ம்)

அற்றேல் அவ்வேதாகமங்களுள் அத்திருவருளோடு கருமம் செபம் தவம் தியானம் யோகம் என்றற்றொடக்கத்தன வெடுத்தோதும் வழி பல வேறு. ஆகலின், புக்கில் புகுதற்குரியன வெல்லாம் வழியா



மன்றே, அங்ஙனமாகத் திருவருளும் வழி யெனப்படுமாயினும் அவற் றொடொப்ப தொரு வழியாம், ஆகலின், அஃதொழித் தொழிந்தன வெல்லாம் வழியல்ல வெனப்படா. என்னும் கடாவை யொழித்து மேற் கோளைச் சாதித்தற் கெழுந்த எது.

"அல்லன வெல்லாம் மருளாகலான்"

எனவே கன்ம வேள்வி, தவ வேள்வி, செப வேள்வி, தியான வேள்வி, யோக வேள்வி என்னும் ஐவகை வேள்விகள் தானம், யாகம், தீர்த்தம், மூர்த்தி, தலம், ஆச்சிரமம், பத்திநெறி, முதலியன வெல் லாம் பசு நல்வினையின் பாலனவாம். ஆகலின், அவை அனைத்தும் மேற்கூறிய வாற்றான் தன் பயனாய துறக்கலோக போக மாத்திரையே பயப்பன வல்லது, புக்கிலாய பயன் பயவாமை மேலும் அதுவும் நீட்டித்த காலத்துணையும் பயவாது அறச் சிறியதோர் காலத் துணையே பயப்பனவாம். அல்லதூஉம் அருளல்லாதன வெல்லாம் மருளே யாக லான் அம்மருட் பகுதிகளானே துச்சில் எய்தப் பெற்று தயக்கம் பல படைத்துக் கட்டுறுவதே யன்றி புக்கில் புகுதல் இலாதெனவும் அல் லதூஉம் அம்மருட் பகுதிகளெல்லாம் ஞாயிற்றின் முன் அந்தகாரம் போல அவ்வருளின் முன்னர் தத்தம் வலி தீர்ந்து ஒடுங்கும். ஒடுங்க அவற்றானாய அக்கட்டு விட்டு ஒழியும் அஃதொழியவே புக்கில் புகுதப் பெறும். இங்ஙனமாகலான், அருள் ஒன்றே புக்கில் புகுதற்கோர் மேம்பட்ட வழியெனவும், ஞானமாய அவ்வருளுள்ளும் மாயாவாதிகள் தார்க்கிகர் சாங்கியர் முதலியோர் கூறும் அவ்வருளெல்லாம் பசு அறிவு பாச அறிவாய் முடியும். ஆகலான் அவையும் கட்டுறுத்துவனவே யல்லது புக்கில் புகுத்த மாட்டாமையின் அவற்றின் வேறாய திருவருள் ஞானமென்னும் அவ்வருள் மாத்திரையே மிக மேலாய அருள் எனவும், உணர்த்தி மேற்கோளைச் சாதித்த வாறாயிற்று.

அற்றேல், இவ்வுலகின்கண் தான், முன் அறியாதான் ஒருவனைச் சென்றெய்துமாறு செல்லுவானொருவன், அவனைச் சென்றெய்தற்குரிய தோர் வழி அவ்வெய்தப்படும் அவன் அலராய பிறர்வாய்க் கேட்டு அவ்வழிப் போந்து அவனைச் சென்றெய்தும், அல்லது அவ் எய்தப் படுமவனை அவ் வெய்துவான் கண்டு கேட்டுச் சென்றெய்தல் கண்டிலம். அதுபோலப் புக்கிலாய அவன்கட் போதற்குரிய அவ்வழியும் அவனே செய்து வைத்தானென்றல் அடாமையின், அவ்வழிவைத்தார் அவனல ராய பிறர் என்பதே தக்கது. அன்றி அவனே யாமெனின், அதற் கேற்ற நியாமகம் என்னை? என்னும் கடாவை யொழித்து எதுவை வலியுறுத்தற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்.

“உண்ணோ யறுத்தற் குரிய ரதற்குரியர்
கண்ணோடு பட்டனவே கண்டாய்நீ—மண்ணோடு
நின்ற கழிநகரா னீயல்ல னனல்லன்
நின்று னகம்புறமு நீண்டு.”

எத்தொழிலும் இறைவன் சந்நிதியை யின்றி யமையாமையின் எடுத்து என்றார் இனி அரசன் எடுத்த ஆலயம் என்றாற் போலக் கொள்ளினும் அமையும்.

## வேறு பொருள்.

மேலோதிய வாற்றான் எடுத்துக்கொண்ட குடிவைகும் வீடாகிய இவ்வுடலின் கண் வைகித் தவ வழியான் வாழ்க்து அஃதொழியப் போகும் அத்தவஞ் செய்தார் என்றும் தவலோகம் சார்வர். ஆகலான், அவ்வத் தவப்பயனுக்கேற்ற பலவேறு தவலோகங்களும் படைத் தருளினர். அவ்வுடலுட் பட்ட இதய கமலத்தின் நீங்காது தானும் உடன்வைகி அவ்வினையை என்று கொண்டருளிய அக்கடவுள், இனி தவம் தவலோக போக மென்பனவும் முனைப்பையன்றி யாகாமை யானும், அதுபற்றி அதுவே மேலும் நிகழும் ஆகலானும் அதனான் வீட்டுநெறி விரைந்து படாது நீட்டித்தே நிகழும். ஆகலின், அவற்றையும் உவர்த்துக்கை விடுதலாய விரைந்து சேறற்குரிய வேறு உபாய வழியும் வைத்தருளுதலான், அவ்வுபாய மறியாத எனையர் ஆர்க்க நாம் அவ்வழியே விரைந்து சேறும். பிறவழிச் செல்வோ மல்லோம் என்பதாம்.

தயக்கம் - தவலோகம். பலவேறு நவ மணிகளானுய பலவேறு மாடமாளிகை முதலிய வற்றின் கழிபேர் ஒளி விளக்கான் சிறிதும் மாசின்றி விளங்குதலின் அது பற்றித் தயக்கம் என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேலேற்றிக் கூறப்பட்டது. ஈண்டு - வான் - என்பது எற்புழிக் கோடலால் தவலோகத்தின் மேற்றாய் நின்றது. இனி, வான் — என்பது அகனிடமாக நின்றறியும் செவிக்கும், அது தன்னான் உணரப்படும் வாக்கிற்குமாய் நின்ற இருபடி யாகு பெயரெனக்கொண்டு வாக்கு மனங்களாய் பாச அறிவு பசு அறிவுகளைக் கடந்த பதியறிவும் வைத்தலான், ஆர்க்க அவ்வழியே எனக் கண்ணெழித்து திருமால் முதலிய பிறரெல்லாம் எமக்கு இப் பேறு எய்திற்றில என் செய்வோம் என்னும் துன்பான் ஒலி எடுப்ப என்னினும், இசைக் கருவி ஐந்துந் தாமே முழங்க என்னினும் அமையும்.





முறையே அவ்வார்த்தல்கள் திருமுறை முதல் மூன்றுடைய ஆசிரியர், நான்கு ஐந்து ஆறுடைய ஆசிரியர், அஃதேழு, எட்டுடைய ஆசிரியர்கள் அவ்வழிப் படுங்காற்படும் நிகழ்ச்சி பற்றி அறிக.

இப் பொருட்கு வைத்து என்பது செயின் என்னுமெச்சத்திரிபு. ஆர்க்க அவ்வழி என்பது திரிந்து நின்றது.

இனி இடத்தை அறுத்து வானூடு என அந்நுவயம் செய்து “ஆகாய சரீரம் பிரமம்” என்பது பற்றி, வான் என்பது சிதாகாசம் எனக்கொண்டு தாமவழிப் போகாது தப்பி, ஒளிவழியான் விரைந்து சேறும். என்னினும் ஆம். ஒளி வழிச்செல்வோர் பிரம லோக மாகிய முத்தி யெய்தவர் என்பது நீலகண்ட பாடியத்துட் காண்க.

இனி, இதனுள் தவிரப்போவார் என்பது ஓர்பகுதி. படைத்தார் என்பது ஓர்பகுதி. தாமரையினார் என்பது ஓர்பகுதி. கபாலப்பனார் என்பது ஓர்பகுதி. போதும் நாமே என்பது ஓர்பகுதி. ஆகப்பகுதி ஐந்துடையது இத்திருப்பா என்றுணர்க. முறையே அவ்வைந்தும் ஒன்றற்கொன்று எதுவும் பயனுமாய் ஒருபொருளே நுதலி வருதலின் ஒரு திருப்பாவாளேதினர்.

இம் முதற் பகுதியுள் வைத்தோதப்படும் பொருளாவது, மனித வுடலானும் பயன் சாதித்தற் பொருட்டு உடல் உயிரோடியைபின்மை சாதித்தல்.

இவ் வுடல் உயிரோடு இயையின்றென்பதாம். அஃதன்னமாமோ? அன்றோ? என்னும் ஐயப்பாட்டின் கண் முதற்கட் பிறர் கூறும் பக்கம் பெறப்படுகின்றது. ஒருவர்க்குரியனவாய் இயைந்தன மண், பொன், மக்கள், மனைவி, நண்பர், முதலியனவாகப் பலவேறு திறப்படும். அவற்றுள் மண்ணுவது நிலையியற் பொருளாதன் மேலும், சடமாக லானும், எனைப்பொன் என்பது அதனை நோக்க இயங்கியற் பொரு ளொப்பத் தோன்றினும், அதுவும் அதுபோற் சடமாகலானும், அல்லதூஉம் அவை உயிர்தம்மோடியைந்து கொள்ளில் தாமும் அதனோடு இயைந்து நிற்பன வல்லது அவை அதனைத் தாமே சென்று இயைந்து கொள்ள மாட்டாமையானும். இன்னோரன்ன பிறவாற்றானும் அவற்றோடு உயிர்க்கு இயைபுடைமை கெடுஞ் செய்மை.

இனி, ஏவலாளர் என்பார், அவைபோலாது இயங்கியற் பொரு ளாய சேதன வியல்புடையராயினும் அவர் தரும் பொருள் ஈயின்

இயைந்து கோடலும், அஃதியாக்கால் அஃதின்மையும் உடையராம். அன்றி அவ் ஈகையாற் செய்யும் அதுவும் புறத்ததன்றி அகத்த தாகாமையானும், அன்ன பிறவாற்றானும், அவரியையும் சேய்த்தா மன்றி அணித்தாகாது.

இனி, மற்றை மக்களெனப்படுவோர் அவர் போலாது, அகம் புறமும் ஒப்ப அமைந்து பொருந்தியதோர் இயைபுடையராயினும் அவர் இல்லாளோடு இயைந்து வாழும் பிற்கால் அவளோடியையும் இயைபு மிகுதிபற்றி மேலியைந்து நின்ற அவ்வியைபு சிறிது சிறிதாய் நெகிழ்ந்து போதலானும், அல்லதூஉம், ஆண்டுத் தமது நண்பர், மக்கள் என்பாரோடு இயையும் இயைபை நோக்க இவ்வியைபு குறைந்து படுதலானும், அவருள் ஒரு சாரார் தமக்குத் தந்தையால் ஆவன நோக்கிப் பெரிதும் அகத்தோடியையாது ஏனைப்புறத்தான் மாத்திரம் இயைதலானும், இனி அவர் குழவியாங்காலும் தமக்குரிய அறிவு தொழில் நிகழ்ச்சி அவனை யின்றியும் அமையுமாயின் அவருள் ஒரு சாரார் தத்தங் கருத்தோடு இயையத் தந்தை ஒருப்படானாயின் அது பற்றி அவ்வியைபு ஒழிந்துபோதலானும், அவர்க்கு இன்னும் இவ்வாறு பலவேறு ஏதுக்கள் பற்றி அவ்வியைபு ஒருகால் விட்டும் பற்றியும் நிகழ்வதாகலானும், அவரும் அத்துணை இயைபுடையரல்லர் ஆதல் காணப்படும்.

இனி, நண்பரெனப்படுவோர் அவர் போற் பெறும் பயன் யாது மின்றி தம் மியல்பெல்லாம் தம்முள் ஒக்கும் ஒப்பொன்றே பற்றித் தம்முள் வேறின்றி இயைந்து, அவருள் ஒருவர்க்கு நிகழும் இன்பு துன்பு முதலியன வெல்லாம் எனது உனது என்னுங் கருத்தொற்றுமை பற்றித் தனித்தனி என தென்றேகொண்டு இங்ஙனம் இயல்பெல்லாம் ஒன்று பட்டதோர் இயைபுடைய ராயினும் அவரோடியையும் அவ் வியைபு அறம் முதலிய மூன்றனுள் முன்னையன இரண்டு பற்றியே அன்றி ஏனையது பற்றி ஆகாமையின், அவ்வின்பான் இயையும் அவ் வியைபு ஆண்டு குறைந்து படுவதாதல் பெறுதும்.

இனி இயைபொழித் தொழிந்த மனைவியாளுய அவ்வியைபு எஞ்சிக் கிடந்த இன்பம் நிகழ்ந்து யாதும் குறைவு படாதாம். ஆயினும் அஃது அவளால் வேண்டும் இயைபுக்குரியனுங்கால் நிகழ்தும், அல் லாக்கால் நிகழாதும் இங்ஙனம் இடையீடு படுதலின் அவன்கட் கண்ட அவ்வியையும் அவன் தற்பயன் நோக்கியே யன்றி அவன் தற்பயன்



104820

நோக்கி அன்றென்பது தெற்றென விளங்கும். அல்லதூஉம், இன்னும் பலவேறு ஏதுக்களானும் எடுத்துக் காட்டானும் அஃதன்ன தேயாதல் துணியப்படும். இனி, அஃதன்னதாயினும் ஆக, ஆண்டுப்படும் அவ் வியையும் அவருள் ஒரு சாரார் தாம் உள்ள துணையும் ஒப்ப இயைந்து கொள்ளாது இறத்தன் முதலிய பலவேறு ஏதுப்பற்றி கடைபோகாது இடையின் ஒழிந்து போதலின் அவரும் அத்துணை இயைபுடையர் அல்லர். என்றொழிக இவ்விறத்தல் முதலியன மேலோதிய வற் றிற்கும் ஒக்கும். இனி உறவினர், துணைவர், தந்தை, தாய் முதலி யோர் இயையும் இவற்றுள் அடங்கு மாறறிக.

இனி, இவ்வுடலானுகும் அவ்வியைபு மேற் கூறிப் போந்த இழுக்குகளுள் யாதுமின்றி இவ்வுடல் உயிரொனத்தானெனச் சிறிதும் வேறுபடாது ஒற்றுமையுற்று இயைந்து நிற்றலானும், இங்ஙனமாய அவ்வியைபு இயைபன்றென்பது யார்க்கும் ஆகாமையானும், இருந்த வாற்றான் வேறு விடுக்குமாறு இன்மையானும், இவ் உடல் உயிரோடு இயைபுடைத்தாமன்றி இயைபுடைத்தன் றென்பது எவ்வாற்றானும் எலாது. என அவர் இங்ஙனம் காட்டி ஓதிப்போவர். இங்ஙனம் ஆசங்கை நிகழுங்கால் அதனை மறுத்து அது அதனோடு இயைபின் றென்பது சாதித்தற் பொருட்டு ஆசிரியரான் ஓதப்படும் பொருள்.

ஈண்டு நோயுடன் றோன்றி நின்ற இவ்வுடல் உயிரோடு ஒட்டின் றாமென்றது. எனவே, இவ்வுடல் உயிரோடு இயைந்து படாது தவிர்ந்து கிடக்கும். உயிருள்ள அன்றே உளதாகாது இடைக் கட் டோனறலான், துச்சில் போலும் என்னும் அநுமானம் பற்றி அஃது அதனோடு இயைபின்மை தெளியப்படும். என்றதாயிற்று. மேலியை பின்மை துணியப்பட்ட மனைவி முதலியவற்றை நோக்க இவ்வுடல் சிறிது இயைபுடைத்துப் போல ஒப்பத் தோன்றினும் அவ் வியைபு இயைபன்றென்பது சிறிது காட்டுதும் :—

இயைபாவது தம்முள்வேறாய் இருபொருள் எல்லா இயல்பும் தம்முள் ஒத்துத் தம்முட் பொருந்தி நிற்கும் ஒரு பொருத்த விசேடம். ஈண்டு இவ்வுயிர் எனக் கிவ்வுடல் பெருத்தல் சிறுத்தல் வேண்டும், அழகு படல் நன்கு படல்வேண்டும். குறுகல் நெடுகல் வேண்டும். என்றற் றொடக்கத்தான் எண்ணிய எண்ணியாங் கெல்லாம் அஃது அதனோடு இயைபு படாது மறுதலைப் படுதலானும், அன்னபிற ஏது வானும், அதுவும் அம்மனைவி முதலியரோடொப்ப இயைபில் பொருளாமென்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்தது.

அற்றேல், இவ்வுடல் அவைபோழ் பிறிதின்கிழமையாதல் பெறப்படாது, தற்கிழமைப் பொருளாகலின், இஃது, அவை அன்ன தென்றல் சாலாதாலெனின், அற்றன்று. உடலாவது கை கால் முதலிய உறுப்புக்களானாய சமூகம். ஆகவே, மயிர் முதலியனவும் அக் கை கால் முதலியன போல அவ்வுடலுறுப்புள் ஒன்றாய் உளவாகவும், அவை அதனோடு இயைபின்றித் தவிர்தல் கண்கூடுபெற்றிக் காண்டலின், அம்மயிர் முதலியனவற்றானாய இவ்வுடல் அம்மயிர் முதலிய அவ்வுறுப்புக்கள் எங்ஙனம் இயையாது ஒழியும்? அங்ஙனமே தவிர்ந்தொழியு மென்பது துணியப்படும்.

இன்னும், இவ்வுடல் இயல்பு பற்றிச் சிறிது ஆராய்குதும். இவ்வுலகின் கட்டோன்றும் குழவிகளுள் ஒருசாரன என்று தோன்றும் அத் தோன்றிய அன்றே அக் குழவியுடற்கட்பிணி நிகழக்காணடும். அங்ஙனம் காணப்பட்ட அப்பிணி அக்குழவியுடலுடன் றோன்றியதன்றி அதன்பின் தோன்றியதன்று, பின் தோன்றற்கோர் ஏதுவின்மையான். அற்றேல், அகம் புறங்களினுளவாய அவ்வேறுபாடே ஆண்டைக் கேதுவாமெனின்; அற்றன்று. ஒருசார் குழவிகட்கு அது நிகழக் காணாமையானும், ஒருசார் குழவிகட்குக் காணுதலானும், அற்றேல் அது ஒருசார் குழவிகட்கு. புற இடம் ஒத்தும் ஒருசார் குழவிகட்கு அஃதொவ்வாமையுமே அதற்கேது வென்றாற்படும் இழுக்கென்னை? யெனின்: அற்றன்று, அவ்வாறோதாமையானும், சற்காரிய வாதத்திற்கு இழுக்காகலானும் ஆகவே, அவ்வாதம் முதலியனவாய பிணிகள் பிறக்கும் அக் குழவியுடல் என்று நிகழும் அன்றே தாமும் உடனிகழுமென்பது பெற்றாம். பெறவே, அவ்வுடல் வீடுடையன. அவையே உயிரன்றென்பதூஉம் பெறப் பட்டது. படவே, அங்ஙனமாய அவ்வுடல் உயிர்கட்கு ஒதுக்கு இல்லே யன்றி அதற்கே யுரிமை யுடைய தொன்றன்மை துணியப்படும்.

அற்றேல் அஃது அப்பிணிக்கே யுரிமை யுடைமையும் உயிர்க்கு அங்ஙனமன்றி ஒதுக்கில்லாதலும் எற்றாற் பெற்றாம் "உடன் பிறந்தார் சுற்றத்தார்" என்றற் றொடக்கத்து உரையளவையாற் பெற்றா மெனின், அஃது அநுமான அளவை பற்றி அல்லது தனித்து வலி பெறுதல் செல்லாதால் எனின், அவற்றுள் ஒருசாரன அங்ஙனமாயினும் பரலோக பாதாள லோக இயல்பு முதலியன ஓதும் ஒருசாரன அங்ஙன மாகாமையின், செல்லாமை யாங்ஙனம் என்றொழிக.





அல்லதூஉம் அவ்வாதம் முதலிய பிணிகள் உயிர் தம்மோடு உடன் வைக இயையுங்கால் அங்ஙனம் வைகியும் இயையாது கலாய்க்குங்கால் தவிர்ந்து போயும், இவ்வாறு உடல் எவற்றினும் நிலையுதலில்லாது தவிர்ந்து போதல் பற்றியும், அது துச்சில் என்பது தெற்றென அறிக. இன்னும் அது தமக்கே யுரிமையுடையதோர் இல்லாய் இயைந்ததாமாயின் தவிர்ந்து புறம் போகாதே என்றும் ஆண்டே வைகல் வேண்டும், அங்ஙன மன்றி அது தவிரப் புறம் போதலின் தமக்குரிமை யின்றிப் பிறர்க்கே யுரியதாய இல் என்பதே தகும். என்னும் பொருந்துமாற்றானும் அஃதங்ஙனமாதல் தெளிந்து கொள்க.

இங்ஙனம் அநுமான அளவை பற்றி உடல் உயிரோடு இயைபின்றித் தவிரும் எனச் சாதித்து, தூலதேக வாதிகளை மறுத்தவழி சூக்கும தேகவாதிகள் உரையளவை ஒன்றே அளவை, வழி அளவை முதலியன அவ்வாறு அளவை ஆவன அல்ல ஆகலின் அவற்றால் சாதிப்பன பொருள்படா என்பர், அஃது அங்ஙனமாயின், முன் நிகழும் பயன் நோக்கி முயல்வார் இலராய் முடியும். "இம்மையின் முயற்சியானே இருநிதி யீட்டப்படும்" என்றற் றொடக்கத்தன அவர்க்கும் உடம்பாடாகலின், அதனான் வழி அளவையும் அதனானே பிற அளவைகளும் அளவையின் பாற்படும் எனத் தெரிக்குங்கால் அவரும் அதனான் மறுக்கப்படுவர். ஆயினும், அவர்மதமே கொண்டு அவரை மறுத்து, உடல் உயிரோடு ஒட்டின்றித் தவிர்தல் கண்கூட்டின் வைத்து தெரித்தற் பொருட்டு ஏது வேறு மொன்று ஓதுமாறு.

"உருவும் உருவில் பொருளும் ஆகலான்" எனவே. உருவாய், அழிவு பாடுடைத்தாய், அறிவில்லதாய இவ்வுடலும், உருவில்லதாய் அழிவில்லதாய் அறிவுள்ளதாய அவ்வுயிரும், தம்முள் ஓரினமாகாது வேறுபட்டு முரணுதலின், அவைதாம் மேல் வினைபற்றி இடையே தம்முள் இயைந்தன வல்லது, அநாதியே இயல்பான் இயையும் இயை புடையன வல்ல. என்றவாறாயிற்று. அன்றி அவை அன்றே இயல்பானியையும், அவ் இயைபுடையன வாயின், உயிர் அவ்வுலகப் பயன் துய்த்தற்குப் போங்கால் உடல் தவிராது தானும் உடன் போகும். அங்ஙனம் உடன் போகாது தவிர்ந்து கிடத்தலின் அஃது அன்னதாதல் துணியப்படும்.

அற்றேல் இத் தூலவுடல் இயைபின் றென்பது ஒக்கும். அத் தன்மைத் தாய உடல் பல வேறாமாகலின், ஏனைச் சூக்கும உடல் அது போல் இயைபின் றென்பது ஏலாது. உயிர் ஈண்டுள்ள இவ்வுடல்

தவிரப் போகாலும் அஃது அதுபோற் றவிராது ஆண்டும் உடனி யைந்து சேறலால். எனின், அற்றன்று, பலவேறு காலும் பல வேறுடல்களில் பலவேறு சென்மப்பட்டுத் திரியும் அவரை நோக்க அங்ஙன மாகாது நின்ற அவன் அயன் எனப்படுமாயினும் அப்பெயர் அவற்கு அஃதின்மை பற்றி ஆயது அன்றாம். மற்றென்னையோ வெனின், அஃதவற்கு உபசார மெனப்படும். அதுபோல அங்ஙனம் பலகாற் பிரிந்து திரிந்து கூடும் அதனை நோக்க, அங்ஙன மாகாத அச்சூக்க உடல், சிறிது இயைபுடையது போற்றோன்றினும், அதுவும் அதனோடு இயைபின்றாதல் ஆய்ந்தறியும் அறிவுடையார்க்கன்றி அங்ஙனம் அறியாதார்க்கு அவ்வியைபு அறிதல் அரிதென்க. அற்றா கலினன்றே, "அருஉடம்பின்கட் பற்று, நிலையாமை உணர்ந்த துணையின் விடாமையான் அது விடுதற்கு உபாயம் முன்னர்க் கூறுப." என *உத்தரவேத உரை ஓத்துடையார் உரைத்தருளியதூஉம் என்பது.

அற்றேல் அஃதாக ஈண்டு உயிர் உருவில தெனவே, அஃது அரு வாதல் பெறப்படலானும், சேதனமாய், அருவாய், நித்தமாய உயிரும் என அவ்வாறே ஓதுதலானும், அல்லதூஉம், உரு உடம்பு அருவுடம்பு எனச்சேர வைத்து ஓதுதலானும், வேற்றுமையின்றித் தம்முள் ஈரி யல்பும் ஒத்தல் பெற்றாம். பெறவே அவ்வொப்பே இயைபென மேல் நீவிரும் ஓதுதலின், அங்ஙனமாய அவ்வியைபு இயைபன்றாமெனல், நமக்கே வழுவாய் முடியும் போலு மெனின், அறியாது கூறினாய், ஆண்டு உருவிலது என்றது அதனை அருவென்றோதிய தன்று. கண் கூடாய் நின்ற அவ்வுருவை நோக்க அங்ஙனமாகாத அவ்வுயிர் அகண்டம் என்பதே கருத்தா மாகலின். அன்றி அஃது அருவப் பொருளெனக் கொள்ளின் அருவம் முதலிய மூன்று அநித்தமா மாகலின் அது முன்னர் நித்தம் என்பதனோடு முரணு மென்றொழிக. சேதனமாய் அருவாய் என்புழி, அருவென்றதும் அது. அற்றேல் அருவுடம்பும் அற்றாம் போலுமெனின்; அற்றன்று. அஃது காட்சி அளவை பற்றி அறியும் ஏனை உருவை நோக்க அங்ஙனமாம் ஆயினும், உயிர் சிவங்களை நோக்க கண்டமே ஆகலான், ஆண்டு அரு என்றது சூக்கும மென்னும் பொருட்டு. அஃது எமதாசிரியர் "அருவாய மாயையை சூக்குமமாய யாவை" என்பதனானும் அறிக. அற்றேல், இனி ஏனைப் பரவுடல் இயைபுடைத்தாம் போலும் என மலையற்க. அவற்றிற்கும் அதற்கும் பொதுச் சிறப் பென்னும் வேறுபாடு மாத்திரையே பிறிதன்மையான்.

* பரிமேலழகர்.



அற்றேல் உடல் உயிரோடு இயையும் இயைபு இயற்கையன்றிச் செயற்கையாமாறு யாங்ஙனம் என்னும் கடாவை யொழித்து ஏதுவை வலியுறுத்தற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்.

"பசுத்துவமா மான்மா பரதூல சூக்கம்
வசித்த வுடன்மலரின் வாய்ந்தே—இசைத்த
கழிப்பாலே மேயானைக் காணி னகத்தின்
வழிப்பாட்டா னீங்கும் வழி."

இவ்வாறு இவ்வுடல் உயிரோடியை புடைத்தென்பதே தக்கது. அன்றித் தவிரும் என்பது தகாது என்னும் தூலதேக வாதிகளையும் அஃது அங்ஙன மாயினும் சூக்கும தேகம் அங்ஙனமா மென்றல் எலா மையின், அஃது அதனோடு இயைபுடைத் தென்றல் சாலும் என்னும் சூக்குமதேக வாதிகளையும், அவ்வாறே கஞ்சுக சரீர குண சரீர காரண சரீர வாதிகளையும் மறுத்து, இவ்வுடல் உயிரோடு இயைபின்றித் தவிர்தலை வலியுறுத்துதலின், ஒரு பொருளே நுதலி வருமாறு காண்க.

மேலைப் பகுதியினுள் ஐவேறு உடல் வாதிகளையும் மறுத்து, கூரை தவிரவே போவார் என்றோதிய உருவகப் பொருளை சாதித்த வழி, அதனை உடம்பட்டு, பசு நல்வினைவாதிகள் அற்றேல் திப்பிய தேகமாய தெய்வ வடிவும், அங்ஙன மாமாயின், சோதிட்டோமத்தான் வேட்டோர் துறக்க வுலகின்கண் இறக்காத அமரராய்ப்புக்கு வீடெய் துவர் என்றற் றொடக்கத்துச் சுருதிகளோடு முரணி அவசித்தார்த்த மாகால் என்னும் கடாவை ஒழித்து. எஞ்சி நின்ற பூதசார முதலிய சரீரங்களும் அவ்வாறு இயைபின்றித் தவிருமாறு காட்டற்கு எழுந்தது இரண்டாவது பகுதி மேல் காணப்பட்டு நின்ற இவ்வுலக தேக இயல்பு உரைத்து ஈண்டு காணப்படாத அவ்வுலக தேக இயல்புரைத்தலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது. முன் வருவனவு மிவ்வாறே யோர்ந்துணர்ந்து கொள்க.

இனி "வேட்டல் போல்வன வீட்டுநெறியாகா" என்பது ஆசிரிய ராலோதப்படும் பொருள்.

அஃது அவ்வாறாமோ அல்லவோ என ஐயப்பாடு நிகழ்ந்தவழி ஈண்டு வேத வாதிகள் கூறுமாறு. வேதம் என்றது ஈண்டு சைமினி நூலை. கூவல் குளந் தொட்டல் ஆதுலர்க்கு அன்னச்சாலை, தண்ணீர்ப் பந்தர் முதலிய உலக நல்வினை செய்தார்க்குப் பயனும் அவ்வாறே

ஆண்டாண்டு மேற்செல்லும் அந்நெறிகளின் நீர்வேட்கை பசி முதலிய வற்றானுய அவ்வத் துன்பு நிகழாது அந்நெறிக்கு வேண்டிய வேண்டியாங் கெய்தி இனிய தலமும் அணிய வழியும் முதலிய நல்லன பெற்று அவ்வவ்வுலகின்கண் நன்று சென்று வைகுவார். ஆயினும், அவர் ஈண்டு நின்று ஆண்டுச் செல்லுங்கால் ஊர்தி முதலிய சிறப்பு வரிசைகளெய்தாது எய்தியது பொது வரிசை மாத்திரையே ஆகலின், அஃது இதனை நோக்க இன்பமே யன்றி முத்திப் பெரும் பயன் எனப்படா என்பது. அல்லதூஉம் அவர் அங்ஙனம் அப்பொது வரிசையோடு போதன் மேலும், அவ்வுலகினுள்ளும் இவ்வுலகுட் பட்ட இருவேறு இன்புகளுள் எல்லார்க்கும் உரிய பொது இன்பு போல்வதோர் பொதுமை பெற்ற போகமே கைகூடப் பெறுவரன்றி ஆண்டுத் தாம் தாம் எண்ணிய எண்ணியாங் கெல்லாம் தடையின்றி எய்தப் பெறும் பெரும் போகம் அவர்க்குக் கைவரப்பெறா. ஆகலின் அஃது இதனை நோக்க இன்பமே யன்றி முத்திப் பெரும் பயனெனப்படாது. அங்ஙனமன்றி வேதநல்வினை செய்துடையார் அவர் போலாது வானூர்தி முதலிய சிறப்பு வரிசைகள் கைவரப்பெற்று அமரர் அனைவரும் கவிகை முதலிய எந்தன் முதலாய பலவேறு பணிசெய்து ஏவலராய் அடங்கிப் புறஞ்சூழ்ந்து போதப் போந்து, பலவேறு ஞாயிறு ஒரு வழிப்பட்டாங்கு பேரொளி சான்ற அரிய பெரிய சிர்தாயதோர் திப்பியத் திருவுருவுடையராய் ஆண்டுளவாய எப்போகமும் தப்பாது முட்டின்றி முடியப் பெற்று அவ்வுலகின்கண் எவரானும் எவற்றானும் யாதும தடைப்படாது ஆண்டாண்டு வேண்டுழி யெல்லாம் சென்று வைகி இங்ஙனம் ஆண்டைப் பெரும் போக மெல்லாம் முற்றப்பெற்று என்றும் இவ்வாறே அத்திப்பியத் திருவுருத் தவிராது உடையராய் வைகி வாழுதலாய முத்திப் பெரும் பயனெய்துவர் என்றிங்ஙனம் கூறிக் களிப்பர்.

இனி அவரை மறுக்கும் சித்தாந்தம் வருமாறு: இவ்வுலகின்கட் காணப்படும் விலங்காவது லோகம் முதலிய வற்றானுக்கப்பட்டு ஏனை உலகர் போல் ஒருழிப்படாது பல வழிப்படுவோரை, அங்ஙனம் ஆக வொட்டாது தடைசெய்து அடக்கும் ஒரு தண்டக் கருவி விசேடம்.

அவற்றுள், மரம் கரும்பொன் முதலியவற்றானுக்கப் படுவன. அழகு ஒளி என்பன இன்மையும் வெண்பொன் செம்பொன் முதலிய வற்றானுக்கப்படுவன அவை உண்மையுமாய அவ்வேறுபாடு மாத்திரையே யுடையன வன்றி, தடைசெய்தல் துன்புறுத்தல் முதலியன





வெல்லாம் தம்முள் ஒப்பவுடையனவாமன்றி அவ்விரு வேறு விலங்குகளும் அத்துன்பு முதலியன இல்லன வல்ல. அவ்வாறே ஈண்டும் நிரையத் துறக்கம் என்னும் இருவேறுலகங்களும் முறையே அழகுவரிசை என்பன இன்மையும் அவை உண்மையுமாய அத்துணை வேறுபாடு மாத்திரையே தம்முள் உடையனவாமன்றி ஏனையவெல்லாம் தம்முள் ஒப்ப உடையன என்பது. நிரையத்து வைகுவார் ஆண்டைப் படுதல் மாத்திரையே யன்றி தாம் வேண்டிய வேண்டியவாறே மேலுலக முதலிய வற்றுட் செல்லமாட்டாமையும், ஒறுக்கப்படுதலும் உடையராமாறு போல ஏனைத் துறக்கவுலகில் வைகுவாரும், அத்துறக்கவுலகம் ஒன்றே யன்றி, அதன் மேலுலகங்களுட் சென்று வாழ மாட்டாமையும், அன்ன பிறவும் உடைமையின் அவ்வாறே துன்பு முதலியனவும் தம்முள் ஒப்ப வுடையர் என்பது தெற்றென வறிக.

அற்றேல் அஃதாக அந்நிரயத்துத் துன்பொன்றே யன்றி இன்பமென்பது யாதுமின்றாம். ஏனைத் துறக்கம் அங்ஙனமன்றி ஆண்டைக்குரிய அவ்வின்பொன்றே உடைத்தன்றி ஏனைத் துன்பென்பது யாதுமின்மையின் இரண்டும் தம்முள் ஒப்பனவென்பது செல்லாதாம் பிறவெனின்; அறியாது கூறினாய். அந்நிரயப் பயனெல்லாம் தம்முள் ஒப்பன வல்ல. என்னையோவெனின், இவ்வுலகுட் படும் காராக்கிரகப் படுவாருள் ஒரு சாரார் அத்தடைப்படுதல் ஒன்றே யுடையரன்றி ஏனைய வெல்லாம் தம் இல்லத்து உடையராமாறு போல, உடையராய் வைகக் காண்டும். அதுபோல் ஆண்டும் ஒரு சார்ப்படுவன வற்றுள் வைகும் அவர் தடைப்படுதல் மாத்திரையே யன்றி ஏனைத் துன்பு என்பன இலராய் வைகுவர். ஆகலிற் செல்லாமை யாங்ஙனமென்றொழிக. எனவே, ஈண்டுத் தீவினை செய்துடையராயினார் அதனானே நிரயத்து அவ்வினைப் பயன் துய்த்தற்கேற்ற யாதனாவுடலோடு ஆண்டுச் சென்று அப்பயன் நுகருந்துணையும் அவ்வுடலோடு வைகி, முடிவின்கண் அவ்வுடல் தவிர, வினையெச்சத்தானே இவ்வுலகின்கட் சேறலும், அன்றி, மேலீண்டுச் செய்த நல்வினை பக்குவப்பட்டுக் கிடக்குமாயின், ஈண்டு வாராதே அப்பயன் துய்த்தற்கேற்ற பூதசார சரீரம் எடுத்து, ஆண்டு நின்றாங்கே துறக்கம்புக்கு வைகி வாழ்ந்து முடிவின்கண் அவ்வுடல் தவிர, வினையெச்சத்தான் ஈண்டுப் போதுவர். இனி அத்துறக்க உலகின்கண் வைகி வாழ்வாரும் அவ்வாறே, முடிவின்கண் வினையெச்சத்தானே அப்பூதசார உடல் தவிர ஈண்டுப் போதலும் அன்றி மேல் ஈண்டுச்செய்த தீவினை பக்குவப்படுமாயின், ஈண்டு

வாராதே, ஆண்டு நின்றவாறே அத் தீவினைப்பயன் துய்த்தற் கேற்ற யாதனாவுடலெடுத்து நிரயப்பயன் துய்த்து முடிவின்கண் அவ்வுடல் தவிர அவ்வினையெச்சத்தான் ஈண்டுப் போதுவர். இனி ஈண்டும் இவ்வுடல் தவிர அவ்வீருழியும் போமாயினும் அவ்விருவினையும் பக்குவமாகாவாம், மேலும் எஞ்சிய அவ்வினையே பக்குவப் படுமாயின் இவ்வுடல் தவிர ஆண்டுப் போகாது ஈண்டைக் குரிய பிறவுடல் ஈண்டெடுத்துக் கோடலும் உண்டெனக.

இவ்வண்டங்களுள் வைத்து, ஓர் அண்டமாவது - பெருந் தீவு சிறு தீவு பெருங் கண்டம் சிறு கண்டம் பலவேறு தேசம் பலவேறு நாடு. நகர் என எண்ணிறந்த பலவேறு அகப்பிரிவுகள் உடைத்தாமாறுபோல, ஏனைத் துறக்க நிரயங்களும் எண்ணிறந்த பலவேறு அகவுலகங்கள் உடையனவாம். அல்லதூஉம் இப்பிருதிவி அண்டம் ஆயிரகோடி, அப்பு அண்டம் பதினாயிரகோடி, ஏனையவும் இவ்வாறே பதின்மடங்குத் துணையும் தம்முள் ஒன்றற்கொன்று ஏற்ற முடையனவாய், வேறும் அவ்வாறே எண்ணிறந்த பலவேறு பெரும பிரிவு, எண்ணிறந்த பலவேறு சிறு பிரிவு என்பன உடையனவாம். உயிர் ஆண்டாண்டைக் குரிய அவ்வவ்வினைப் பயன் துய்த்தற்கேற்ப எடுத்த அவ்வவ்வுடல் மாறி மாறித் தவிரத் தவிர கொள்ளிவட்டம் கறங் கோலைகளொப்ப எஞ்ஞான்றும் ஒருதலைப்படாது பலதலைப்பட்டு கலக்கம் படும் அல்லது ஒருதலை நிலைப்பட்டு கலங்காது வைகுமாறின்றெனக. இங்ஙனம் இக்கலக்கமா மாறு உணர்த்து முகத்தான் எல்லாவுடலும் தவிரவே போமாறு காட்டி; வேத நல்வினை வீட்டுக் கேதுவன்மை சாதிக்கப்பட்டது.

அற்றேல் ஈண்டோதியன வெல்லாம் ஒக்கும் நிரயவுலகுக்குரிய தயக்கம்போலும் தயக்கம், பல படைத்தல் துறக்கவுலகும் ஒப்ப வுடைத்தாம். என்றற்கு எடுத்துக்காட்டு வேறில்லைப் போலுமெனின், அறியாது கூறினாய் "பூதனா சரீரம் போனால் புரியட்டரூபந்தானே" என வைத்து ஆசிரியர் இரண்டாய பூத சார சரீர வினைப்பயனும் யாதனா சரீர வினைப்பயனும் தம்முள் ஒத்தலின் வேறு கூறாது அதற்குரிய அவ்வுடலையும் அதனானடக்கி யாதனா சரீரமென எடுத்தோதலானும் "பொன்விலங்கும் இருப்பு விலங்கும் போறலின் துறக்கவுடலையும் யாதனாசரீரமென்றார்" என எமதாசிரியர் அதன் கருத்து எடுத்துரைத்தலானும் என்பது.



அவ்வீரிடத்தும் நிகழும் கலக்கம் ஒன்றன்றிப் பலவேறாதல் பற்றியன்றே? ஆசிரியர் தயக்கமது படைத்தார் என்னாது "தயக்கம் பலபடைத்தார்" என எடுத்துக் கொண்டதூஉம் என்பது. அற்றேல், தயக்கம்பல என்றது அந்நிரயத்து நிகழும் பலவேறு தயக்கமாம் என்றாற் படும் இழுக்கென்னை யெனின்; அற்றன்று, "உடலிருது நிலை" யென்ப. ஆகலின், உடல் நிலையெல்லாம் கலக்கம் எனப்படுதலானும், துறக்க நிலையும் உடனிலையே யன்றி வேறன்மையானும், யாதனாசரீரம் என அவ்வாசிரியரும் அதனை ஒப்பவைத்து ஓதுதலானும், அதற்கு அவ்வுரை யாசிரியரும் அவ்வாறு உரைத்தலானும், அல்லதூஉம், "சீவர்கள் துயரம் தனை துயரென்று தெரிகிலார் மிகுசுக மென்றே பாவனை செய்து கொள்கின்றார்" என்றற் றொடக்கத்தால் சூதன் ஒளிமாலை கூறுதலின், கலக்கத்தைக் கலக்கம் அன்றெனத் திரியக்கொள்ளும் பாவனை மாத்திரையே பிறிதன்மையானும், சுருதி மிருதி புராணம் இதிகாசம் எல்லாவற்றிற்கும் இதுவே உடம்பாடாகலானும், அவற்றை உள்ளவாறுணர்ந்து உணர்த்தும் அநுபவமுடைய ஆசிரியர் ஆசாரமும் அதுவே யாகலானும், பொருந்துமாற்றிற்கும். அது பொருந்துவதாகலானும், இங்ஙனம் மேற்கோள் ஏது எடுத்துக்காட்டு உபநயம் நிகமனம் என்னும் நியாயமுகத்தான் இங்ஙனம் துணிந்து போந்த பொருளை விடுத்து, அங்ஙனம் கோடலாற் பயக்கும் பயனின்மை யானும் என்பது.

அல்லதூஉம் அங்ஙனம் கூறின் வழிவைத்தார்க்கு என ஆசிரியர் முன் கிளந்து ஓதுதலின், அவ்வழி ஒன்றேயன்றி வழி பலவேறன்மையானும், அன்றி ஏனையன வழியாமென்றற் கேலாமையானும், இப்பொருளே பற்றிப் "புக்கிலமைந்தின்று கொல்லோ" என உத்தரவேதமுடையார் கூறுதலானும், அவ்வுரை யோத்துடையாரும் "வாத முதலியவற்றினில்லாய இவ்வுடலினுள் ஒதுங்கிருந்தே போந்த அவ்வுயிர்க்கு எஞ்ஞான்றும் இருப்பதோர் இல் இதுகாறும் அமைந்ததில்லைப் போலும்" என எடுத்துரைத்தலானும் யாங்கூறிய பொருளே எல்லார்க்கும் உடம்பாடாதலறிக.

அற்றேல் அஃதங்ஙனமாக வேத நல்வினை யெல்லாம் வீட்டிற் கேது வன்றெனல் கூடாது. அவ்வேள்வி முதலியவற்றுள் ஒரு சாரன பதிப்பொருளாய சிவனை நோக்கிச் சிறப்புவகையாற் செய்யின் அது சிறப்புச்சிவ நல்வினையாய்த் தப்பாது வீடு பயக்கும் எனவும், ஏனை உலக நல்வினையும் அவ்வாறே செய்யின் அதுவும் அவ்வாறே வீட்டிற் கேதுவாமெனவும், அங்ஙனமாய அச்சிறப்புச் சிவ நல்வினைக்கு ஏது

வாவது மேல் அயன் அரி முதலிய பிறரோடொப்பப் பொதுமையின் வைத்து அரனே பதிப் பொருளென்றறியாது பொதுமையிற் செய்த அவ்வேள்வி முதனியனவாய அபுத்திப்பூர்வ சிவ நல்வினையே யாமெனவும், சிவாகமங்களும் அவ்வாறே அங்ஙனமாய அச் சிவ நல் வினை யெனப்படும் இருவேறு திறப்பட்ட சரியை முதலியனவே முத்திக்கு வித்தாமென ஓதுதலானும், எனப் பத முத்திவாதிகள் கூறும் கடாவை யொழித்து மேற்பொருளைச் சாதித்தற் கெழுந்த ஏது

"கலங்கா நிலையே முத்திநிலையாகலான்"

எனவே சிறப்புச் சிவ புண்ணியமாய அவ் வேள்வி முதலியன சரியை முதலியன என்றின்னோரன்ன வற்றுறைய பயன் ஞானமேயல்லது வீடன்மையானும் அவை ஒரோவழி முத்திக்கு வித்தாம் என்றதன் தாற் பரியம் பரமுத்தியன்று பதமுத்தியே யென்க. இனி, ஒரோவழி அவை வீடு பயக்கும் என்றதும், வீட்டிற்கேதுவாய ஞான நிகழ்ச்சிக்கு நிமித்தம் ஆதல் பற்றியே பிறதன்றென்றொழிக. இங்ஙனமாகலின், சாலோகம் முதலாகக் சாலோகம் முதலிய நிலையெல்லாம் உடல் நிலையை யின்றி யமை யாமையின், அவை தயக்கம் பல படைக்கும் நிலையாவனவன்றி தயங்கா நிலையாவனவல்ல. ஆகலான் அவற்றிற்கு ஏதுவாய் மேற் செய்து போந்த அவ்வேத நல்வினை முதலியன வீட்டிற் கேது வாகாது கலக்கத்துக் கேதுவாமென மேற்கோளைச் சாதித்த வாறாயிற்று.

அற்றேல் அவர்தம்முன் "அநுன் பெற்றவர்கள் நித்தவுரு வத்தைப் பெற்றிருக்கை" முத்தி என்பவாகலின், அதுபற்றி அது உடனிலையன்றி வேறன்மையானும், ஆயினும் அவ்வுடனிலை இவ் வுடனிலைபோல் பெரிதும் கலக்கம் பல படைக்குமாறின்மையானும், அப்பெற்றித்தாய நித்த சுத்த மங்களமயமாய திப்பிய உடல் நிலை கலங்கா நிலை என்றற் கிழுக்கின்மையின், அதுவே முத்தியாமலோ வெனின், அறியாது கடாயினாய், உடலுளதாகவே அதற்கேதுவாய மாயையும், அதன்கண் நிகழும் உண்டி வினைகட் கேதுவாய கன்மமும், அதனைப் பொருத்துவதாய மலமும் ஒழிந்து போகாது நிலை பேறுடைமை ஒரு தலையாகலான் அதுவும் கலக்கம் படைப்பதொரு உடல் நிலையேயன்றி கலக்கம் படையாத முத்திநிலை யன்மையானும், ஆகவே அதனை முத்தியென்றோதியதன் கருத்து, பதமுத்தி யென்பதே. பிறிதன்றாகலானும் அங்ஙனமாயினும் இவ்வுடல் அம்மூல மலப்பிணி தீர்க்கும் மருந்தாய் முடியும். ஆகவே, இவ்வுடல் தனக்கு மூலமாய் நின்ற மல மொழியத்தானும் அதனுடனே நில்லாது தவிருமல்லது



அதன்பின் நிற்றற்கோ ரியைபின்மையானும், ஆண்டெய்யப்படும் அதுவுந் தவிருமென்றலிற் சிறிதும் ஆசங்கை யின்மையானும், அற்றேல் அவ்வேத நல்வினை முதலியன வீட்டிற் கேதுவல்லவாமாகயின், "மும்மை நற்பதிகடம்மில் மூளைத்தவர் முடிந்தோர் மூவாச் செம்மை நற்கழல் கண்டோர்கள் சிவத்தினைச் சேர்வார்" என வீட்டிற்கேதுவாக வைத்தோதும் அவையும், அன்ன வல்லவாய்முடியும். முடியவே இத் திருமுறையுள் "சேர்கின்றார் நன்னெறிக்கே சேர்கின்றாரே" என்றற் றொடக்கத்தான் ஆண்டும் பிறாண்டும் வருவன வெல்லாம் பயன் படாமையின் அது நமக்கே வழுவாதல் மேலும் இஃது கருதியன்றா தலும் படும் போலும் என்னும் தடையை யொழித்து ஏதுவை வலி யுறுத்தற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :-

"கழிப்பாலை மேயான் கழல்பரவிற் பாசம்
கழிப்பாதல் காட்டுமவன் கைவாய்—கழிப்பான
நன்னெறியாம் ஞான நனுகி மலமோவி
பின்னெறியு மெய்தும் பிற."

எனவே, மேலே சேர்வர் என்றற்றொடக்கத்தான் எழுதனை வெல்லாம் கால நீட்டித்து அருமையிற் பயக்கும் ஏனைய போலாது ஞானத்தைத் தோற்றுவிக்கு முகத்தான் பயன்படுதலுடைமையானும் சன்மார்க்க மெனப்படும் நன்னெறியாவது ஞானமே யாகலின், அவ்வழிப்பட்டு அநுபவமுடைய தேசிகர் கைவாய்க்கப்பெற்ற ஞானம் எளிதினும் விரைவினும் எய்தி ஒருதலையான் வீடெய்துவர் என்பதே கருத்தாக லானும் பயன்படாமையும் கருதியன்மையும் யாண்டையதென ஏதுவை வலியுறுத்த வாறாயிற்று.

மேலைப்பகுதிகள் இரண்டானும் முறையே இவ்வுடல் நிலை உயிர்க்கு என்றும் உரியதோர் நிலையன்றாகலின், அது தவிர்தல் தவி ராது எனவும், அவ்வுடல் நிலைகளும் அவ்வாறே தவிர்தல் ஒருதலை ஆகலின் அவையும் கலங்கு நிலையே யன்றிக் கலங்கா நிலையாய் உயிர் என்றும் நின்று நிலைபெற்று எக்காலும் நீங்காத அம்முத்தி நிலையல்ல எனவும் தெரித்துக் காட்டியவழி அற்றேல் அத்தன்மைத்தாய அந் நிலையவேது யாது அஃது அகமோ? புறமோ? அன்றி அணித்தோ? சேய்த்தோ? என்னும் கடாவை யொழித்து, அச்சிலாய்த் தவிசய் பேசம் கூறைபோலாது. பின் தவிராது புகுதற் குரித்தாயுள்ள புக்கிலா மாறு உணர்த்தற்கெழுந்தது மூன்றாவது பகுதி.

மேல் வினைப்பயனுமாறு கூறி ஈண்டு அவ்வினைப்பயன் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனை தியல்புரைத்தலின், இஃது அதன் பின் உரைக்கப்பட்டது.

இனி, "மலர்மிசை யேகினான் மாணடி சேர்க" என்பது. ஆசிரியரான் ஓதப்படும் பொருள்.

இதன் பொருள். உயிர் மாறி மாறி உடலெடுத்துக் கலங்குங்காலும் தான் நீங்காது, அதன் இதயதாமரையின் நின்று உணர்த்தியருளும் அக் கடவுள் திருவடியைப் புக்கு வைகுக. என்றவாறு.

எனவே என்ஞான்றும் தவிராது வைகும் புக்கில் தாமே யென்றறியும் அறிவிறந்து போதலின், சித்தாய், தன்னேடோரினமாய், நித்தமாய், நிலைபெற்ற தம்மை மறந்து, தனக்குப் பகைப் பொருளாய் தம்மின் வேறாய் அசித்தாய் நிலையுதலில்லாத பாசத்தோடுகூடி தன்வசப்படாது அதன் வசப்பட்டு, தாம் கூறும் உறுதி மொழிகளைக் கைக்கொண்டு பயனெடுபடுவன பயிலா தொழிந்து, அதன் மறுதலையாய பயனில்லனவே பயின்று, அப்பயிற்சியானே நிலையாய புக்கில் எனப்படும் அஃதோர் பொருள் உண்டென்பதூஉம், அதனை எய்தற்பொருட்டு முயறல் வேண்டும் என்பதூஉம், அது முயறற் குரித்தாய தென்பதூஉம் அதனானெய்தும் பயன் இதுவென்பதூஉம் அப்பயன் பயத்தற்குரிய சிரியகருவியாவது இது வென்பதூஉம் அஃது எய்தற்குரிய நேரியவழி இது வென்பதூஉம், இன்னும் இன்னோரன்ன இயல்புகளுள் யாது மறியாது, பித்து, பேதை, பேய், நாய், போலக் கீழ்மைப்பட்டு இங்ஙனம் எத்துணையும் எளிதாய்க் கலங்கி விலங்குங்கால் எல்லாமும் தாமும் அதனை வெறுத்துக் கைவிடாது இரங்கி "குணமெழ் கடவார் குணவழி கடந்து குணத்தினைத் திருப்புவார்" போல அவ்வுயிரைத் தானுக்கற்குரிய பலவேறு உபாயங்கள் செய்து எத்துணையும் அரியபெரிய சிரிய தம் சிலமும் நோக்காது அவ்வுயிர் செல்வழி யெல்லாம் தமக்கும் வழியாகக் கொண்டு புக்குழிப்புக்கு அதனை நீங்காது நிலைபெற்று நிற்கும் இறைவன், இவ்வுலகின்கண் நிலைபெற்ற இருளை பிறைமதி நாடோறும் சிறிது சிறிதாக நீக்கி முடிவின்கண் முற்றத்துறக்குமாறு போல, அறப்பயிர் வளர்த்து மறக்களை போக்கு முகத்தானே அவ்வறியாமையாய மலத்தை அங்ஙனம் சிறிது சிறிதாக நீக்கி கலங்காமைக் கேதுவாய் நிலைபெற்ற பொருளிது. கலங்குதற் கேதுவாய் நிலைபெறாத பொருள் இது. என்னும் வேற்றுமை அறிவு தோற்றுவித்து



நிலையாது தவிர்வனவாய இவ்வுடல் அவ்வுடல் களானுய கலக்கம் பலவாதல் காட்டி அவற்றான் அவற்றை வெறுப்பித்து, கலங்காது நின்ற பொருளாயதன்கண் விருப்பு நிகழ்ச்சி அதனானே அக்கலக்கத்திற் கேதுவாய அப்பயனில் முயற்சி யெல்லாம் ஒழித்து, கலங்கா நிலையாயுள்ள பொருளை எய்தற்கேதுவாய பயனொடுபட்ட முயற்சி யெல்லாம் இடையறவு படாது என்ஞான்றும் நீங்காது வைகி, உணர்த்து மாற்றான் உணர்த்தற்குரித்தாய்ச் சிறந்த இடம் அவ்விதய தாமரையே யாகலான் அதனைத் தனக்குரிய தொன்றாகக் கைக்கொண்டு உடையனாய அக்கடவுளே புக்கில் என்றவாறாயிற்று. இங்ஙனம் வைகும் இதனின் வேறாயதோர் பொருட்கன்றே புறம் அகம் தூரம் சமீபம் என்பனவுளவாம். அங்ஙனமாகாது இங்ஙனம் ஒற்றுமை யுடைத்தாயதோர் பொருட்கு அவ்வியல்பு கூறற் கேலாதாயினும் அவன் இவ்வுடலிடங் கோடலின் அதுபற்றி அகமும் அண்மையுமா மென்றுணர்ந்து கொள்க. அற்றேல் அங்ஙனம் ஆண்டோர் பொருளுண்டென்பதூஉம், அது இது வென்பதூஉம், எற்றாற் பெறுதுமென்னுங் கடாவை உவமை முகத்தான் ஒழித்தற்கெழுந்த ஏது.

"அகரவுயிர்போல் நிறையும் இறை ஆகலான்" எனவே, தாமொலித்தல் தன்மை யின்றியமையாவாய உயிர், உயிரில்லன என்னுமெழுத்தெல்லாம் அகர முதலவாம். என்னை? தாமே தனித்தொலிக்க மாட்டாமையானும், ஒலித் தொழிற்பாடு நிகழுதலானும், ஆகவே அங்ஙனமாய அவைதாம் வல்லுவனவாய அவ்வொலித் தொழிற்பாடு உற்று நிற்றற்கு அவற்றை ஊக்குமாறு ஒருதலையான் வேண்டப்படும் அவ்வகரம் அவற்றின் வேறாய் நின்று ஆக்கலாகாமையின், அவற்றுடனாய் நின்று ஆக்கும் அதுபற்றி அதுவே அவற்றினும் தலைமையுடைத்தாம். அதுபோல, முத்தொழிற்பட்டு நிற்கும் இவ்வுலகம் அத்தொழிற் படுத்துவான் ஒருவினை முதலை தம்மின் வேறாக வேண்டப்படும். படவே படுதலும், படுத்தலும், தம்முள் வேறாகலான். தொழில் இரண்டென்பதே யன்றி ஒன்றெனல் கூடாமையின், அவ்விருவேறு தொழில்கட்குரிய பொருளும் இருவேறாதல் பொருந்து மாறறிக. அங்ஙனம் படும், அத்தொழிலை படுத்துமப் பொருள் வேறுநின்று படுத்தல் ஆகாமையின் அதன் அகத்து நின்று படுத்தும் எனவும், அவ்வாறு படுத்தும் அப்பொருள் தொழிற்படும் அப்பொருட்கு இறைவனெனவும் விடுத்தவாறாயிற்று.

அற்றேல் உலகின்கட் காணப்படும் மரம்மண் முதலியன வாய பலவேறு திறப்பட்ட பொருளெல்லாம் தனித்தனி தமது அகம்வேறு

எனைப்புறம் வேறு எனத் தம்முள் இரு வேறு திறப்படாது, புறம் அகம் கீழ் மேல் என்றாற் போல்வன வெல்லாம் ஒன்றுதலே காண்டும். அன்றிப் புறம் ஒருபொருள் அகம் பிறிதொரு பொருளாதல் கண்டிலம். அஃதன்னமாக கண்டுப்புறமொரு பொருளும் அகம்வேறு பொருளு மாக வைத்து ஒரு பொருட்கே இங்ஙனம் இருவேறு திறம் படைத் தோதல் சாலாது. அல்லதூஉம் மேலும் அவ்வகரேயாம் ஆகலின் பொருள் இரண்டாதல் இல்லை என்பதே தக்கதாம். என்னுங் கடாவை யொழித்து எதுவை வலியுறுத்தற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :-

"வன்னிமரங் கண்டிலமோ வண்கழியா னூர்ப்படுவ
நின்னினிலை வேறெவையு நீயாயின்—நின்னீ
யுவனை யுளுதுவென் றோதுவாய் பேதாய்
பவயே யதலுமல பார்."

மூன்றாவது பகுதியினுள் உயிர்புக்கில் புகாதே துச்சிலே புக்கு வைகுதலின், அது தவிரத் தவிர மாறி மாறி மயக்கம் பல படைத்து எய்த்தது. ஆகலால், பின் மயங்குதல் தவிர்தல் இல்லாதாய புக்கில் புகுதல் ஒருதலையான் வேண்டு மெனவும், அப்புக்கிலாவது இது வெனவும், முதலாவது இரண்டாவது பகுதிகளின்கண் தொகுந்து கிடந்த பொருளை வலியுறுத்து உணர்த்திய வழி அற்றேல், அவன் இவனுமென அவ்வகக் கமலத்தின் வைத்து எம்மின் வேறாய் அறிதல் அரிதாயிற்று. பயின்னறிந்த இப்புற நிலைபற்றி அவனை எளிதினறிந் தெய்தற்குரிய வாயில் யாது என இவ்வுரை முகத்து மாணாக்கனுக்கு நிகழும் கடாவை ஒழித்தற் கெழுந்தது நான்காவது பகுதி. உரை என்றது கண்டு பாட்டை.

இனி, "கழித்திருப்பாலைக் கபாலப்பனார்" என்பது. ஆசிரியரா னுதப்படும் பொருள்.

(இ-ள்) புக்கிலாய அத்தாமரையுடையர் தாமே இத்திருக்கழிப் பாலை யுடையார் (எ-று). எனவே, நினது அகக் கமலத்தின்கண் உயிரிடமாகக் கொண்டு வைகி, நீசெய்யும் அவ்வக வழிபாடு முதலிய வற்றை யெல்லாம் ஏன்று கொண்டு, அவற்றிற் கேற்ற பயனளிக்கும் அந்தரியாமியாய அக்கடவுள் தாமே புறத்துளதாய இத்திருக்கழிப்பாலை என்னும் திருத்தலத்தின் கண்ணதாய திருத்தளியுள் எழுந்தருளி வைகும். ஆகலான், அக்கபாலப்பனாராய அக்கடவுளை நீ வழிபடு மாற்றான் வழிபாடு செய்வையாயின், அதுவாயிலாக அவனை அறிந் தெய்திப் பின் கலக்கம் பல படையாது, என்றும் வைகி, விட்டுநீங்காது



நிலைபெற்று வாழ்கை என ஆசிரியர் இவ்வுரை முகத்து மாணாக்கனுக்கு அவனை எளிதினுணர்ந்தெய்தற்குரிய வழி இதுவே, பிறிதில்லை, என அறிதற்கு உபாயங் கூறியவாறாயிற்று.

அற்றேல், அவ்வுயிர் கீழ், மேல், ஊர், உருவம், குணம், தொழில், வருதல், போதல், பின், முன், குறி, சார்தல் முதலிய ஏகதேச இயல் புடைமையின், ஒன்றறியின் பிறிதொன்றறிய மாட்டாமையும், ஒன்று செய்யின், வேறொன்று செய்ய மாட்டாமையும், முதலியன உடைத் தாதல் தரும் அவ்வுயிர் போலாது, முற்றறிவு முற்றுந்தொழில், உடைய இறைவற்கு அவ்வியல்புகளுள் யாது மின்மையின் அவன் அறிதல், அறிவித்தல், செய்தல், செய்வித்தல், ஈதல் ஏற்றல் முதலியனவாக ஆண்டாண்டுப் படுவன அவை எவை, அவை யாவையும் ஆண்டாண்டும் புடைபெயர்ந்து, ஆக்கி நோக்காதே நோக்கன் முதலியன செய்யவல்லும் ஆகலான், அவன் புறம் அகங்களுள் யாண்டியாண்டு யாது யாது நிகழும், அதனை அதனை யெல்லாம் ஆண்டாண்டைக் கேற்ப வேறு வேறு வடிவுற்றுங் கோடல் வேண்டா என்னும் கடாவை யொழித்து மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த எது.

"மலமறுக்கும் அவ்வாறு அதுவாகலான்"

எனவே கலங்காமைக் கேதுவாய பதி முதலிய முப்பொருளையும், அறியும் அறிவு அறை போமாறு மறைத்து, கலங்கற்கேதுவாய புறப் பொருளையே பொருளெனக் காட்டி, உடல் உண்டி வினைகட்கு ஏது வாய் நின்ற அம்மாயை வினை இரண்டனையும், இயையுமாறு செய்து இவ்வாறெல்லாம் பொல்லாங்கு செய்த அவ்வாணவ மல சத்தி, பல வேறாய்ப் பெருவலி படைத்துடையனவாகலான், அவை தாம் அறியாத சிறுபகார்க்கு மேனூற் பொருள்களை அறிவுறுக்கப்புகின், அவர் அதனை அறிய மாட்டார் ஆகலால் படிமுறையானே கீழ்நின்றே சிறிது சிறி தாய் உணர்த்த உணர்ந்து அவர்பின் மேனூற் பொருளு மறியுமாறு போல மலத்தான் அறிவிறந்து அறியாமையாய்க் கிடந்த அவ்வுயிர்க்கு அறிவொன்றானே அறியும் தன்னியல்பு இதுவென முதற்கண் அறிவுறப் பின் அறியமாட்டாது. கீழ்நின்றே படிவழிபற்றிப் பந்தமும் வீடும் சிறிது சிறிதாய் அறிவுறப்பின் அவ்வாற்றானே சென்று சென்று ஏறி ஆண்டே முப்பொருள் இயல்பு முழுதொருங்குணரும். ஆகலான் அதற்கேற்ப இறைவன் தானும், தன்னியல்பினின்றாங்கே பொது இயல்புற்று, அப்பெற்றித்தாய அம்மூவடிவுகளான், அம்மல வலியைச் சிறிது சிறிதாக தார்த்து தார்த்து, முடிவின்கண் முற்றத்தார்த்து உயிரை

## ஷை னுடுத்தி.

அம்மலத்தினின்று நீக்கித் தன்கண் ஈர்த்து இயைத்துக் கலங்காது வைக்கும். ("மலவலியைத்தயங்கு நின்னுருவ மூன்றினுன் மாற்றித் தாணிழல் தந்து காத்தனையே" என்றதும் அது). இங்ஙனமாய இறைவன் பொது நிலை இருந்தவாற்றான் அவ்வுயிரின் பொது நிலையொழித்தற்கு ஒருதலையான் வேண்டப் படுதலின் இழுக்கின்றென மேற்கோளைச் சாதித்த வாறாயிற்று.

அற்றேல், இறைவன் உருவுடையனெனவே கண்டாகாரமாதல், ஏகதேச மாதலும், பெறப்படும். படவே, அசத்தும், அசித்தும், ஆகி துன்புற்றுத் தொடக்குறுதலு முடைத்தாம், ஆகவே, அகண்டாகார நித்த வியாபக சச்சி தானந்தப் பிழம்பு என்னும், இறைவனியல்புக்கு இழுக்காதன் மேலும், அது பற்றி விகாரமும் படுமாகலான், அவன் அவிகாரி என்னும் சுருதியோடு முரணி வழுவாமால் என்னும் கடாவை ஒழித்து ஏதுவை வலியுறுத்தற்கு வடுத்துக்காட்டும் உதாரணம்.

"இன்றெழுவாய் பந்தமிறு வாயுடன், வீடும்
இன்றளவை யேலிதுவா மன்றெனலு—மின்றென்
வழிப்பா லவர்க்கருளு மாண்புமது வென்றார்
கழிப்பாலை யானியல்பு காண்."

நான்காவது பகுதியினுள் "என்னையுமுனையுந் தன்னையுங் காட்டா—திந்திய விடயமே காட்டியியல் வினை மாயை யிரண்டையும் எனையும் இணங்கிய வாணவ மலத்தின் றன்னுறுவழி நின் சத்தியை நடாத்தித் தருமதன் சத்திகளெல்லாம் தயங்கு நின்னுருவ மூன்றினுன் மாற்றித் தாணிழல்தந்து காத்த"னுதற் பொருட்டே தாமரையினர் கழித்திருப்பாலைய ராயினர் எனச் சாதித்தவழி அற்றேல் இங்ஙனம் அவர்தாமே எளிதின் வந்து எம்மை ஈர்த்தருளுவர் ஆகலின் அதன் பொருட்டு நாம் செய்யக் கடவன வேறில்லைப் போலும் என மாணாக்கனுக்கு நிகழும் கடாவை யொழித்தற் கெழுந்தது 5-வது பகுதி.

---



உ

## திருக்கழிப்பாலை.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

### திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

செற்றதோர் மனமொழிந்து சிந்தை செய்து
சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தை யுள்ளால்
உற்றதோர் நோய்களைந்திவ் வுலக மெல்லாங்
காட்டுவா னுத்தமன்றா னோதா தெல்லாங்
கற்றதோர் நூலினன் களிறு செற்றான்
கழிப்பாலை மேய கபா லப்பனார்
மற்றிதோர் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே.

திருச்சிற்றம்பலம்.

இதுவும்

ஷை ஸ்ரீ செப்பறைச்சுவாமிகள் விரிவுரை.

(இ-ள்) நிலையுதலும் சுதந்தரமும் உடைத்தெனக் கொண்டு இவ்வுலகியல்பையே விரும்பி அதனாற்றம்மை விரும்பா தொழிந்த அம்மனிசனது அங்ஙனமாய அம்மயக்க வியல்பைக் கைவிட்டு, சிவபரம் பொருளையே பற்றி நின்று தாமே தொழிற்பட மாட்டாத இவ்வுலகைத் தொழிற்படுத்தும் வினைமுதல் சிவபரம் பொருளே. ஆகலின், இவ்வுலகம் சுதந்தர முடைத்தன்றென நூலானும், பொருந்து மாற்றானும் பலகாலும் பலர்பாலும் ஆராய்ந்து சிந்தித்துத்தெளிந்து மேற்பட்டுடையராயினர் தாம் மேலெய்தி நின்ற காரிய காரணங்களாய இருவேறு மலங்களையும் அறக்களைதல் செய்து, அதனானே பதி முதலிய முப்பொருளும் ஒன்றிஞென்று வியாபக வியாப்பியமாய் நிற்கும் முறை இதுவென அவ்வறிவின்கண் வைத்து அவனே இனிதுணர்த்தி யருளுவான். அற்றேல், அவனதனைக் காட்டுதற்குரிய இயைபென்னையெனின், பொருளியல் பெல்லாம் செயற்கையானன்றி இயற்கையானுணர்ந்தாக்கிய ஒன்றாய முதனூல் உடையனாகலானும், சிட்டபரிபாலனத்தின் பொருட்டு களிறாய துட்ட நிக்கிரகஞ் செய்தான் ஆகலானும், அற்றேல் அவ்வியல்புடையனாய அவன் யாவன் கொல்லோவெனின்? கழிப்பாலை யென்னும் திருத்தலத்தின்கண்ணதாய திருத்தளியுள் எழுந்தருளி வைகும் கபாலக் கடவுளேயாம். அற்றேல்,

## செற்றதோர்.

இதனாற் போந்த பயன் என்னை? எனின், துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் ஆம். அற்றேல் அப்பயப்பேறும் இவ்வுலகப் பயன்போல் இவ்வுடலொடு பட்டதே போலும் எனின், அது மயக்க அறிவின் நிகழ்வதொன்றாகலானும், இந்நிலை மயக்கத்திற் கேதுவாய தாகலானும், இத்தன்மைத்தாய இந்நிலையது ஒழிவின் பின்னர்த்தேயாம் என இவ்வுறுதி மொழியைக் கைக்கொண்டுணர்வாயாக. அற்றேல், அப்பேறு பெறுதற்குரிய உபாயமாவது, சிந்தைசெய்து எழுதலாய அதுவே அமையுமோ? வழிவேறு முளதோ? எனின், அஃது அதனை வாயிலாகப் பற்றி நின்று செய்யும் அருள் வழியேயாம். அங்ஙனமாய அதனை எமக்குச் செய்துவைத்தருளும் அக்கடப்பாடுடைய அக்கடவுட்கு நாமும் அவ்வழிப்படும் கடப்பாடுடையராகலான், உலகீர் நாம் இனி அவ்வழியே போதும்: போய்ச் செற்றதோர் மனம் முதலிய பிறவழிச் சேறுமல்லோம். (எ-ம்.)

ஈண்டுச் செறுதல் = வெறுப்பு என்னும் துணையாய் நின்றது. வெறுப்புக் கூறவே இனம் பற்றிப் பஞ்ச க்லேசங்களில் ஏனையவும் கொள்ளப்படும். ஓர்மனம் = நிகழும் பஃறொழிலின் வைத்து இத்தொழிலொன்றுடைய மனம் என்றவாறு. மூர்த்தி - கடவுள்.

மூர்த்தி சிவமே என்று சிந்தை செய்து எழுவார் உற்றதோர் நோய்களைந்து உத்தமன் இவ்வுலகமெல்லாம் சிந்தையுள்ளால் காட்டுவான் எல்லாம் ஓதாது தான் கற்ற நூலினன் எனக் கொண்டு கூட்டுக.

இவ்வுலகம் இயற்கை யன்றிச் செயற்கையாகலின், அஃது ஒரு மூர்த்தியின்றி யமையாது. அம்மூர்த்தியும் சிவமே. பிறர் அல்லர். என இயைபின்மை நீக்குதற்கும், பிறிதினியைபு நீக்குதற்கும், பொதுவாய் நின்ற பிரிநிலை ஏகாரமும், உத்தமனே என்னும் தேற்றேகாரமும், விகாரத்தாற்றொக்கன.

சிந்தைசெய்து என்பது, ஒரு சொல். ஈண்டு, எழுதல் என்றது - மன எழுச்சி விசேடத்தை. சிந்தை - அறிவு. ஆல் - பகுதிப் பொருள் விகுதி. ஓர் நோய் - மூலமலம். மூலமலங்களைதல் கூறவே அவாந்தர மலங்களைதல் கூறவேண்டாவாயிற்று. களைதல் என்றதற்கேற்பப் பத்திப்பயிர் என்பது வருவித்துரைக்கப் பட்டது.

சிந்தை செய்தலால், களைதலால் என எடுத்துக்கொண்டுரைக்க. இவ்வுலகம் மேல் மூர்த்தி உடைத்தெனக் குறிப்பாற் சாதித்துப்



போந்த உலகம் என்றவாறு. உலகமும் எல்லாமும் எனப் பிரித்தெண்ணுக. உலகம் - பாசம். ஒழிந்த பசு, பதிகள் இரண்டாகலின் எல்லாம் என்றார். முப்பொருளையுங் காட்டுதலாவது, அவற்றுள் முதற்பொருள் உள்ளும் புறம்புமாய் அவ்வச் சிலேடிக வியாபகமாய் நிற்றலை. அறிவார் அறிவினுள் வைத்து அவற்றது சிறப்பியல்பு இனிது விளங்குமாறு விளக்குதல்.

உத்தமன் என்றது சுட்டுப் பெயர்மாத்திரையாய் நின்றது. சிவம் - அவன் எனப்பால் மயங்கிற்று. எல்லாம் ஓதாது தான் கற்ற நூலாவது, இவ்வுலகர்போல் பிறர்பாற் கேளாதே இயற்கையுணர்வான் உள்ளவாறுணர்ந்து ஆக்கும் நூலாகிய வேதாகமம். கற்றல் - செய்தல். "கேளாதே யெல்லாங் கேட்டான்" என்பதும் அது. முதனூல் பல வன்மையின் ஓர் நூல் என்றார். எனவே வேதாகமம் இரண்டும் சொல்லும் பொருளும்போல் ஒரு பொருளே நுதலி வருவன என்றவாறாயிற்று.

எழுவார் நோய் களைதல் களிறு செற்றதின் வைத்துத் தெளியப் படும் என்பது தேற்ற, "களிறு செற்றவன்" எனவும், உலகமெல்லாங் காட்டுதல், ஓதாது எல்லாம் கற்றதோர் நூலினன் ஆகல் பற்றித் தெளியப்படும் என்பது தேற்ற, "ஓதாதெல்லாங் கற்றதோர் நூலினன்" எனவும் வைத்து உபதேசித்தருளினார். எதிர் நிரல் நிறை பிறவுமன்ன.

இதனானே, உலகியல்பைச் சிந்தியாது சிவனடியே சிந்திப்பார்க்குக் கட்டறுதலும், அங்ஙனமன்றி மாறிச் சிந்திப்பார்க்கு அஃது அருமையுங் கூறப்பட்டன.

விரிவுரை முற்றிற்று.

---

### இவ்விரு பாடல்களுக்கும் விரிவுரை செய்த

## ஸ்ரீ செப்பறைச் சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்.

யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். திருநெல்வேலிச் செப்பறை மடத்தில் பலகாலம் வாழ்ந்தவர். வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லவர், தம் இளமையில் கன்னியாகுமரி முதல் காசி வரைத் தலயாத்திரை செய்து தஞ்சை அன்னப்பன் பேட்டை ஸ்ரீ தாயுமான சுவாமிகள் ஆதீனத்துக்குச் சென்று ஸ்ரீ-ல-ஸ்ரீ சபாபதித்தாயுமான பண்டாரச் சன்னதி அவர்களிடம் துறவுக் காஷாயம், மந்திரோபதேசம், சிவபூஜை முதலிய பெற்றவர். சிதம்பரம் வந்து சிவஞானத்

திருத்தளி என்னும் பெயரால் ஒரு திருமடம் கட்டி அதிலிருந்து பலர்க்குச் சைவசித்தாந்த பாடம் சொன்னவர். இவர் கல்விப் புலமை கண்டு சிதம்பரத்தில் தேவாரபாடசாலை ஸ்தாபகர் பழநியப்ப முதலியார் அவர்கள் ஷை சுவாமிகளுக்கு பாடசாலையிலிருந்து இரு வேளை உணவு அளித்துவந்தார்கள். அது பெற்று வாழும் சுவாமிகளிடம் ஷை தேவார பாடசாலை ஆசிரியர் நடராஜ ஓதுவாமூர்த்திகள் சென்று பல தேவாரங்களுக்கு உரை எழுத வேண்டுமென்று விண்ணப்பிக்க அவ்வாறே சுமார் 51 அரிய பாடல்களுக்கு விரிவுரை எழுதித்தந்தார்கள் அவற்றுள் திருக்கழிப்பாலைத் தேவாரப் பாடல்கள் இரண்டு அவை உலகிற்குப் பயன்படும் பொருட்டு இவ்வுரையும், இப்புராணத்துடன் சேர்க்கும்படி ஷை தேவஸ்தான அதிபர் ஸ்ரீ சின்னையா முதலியார் அவர்கள் விரும்பிய வண்ணம் பதிப்பிக்கப்பெற்றது. அன்பர்கள் படித்துப் பயனெய்துவார்களாக. செப்பறையில் பலகாலம் வாழ்ந்தமையால் செப்பறைச்சுவாமி எனக் காரணப் பெயர் வழங்குவதாயிற்று.

---

க்ஷேத்திர வெண்பா.

கழிப்பாலை யாண்டகவின் மைந்தனைவன் றொண்டர்
கழிப்பாலை யாண்டகவின் ஏற்றாய்—பழிப்பாகும்
வெங்கரா வாயின்கண் மீண்டருள வேயருளும்
சங்கரா வாயினரு டா.

(இது பாடியவர் பெயர் விளங்கவில்லை.)

இ—ள்—கழிப்பாலை - திருக்கழிப்பாலை யென்னும் பதியை, ஆண்ட = தலமாகக் கொண்டருளிய, கவின் ஏற்றாய் = அழகிய விடைக் கொடியையுடையவரே, வன் தொண்டர் = சுந்தரமூர்த்தி நாயனார், கழி = உயிர் நீங்கும், பால் = தீய ஊழினையுடைய, ஐ ஆண்டு அகவின் = ஐந்து ஆண்டாகிய ஆயுள் காலத்தையுடைய, மைந்தனை = பிராமணகுல புத்திரனை, பழிப்பு ஆகும் = எல்லாராலும் பழிக்கப் படுவதாகிய, வெங்கரா வாயின் கண் = கொடிய முதலையின் வாயினின்றும், மீண்டருள = மீட்டருளுமாறு, அருள் = திருவருள் புரிந்த, சங்கரா = சங்கார கர்த்தாவே, வாய் = வாய்ப் புடைத்தாகிய, இன் அருள் = (நினது) இனிய அருளை, தா = அடியேனுக்கு வழங்குவீர் ஆக. என்பதாம்.

(பண்டிதர்—அ. க. உரை.)

---



## சிதம்பரம் S. நடராஜஓதுவாமூர்த்திகள் ஆராய்ச்சிக் குறிப்பு.

### திருக்கழிப்பாலை

### (ஞான.) பண் - இந்தளம்.

(1) திரு - அழகு. அண்டமொழி. கழி - கடற்கரை. பாலை - பாலை மரம், தலவிருக்ஷம். (2) தூவளமாது = மேலான அழகுடைய பெண். உம் + இணையாக = உம்முடைய, உடலோடு இசைந்ததாக. தன்னை யுகந்ததேயன்றி மாதையும், உகந்தவனே என எச்சவும்மையாகவும் + சிறப்பும்மையாகவும். (3) சடையின் முடி - இன் சாரியை. முற்று = சர்வாங்கமும். (4) வெளி மன்னிய தூவொளியாய் = புற வடியுடையாய். ஒளி = வடிவம். அளியாய் = இரக்ஷிப்பாயாக அல்லது கிருபையுள்ளவனே. (5) நாகமதைத்து நடம் நண்ணினவனே. நண்ணி உடன் = வந்தபொழுதே. (6) வாய்மையினாய் = உண்மைப் பொருளாயுள்ளவனே. உலகிற் பெரியாய், இறையார் = தலைமை வாய்ந்த. (7) இன் - சாரியை. அதிநம்வினை = துன்பத்துக் கேதுவாகிய வினை. எதிர்கொண் மொழி = விளித்துப் பிரார்த்திக்கும் மொழி. (8) எரி ஆர் = அக்கினிதேவன் பொருந்திய. விரிந்து வீழ்ந்த சடை. கரிகாட்டிலாடினவனே. உரித்தாகி. (10) தவர்கொண்ட தொழில் = தவிர்ந்த (விலக்கப்பட்ட) தொழில். (11) கெழியார் = நண்புடையரானவர்.

### (ஞான.) பண் - கௌசிகம்.

(1) அந்தமும் அளவும் அறியாததோர் கழிப்பாலையார் அவர் மேவிய சாந்தம் சந்தமால் = விபூதி மிக்க மயக்கத்துக் கேதுவாம். (பார்த்த பத்தர்களுக்கு) மால் சந்தம் = மயக்க குணத்துக்கேது. எனினுமாம். "சேலுங்கயலுந் திளைக்குங்கண்ணார் இளங்கொங்கையிற் செங்குங்குமம் போலும், பொடியணி மார்பிலங்கும்; என்று புண்ணியர் போற்றிசைப்ப" என்பதனாலறிக. (திருப்பல்லாண்டு). (2) நலம் மடமான் நோக்குடையாளொடு வரும் கழிப்பாலையார் தலைவனாகும். (எங்க) கான் இலங்க = காடு விளங்கும்படி. (3) ஏற்றினர.......... ஆமையர் ஆகலான், யாரால் அறிய முடியும். (4) நலம் கவரும் = அங்குள்ள நலங்களைக் கவருகின்ற, அண்ணலவன் கடவுளல்லனோ? (5) எரின் + ஆர் + உலகம் = விண்ணுலகம். கார் = மேகம். சீரினர் = செல்வர். (6) ஊர் இடு பலி வெண்டலையிற் கொள்வனர். (7) நெற்றியோடுற்ற பிறையும், முக்கண்ணு முடையார். (8) துலங்க - துளங்க. (ல ளவேற்றுமை) = நடுங்க. (9) ஆட்சியால் = காணுவேனென்னும் ஆண்மையோடு: ஆய் = தேடி. நாட்சி = நாட்சியுடையராய். மாட்சி

யால் = தொழு முறையால். (10) என்னே = நண்பு என்னபயன்? கேண்மையனே = உறவானவனே?

### (நாவு.) பண் - காந்தாரம்.

(1) வானவர்க்குந் தானவன் = வானவர்க்கும் அரியவன். தானவம் = மிருது, மழுங்கல், நொய்மை - சூட்சுமம் - அருமை. சினம் - கோபம், சிவப்பு. அன்ன பவள மேகலையை அணிந்த எனது பெண், (எழுவாய்) கண்டாளோ? எ - க - அப்பாலைக்கப்பாலான் = மாயையைக் கடந்தவன். (2) உண்டு = உள்ளதாய், கண்டல் என்பது கண்டு என மருவியது. (3) மறங்கிளர் வேற்கண்ணாள் = எழுவாய். (4) வெண்மழுவேந்தினவன். பெரும்பாலன் = காளை. பானல் = குவளை. (5) விழி + உலாம் = விழித்தல் பொருந்திய. வரு சுழி உலாம் = ஓடிவரும் சுழி பொருந்திய. கழி உலாய் என்பது உலாம் என மருவு. (6) கண ஆர் - கண்கவரத்தக்க. (7) மூழ்கும் = மறையும். சதுர் = மேன்மை. (8) பார் ஓத = உலகர் ஓத. அவன்மேனி பவள நிறம். ஓர் ஓதம் = ஓதம் = ஓதல். ஓத் = வேதம். (9) கோதை = மாலை எனினும் அம்மை எனினுமாம். உலாய்ச் சூழ்ந்த. (10) மடல் = மடுத்தலின் மரூஉ. மடுத்தல் நிறைதலையுடைய - பரவிய. கடல்கரவி = தொடர்பு. கடல் கண்ணைக்கொண்ட கழிப்பாலை.

### (நாவு.) திருக்குறுந்தொகை.

(1) எத்தி நிறைந்திலன் = எத்தி முடிக்கவில்லை. அறியாப்பெண், ஆதலால், அண்ணலே, அறிந்து ரக்ஷிக்கவேண்டும். (2) வானவர் மருந்தைப் பெற்றுய்ய. (மருந்து - அமுதம்) சிந்தையுள் வைத்து = (தாயானவள்) தன் சிந்தையுள்வைத்து. (3) மழலை தான் வருதலால் சொல்லைத் தெளிவாகச் சொல்லத் தெரியவில்லை. குழலின் சேர் மொழியாகிய எனது பெண். (6) உடனே = ஒக்க. (7) ஐயனே = தலைவரே. விதியே = விதியாயிருப்பவரே. (8) அமுதாயபரத்தினை = பராமிர்தமானவனை (மோட்சம்). (10) துணையெனலாகும் ஆதலால் அவன் என் செயான்? (காப்பாற்றுவான் என்று தாய் துணிவு).

### (நாவு.) திருநேரிசை.

(1) சேர்ப்பன் = நெய்த நிலத்தலைவன். ஞானத்தை - ஷை நூலை. (2) துறக்கம் வேண்டியோன் "சோதிட் டோமத்தான்வேட்க" பயில = பாவிக்க. (3) வாமன் = வாமனாவதாரஞ் செய்த விஷ்ணு.



ஆன் + மன் + ஐ = பஞ்சகௌவியம். (4) அருளும் அந்தணர்க்கு = அருளுடைமைக் குரிய அந்தணர்க்கு. நிவண்ணராதி = நிவண்ணராதலால். (5) இருள் = பகைவர். ஆரிருள் அண்டம் = அண்டத்தில் ஆர் இருளை வைத்தார். கார் இருள் = கரியவிடம். "அண்டமார் இருளூடு" குறுந்தொகையை உணர்க. (6) சிந்தை உள்தங்கு = சிந்தையுள்ளே தங்குதலை விண்தங்கு வேள்வி = விண்போய்த் தங்குதற் கேதுவாகிய. நள் + தங்கு + நடம் = விராட் புருடனுடைய இருதயத்தில் (சிதம்பரத்தில்) நடனம். நான் + (அப் + உ) = சரியை. நான்கவில = நான் தோத்திரம் பண்ணும்படி வைத்தார். (7) ஊனப்பேர் = இழிவு. ஞானப்பேர் = சாஸ்திரம். நடு = நீதி. கானப்பேர் = ஓர் தலம். வானப்பேராறு = கங்கை. (8) அரும்பினும் கொங்கு = அரும்பினும் வாசனை. கூற்றங்கள் = கொடிய சத்துருக்கள். (9) எதிர்முகமின்றி = எதிரில்லாத - ஒப்பில்லாத. பிதிர் முகன் = விகார முகனாகிய. பிதிர = சிதற. கதிர் முகம் = சந்திரன் - ஒளிக்கு இடமானவன். (10) மாலினள் = ஊடல் கொண்டவள். நூலினன் = பூணூலையுடையவன்.

### (நாவு.) திருவிருத்தம்.

(1) மடல் புல்கு = மடலைத்தழுவுகின்ற. பைதற்பிறை = இளம் பிறை. உடன் = ஒன்றாக. எய்தப் பெறில் = பிறையானது பாம்பின் முன் எய்தப் பெற்றால் பாம்பு இரகொது. (2) மா மணி = மாணிக்கம். வரைபொருதிரை = மலைபோன்ற அலை. (3) காட்பட்டு = நான் உண்டாக - செநோனாக. கோட்பட்டு = கொள்ளப்பட்டு, முந்துறவே இவ்வகலிடத்தே வல்லமாய் ஆட்பட்டொழிந்தவன்றே ஆற்றலுடையோமாய் அடிமைப்பட்டு விட்டோமல்லவா? அன்றே ஆட்பட்டு ஒழிந்த = அப்பொழுதே (இளமையிலேயே) ஆட்பட்டு முடிந்தது எனினுமாம்.

---

## திருக்கழிப்பாலைத் தலபுராண ஆசிரியர் வரலாற்றுச் சுருக்கம்

"தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்." (திருக்குறள்)

இந்நூலின் ஆசிரியர் சிவப்பிரகாச பண்டிதர்; ஊர் யாழ்ப்பாணத் திலுள்ள நீர்வேலி; வேளாளர் குலம்; சமயம் சைவம்; தந்தை இருமொழிகளையுங் கரைகண்டுணர்ந்து, சைவசித்தாந்த பாநுவாய் விளங்கிய சிவ. சங்கர பண்டிதர்; உடன் பிறந்தார் சிவகுருநாத பிள்ளை; தம் தந்தையாரிடத்தேயே கல்விகற்றவர்; அவரைப் போன்றே செந்

தமிழினும், சமஸ்கிருதத்தினும் பாரங்கதர். ("சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" புறம்) செய்யுள், உரை, மொழிபெயர்ப்பு, உரைநடைகளிலும் திறமை பெற்றவர்; மாணாக்கர்பலருக்கு இருமொழிகளையும் அறிவுறுத்தியவர்; தமதூரில் பாடசாலையொன்றை நிறுவி செவ்வனே நடாத்தி வந்தவர்; சிவபூசா துரந்தரர்.

இவர், தமது வாழ்நாளின் பிற்பகுதியில் இற்றைக்கு 40-யாண்டின் முன்னர் இத்தில்லையம்பதிக்கு வந்து ஞானப்பிரகாசக் குளக்கரையில் உள்ள வடக்கு மடத்தில், சில திங்கள் தங்கியிருந்து சுவாமிதரிசனஞ் செய்து கொண்டிருந்தார். அவ்வமையம் இச் சிவதலத்தின் தேவகோட்டைப் பரம்பரைத் தருமகர்த்தரும், பெருநிலக்கிழாரும், குருலிங்கசங்கமபத்தியிற் சிறந்த சிவஞானச் செல்வரும் ஆகிய சி. பழநியப்ப முதலியாரவர்கள் விருப்பத்தின்படி வடமொழிப் புராணத்தை மொழிபெயர்த்து இயற்றப் பெற்றதே, இப்புராணமாகும். அதன் பின்னர் பண்டிதரவர்கள் இங்குமார்கழித் திருவாதிரைத் திருநாள் தரிசித்துக் கொண்டு திருமறைக்காட்டிற்குச் சென்று சிவதரிசனஞ் செய்து கொண்டு சிலநாளிருந்து அத்தலத்திலேயே சிவபதமெய்தினர்.

சிவ. சங்கரபண்டிதரியற்றிய நூல் முதலியன:—

(1) சைவப்பிரகாசனம். (2) சிவதூஷண கண்டனம். (3) கிறிஸ்தமத கண்டனம். (4) அநுட்டான விதி. (5) சிவபூசை யந்தாதியுரை. (6) அகநிர்ணயத் தமிழுரை. (7) சிராத்த விதி. (8) சமஸ்கிருத பால பாடம் I, II. (9) சத்தசங்கிரகம் முதலியன

சிவப்பிரகாச பண்டிதர் இயற்றிய நூல் முதலியன:—


(1) பாலாமிர்தம். (2) பாலபாடம். (3) சிவானந்தலகரி தமிழுரை. (4) திருச்செந்தூர்ப் புராணவுரை. (5) இருட்டினன் றுச்சருக்கவுரை. (6) திருக்கழிப்பாலைப் புராணம். (7) வடமொழிச் சிவஞானபோத சிவாக்ரபாஷியத் தமிழ்மொழி பெயர்ப்பு (சூ. 1) முதலியன.

"தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது."
"மகன்றந்தைக் காற்றும் உதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" (தமிழ்மறை)


என்னும் பொய்யாமொழிக்கு மெய்யாயிலங்கிய இவ்விரு பெரும் புலவர் சிரமணிகள் இயற்றிய நூல்கள் மேலும் பலவாம். அவையாவும் வெளியான் செந்தமிழ்ச்சைவ வைதிகவுலகிற்குப் பெரிதும் பயன்றரும்.

(சிதம்பரம், வித்வான் - க. சிவப்பிரகாச தேசிகர் தொகுத்துத்தந்தது.)





சுவாமி அம்மன் கோயில் புறத்தோற்றம்.



சுவாமி கோயிலின் பின்புறத் தோற்றம்.
அண்ணாமலையாரும் சண்டேஸ்வரர் கோயிலும்
(பழைய கோயில் சிற்பவேலைகளைக் காணலாம்.)

உ

சிவமயம்.

## இந்திரகீலபுரப் பெயர்த்

# திருக்கழிப்பாலைப் புராணம்.

### காப்பு.

புவனி போற்றிடப் பொற்பொது வுற்றருள்
சிவனு மம்மையுஞ் சேருபு சேர்பெறும்
உவமை தீர்கய வொண்முக வைங்கரன்
கவலை தீர்தரக் காத்தருள் செய்கவே.

திங்களங் கலைநதி திகழுஞ் செஞ்சடைச்
சங்கரன் மலைமக டனயன் யாவரும்
மங்கல வினைபின்முன் வழுத்த வேயருள்
ஐங்கரன் மலரடி யகத்திற் கொள்ளுவாம்.

## கடவுள் வாழ்த்து.

### சிவபெருமான்.

திருவள ருலகம் யாவும் செவ்விதின் வழிபட் டுய்ய
உருவளர் குறிகு ணங்க ளுள்ளவன் போல நின்று
கருவள ருயிர்கண் மீது கருணைசெய் சிவபி ரானைக்
குருவள ருபதே சத்தின் கொள்கையா லகங்கொள் வாமே. (1)

### நடராஜா.

(வேறு)

கோடிபல செங்கதிரி னீடொளியர் வலவடிமேற் குலவ வைத்த
சேடிடகற் பாதத்தர் கூடவழ லொருகையொரு திதக்கை தூங்கப்
பீடியல பயமொருகை துடியொருகை யுறவிடப்பாற் பிரியா தமமை
நாடியுறக் கனகசபை யாடியரு ணடராசர் நற்றாள் போற்றி.

## சிவகாமசுந்தரி.

(வேறு)

மதிநதியு மணிந்துகுய வரியுரியே புனைந்துபொலன் மன்றி லாடும்
அதிபதியா னந்தமய நடனமதைப் பார்த்திடப்பா லருளி னோடு
பொதிமதுவிற் கல்லாரஞ் செபவடமே சுகங்கடியும் பொருந்தக் கைகண்
மதிமகிழ்வி னமருமுயர் சிவகாம சுந்தரிதாண் மலர்கள் போற்றி. (5)

## பால்வண்ணநாதர்.

கன்னலெனச் செந்நெல்வளர் கழனிமலர்ப்
பொழினிலவு கழிப்பா லைப்பேர்
முன்னியவிந் திரகில நன்னகரத்
துயர்கோயின் முளைத்து வாழும்
பன்னருஞ்சீர் முன்னவனைத் தனிக்கபில
முனிக்கருள்செய் பால்வண் ணப்பேர்
மன்னியநா தனையடிகள் சென்னியுற
வினிதிறைஞ்சி வழுத்து வாமே. (4)

## வேதநாயகி.

(வேறு)

பன்னிய திருக்கழிப் பாலை மேவிய
கன்னியா யுயிரெலாங் கருதிப் பெற்றருண்
மின்னிய விடையுடை வேத நாயகி
மன்னிய மலரடி வணங்கி வாழ்த்துவாம். (5)

## விநாயகக் கடவுள்.

திங்களை யிலைந்து பொங்கரா வணிந்து திருகட மருவிடா தெற்றி
அங்கணு மமைந்து சங்கரன் றனே யாமெனு மொற்றுமை தெரித்தும்
அங்குச பாசம் வெங்கரி வதன மமைதலின் வேறுபோல் விளங்கும்
எங்கடம் பெருமா னைங்கரக் கடவு ளிருபதஞ் சிரமிசைப்
[புனைவாம். (6)

## சுப்பிரமணியக்கடவுள்.

பரமனார் நெற்றி விழியினிற் றோன்றிப் பரவெரி யரிதலைக் கிடந்து
வரநதி தவழ்ந்து சரவணம் வளர்ந்து மலைமக டிருமுலை பருகித்
திரமுறு வேல்கொண் டவுணரைக் களைந்து தேவர்விண் மேவர
[வருள்செய்
பிரமதெய் வானை வள்ளிநா தலனும் பிள்ளையார் மலரடி போற்றி. (7)





## தக்ஷிணாமூர்த்தி.

திருநீறு திருமேனி திகழத்திங்க டிருமுடியின்
மருவுவுரி யரையின் மின்னத்
கருநீறு தருமென்மை வீணைபுத்த கத்தொடுசின்
முத்திரையக்க மாலை கைகள்
அருணீர்மை யுறயோக பட்டஞ்சார வானிழலின்
மோனமுனி வர்க்கு ஞானம்
தருநீர்மெய்க் குருவாகி யாளுமெந்தை
தக்ஷிணா மூர்த்திபிரான் மலர்த்தாள் போற்றி. (8)

## திருஞானசம்பந்தர்.

அரனிடத்தா டிருமுலைப்பா லயின்ற வாற்று
லரியதமிழ் தெரியநனி புகன்ற வாற்றாற்
பரரிடத்தா மதயகற்றி யருள்செய் யாற்றாற்
பன்னுமண முன்னுமறைப் படியே செய்தும்
வரனுறத்தான் சிறுநலத்தை விரும்பா வாற்றான்
மாறிலரு ளாறுமுகப் பெருமான் றனே
திரனுறத்தன் னிகரெனச்சொல் பெருமை வாய்ந்த
திருஞான சம்பந்தன் றிருத்தாள் போற்றி. (9)

## திருநாவுக்கரசர்.

அருகமதச் சிறுமையினை யெவர்க்குங் காட்டி
யரியசைவம் பெரிதுவிளக் குறவே போலும்
அருகமதத் தொருசிலநா ளமர்ந்து சூலை
யடைந்ததென மிடைந்ததுயர் காட்டி நீங்கி
அருகமதத் தவர்தனக்குப் புரிந்த தீமை
யனைத்துமொவ்வோர் திருப்பதிகத் தகற்றி வென்றே
அருகமதத் தரசனையுஞ் சைவ னாக்கி
யருள்புரிநா வுக்கரசன் றிருத்தாள் போற்றி. (10)

## சுந்தரமூர்த்தி.

எவனரனாற் றடுத்தினிதாட் கொள்ளப் பட்டே
யேறுதலந் தோறுமருட் பாத்து தித்தான்
எவனரனெற் குவையுதவப் பாடிப் பெற்றான்
இரவவனைப் பரவையிடைத் தூது விட்டான்
எவனானல் லடியாவ ரடியர் தம்மை
யினிதுதுதித் தவர்பெருமை விளக்கி விட்டான்
அவனிபுகழ் தவமுயர்சுந் தரமூர்த் திப்பே
ரப்பெருமா னெப்பின்மல ரடிகள் போற்றி. (11)

## மாணிக்கவாசகர்.

பெருந்துறையிற் குருந்தநிழல் பரிந்த மர்ந்து
பேணுசிவ ஞானமுப தேசித் தன்பு
பொருந்தியதன் பெருங்குருவே பின்பு தன்பாற்
புத்தகமு மிலேகினியும் பரித்து வந்தே
அருந்திருவா சகங்கோவை கேட்டுத் தீட்ட
யவைபுகன்று சபைபுகுந்தங் கவன்றாள் சேர்ந்த
மருந்தனைய பெருந்தகையாஞ் சீர்மா ணிக்க
வாசகன்றா ணைசமொன்ற மனத்துள் வைப்பாம். (12)

## திருத்தொண்டர்.

கண்டியொடு வெண்டிருநீ றிலங்க மேனி
கருத்தரனற் றிருப்பதமே பொருந்தி நின்று
தொண்டினையே கொண்டிரவும் பகலு மன்பிற்
றொழுதவன் றாளழுதவிதி வழிது தித்தே
பண்டினிய தொண்டர்களாய்ச் சிறந்து வாழ்ந்து
பற்றொழிக வற்றவவ னற்றாள் பற்றிக்
கொண்டிணையி லண்டர்பெறா வீடு கூடு
குலவடியர் பலரடிநன் மலர்கள் போற்றி. (13)

## சுவகுரவர்.

சீர்பெறுஞ்சத் தியஞான தரிச னிப்பேர்
சிறந்தமுனி யம்பரையாய் மறைசை வாழ்ந்த
பார்பெறுசை வாசிரியர் தம்மு ளெந்தை
பண்டிதற்குச் சிவதீக்கை யருளிச் செய்த
பேர்பெறுமுத் துச்சாமி தேசி கன்றன்
பெரிதவன்வித் தியாகுரவ ராயாட் கொண்ட
தார்பெறுநற் சுவாமிநா தப்பேர் வாய்ந்த
சாற்றுகுரவர் தேசிகர்தாள் போற்றி போற்றி. (14)

அடியேற்குச் சிவதீக்கை புரிந்தே யாண்ட
வருணமசி வாயதே சிகர்தாள் போற்றி
அடியேனைப் பரிவினொடு பெற்றுப் பத்தோ
டைந்துவய துனறுணையும் வளர்த்து நின்றே
அடியேனுக் கடியேதந் நல்லு மெல்லு
மாரியமுஞ் செந்தமிழுஞ் சிறிதே யூட்டி
அடியேனைச் சபையேற வைத்த ரன்றா
ளங்கடைந்தசங் கரபண்டி தன்றாள் போற்றி. (15)



விரவிளைய பருவத்தே சிறியனேனை
விளக்கறிவை வளர்த்தருளென் றந்தை யான
குரவனவன் பரமனடி யடைந்தானாகக்
குலவுதமிழ் மலைவுசில தீர்த்து வைத்த
பாவுபுகழ் மருவுநசம் பந்தநாம
பண்டிதனோ டாறுமுக நாவ லப்பேர்
உருமருவு குரவனெனு மிருவர்தாளு
முலவாதென் னுளமீதி லுளவா நன்றே. (16)

(வேறு)

ஈசனார் கயிலை சேர்பரம் பரையா யிலகுகோ கழியில்வீற் றிருந்து
மாசபை யடியேன் பேசுப நியாச மகிழ்ந்துகேட் டுயர்ந்தபண் டிதப்பேர்
தேசறத் திருவாய் மலர்ந்தருள் செய்த திப்பிய சுப்பிர மணிய
தேசிகர் சன்னி தானமெய் வாக்குச் சேர்மன நேர்படப் போற்றி. (17)

## வாழ்த்து.

மாதமும் மாரி பெய்க வளம்பல விளங்க வெங்கும்
வேதமோ டாக மங்கள் மெய்பெறு சைவம் வாழ்க
நாதனார் கோயில் பூசை நாடடி யார்கள் பூசை
தீதணை யாது நாளும் சிறந்திட வுலக மெல்லாம். (18)

(கடவுள் வாழ்த்து முற்றிற்று) ஆக (20)

---

## அவையடக்கம்.

இந்திர நீல நாக மிசைதிருக் கழிப்பா லைப்பேர்
வந்திரு சிவத்த லத்தின் மான்மிய மாரி யத்தின்
முந்துநூல் வழியே யானு மொழிபெயர்த் திசைக்க வென்னல்
உந்தியைக் காத்தி னீந்த வுன்னலே போலு மன்றே. (1)

அறிவிலாச் சிறிய னேனு மறிவுறு பெரியோர் போலச்
செறிதிருக் கழிப்பா லைக்குத் திருவுயர் புராணம் பாடு
நெறியுறப் பெறுமுயற்சி நிலமி சைத்தலை மையான
குறியுறு மறிஞர்க் கெல்லாங் குறுநகை விளைக்கு மாதோ. (2)

அற்றெனுஞ் சிவஞா னப்பே ரருமுனி புரிவி ருத்தி
குற்றமென் றிற்றை ஞான்று குரைத்தொரு விருத்தி முற்றுங்
குற்றமே பற்றச் செய்யுங் குணமிலர்க் கிணையா கேனன்
மற்றத னிற்கற் றோர்தாம் வசைமொழி யிசையா ரென்பால். (3)

அல்லதா னுடைய பிள்ளை யாதியர் தமக்குப் போல
நல்லரு ணமக்குண் டென்று நமதுதே வார மென்றுஞ்
சொல்லிய புல்லர் போலத் தொடர்செருக் குடையே னல்லேன்
வெல்லரும் பழிபா வங்கள் விரவிடா வதனா லென்பால். (4)

ஆரியர் தமிழுஞ் செவ்வே யறிகிலே னறிந்து ளார்போல்
ஆரிய மொழிபெ யர்த்திங் கறிந்தவா பாட லுற்றேன்
ஆரிய மினிது வல்லா ரருந்தமிழ் வல்லா ராய
ஆரியர் பொறுத்துக் குற்ற மருளினிற் குணங்கொள் வாரே. (5)

மறைவகை யறியார் சற்றும் வடகலை படியார் முற்றும்
முறைதமி ழறிவே பெற்று முதல்வனா லதினா மற்றுப்
புறமதத் தினர்நூல் போற்றும் புந்திசே ரந்த ணாளர்
பிறரழுக் காற்றா லின்னூற் பிழைசொல விழைகு வாரே. (6)

அவையடக்கம் முற்றிற்று. ஆக. (26)

## 'திருச்சோழநாட்டுச் சிறப்பு'

அற்புதத் தொண்டர்க ளவத ரித்தநா
டற்புதத் தலம்பல வமரு நாடுவான்
சொற்புகழ் நிலைமலி சோழ நாடிதன்
பொற்புறு நலஞ்சில புகலு வாமமோ. (1)

கந்தரங் கரியவன் கரியி னிற்படர்ந்
தந்தரங் கம்பிசை யரியினம் மிசைஇ
அந்தணன் முனிமொழி யடவி யங்கடை
தந்தவக் கரிவனஞ் சார்ந்து மீண்டவே. (2)

வையமேற் பலதல மருவு சோழநா
டுய்யவே யருண்மக வுதவு மேன்மைசால்
சையமா மலைமுகில் சார்ந்த மேலவர்
மையகன் மேலவர் மாட்டுச் சார்வரே. (3)

தரைவரி பொழில்பிற தமக்கு வேண்டுநீர்
வரைவழி யெவர்க்குமே வரைவின் றீதுமென்
றிரைமுர சறைவபோ லிசைத்து மின்னினக்
குரையகன் மழைமகிழ் வொடுபொ ழிந்தவே. (4)



வாரிதி யறலினுண் மருவு நீத்திரட்
கோரமாற் றாதுகொல் குயின்கள் சையமாஞ்
சாரலின் முழக்கொடு தாமு மிழ்ந்தவவ்
வாரலு மின்னியே யவனி வீழ்ந்ததால். (5)

உவர்க்கட லெடுத்தமு தலப்பி லாதுதா
னெவர்க்கு நின்றருள்கிரிக் கீந்த கொண்டல்க
ளவற்குறு பயக்கட லமுதெ டுத்துவிண்
ணவர்க்குத வரிவலி யருளும் வென்றன. (6)

(வேறு)

அன்பினர் தன்பா லுய்த்த வரும்பொருள் விரும்பா ஞானி
இன்பினல் லாற்றி னேற்றி யினிதறம் வளர்க்கு மாபோல்
வன்பினவ் வரைவா னுய்த்த வாரிநல் லாற்றி னேற்றித்
துன்பினல் லறம்வ ளர்ப்பான் சொரிந்ததா லருவி யாக்கி. (7)

அன்றுமா முகில்கள் பெய்த வமுதொடு துகிர்முத் தாதி
அன்றியுந் தன்பா லுள்ள வருமணி பிறவுஞ் சேர்த்தே
ஒன்றுநல் லாற்றி னேற்றி யுலகினர்க் குதவ வந்தக்
குன்றுவீழ்த் தருவி மேன்மை குறிக்கலாந் தகைமைத் தாமோ. (8)

கூபமா தியினீ ரள்ளிக குடம்பல வடித்து வல்லோர்
தாபம தொழிக்குஞ் சுத்த சலமெனக் கொளுமந் நீரும்
பாபமில் சையந் தன்கட் படுமழை வடித்து நல்குந்
தாபமி லருவிச் சுத்த சலமதற் கிணையா காதே. (9)

நேரிய சையநின்று நிரைவழி யருவி நித்தம்
ஆரியகம் மென்னுங்கா ரணிபெறு வேர மென்னுங்
காரிய காயங் கோடற் காரணத் தாரு நற்கா
வேரியம் பேரி யாறாய் விளங்குபு படர்ந்த தம்மா. (10)

(வேறு)

ஞாலமன் னுயிர்கள் சிலமோ டளிக்கு நல்லருண் மல்குறு வெல்வி
மாலெனும் பெரியோன் கோவமார் சைய மாதினை மேதகு பரிவின்
மேலணைத் தீன்ற வாலையா மகள்கா வேரியாம் பேரொடு மிளர்ந்து
கோலசெம் பீத சாலமா தியபூங் கொத்துடை மெய்த்தகவுடுத்து. (11)

செந்தினை தேறன் முந்தவுட் கொண்டு சிறுகுடி தரனநன் மணிகள்
தந்திடப் புலிப்பற் றந்தமு மிலைந்து தளர்நடை மெலமெல விடுத்தே
இந்திர திசைசேர் வந்திடப் படரா விதமிகு பொதுவர்வாழ் முல்லை
வந்திடு பாடி தந்திடு தயிர்நெய் வளவமு துளமகிழ்ந் துண்டு. (12)

பாலையை யடைந்து சிலமின் மறவர் பலரைமுன் கொலைபுரிந் தீட்டி
ஏலவைத் திருந்த கூலநற் பொருள்க ளெடுத்திகல் கெடுத்தவர்க்
[குலைத்துச்
சாலவுங் கவர்தாங் கோவினர் படியத் தலைத்தலை சிலச்சில கொடுத்து
ஞாலமுற் றழலின் கோலம தகற்றி நன்னில மென்னவே புரிந்து. (13)

மருதநன் னிலத்து மருவியங் கெதிர்கொண் மள்ளர்கள் மள்ளிகள் பரவக்
கருதவர் செந்நெற் கரும்பொடு வாழைக் கனிபல நனிமகிழ்ந் தருந்தி
வருதகை வளைக ளிருமொழி மணிகள் வாங்குபு தாங்கியே முழங்கிப்
பொருதலை யருணீர் மருவுகா ரேறும் போகவிட் டேகின ணெய்தல்(14)

வந்திடு நெறிதோ றுந்தலந் தீர்த்த மருவுழிப் பரவியங் கங்கே
சந்தத முயிர்க ளுய்ந்திட வேண்டுஞ் சலமிக நிலைபெற விடுத்து
வந்தகா வேரி யெந்தையோ ருருவாய் வரமுறு பரவையம் பதிபால்
வந்தணைந் துளந்தா ரென்றெனக் கலந்து வருசுக மருவின ளன்றே.(15)

(வேறு)

வகையின்மா தரைசேர் தன்பு மருவியைந் திணையி லாடல்
விரவி யெவ்வு யிருங்காத் துவிளங்குமம் பரங் கலந்து
மருவலி னொளிர் காவேரி மன்னு காடாடல் வன்மீன்
குருபெயர் நடுவெழுத் திற்குல விறை நிகர்த் தவன்றே. (16)

வரையினி லவதரித்து மாதவத் தரண்பா லெய்திப்
பரவினர் படிய யாரும் பவன முற்றறம் வளர்த்தம்
பரபதி யிடத்தின் பாடல் பரிவினோர் குற்ற வாற்றால்
திரைகொள் காவேரி முக்கட் டேவியை நிகர்த்த தாமால். (17)

அங்கு சங்கொடு தாழன்பர்க் கருளுபு பாசங் கொண்டே
இங்குள சராசரங் களைவைக்கு மின னருணீர் பாய்ச்சிக்
கங்கை யார்ந்தகலும் பன்முகம் படர்ந்திலங்கு மாற்று
ஐங்கரக் கடவுள் போன்ற தணிகொள் காவேரி யம்மா. (18)





குறிச்சி யிற்றினை யிழங்குட் கொண்டெயி னரையுஞ் சாய்த்து
மறத்தவர் கொடியைய வெளவி வாரண முழங்கப் பின்னை
அறத்தினி லவர்க ளுய்ய வருள்சுரந் தகன்ற வாற்றாற்
குறத்தகா வேரி வேற்கைக் குமரவே ணிகர்த்த தன்றே. (19)

முல்லையம் பாடி புக்கு முதுதயிர் வெண்ணெய் யுண்டே
ஒல்லையாய்ச் சியர்க ளணி யொழுக்கிட வலித்து பற்றிப்
புல்லி யானிரை மகிழ்ந்து புல்லுண வருள லாலே
வல்லகா வேரி யாழி மாயனை யொத்த தாமே. (20)

மருதமேன் மள்ளர் போற்றி வழிபட மஞ்சிற் சென்று
பொருதலை வரைபக் கங்கள் போக்கியோ ரிரங்கட் டேகிக்
கருதுசீர்ப் புலவர் வாழ்த்தக் காத்திடு தகைமை யாலே
மருவுகா வேரி மேக வாகனன் போன்ற தாமே. (21)

விண்டுவிற் றோன்றி மண்ணின் விரிதரு புவன நல்கி
முண்டக மினித மர்ந்து முதுமறை மொழிந்து மேலோர்
அண்டினர் படிந்து போற்ற வருள்புரி பெருமை யாலே
மண்டுகா வேரி யாறு மலரய னிகர்த்த தம்மா. (22)

தருக்கு தீயரை யொறுத்தல் தாழ்பவர்ப் பேணிக் கோடல்
வருக்கமா குயிர்வ ளர்த்தன் மருவவா ரணமேற் கொள்ளல்
அருக்கியல் பிவற்று லீசன் ஐங்கரன் குகன்மால் வேதன்
மருத்துவ னையுங்கா வேரி மாகதி நிகர்த்த தன்றே. (28)

முன்பர ணர்பாற் கும்ப முனிபெறீஇக் கொணர்ந்த தீர்த்தம்
அன்புறு வாச வுற்காய் ஐங்கரன் கொடியாய்ச் சென்று
பொன்கமண் டலத்தின் வீழ்த்தப் போந்தயாய்த் ததுமீ தென்றால்
இன்புகா வேரி மேன்மை யிசைத்தலெம் மனவிற் றாமோ. (24)

அறிவுள பெரியோர் சிந்த வணிகொள்கா வேரி தன்னைப்
பிறிதொரு நிகரி லாத பெரும்புன லாறு மென்றும்
செறிகொள்கா விரியே யென்று நின்றசீர்ப் பொன்னி யென்றும்
குறிதனை வழங்கி நாளும் குணமுறப் போற்றி னாரே. (25)

(வேறு)

இன்ன காவிரி யிடந்தொறும் படர்ந்துநீ ரேற்றி
மன்னு சீர்வளம் வளர்த்திடு வியத்தகு நாடு
பன்னு சோழர்கள் பரம்பரை யிருந்தர சாண்ட
நன்ன யந்திகழ் நாடுயர் சோழநன் னாடு. (26)

கண்ணு தற்பெருங் கடவுளா ருயிர்க்கெலாங் கருணை
நண்ணி யற்புத நடம்புரி சிதம்பர நகை
புண்ணி யத்திருப் புகலிகோ கழிமுதற் புகலும்
எண்ணி னற்றல மியைந்தது சோழநன் னாடு. (27)

பரைய ருண்முலைப் பாலயின் ஞானசம் பந்தர்
பொருவி றண்டியப் பூதிசண் டேசுரர் புகழிற்
பரவு ருத்திர பசுபதி முதலிய பலபேர்
பெருகு தொண்டர்கள் பிறந்தது சோழநன் னாடு. (28)

தொல்லை நாளினிற் சூரனுக் கஞ்சியே சுரர்கோன்
வல்லை வானொரீஇ மனையொடு வந்திவண் வைகி
எல்லை யில்பக லிருந்தவம் புரிந்துதா னினிய
நல்ல வாழ்வுற லுத்தது சோழநன் னாடு. (29)

ஏறு செந்தமி ழிலக்கிய மிலக்கண மினிது
தேறு சிந்தையர் திரிபொடு லைவறத் தெரிந்து
வேறு சந்நூல் மெய்யுரை செய்துளோர் வென்றி
நாறு பண்டிதர் நணுமிடஞ் சோழநன் னாடு. (30)

வடமொழிப் பலவ கையகா வியமிக வல்லார்
கடலினற் றருக்கம் வியாக ரணமுங் கண்டார்
தடனி லைப்பெருஞ் சாத்திரி மார்பலர் தயங்கி
நடலை யற்றுவாழ் நாடது சோழநன் னாடு. (31)

வேத மோதுநர் மிருதிகள் விரிவுற விதித்த
போத மேதகு பூருவா பரமுறை புரிவோர்
வாத மோதிடு வைதிக மெய்திகழ் பெரியோர்
சாத மோடமர் தானமாஞ் சோழநன் னாடு. (32)



87

திகழ்ப ரம்பரைத் தேசிகர் பாற்சிவ தீக்கை
தகவ டைந்துநற் சைவசித் தாந்தநூ லுங்கற்
றகம மிழ்ந்தாற் கருச்சனை விதிவழா தாற்று
நிகரில் சைவர்க ணிறைந்தது சோழநன் னாடு. (33)

(வேறு)

போதுசெபந் தப்பாரே பொலிநறுஞ்சந் தப்பாரே
மாதர்முகம் பாராரே வருபுலவின் பாராரே
ஓதலென்று மொழியாரே யுறுதியில மொழியாரே
மேதகுசோ ணாடாரும் வியன்பிரம சாரிகளே. (34)

இயன்மனைவா ழறவிருப்பா ரியையிலன வறவெறுப்பார்
அயன்மனைவி கனிவிருப்பா ரயன்மனைவி யரைவெறுப்பார்
நயன்மனத்தி னிதமடைந்தார் நயன்மனத்தி லிதமடையார்
பயன்மருவு சோணாட்டுப் பரவுமில்வாழ் பெரியோரே. (35)

வரமிருந்து மனமமைவார் மனமருந்த வனமமையார்
கனமிகுந்த சருகிலைவார் கனியருந்தி யுடனிலைவார்
தனமிருந்த தனைவிடுத்தார் தனமிருந்த மனையடுத்தார்
வனமிருந்த சோணாட்டு வானப்பி ரத்தர்களே. (36)

மண்ணாசை யிலரிந்த மண்ணாசை தொறுமமர்வார்
பெண்ணாசை யிலர்முத்திப் பெண்ணாசை பெரிதுடையார்
விண்ணாசை யிலர்ஞான விண்ணாசை மிகப்படைத்தார்
தண்ணாருஞ் சோணாட்டுச் சார்சந்நி யாசிகளே. (37)

(வேறு)

காலைசெய் கடன்கடப்பார் கலியிருட்க டல்கடப்பார்
சால்பிறீஇத் தொழினடத்தார் தவநினைவி னடத்தார்
ஆலயசே வைசெய்யா தமுதருந்த லேசெய்யார்
சோலைசூழ் சோணாட்டுத் தொடர்சிவ னடியர்தாமே. (38)

எங்குமா லயந்தீர்த் தங்க ளெங்குமா லயன்செய் பூசை
எங்குமா மறையோர் வாச மெங்குமா மறையோ தார்ப்பே
எங்கு மாதவர் மடங்க ளெங்குமா தவர்தா னங்கள்
எங்கு மாகம புராண மினியசோ ணாட்டி னம்மா. (39)

கொலைகள வொடுபு லால்பொய் கோண்முத லாய தோக்கள்
உலைவில்சோ ணாட்டி லெங்கு முறவழங் காத வாற்றால்
தலையினால் வழங்கு மந்தச் சொற்பொருள் கற்போ ருக்கு
மலைவற விளக்கு மோசர் வருத்தமோ ரளவிற் றன்றால். (40)

கரவிலார் கரங்கள் போலக் கரிகளும் விரவுந் தானம்
பரவுவார் முகங்கள் போலப் பரவுவ மலருங் கானம்
உரவுதார்க் கீகர் சொற்போ லுறுவன வெகினு[1] மானம்
விரவுசீர்ப் புனனா டேபோல் விழையுமே[2] யுழையும் வானம்[3]. (41)

குறைவிலா மறைக ளேபோற் கூலமுங் குலவுந் தாரம்
பறையுலாஞ் சமித்த மேபோற் படகருங் கொளுமே வாரம்[1]
பொறையுலா மகளிர் சொற்போற் பொழில்களும் விழையுங் கீரம்[2]
துறையுலாம் புனனா டேபோற் சோலையுங் குலவு நாரம்[3]. (42)

மாறலை யடைவ வம்மா வரைதுற விகள்ம யக்கம்
தேறலை யடைவ வம்மா திகழ்பொழி லவர்கள் சித்தம்
பாறலை யடைவ வம்மா பலவய லவர்ம லங்கள்
ஏறலை யடைவ வம்மா வியனதி யவர்மெய்ஞ் ஞானம். (43)

அருந்ததி நேய மாது ரரிவையர் பொதுவர் தாமும்
திருந்தலர் வாளி யையார் சீரியர் போரின் வீரர்
பொருந்தரு ணியாய மாணர் புரவல குவதி மார்கள்
இருந்தட வயலிற் சார்வா ரிருபிறப் பாளர் மன்னர். (44)

வந்தடை தொண்டர்ப் போற்றி மகிழ்ந்துப சரிப்பார் தாமும்
சுந்தர வன்பி னூறு சுவையுண வூட்டு வாரும்
வந்தடை வாரோ வெனறு வழிவிழிப் பாரு மாய
அந்தமில் கரணர் மேவு மரியசத் திரங்க ளெங்கும். (45)

---

(41) 1. எகின்—வரிமா. 2. விழையும்—ஒக்கும், விரும்பும்.
3. வானம்—வனசமூகம், சுவர்க்கம்.

(42) 1. வாரம்—யாகபாத்திரம். 2. கீரம்—பால், கிளி.
3. நாரம்—நீர்சமூகம், ஜலம்.



எழுதுறுங் கேள்வி யென்னு மேதமில் வேத பாடம்
பழுதறுக் குரவ ரோதும் பரிசிறை சுரம்வ ழாது
குழுவொடு தழுவி யோதும் குலமறைச் சிறுவ ரோசை
எழுகட லழிய வோங்கு மெழிறிகழ் கழக மெங்கும். (46)

மூவர்தே வார மாதி மொழிதமிழ் மறைக டம்மை
மேவுபண் ணோடு நாளு மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
ஓவிலா தூற வின்பார்ந் தோதுறு திருக்கூட் டத்தர்
பாவுமா லயங்க ளெங்கும் பரவுமா ளிகைக ளெங்கும். (47)

பரமெனும் பிரம ரூபம் படருப நிடதங் கூறும்
திரமுறு பொருளு ணர்ந்து திடமுற வடைசீ டர்க்கு
வரமுறத் தெரிவித் தன்னோர் மலைவறு நிலைமை யாக்கும்
உரமுறு பெரியோர் வாச முற்றிடு மடங்க ளெங்கும். (48)

பதிபசு பாச மோடு பதிகிருத் தியமே கன்மத்
ததிபசு போக முத்தி சாதன முத்தி யெட்டும்
பதியரு ளாக மத்தின் பரிசிரு ளிரியக் காட்டும்
மதிகொள்சித் தாந்த சைவர் வாழுயர் மடங்க ளெங்கும். (49)

பத்துநா றாழு கங்கள் படைத்திடு சேடன் றானே
பத்துநா றாண்டி ருந்து பயனுறு சோழ நாட்டின்
உத்தம வளங்க ளெல்லா முரைத்தலு மரிய தென்றால்
உத்தியில் சிறியே னேதை யுளத்திலு நினைக்கொ ணாதே. (50)

இந்தநற் சோழ நாட்டி னினிதருள் சிவத்த லங்கள்
வந்த பற்பல வவற்றுள் வாசிதம் பரத்தின் கீழ்பால்
இந்திர நீல ரீம மிசைதிருக் கழிப்பா லைக்கு
முந்துமா ரியபு ராண மொழிபெயர்த் தினிதி சைப்பாம். (51)

திருச்சோழநாட்டுச்சிறப்பு முற்றிற்று. ஆக (77)

---

## புராண வரலாறு.

வெண்ணிலா வணிந்தி டப்பால் விளங்கிழை யம்மை யோடு
மண்ணிலாம் புவன மற்று மரபினி லருளி வேதம்
எண்ணிலா கமமுந் தேர்ந்த வினியமா தவர்கண் ஞானக்
கண்ணிலார்க் கிலங்கு மெந்தை கழலிணை போற்றி போற்றி. (1)

தாரணி புகழு மைமி சாரணி யத்தி லுள்ளார்
சீரணி சவுன காதி திகழ்முனி வரர்க ளனைம்
பேரணி திருவெண் ணீறு பிறங்குகண் டிகைகள் பூண்டோர்
ஆரணி சிவனற் றுளே யகத்தினி லிருத்தல் செய்வார். (2)

அங்குசா சனத்தர் செங்கை யணிபவித் திரங்கள் கொண்டார்
பொங்குமா தாத்தி னனும் புரிதவம் பயிலு நீரார்
தங்குசா மாதி குற்றந் தமைமுழு துங்க ளைந்தார்
சங்கரன் றுள்க ளனைஞ் சார்விதி பூசை செய்வார். (3)

சிவனடி யவரை நாளுஞ் சிவனெனப் பூசை செய்வார்
சிவனடி யவரைக் காப்பான் றிருவரு ளதனுற் செய்த
அவமில்பல் விளையாட் டென்னு மமுதமுன் னினிதுட் கொண்டே
அவனருட் டிறங்கள் போற்றி யகமிக மகிழு நீரார். (4)

உத்தம தலதீர்த் தங்க ளுவர்தெடுத் துரைப்பா ரன்பிற்
சித்தமோ டைக்தெ முத்துஞ் செபித்தலி னின்ப மிக்கார்
வித்தக மறைக ளோதி வியன்பொரு ளாய்தல் செய்வார்
சத்திர யாக மெர்தை தனியருள் வேண்டிச் செய்வார். (5)

வேறு.

இன்ன தன்மைசே ரிருந்தவ ரிருந்துழி யடைந்தான்
முன்ன னான்மறை மொழிதரு வியாசமா முனிதன்
மன்னு மன்பின்மா ணக்கற் புராண நூன்மரபிற்
சொன்ன மாதவன் சூதனும் பெயருடைத் தோல்லோன். (6)

அந்த மாதவ ரருண்மிகு சூதனை யன்பு
சிந்தை மேவரத் திகழுப சரணைகள் செய்து
சந்த மார்மலர்ச் சரணநற் சிரமுறத் தாழ்ந்து
முந்த வாதர முகுழ்த்தகை யினரிவை மொழிவார். (7)

ஐய துய்யபே ரறிவ பௌராணிக ரதிப
ஐய மெய்திடா தகிலசித் தாந்தமு மறிந்தோய்
தையல் பங்குறு சங்கர னிலையுறு தலைமை
வைய மெய்திகழ் வரவருள் குருபர வாழி. (8)



கோல மேவியே குலவுறு கலையெனுங் கொடிக்கோர்
ஆல வாலநீ யமைகுண மணிகளி னரங்கம்
வேலை சேர்பிற விக்கடற் கலமுறு மீகான்
சால வாரருட் சாரமெய் பொலிந்துளாய் சரணம். (9)

நண்ணு றுஞ்சிவா னந்தமுன் னிடையறு நலத்தோய்
எண்ணு சத்துவ மெய்தினை தமோகுண மிகந்தாய்
வண்ண சற்குரு மலரடி வழிபடல் சிறந்தாய்
புண்ணி யத்துயர் பொடியணி வடிவினய் போற்றி. (10)

சிவபி ரானருட் டிறத்தரி சிறப்புறு கலையாய்ப்
பவமு றுந்துவை பாயன வியாசனுர் பாலே
புவனி புய்யவே பொற்புறு பத்தொடெண் புராணம்
அவமி லாதுகேட் டருந்தவ வறிந்தனை யன்றே. (11)

எந்தை யாமுனை முந்துவேண் டுவதனு மெமக்குச்
சிந்தை யார்தரச் சிறப்புறு சிவத்தலம் தீர்த்தம்
வந்த பற்பல மாண்புறு மேன்மைகள் வகுத்தாய்
அந்த மின்மகிழ் வாலவை தேர்ந்துளே மவற்றுள். (12)

செய்ய மேன்மைசால் சிதம்பரத் திதந்தரு சிறப்பைத்
தெய்ய வோதுமிச் சீர்த்திகொ டீர்த்தபே தத்துட்
குய்ய மாமெனுங் குறியுறு தீர்த்தமுங் குணபால்
உய்ய விந்திர லேமே லுளதென வுரைத்தாய். (13)

கிளத்து மிந்திர லேமா மத்தலங் கெழுமு
வளத்து மான்மியம் வழுவற முழுவதும் வகுத்தெம்
உளத்து மாலற வுணர்த்தியின் றருளுவை யுறுகாக்
களத்து மாபதி கழன்மற வாவருட் கடலே. (14)

கண்ணு தற்பெருங் கடவுட்ன னிடமெனக் கருணை
அண்ணு புண்ணிய வருந்தலங் களின்சிறப் பான
எண்ணு மாரமு தினையிசை நசையினே மென்றூர்
நண்ணு நற்றவ நயிமிசா ரணியமே னல்லோர். (15)

(வேறு)

அம்மொழி சூதனுள் ளனைத்து பத்தியைச்
செம்மையா மருளை யுஞ்சேர்த் தெழுப்பிட
இம்மென வவைபுறத் தெழுவ வென்னவே
விம்மலி னுடனிவை விளம்ப லுற்றனன். (16)

கருமையுஞ் செம்மையுங் கலந்தி லங்கியே
மருவுவெண் ணீற்றொடு மான்ம தம்புனைஇ
உருவுபெண் ணாணுமா யுரைக டந்தொளிர்
ஒருபர மெனக்குநல் லுறுதி யாக்கவே, (17)

திருவிளை யாட்டமர் செயற்சி வன்முடி
வாநதி தனதர வத்து நீலமின்
மருவலின் யமுனைபோல் வயங்க நின்றிடு
பொருவில்சர் மாட்சிதான் புகல தாகவே. (18)

மயலுறு மவித்தையின் வடிவ மாகிய
முயலக னெரிதர முதுகி லூன்றியே
நயனுறு சபையிலா னந்த மாநடம்
சயமொடு புரிபர சரணம் போற்றியே. (19)

தத்துவ வுணர்வினிற் றலைமை மன்னியே
தத்தம துயிர்கடாந் தலைவ னாகிய
உத்தம னுருவென வுணரு மேன்மைசேர்
வித்தக ரடியெனுள் விளங்கி வெல்கவே. (20)

நிலையுறு மருட்சட னிலவு தாகியே
கலையுறு பொருடெரி கவிக ளுள்ளமாம்
வலமுறு களிநகன் மலரி னன்னமாம்
உலகருள் கலைமக ளுவந்து காக்கவே. (21)

திருமக டிருமுலை திளைத்துச் சேடன்மேன்
மருவுபு துயிலுமால் வடிவ மாகியே
பொருவில புராணநூல் புகல்வி யாசனைக்
குருபர னடியெனுட் குலவிக் காக்கவே. (22)



(வேறு)

மாதவப் பெரியீர் நன்று மருவுமிந் திரகீ லப்பேர்
மேதகு தலத்தி னுற்ற வியன்பெரு மான்மி யங்கள்
காதலிற் கேட்டீ ரற்றாற் கருதுமிப் பிறவி தானே
ஏதமில் பயன்ப டைத்த தினியமர தவமு மற்றே. (23)

அத்தல மகிமை கேட்டோ ரணைகுவர் சிவமே திண்ணம்
அத்தல மகிமை தானு மளவிட லரிய தென்றே
அத்தனுஞ் சிவனே முன்னா ளுரைத்தன னாயி னேனோர்
அத்தல மகிமை தன்னை யளவிட லுளதோ காண்மின் (24)

விரவுவெங் கதிரை யெங்கும் விட்டிரு ளட்டு லாவுந்
தரணிநன் குறுகாந் தத்திற் சாலவே விடுக்கு மாபோல்
அரனருள் பிறத லந்தோ ருக்கினும் விசேட மாக
வரமு றிந்திர கீலத் தின்மகிழ் சிறந்தாக் குமன்றே. (25)

ஆதி யஞ்சிதம் பரத்தி லருணட ராச மூர்த்தி
நீதி லிந்திர கீலத்திற் றிருவிழி சாத்தி நின்றே
கோதிலா நந்த நட்டங் குணமிகப் புரியு மென்றால்
ஓதிட லதன்சி றப்பை யுலகிலார் வலிய ரம்மா. (26)

இப்படி முழுது மந்த விலங்குசீர்த் தலத்தின் மேன்மை
தப்பற வுணர்த்தல் யார்க்குந் தானரி தேயா னாலும்
ஒப்பறு குருவின் மாட்டே உவந்துநான் கேட்ட திந்த
அப்படி யேயின் றுங்கட் கறைகுவ னறிவீர் தேண்மின். (27)

இந்திர கீல மேன்மை யிதயமுற் றுரைப்போர் கேட்போர்
தந்தம திருபக் கத்துஞ் சாரெழில் மகளி ரேபோல்
முந்துறு போக மோடு முழுநல மோக்க மென்னுஞ்
செந்திரு விரண்டுஞ் சேரச் செறிமுறை யணைகு வாரே. (28)

சாதமற் றிதுதான் கேண்மின் றவைப்பய னிதுவே காண்மின்
விரவு மிந்திர கீலத்தின் மேன்மைகள் கேட்ட றானே
வரமுறுஞ் செவிக்கு மின்பா மற்றது னினீ ருள்ளம்
பரவுற தொருக்கிக் கேண்மின் பகருவ னிகழி லாதே. (29)

மூர்தொரு ஞான்று முக்கண் முன்னவ னம்மை கேட்க
இந்திர நீல மேன்மை யினிதுரைத் தனந்த வத்தீர்
அந்தநற் சல்லா பத்தை யவரடி மலர்க ளன்பால்
வந்தனம் புரிந்தெ டுத்து மரபினி லுரைசெய் வேனே. (30)

(புராண வரலாறு முற்றிற்று). ஆக (107)

---

## தல விசேஷம்.

திருக்கயிலைப் பருப்பதத்தின் சிகர மீது
திகழ்தருநற் கணபூதர் முனிவர் விண்ணோர்
சுருக்கமிலா வியக்கர்முத லளப்பி லோர்கள்
சூழ்ந்துநனி தாழ்ந்துசெறி மண்ட பத்தில்
வருக்கமணி யழுத்தியபொன் னாச னத்தில்
வரையறவே பெருகுமருள் வெள்ளந் தானோர்
உருக்கொடவ ணிருப்பதென முக்க ணைந்தை
யுமையவள்பாங் கமர்வுறவீற் றிருந்தா னன்றே. (1)

அங்கொருநா ளக்கருணை யுருவ மான
வம்பிகைதா னெம்பெருமான் சிவனை நோக்கி
திங்களணி யென்பதியே யுலகி லுள்ள
சீவர்கடம் பாசமகன் றுயர்ந்த பேறு
தங்கியுய ரின்புறுதற் கேது வான
சாதனந்தா னேததனைச் சாற்று கென்று
பொங்குறதே னின்பெருக்குப் போலும் வாக்குப்
புகலுதலு நிகரிலரன் புகல லுற்றான். (2)

(வேறு)

இம்மென வுலகெலா மீன்ற ளித்தருள்
அம்மையே நீயறி யாத தொன்றிலை
நம்மைநீ கேட்டது நாடு தொண்டரிற்
செம்மைசேர் கருணையின் திறத்தி னாகுமே. (3)



அறைகுவன் கேட்குதி யரிய வீடுறு
நெறியிது ரகசிய நிலவு மெய்ப்பொருள்
அறிகுதி ஞானமே யன்றி மற்றிலை
மறைமுடி வாகமம் வகுத்த நீதரோ. (4)

அத்தகை ஞானமு மகம்பு றத்தினும்
மித்தையாம் பற்றினை விடுத்து நிற்குநற்
சுத்தமா மனமுள தொண்டர் பாலலாற்
சத்தியே பிறர்வயிற் சார்த லில்லையே. (5)

வேதியர் சைவர்கள் வேத மாகமம்
மாதர்கள் பின்னவர் வளர்பு ராணநூல்
நீதறப் பயின்றிடு திறத்தி னன்முறை
ஏதமின் ஞானமெய் திடுவ தாகுமே. (6)

இன்னமோர் திறனுள தெவர்க ளாயினும்
மன்னுநந் தலங்களில் வழுத்தி வாழ்வரேல்
அன்னவ ருடல்விடு மன்று நம்மருள்
உன்னரு ஞானமார்ந் துறுவர் முத்தியே. (7)

ஆதலா லெளிதினே யரிய முத்தியைக்
காதலாற் பெறலுறு கருத்தி னோர்கடாம்
போதலா முயர்தலம் பொருந்தி வாழுக
ஈதலாற் சுகநெறி யேது மில்லையே. (8)

பிரமகத் தியைமுதற் பேசு தீவினைப்
பரமுறு பதகரும் பரிவி னத்தலம்
வரமுற வதிந்துடன் மாயி னுமவர்க்
குரவுப தேசநன் றுதவு வாமரோ. (9)

சகமிசைப் புண்ணிய தலங்கள் பற்பல
திகழ்வன வவைகளுட் சிறப்பி னுமமர்
மிகவுயர் தலஞ்சில விளம்பு வாமவை
நகம்வளர் தலைவியே நயந்து கேட்குதி. (10)

மாலயன் முதலினோர் வணங்கி வாழ்த்திட
ஏலநல் லருள்புரிந் தியாங்க மர்ந்திடு
சீலமார் கயிலையின் சிகர மாயிதே
மூலமா கியதல முதன்மை பெற்றதால். (11)

கங்கையின் றுளியினை காற்றி னாற்குளிர்
தங்கிய வீதிகள் சார்ந்து பூம்பொழில்
எங்கணு மிலகுறு மினிய காசியும்
மங்கையே நாமிக மகிழ்ந்த நற்றலம். (12)

ஒன்றுபொன் முகரியா றொளிரும் பாங்கதாய்
அன்றுகண் ணப்பனுக் கருளுந் தானமாய்
நன்றுதென் கயிலையா நாமமும் பெறீஇ
வென்றகா ளத்தியும் விரும்பு நற்றலம். (13)

ஆயிர மாத்தடி யருளி னொலொளிர்
தோமினற் சோதியாய்த் தோன்றி லிங்கமேல்
நாமிக மகிழ்வொடு நண்ணு காஞ்சியும்
பூமியின் மிகவுயர் புண்ணி யத்தலம். (14)

காணுமத் தலத்தினீ கம்பை யின்கரை
பேணுமுப் பாழகல் பிரம வித்தையான்
மாணகர் மாட்சியாம் வடிவி னற்றனம்
பூண்றம் வளர்த்தனை பொருவி னங்கையே. (15)

நெடினோ டயனரி நிலவு மன்னமாய்
அடிமுடி தேடியே யலைய நின்றநம்
வடிவமாஞ் சோணமா மலையு மம்மையே
முடிவிலா துயர்தல மொழிவ னின்னரும். (16)

நன்மணி முத்த மாநதி யடுத்ததாய்
மின்ம லிபவச் சுவாமிப் பெயர்த்தலன்
நன்மை யின்வழி படவ மகிழ்ந்தமர்
தொன்மலி திருமுது குன்று மன்னதே. (17)



தென்றிசை புனறுகாவி டிகழ்சி தம்பரம்
என்றிசை பெயருடை யினிய மாதலம்
துன்றிய விராட்டெனத் தொடரு நம்முரு
ஒன்றிரு தயமதாய் ஒளிருந் தானமாம். (18)

அங்குள தேவர்க்குநல் லருட குஞ்சிவ
கங்கையென் றிசைபெறு கவின்கொ டார்ந்தயன்
தங்கிய நதன்புடைத் தயங்கு பொன்னினும்
புங்கவம் பலமெனும் பொருவில் சிற்சபை. (19)

அந்தநற் சபையினி யன்பி னுடிடப்
பந்தமில் வியாக்கிர பாத னொடுசீர்ச்
சந்தமார் பதஞ்சலி தரிசித் தேத்தவா
நந்தமா நடனநா னனிசெய் வாமரோ. (20)

மேலதன் குணதிசை விளங்கு மித்திர
சீலமா நந்தமாங் கெழுமு வெண்சுதை
வேலையை வளர்த்திடு விதுவின் மண்டலம்
போலது நமதகுள் பொருந்து நற்றலம். (21)

வேறு.

முன்ன ரவ்விடை முறைதெரி கபிலனு முனிவன்
பன்னெ டும்பகல் பரிவினி லருந்தவம் பயின்று
கன்னி னின்னொடு கருணைநாம் புரிதரக் கருத்தால்
மன்னு சாங்கிய மறுவினூன் முறைபெற வகுத்தான். (22)

சகரன் மைந்தராஞ் சாகரர் பண்டைநாட் சார்ந்தே
அகமும் வன்மிதந் தருளினின் மருவியே யமைந்து
திகழ் லிங்கமேற் றேவியே நின்னொடு சேர்ந்து
தகவின் மேவுதுஞ் சச்சிதா னந்தமெய் சார்ந்தேம். (23)

அந்த லத்தைமுன் னுசைவல் காசிப னணைந்தே
பத்தி யால்வழி பட்டெமை முட்டறப் பரவிச்
சித்தமோ டதிதியைக் கலந்தி ளசக்குயின் றிரண்முன்
வைத்து தேவரை யயந்தப் பயந்தனன் மாதோ. (24)

உற்ற வில்வல னேடுவா தாவியை யொழியச்
செற்ற திற்பழி தீர்ந்திட வோர்ந்தகத் தியன்றான்
பற்றி னத்தலம் பலபக லுற்றெமைப் பரவி
அற்பு தத்தனி யருளினை மருவின னம்மா. (25)

தொல்லை நாட்பவச் சுவாமியார் தவமுனி தூய
நல்லி லக்குமி நாமமார் மாதொடு நணுகி
எல்லை யில்பக லிருந்தெமை யத்தலத் திறைஞ்சி
வல்லபம் பெறீஇ மறையின்மா பாடியம் வகுத்தான். (26)

மத்தி யார்ச்சுனம் வளந்திகழ் குடந்தை மாயூரம்
சத்தி கேளுபஞ் சநத சாயாவனந் தாமும்
வைத்த சீர்த்திரு வாஞ்சியம் வாஞ்சையார் மறைசை
இத்தலங் களுமினி தியாமகிழ் தமரி டங்கள். (27)

திருவ லஞ்சுழித் திருப்பெயர்த் தெக்கிணா வர்த்தம்
மருவு மாதல மற்றதில் வெண்ணிற வடிவாய்
அருளின் வைகுமோ ரானைமா முகனவ னம்மை
ஒருவி லாதுநீ யுமைவலப் புடையினி னுற்றாய் (28)

அன்றி யுங்கம லாலய மருந்தல மங்கு
மன்ற புற்றிடை மருவிலிங் கத்துளே மற்றும்
சென்றுமால் பணிதி யாகரா சவ்வுருத் திகழ்ந்து
நின்று வேளொடு நின்னொடு நிறையருள் புரிவாம். (29)

தவத்த விச்சுவா மித்திரன் சந்ததி சார்ந்த
பவச்சு வாமியாம் பகர்முனி யவனெமைப் பரவித்
தவத்தர் போற்றுறு தத்துவ சந்திரி கையினை
அவத்தை நீக்குக மருளினாற் புரிந்தன னன்றே. (30)

இராம சேதுவென் றியைபெயர்த் தலமுமற் றெமது
விராவு நல்லருண் மிகுமிட மதனிடை மேனாள்
இராவ ணைக்கொலை யினில்வரும் பழிதுடைத் திடவே
இராம னர்ச்சனை யினிதுசெய் தெமதருள் பெற்றான். (31)



இன்னு மிந்நிலத் தெமதருட் டலம்பல விருந்த
பன்னு முத்தியின் பத்தினை வேண்டினோர் பரிவால்
அன்ன வற்றுளொன் றணைந்தெமைப் பரவியே யமர்க
உன்னு மங்கவற் றுளும்விசே டத்தல முரைப்பாம் (32)

(வேறு)

திருமிகு கைலைச் சிகர மேகாசி தென்கயி லாயமே காஞ்சி
திருமுது குன்று சிதம்பரந் தென்கீழ்த் திசையுறு மிந்திர நீலம்
உருமிகு கமலா லயமொடு மறைசை யோதுசீ ராமசே துவுமா
மருவிய பத்துத் தலமுமெய் விசேட மன்னுசா யுச்சியம் வழங்கும். (33)

செப்பவற் றுள்ளுஞ் சிதம்பரங் காசி தேசுறு மிந்திர நீலம்
ஒப்பிலிம் மூன்று முவந்துநா மருள்செய் யுறுவிசே டத்தல மாகும்
அப்படி யெனினும் பக்கபா தத்தி னமருதுஞ் சிதம்பரந் தனிலும்
ஒப்பிலிந் திரநீ லத்தினு முவப்பா லுறுதியீ துறுதியீ துமையே. (34)

ஆதலின் முத்தி யெளிதுற விழைந்தோ ரருண்மலி சிதம்பரந் தாதல்
நீதிலிந் திரநீ லத்தலந் தாதல் சேர்ந்துசின் னாளெனும் வதிக
மேதகு புத்தி முத்தியும் விழைந்தோர் மிகுகயி லாச்சிர மப்பேர்
ஓதுமிந் திரநீ லத்தினே வதியினு றுவர்கா ணிருமையு முண்மை. (35)

தல விசேடம் முற்றிற்று. ஆக (142)

---

## தீர்த்த விசேடம்.

இந்தவா றிணையின் முக்கண் ணிறையவ னருளிற் கூற
முந்தவா குயிர்கண் முற்று முறையளித் தருள்செய் யன்னை
வந்தவா தரமே பொங்க வழுத்திமெய் புளக மூட
எந்தையா மவனை நோக்கி யிவைசில புகல லுற்றாள். (1)

முற்றறி வுடைய வெந்தாய் முறையினிற் படைத்தல் காத்தல்
முற்றுமே துடைத்தல் செய்யு முதல்வனே யனைத்தி னுக்கும்
பற்றுமா தார மானாய் பகருமா தார மில்லாய்
உற்றசச் சிதானந் தத்தி னுருவினை மருவி நின்றாய். (2)

மங்கல குணநி றைந்தாய் வளருட் புனனி றைந்தாய்
தங்கமார் குணங்க டந்தாய் தொகுகு ணத்தலை வனானாய்
பங்கமில் பசுக்கள் பாசம் பறித்தரு ளோர்தாய் முன்னான்
இங்குகேட் டறிந்தேன் காசி யேமுதற் றலங்கண் மேன்மை. (3)

தன்னையுண் ணினைக்கு மன்பர் தமக்குவீ டருளுஞ் சீர்த்தி
மன்னுமிந் திரகீ லத்தின் மகிமைகண் முழுதுங் கேட்க
நன்னசை யுற்றே னீசா நவிலுகென் றுமைப கர்ந்தாள்
முன்னவன் புகழ்ந்தே யாழ்ந்த மொழியினிற் புகல லுற்றான் (4)

விரிந்தவிந் திரகீ லத்தின் மிகவுயர் மகிமை முற்றுந்
தெரிந்தவர் யாவ ருள்ளார் சிவையெனு மணங்கே கேளும்
விரிந்தமுற் றறிவு தன்னின் விளங்கின மாத லாலே
பரிந்துனக் கியன்ற மட்டும் பகருவ னிகரி லாதாய். (5)

என்றுமே யுலாவு நின்ற னிணையடி மலரி னப்பி
நன்றொளிர் குழம்பிற் செம்மை நணுகியே புலியூ ரென்னும்
வென்றிகொள் பெயரும் பெற்று விளங்குறு சிதம்ப ரந்தான்
நின்றகா சினியா மாதி னிலவுறு திலக மாகும். (6)

சிதம்பர மதனி னஞ்செய் திருநட னத்தைப் போற்று
பதஞ்சலி புரிந்த னன்மா பாடிய மோடி யோகம்
இதம்பெற வழியா டாற்றி யிசைசயி மினிபு ரிந்தான்
விதம்படு கரும காண்டம் விளங்குபூ ருவமீ மாஞ்சை. (7)

அங்கதன் குணபான் மேவு மரியவிந் திரகீ லந்தான்
தங்குறு ரகசி யத்துத் தானமாய்ச் சிறந்த தாகும்
மங்கைநின் னுடனே நாமு மருவுது மகிழ்வி னண்டும்
எங்குறு தலமு மங்கே யிசைவுறுங் கலையி னம்மா. (8

அந்தவிந் திரகீ லத்தி லணிகொணங் கோயி லுக்கு
நந்த லில்வட திசைத்தா நந்தபோ தினியாந் தீர்த்தம்
அந்தவுத் தமதீர்த் தத்துள விலமே னிலவி யுள்ள
சந்தமார் தருதீர்த் தங்கடா மெலாமி யைந்த வாமே. (9)



(வேறு)

காமிகு கோயில் யமதிசை சிவபுட் கரிணியாந் தீர்த்தநன் னுளதாம்
வாசதி சரசு வதியொடு யமுனை மன்னுமூன் றன்னதா மதுதான்
விரவிய கிழக்கிற் பூரணை நந்தா மிருதமென் றுமைபெயர்த் தீர்த்தம்
பரவுறு மதனைப் புடையுறச் சூழும் பத்தர்க ளமைத்திடு பூர்த்தம். (10)

ஆலய மேற்கிற் சாம்பவ தீர்த்த மற்புத மாயுறு மங்கே
மேலைய பவச்சு வாமிநற் பன்னி விளங்கிழை யிலக்குமி யாடி
வாலிய சித்தி யேலவே பெற்று மனமகிழ் மிகவடைந் திருந்தார்
ஞாலமுற் றருளுஞ் சால்பினிற் சிறந்த நங்கைநீ நன்றறி குவையே. (11)

இன்னுமவ் விடத்தே காபில தீர்த்த மெழிலிரு கத்திய தீர்த்தந்
தென்னுறு மயித்தி ராவரு ணமெனுந் தீர்த்தமே யைந்திர தீர்த்தம்
பன்னுகா சியப தீர்த்தமே காரு பத்திய தீர்த்தமே மற்றும்
மன்னுசீர் பெருகு தாரக தீர்த்த மற்றிவை யுற்றருள் விளங்கும். (12)

எவரவண் பவச்சு வாமிதீர்த் தத்தி லிலக்குமி தீர்த்தமே லாதல்
அவமகன் மறையின் விதிவழி யாடி யைந்தெழுத் தையுநனி செபிப்பார்
அவர்தம துரிய மரபொடு தாமு மரியபண் டிதர்களே யாவார்
அவணினும் வடபான் மிகவிசே டித்த தாகிய தீர்த்தமொன்
[றுளதால். (13)

அத்தகு தீர்த்த மத்தியிற் குய்ய மாயதீர்த் தத்தினுக் கணித்தாம்
அத்தலை மணல்கண் மெய்ச்சிவ லிங்க மாகியே காணுற விளங்கும்
வைத்திடு பசுக்காற் குளம்புறு குழியின் வரையுறு மப்புன லூறும்
இத்தரை யுறுதீர்த் தத்தொகைக் கிணையென் றினிதறி பருவதக்
[கொடியே. (14)

(வேறு)

எண்ணிலா விண்ணு ளோர்க ளிசைபெறு சித்தர் தாமும்
தண்ணிலா வேணி யெம்மைத் தரிசனஞ் செய்ய வேண்டி
மண்ணிலா மத்த லத்தின் மரங்களாய்ச் செடிக ளாயும்
விண்ணிலாங் கொடிக ளாயும் விளங்குபு வசிப்ப ரின்றும். (15)

கூறுமக் கினிட்டோ மம்மே குளங்களை யமைத்த வாதி
ஏறுதன் மக்கள் செய்வோ ரினிதடை பயன்கள் யாவும்
மாறிலிக் திரகீ லத்தை மனதினாற் பத்தி யோடு
பேறிது வெனநி னைப்போர் பெறுவரே யெளிதி னம்மா. (16)

அத்தலத் துள்ளார் நம்பா லன்புரிந் தருளைப் பெற்றோர்
அத்தகு பெரியோர் தம்மை யன்பொடு தரிசித் தோர்கள்
சித்தமாய்க் கங்கை மூழ்கு சித்திசே துவினற் சித்தி
எத்தனை யவைகண் முற்று மெளிதினி லடைகு வாரே. (17)

சிறுபொழு தேனு மந்தச் சிறந்திடு தலத்தின் வாழ்ந்தோர்
மறுபிறப் படையார் நம்பால் வளரருண் மருவு வார்கண்
மறுவிலத் தலங்கீர்த் தித்தன் மருவுநல் வினைவ ளர்த்தே
அறமொடு பொருளின் பம்வீ டாக்குகா ரணம தாகும். (18)

பரிமக மாதி வேள்வி பண்ணுந ரருந்த வங்கள்
புரிகுநர் பெறும்பே றந்தப் பொருவிலாத் தலத்து வாழ்வோர்
பெரிதடை வார்க ளந்தப் பெரியரைக் காணி னம்மா
வெருவியே யியம தூதர் விரைந்தகன் றோடு வாரே. (19)

பிரமகத் தியைமுன் னாகப் பேசபா தகங்க ளெல்லாம்
விரவுமத் தலநி னைக்க விட்டொழிந் திடுமே யானால்
பரவியே யங்கு வாழ்வோர் பயனன வுரைப்ப தென்னான்
ரெபிற தலத்திற் செய்த வல்வினை யங்கு மாயும். (20)

அத்தலத் தியற்று நீங்கா னவைகளு மங்கே நீரும்
அத்தலம் வாழும் மன்ப ரங்கமுற் றணைந்து வீசும்
உத்தம வளியார் மேனி யுறுமவர் பாத கங்கள்
வித்தக விமலாய் வீயும் விரைந்தெரி துரும்பின் மெய்யே. (21)

எவர்கள்சித் திரைகா டோறு மினியகா பிலத்தின் மூழ்கித்
தவர்புகழ் நருப்ப ணங்க டன்னனி யோடு செய்வார்
அவர்கடம் பிதிர்க ளுன்னே யகூர கத்தி லுள்ளார்
வரவர் அன்றே யேறி யின்பமே யடைவார் திண்ணம். (22)



அங்கனுத் தரகா வேரி யதினிடை மகரம் வெய்யோன்
சங்கிர மிக்கும் போது சாருறு பூச னைக்கண்
புங்கநூன் முறையி னாடும் புரிபவ ரெவரோ வன்னோர்
சங்கரி காமே யாகித் தயங்குவ ரைய மிலவே. (23)

பேரரு ளுமையே சண்டன் பிறங்குறு மேட ராசி
சேரமை யத்தின் மேவு சித்திரை கூடி நின்ற
பூரணை தனிலா னந்த போதினி நானஞ் செய்வோர்
சீருண் முத்தி சேர்வார் சிறிதுமே யைய மில்லை (24)

இரவியின் வாரந் தோறு மினியகா பிலதீர்த் தத்தில்
வரமுற நானஞ் செய்வோர் மறையெலாம் வல்ல ராகி
விரவுநா லியற்றும் வன்மை மிகச்சிறந் திடுவார் திண்ணம்
பரவிலக் குமிதீர்த் தத்திற் படிபய னையுமு ரைப்பாம் (25)

பத்தியோ டதன்க ணாளும் படிபவர் நல்ல வாக்குச்
சித்தியை யடைவர் நன்மை திகழ்புகர் வாரந் தோறும்
அத்திரு வின்பேர் மேவு மரியதீர்த் தத்தின் மூழ்கின்
வித்தகக் கவிகள் போற்ற விளங்குமா கவியா வாரே (26)

(வேறு)

இந்திர கில முந்துமான் மியமுற் றிசைக்கரி தென்னிறு மினிநாம்
இந்தநற் றலத்தின் முந்துறு வரலா றியம்புவ மினிதுகே ளென்றே
எந்தைதான் புளகம் வந்தமே னியராய் யிறைவிதன் றிருமுக நோக்கி
அந்தமி லருளா னந்தமும் பெருக வறிவர்காள் புகலலுற் றனனே (27)

தீர்த்த விசேடம் முற்றிற்று. ஆக (169)

---

## கபிலன் றவநிலை.

அறிவையே பண்டுசம் மானை யாலரி
தெரிவரு ஞானசத் தியின்வி ளக்கியே
அறிதுணர் கபிலனு மணிகொள் பேரொடு
தரணியி னிடையவ தரித்த னனரோ, (1)

இலகுறு மவன்மகா யோகி யிந்நகல்
உலகருள் கருணையி னுற்ற சாகரம்
மலர்திரி புண்டரம் வயங்கு நெற்றியான்
நலமுறு கண்டிகை பந்த ணிந்துளான்.. (2)

திரளுறு சடைமுடி திகழுஞ் சென்னியான்
உரமுறு பழமர வுரியுறக் கையான்
பரவுறு பலதருப் பைக ளிசைத்துள
சிரமுறு மொருகழி சொகை தாங்கினான். (3)

புண்ணிய தீர்த்தநீர் பொதிக மண்டலம்
நண்ணுகைக் கொண்டவ னவியு மைம்பொறி
திண்ணமே வென்றவன் றினைத்தோ றும்நமை
உண்ணினை தியானமுற் றுவக்கு நீர்மையான். (4)

மெய்புரி தவத்தி னன்மிக மெலிந்திடு
மெய்யினன் ஞானநூல் விரும்பி நோக்கியே
மெய்படு பொருளி தமித்தை யீதெனும்
மெய்யினு ராய்ச்சியே விநோத மாயினான். (5)

அங்கவ னொருபொழு தரிய ஞானமே
தங்குமா சாத்திரம் தான்செ யற்கருள்
பொங்குமா தவஞ்செயப் பொருந்து நற்றலம்
எங்குள தெனமனத் தெண்ணி னனரோ.. (6)

எண்ணிநற் புராணநூ லெவையு மாய்ந்திடா
மண்ணினற் றலம்பல வெற்றன் மாண்டலம்
எண்ணரு மித்திர கிலமே யென
நண்ணரு ளுணர்ந்தவ னுனக வுன்னினான் (7)

மேருவி லிருந்தவன் வியன்ற வஞ்செயச்
சேருருச் சிடர்கள் சூழத் தென்றிசை
சேருறச் சென்றகா கிலவு காசியைச்
சாருபு மமதடி தாழ்ந்து போற்றியே. (8)



105

சாற்றுசீர்க் காஞ்சி யாந்தல மடைந்துபா
லாற்றுநீர் மூழ்கியங் கருளிற் பல்கனி
தோற்றுறு மாவடி நிலங்கு நம்மடி
போற்றுபு விதிவழி பூசை யாற்றியே. (9)

கவித்தகல் லாரமே கமழுங் கம்பையில்
அவித்தவைந் துடையவ னடி யங்கணுற்
பவித்தகா மாட்சியாம் பகர்சி னைப்பிர
மவித்தையி னருச்சனை மரபி னாற்றினான். (10)

அன்னதன் பின்னரு ணாசலத் தையும்
கொன்னவி திருமுது குன்றந் தன்னையும்
மன்னுபு தரிசன மரபி னாற்றியே
கன்னியே சிதம்பரங் கபில னெய்தினான். (11)

அங்கடைந் தருண்மிகு பமரு நற்சிவ
கங்கையிற் படிந்ததன் கரையிற் கோயிலின்
மங்கையே கினதடி வணங்கிக் கண்டனன்
சங்கைநீ ரருட்பதஞ் சலியை யவ்விடை, (12)

காண்டலு மகிழ்ச்சியிற் கண்க ணீருகக்
கோண்டகு சடைமுடி குலுங்க வாடினான்
தாண்டவம் பதஞ்சலி தானு மம்முனி
மாண்டகு காட்சியின் மகிழ்ந்தி யற்றினான். (13)

பின்ன ரப்பதஞ்சலி பெரிய வன்பினால்
அன்னவற் கன்றுபொன் னம்ப லத்துநம்
உன்னருந் திருநட முவப்பக் காட்டுபு
மன்னுதன் னாச்சிர மத்திற் சேர்த்தியே. (14)

அங்குப சாரநல் லன்பி னாற்றினன்
பங்கமில் வியாக்கிர பாதனுந் தெரீஇச்
சிங்கலி றன்னதாச் சிரமஞ் சேர்த்தியே
பொங்குப சாரமெய்ப் புகலி னாற்றினன். (15)

சீடரோ டேசில தினமி ருந்தகம்
ஆடலை நோக்கியங் ககன்று தென்றிசை
மாடகல் பலமரம் வளர்ந்த பூம்பொழிற்
கேடக லிந்திர கீல மெய்தினன் (16)

சேர்ந்தவ னினியவாச் சிரம மொன்றினை
ஆர்ந்திடு தனியிடத் தமைக்கு மாறுதற்
சார்ந்திடு சீடர்பாற் சாச னஞ்செய
நேர்ந்தவ ரமைத்தனர் நெறியி னன்றரோ (17

(வேறு)

காத லோடுநற் கபிலனவ் விடைபெருங் கருணை
போத வார்சிவ புட்கரி ணித்தடம் புனலில்
வேத வாகம விதிவழி முழுகியே விண்ணோர்
பேத மாதவர் பிதிரரை யுந்தருப் பித்தான் (18)

பின்ன ரப்புனற் பெருங்கரை யிருந்தழல் பெரிது
மன்ன நாற்றிசை மலர்விழி யலரிமேல் வைத்துத்
தன்ன வைம்பொறி தடுத்துண வுறக்கமுந் தவிர்ந்து
மின்ன டிப்பெரு விரலினுற் றாணிமேன் மேவி. (19)

அகத்தை தீர்ந்தசை வற்றிருந் துற்றநா ழுக்கம்
நிகழ்ந்திடுஞ் செபத் திருவடங் கரதலஞ் செறியப்
புகழ்ந்த வெண்டிருப் பொடிமுழு துடலமும் பொருந்த
நிகழ்ந்தி டுங்கடி நீலமான் றேலது நிலவ (20)

விரல்க ளிற்குசம் விதித்தநூல் பவித்திரம் விரவப்
பரவு சித்தமே பதுமமுன் னுசனம் பலவும்
விரவு சில்சில வேலையொவ் வொன்றதாய் மேவி
இரவு கற்பக லெமதடி மனமல ரிருத்தி (21)

இயம நன்னிய மத்தினு மினிதுபூ ரணனுய்
நயமி கும்பிரா ணத்தினு யாமமு நண்ணி
செயமி ரத்தியா காரமுஞ் சேர்ந்துதா ரணையும்
பயில்பு சந்தமைப் பகர்குணத் தெருடுதியா னித்தும், (22)





நேச மாய்நமை நிர்க்குண ராய்த்தியா னித்தும்
தேசி னுர்சமா தித்திற மெய்த்தகச் செய்தும்
ஆசி றேவராண் டாயிர மித்திற மரிய
பேசு மாதவம் பிரிவிலா தியற்றினன் பெட்பின். (23)

(வேறு)

அறிவகுண் டலினி சித்த மாஞ்சுழு முனையி னுற்ற
நெறிபுறஞ் செல்வ தாகி நிலவுறு பின்னு தார
அறலினுச் சேத முற்ற வணிகெழு வாயு வோடு
செறியெரி யதனி னன்று தீபித மாகி மாதோ. (24)

புகல்பி ரமரந் திரத்துப் புரமது பேதஞ் செய்தே
அகலுறு ஞான சந்திரா மிருதப் பெருக்கால்
இகலுறு மவன்றன் பூசை யியற்றுமா றருளா லங்கண்
நகலுறு மமுத லிங்க நன்றுமுற் றேன்றிற் றன்றே. (25)

கண்டனன் கபிலன் கோடி கதிரவ ரெனவி ளங்கித்
தண்டகு பரார்த்தம் பூர்ண சந்திர ரொருங்குற் றன்ன
எண்டகு மமுத ரூப மேய்ந்துதிப் பியம தாகி
மண்டனின் முளைத்த லிங்க மகிழ்ச்சியங் கடலி லாழ்ந்தான் (26)

முனியவன் புளக மேனி மூடுற வவ்வி லிங்கம்
நனிபெரும் பத்தி யோடு நாடொறும் பூசித் தேத்தித்
துனியக றவத்தி னின்றன் தொடர்நெடுங் காலஞ் செல்ல
வனிதையே வளர்ந்து புற்று மற்றவன் மூடிற் றம்மா (27)

வளர்ந்திடு புற்றி னூடு மருவியே பொருவி லாது
விளங்குத லுற்ற மற்றவ் விமலமா நமதி லிங்கம்
களங்கெழு விடங்கொ ளுகந் காலவீழ் சால மேலாம்
விளங்கொளி மணிபி லத்தின் விரவிய தனைய தன்றே. (28)

சிலமின் மாயை யென்னும் திரையினின் மறைத லுற்ற
எலுமின் னுயிரைச் சிவ ரினிதுகா ணுத வாபோல்
வாலிய புற்றி னூடு மறைந்தமர் கபிலன் றன்னை
காலமன் னதனிற் சீடர் காண லராகி நின்றார் (29)

புற்றுமண் டலத்தி னூடு பொருந்தியே தவஞ்செய் கின்ற
செற்றமில் கபில னாதி சேடனை யேகி கர்த்தான்
மற்றவ னிடையின் மாட்டே வளையுற விலகு மிக்கை
கற்றவச் சேடற் கூற்ற கவசமே கிகைத்த தம்மா (30)

கண்டரும் பெருந்த வஞ்செய் கபிலனை யுவனை யுள்ள
அண்ட ரீதென் பொருட்டென் றதிசய மனைத்த ராஞர்
எண்டகு மென்ப தப்பே றெண்ணினன் போலு மென்று
கண்டல னதுகெ டுக்கக் கருதிமற் றிதனைச் செய்தான். (31)

அரம்பையே முதலா வுள்ள வணங்கினர் தமைவி ளித்துப்
புரந்தர னீவி ரின்று பொருவிலிங் கிரகி லத்து
வரம்பினு னருந்த வத்தின் மருவுறு கபில னுள்ள
உரந்தனை யகற்றி வல்லே யுயர்தவங் கெடுத்தி ரென்றான் (32)

என்றலு மணங்கி னல்லா ரினிதென வவனி சேர
மன்றமன் மதனுக் கேற்ற வசந்தமும் பொருந்திற் றாக
நன்றறி கபிலன் யோக நண்ணுழி யமிர்தந் தன்னை
வென்றபல் லிசைகள் பாடி மேவின ரவரெல் லாரும். (33)

எங்கணு மொய்த்துச் சூழு மிசையளிக் குழாங்க ளென்றுங்
கொங்கவிழ் கூந்தல் பெற்றுக் குலவுசீர் வசந்த மென்னும்
மங்கைமன் மதன்றன் காண வைத்தநீ பங்கள் போலும்
பங்கமின் றலர்ந்து தோன்றும் பலாசமா மலர்க ளாமே. (34)

மருமலர் பொழிதே னூய மஞ்சனங் கொடுவ சந்தத்
திருமகண் மதன னுக்குத் திகழ்சிருங் கார முற்றும்
அருளர சபிடே கத்தை யாற்றிட வளிக ளின்பம்
பெருகியோ தினவே போலும் பெட்புறு சாம வேதம். (35)

வனமுறு மரங்க டோறும் வல்லிக டோறு முற்ற
இனமலர் களினற் றேனு கிசையளி யார்ப்பு மட்டோ
வனமிசைப் பொழுது போக்கும் வகையமர் விரக மாதர்
இனமுறப் புரியாட் டார்ப்பு மேகமாய் விரவிற் றம்மா (36)



வனமெனு மியாக சாலை மருவுசெந் தவிரே யென்னுங்
கனலிமி னிடைவ சந்த காலமே யென்னும் வேட்போன்
இனமலர்த் தேற லென்னு மிழுதினைச் சொரிந்து காமன்
றனிபெற வாயு வோம நடத்தினன் றின்னை மீதே. (37)

(வேறு)

வலமிகு தேமா மலர்மதுப் பொதிமா வயிற்றெழு மகாசன மமர்ந்து
குலவின வளிகள் குசங்களாக் கொண்டு கூடுசம் பகமலர் மணமே
நலமிக வளர்ந்து பவனனே போல நகலுறு வசந்தவா சிரியன்
*இலகுற கால கண்டமெய் தேர விதமுறு மதனனாற் பொருளே. (38)

இனிது போதிக் கின்றன னெனவெவ ருமியம்ப வேயி லஞ்சிமென்
கனிதரு தேமா மலரினு முள்ள காசகல் கேசர முழுதும் [மலரிற்
கனியளைந் திடலிற் சிறிதுவெண் ணிறமே நண்ணுறு மஞ்சுவை யுடைய
வனமுறு குயில்களினியபஞ் சமப்பண் மகிழ்வொடு பாடின மன்னோ. (39)

மற்றுமின் னனவாம் பற்பல சிறப்பின் வசந்தமுற் றிசைந்தவக் காளிற்
கற்றுணர் கபில னற்றவங் கெடுப்பான் கருதியே யரியபல் லிசைகள்
பற்றுடன் பாட லுற்றர மகளிர் பலருமற் றவணடை பொழுதில்
இற்றிது காண்டல் குற்றமென் பவன்போ லிரவியத் தமயன
[மடைந்தான். (40)

சூரியன் குடக்கா சேரிமை செவியிற் றோடென நீடொளி விளங்க
எரியன் மாலை சாகுறு சந்தி யெனவரு பெயருடை மடந்தை
வாரிதி நீருண் மூழ்கியே யிருளா மயிரினைச் செயிரற முடித்து
வாரிமுத் தணிபாச் சீர்கொடா மரைபோன் மலர்விழி யுடனனைத்
[தனனே. (41)

அந்தியா மிருளின் மெய்த்தெழு குமிழி யாமென மீமிசை யுடுக்கள்
பத்தனு றடுத்த வந்தரு பொழுதிற் பலபல கயிரவ மலரச்
சித்தசன் மகிழ்ச்சி வைத்தெழச் சகோரங் கிகழ்மதன் குடைதாய் விளங்கி
வைத்தசீர்க் கிழக்குத் திக்கிலம் மகளிர் மதித்திட வுதித்தனன் மதியே.

* ——— காலகண்டன் = கச்சக்குருவி.

சந்திர னுதிக்க விந்திரன் விடுத்த தகையர மகளிர்க ளெல்லாம்
சந்தமா மறைதே ரந்தமா முனிவன் றவத்தினைச் சிதைத்திட வேண்டி
முந்துகா மாசம் வந்தவார்த் தைகளை முன்னுற கண்ணியே மொழிந்தார்
அந்தமா தவனோ சிந்தையோர் சிறிது மலைவிலா நிலையின னானான். (43)

(வேறு)

புற்றினுள் ளசைவி லாது பொருந்தியே யருந்த வஞ்செய்
மற்றினை யிலாத வந்த மாமுனி நிலையை நோக்கி
எற்றினும் வசீக ரிப்ப மிவனையென் றெவருஞ் சூழ்ந்து
பற்றினா லெவரு மெச்சும் படிநட மாடி னார்கள். (44)

கலமுற வவர்கள் செய்த நடனமு முனிவன் சிந்தை
நிலையினை யணுமட் டேனு நீக்கிடு வலியின் றாக
அலமரு மனத்த ராகி யன்னவர் பின்னுஞ் சூழ்ந்து
வலமுறு மிவனை யின்னே வழுத்துவ மெனத்து ணிந்தார். (45)

கரங்களிற் கங்க ணங்கள் கடியின்மே கலைக ளார்ப்ப
உரங்கொளுந் தனமேல் வைக்க லுற்றவீ ணைகள்கைக் கொண்டு
வரங்கொளு மமிழ்தோ வன்றி வளர்குயி லிசையோ வென்ன
அரங்கின்வல் லவரும் போற்ற வாடியே பாடி னார்கள். (46)

ஆடுமம் மகளிர் தங்க ளணிகிளர் வீணை கொண்டு
பாடுகல் லிசையை யங்குப் பயிலுறு பிணைவி னங்கள்
கூடுமன் புடனே கேட்டுக் குலவுமா னந்த முற்று
நீடுதா மசைவி லாது நிறைமகிழ் வொலியே செய்த. (47)

அங்கவர் காம வின்பத் தருஞ்சுவை பொருந்தச் சொன்ன
சிங்கலிவ் வார்த்தை யாதல் சிறந்திடு நடன மாதல்
பங்கமி றோத்தி ரத்தின் பாடல்க டாமே யாதல்
புங்கமார் முனிவ னுள்ளம் புகுந்தில வறிது மீண்ட. (48)

பற்றினா யிங்குச் செய்த பாடலோ டாட லன்றி
மற்றியா மெல்லா மிங்கு வந்தது மறிந்தா னல்லன்
குற்றிபோற் பிரம நிட்டை கூடினன் யாது செய்வாம்
மற்றினி யென்றி னைந்தார் மருவர மகளி ரெல்லாம். (49)



அன்னவ ரிந்தி ரன்பா லடைந்துகே ளையா நாங்கள்
மன்னுமூ வுலகை யுந்தான் வசீகரித் திடினு மந்த
முன்னுறு தவத்தின் மேலா முனிவனை வசீக ரிக்க
உன்னவும் வலியி லோமென் றுரைத்தவற் புகழ்ந்து போனார். (50)

(வேறு)

பின்னருங் கபிலன் பன்னெடுங் காலம் பிரிவிலா தெமைமனத் திருத்தித்
தன்னிலை கண்டு மன்னுமூ வுலகும் தளர்ந்திட வருந்தவஞ் செய்தான்
கன்னியே யதனாற் பன்னுமித் தலந்தான் கபிலனாச் சிரமமென் [றொருபேர்
மன்னிய தெவரு மந்நிலங் கலியின் வல்வினை வெல்வதென் றிசைத்தார்.

அருந்தவங் கபிலன் பிரிந்திடு மாற்றை அறிந்திடு முனிவர்க ளெல்லாம்
பொருந்தியத் தலத்தில் அருந்தவந் தாமும் புரிந்தனர் திருந்திழா [யுனக்குப்
பரிந்தியா முரைத்த வருங்கதை யிதனைப் படிப்பவர் கேட்பவர் தாமும்
விரிந்தபே ருலகிற் பிறந்திட லொழிந்து வீடுபே றடைந்தினி [திருப்பார். (52)

(வேறு)

எந்தைபிரா னிவையுரைப்ப முகமலர்ந்தே யிறைவியரு ளாற்பின்னு [மவனை நோக்கி
எந்தவுல கமுமருளீ சுரவுபாதி யிலாமலமூன் றிலபகவா னேசர் வஞ்ஞா
அந்தமிலா னந்தவமு தாழியானா யடியவர்சிந் தாமணியே யக்க [ணிந்தாய்
எந்தவகை யாலதற்கித் திரநிலப்பே ரெய்தியதோ வதையறிய [வியம்பு கென்றான். (53)

(வேறு)

அத்திற முமைபு கலமுதின் மாமொழி
சித்தமார் மகிழ்வொடு சிவனுங் கேட்டரோ
இத்திரங் கேளென வியம்ப லுற்றனன்
வித்தக முனிவர்காள் விரும்பிக் கேண்மினோ. (54)

கபிலன் றவநிலை முற்றிற்று. ஆக. (223)

## இந்திரகில நாமகரணம்.

மலைவளர் மடந்தைநீ மலர்ந்த பேருள்
நிலைமையிற் கேட்டனை நிகழ்ந்து வாமவை
அலைவறச் செவிகளுக் கமுத மாகியே
உலைவுசெய் மலவலி யொழிக்கு முண்மையே. (1)

கருத்தினி னமைக்கொடு கபில னவ்விடைத்
திருத்தவ நிலையொடு திகழ்ந்த காலையில்
அருத்தியோ டிப்புவி யாண்டு வைகினான்
உருத்திகழ் சகரனு மொளிகொள் வேந்தனே. (2)

தொன்மனு வமிசமேற் றோன்றி னானவன்
மன்மகர் சேதுமுன் மந்த ரம்வரை
பன்மகி முழுவதும் பகர்தன் னோர்குடை
நன்மையி னிழல்செய நனிபு ரந்துளான். (3)

பொற்புறு கவிவலர் புலவ ருக்கெலாம்
கற்பக தருநிகர் கவின்கொ ளீகையான்
நற்புகழ் விண்ணினு நணுகி வெண்ணிறம்
பற்பல விடங்களும் பரப்ப நின்றுளான். (4)

நதிபதி முழக்கினை நனிய டக்கியே
அதிநற நதிபல வமைத்த சீர்த்தியான்
துதியொடெண் டிசைவரு தூய மன்னவர்
கதிர்முடி யளிசெறி கமலத் தாளினான். (5)

எங்கணுந் தன்னுயர் வினைவி லாண்மையால்
பங்கமில் விசையதம் பங்க னாட்டினான்
தங்குறு தன்பிர தாபத் தேசினால்
எங்கணுஞ் செம்மைநின் றிலகச் செய்துளான். (6)

மாற்றலர் மகளிர்தம் மயங்கு பூணினம்
மாற்றிடு மாற்றலான் மன்னு விண்ணவர்
போற்றுறு மறையவர் புகழு மானினம்
ஏற்றிடு தயாற வினிதி னோம்பினான். (7)



மன்னு வேள்விகள் விதிவழியி னாற்றுதல்
அன்னதா னஞ்செயல் அறவின் பந்தர்கள்
கொன்னுற வமைத்திடல் கூபம் வாவிகள்
நன்னிலை பெறற நனிய மைத்திடல். (8)

ஆலயப் பணிபல வன்பி னாற்றுதல்
சீலமார் பூம்பொழில் சிறக்க வைத்திடல்
மேலவர் புகழும்வி வியன றங்களைச்
சாலநன் முயற்சியாற் றனி யற்றினான். (9)

நீதிநூல் முழுதுணர் நிபுணன் மூவகை
ஓதுறு மாற்றலி னுயர்ந்தொ ளிர்ந்தவன்
மேதகு ரதமுதல் நீளம்பு நால்வகைத்
தீதகல் சேனைகள் சிறப்பக் கொண்டுளான். (10)

முத்திசா தனவகை முறைவி ருப்பினான்
தத்துவ முணர்ந்துசித் தாந்த மோதினான்
வித்தக மறைவலான் வணங்கு சற்குணன்
உத்தம வறமுத லுறுதி வேண்டினான். (11)

சினமிலி வாய்மையான் றங்கள் போலுமா
கனவொளி சிறந்துளா னமைமை யென்றுமே
மனமிசை வைத்திடு மாசில் பத்தியான்
வனமுறு குசைநுனி வயங்கு புத்தியான். (12)

(வேறு)

இன்ன தன்மைசே ரிணையில் மன்னவன்
மின்னு மச்சுவ மேத மாகம்
தன்னை யாற்றுவான் றாசி லேந்தரோ
அன்ன கொள்கைதன் னமைச்ச ரோதினான். (13)

அங்கவ் வார்த்தைகேட் டமைச்சர் சூழ்ந்திடாப்
பொங்கு மேன்மையிற் புவியி னாருறும்
எங்கள் கொற்றவா விதுநன் றேனைத்
தங்கு காதலாற் சாற்றி னண்டினர். (14)

சகர னவ்வழித் தவவசிட் டன்முன்
புகரின் மாதவர் பொருவி னான்முறை
பகரு மாறுதான் பரிவி னோடுமே
நிகரில் வேள்வியை நெறிதொ டங்கினான். (15)

மாசி லன்மறை வழிய மைத்தசீர்
வாசி யொன்றினை மருவு புத்திரர்
ஆசி லாதுகாத் தணைய விட்டனன்
ஏசி லற்செய லினிதி னாற்றினான். (16)

என்ப தர்த்தனை யிவண டைத்திடும்
என்ப துன்னியே யிகலி லிந்திரன்
அன்ப தில்லனா யதரி னப்பரி
வன்பின் மாயையின் மறைந்து வௌவினான். (17)

மடிவி லப்பரி வடிவி னார்த்திடாக்
கடிது கொண்டுபோய்க் கபில மாதவன்
புடைபி ணித்தனன் பொருவி றன்னகர்
அடைத லாயினா னமரர் நாதனே. (18)

(வேறு)

தக்கதம் புரவி காணார் தளர்ந்தனர் சுரராசன்
மக்கடா மாவா வென்று வருந்தினர் [illegible] பாய்ந்து
மிக்கதா னகங்க டோய்ப்ப விம்மி யானங் கறுத்துப்
புக்கனர் தந்தை தன்பாற் பொருமலு றவனை நோக்கி. (19)

எந்தைநீ பணித்த வாறே யிதமுறு குதிரை யின்பின்
சிந்தையா தரத்திற் காத்துச் செல்லுஞ் சென்ற போதில்
இந்தமார்க் கத்திற் சென்ற தெனியாந் தெரியா வண்ணம்
அந்தமா மறைத லுற்ற ததிசய மென்று சொன்னார். (20)

சிறுவர்சொற் கேட்ட போது நிருப னுயிருக்க
மறவிலாச் சகர னுள்ளம் வருந்தியே மூர்ச்சை யானான்
உறவராம் வசிட்டன் முன்னே குதவியின் மூர்ச்சை தீர்த்து
பெருமகார் தம்மை நோக்கிப் பின்ன ருரைக்க லுற்றான். (21)

615



மக்கணீ ருலக மெங்கு மருவியே துருவி யஞ்சத்
தக்கமா பள்ளங் கண்டு சார்ந்ததன் வழியே பார்த்து
மிக்காம் பரியாண் டேனும் வெளிப்படி னதனைப் பற்றி
இக்கெனக் கொணர்கு வீரென் றிகலுறு சகரன் சொன்னான். (22)

அங்கது கேட்டு மைந்த ரனைவரும் புறப்பட் டேகிச்
சிங்கவில் வனங்க ளோடு சிறந்திடு மலைக ளாதி
எங்கணுந் தேடிக் காணா ரிகன்மிக வுடைய ரேனும்
பொங்கரு ரதனைச் சோர்ந்து புலர்ந்துநீர் விடாய்மி குந்து (23)

சிந்தைகொள் கூப னாலிற் செறிவிதி தெரிந்து புற்று
வந்தமை யிடத்து நப்பண் மருவுறுஞ் சுதையென் றோர்ந்தே
அந்திலோர் பற்றுக் கண்டங் ககழ்தலும் மதனுட் கண்டார்
கந்தினிற் கபிலன் பாங்கர்க் கட்டியார் குதிரை யம்மா. (24)

இந்திரன் கபிலன் பாங்க ரினிதுற நாட்ட லுற்ற
அந்தமில் கீல மென்னு மாணியிற் குதிரை தன்னைப்
பந்தனஞ் செய்த வாற்றாற் பாரிலத் தலத்தி னுமம்
இந்திர கீல மென்றா ரிருடிகள் சிவையே யோர்தி. (25)

மன்னவன் மைந்தர் தங்கள் வாசி கண்டக மகிழ்ந்தும்
பன்னரும் விடாய்கொண் டுள்ளம் பகர்தமோ குணமே லிட்டே
இன்னநற் சித்தன் றானே யெம்பரி கவர்ந்தா னென்று
முன்னினர் கபில னுக்கு மொழிந்தனர் வசைகள் கோடி. (26)

கண்டன ரதன்பின் னன்னோர் கபிலன்முன் னமுத ரூபர்
கொண்டமர் சமதி லிங்கங் கொண்டதம் மயக்கி னாலே
எண்டரு மிலிங்க மேன்மை யெண்ணல ருச்சி மீது
தண்டலில் கரங்க ணீட்டித் தாமழு மெடுக்க லுற்றார். (27)

அருந்துமா றமுதெ டுக்கு மவர்களை யுடனே கண்டான்
அருந்தவத் திருந்த மேன்மை யணிகெழு கபில னென்பான்
மருந்தது வமைந்த லிங்க மதிக்கிலர் நிந்தை பண்ணு
திருந்தலர் எவரோ வென்று சீறியே நோக்க லுற்றான். (28)

ஆங்கவன் பார்த்த லோடு மவன்விழி வழிசேர் கோபத்
தீங்கன லதனிற் பட்டுச் செயலிழந் துணர்வ ழிந்து
தாங்கருந் துயரத் தோடு சாம்பரே யான மாதோ
ஆங்கமர் சகரன் மைந்த ராகிய*சலபம் யாவும். (29)

புத்திர ரழிவா லைந்து புலம்பிய சகரன் பின்னர்
ஒத்தசம் மருளால் வாசி யொன்றுறப் பெற்றுக் கொண்டு
வித்தக வேள்வி தன்னை வியத்தக முடித்தா னப்பால்
வைத்தநா ளெல்லை யின்பின் வானுல கடைந்திட் டானே. (30)

அவன்வழிப் பகீர தன்றா னலைகடல் பலநா ளாடித்
தவமிகப் புரிந்து நம்பாற் சானவி தான டைந்தே
அவமுறு சகரன் மைந்தர்க் கணிதருப் பணநன் றாற்றி
அவரெலா முவனை யேறி யருணல மருவச் செய்தான். (31)

இந்திரகீல நாமகரணமுற்றிற்று. ஆக (254)

## கபிலனருட்பேறு.

நின்றிட வினைய தன்று நிகழ்வுறு சகரன் மைந்தர்
ஒன்றிய நமதி லிங்கத் துறுசதை பெறக்கை வைத்துத்
துன்றிய மறுவைக் கண்டு சொல்லருந் துன்ப மிக்குக்
கன்றிய மனத்த வனாகிக் கபிலனங் கலமந் தானே. (1)

அடியவ னெடிது துன்பா லலமரு நிலைகண் டோராங்
கடிதினின் மலைவளர்ந்த கன்னியே நின்னோ டன்று
படியிலிந் திரகீ லத்திற் பண்டுதோன் றிலிங்கத் தூடே
படர்மிகு கபிலன் காணும் படிவெளிப் பட்டா மன்றே. (2)

கண்டனன் கபில னம்மைக் களிமிகப் புளக மேனி
கொண்டன னுடல்பூ ரித்தான் குலவிரு விழிகள் கண்ணீர்
விண்டனன் றடுமா றிச்சொன் மிகத்துதித் தாடி நம்முன்
மண்டனி லாடி னானை மறந்தனை போலு மாதே. (3)

*சலபம் — விட்டிற்பறவை.



அன்றநா மெழுக யோகி யகமிக மகிழ்ந்தாங் துன்பங்
ஒன்றுத லொழிநீ யோரா லுற்றநம் மிலிங்கத் தக்கு
நின்றது குறையே னுந்தா னீங்கலா தமர்வ மீதில்
என்றுரை செய்தாங் கேட்டே யின்பவா ரிதியி லாழ்ந்தான். (4)

(வேறு)

எமதடியே நினைவுறுமா னந்த மூழ்கி
யேமமகல் காரியத்தை யொழித்து நூலின்
அமைவுடைய நித்தியமை மித்தி கங்க
ளான பிரா யச்சித்த முபாச னந்தான்
கமையுடனே செய்தவனுய்ச் சித்த சுத்தி
கண்டுநித்த வனித்தமுறை யுணர்வி வேகம்
சமையுமிரு மையிற்சுக போகத் துவர்ப்புச்
சாந்தியொடு தாந்தியிவை சார்ந்தோ னாகி. (5)

அரியசிவ தீக்கையொடு குருவி னல்லே
தாந்தவுயர் வாக்கியத்தில் விசுவா சந்தான்
பெரிதடைந்து பரகதியி லிச்சை வைத்துப்
பேசுமுப தேசநனி வேண்டி நின்றே
உரியசமா தியிலமர்ந்து வினைதீர்ந் தெம்பா
லுளமிசைந்த கபிலனுக்கன் றருளான் மாதே
தெரியமறை முடிவினரும் பொருள்போ தித்தாஞ்
சித்தாந்தத் திறமுமதே தெரியுங்காலே. (6)

கபிலனருட்பேறு முற்றிற்று. ஆக (260)

## முடிபுரை.

மேலதா நாம்புகல் விளங்கு மிந்திர
கீலநன் மான்மியங் கிரிம டந்தையே
சாலவன் போதவார் தகவிற் கேட்பவர்
கோலமா நந்திருள் கூடு வார்களே. (1)

இத்தல மேன்மைக ளெண்ணி லாதன
அத்தனை யுஞ்சொல லரிதி யாமிவண்
உத்தம சத்தியே புறச்சு ருக்கியே
சித்தான் றமைதரச் செப்பி னுமரோ. (2)

மறையவ னித்தல மான்மி யந்தனை
நிறைதரு மன்பினு னெறியி னோதுமேல்
மறையினற் பொருளெலா மரபி னோர்ந்துபின்
உறையுநம் முலகினி லும்பர் போற்றவே. (3)

மன்னவ னித்தல மான்மி யந்தனை
மன்னுறு மன்பினன் மரபி னோதுமேல்
இந்நில முழுதுமாண் டிருந்த ரம்பையர்
நன்னலந் துய்த்தபின் னண்ணு நம்பதம். (4)

வணிகனித் தலத்துறு மான்மி யந்தனை
அணிபரி வோதுமேல் அநேக கோடிபொன்
மணியுள பிரபுவாய் வாழ்ந்து பின்முனி
கணமொடு மருவுநங் கயிலை வெற்பினே. (5)

சாலவே ளாளனித் தலத்தின் மான்மிய
நூலதை யோதுமே லுவலுஞ் செல்வனாய்ச்
சீலமா முனிவனாய்ச் சீவன் முத்தனாய்
மேலைநம் பதமிசை மேவு வானரோ. (6)

தேவியே முனிவருஞ் சித்த ரும்பிறர்
எவரும் வேண்டிய தினிதி னெய்துறத்
தாவில்கா ரணமதித் தலத்தின் மான்மியம்
மேவிய காதலின் விரும்பி யாய்தலே. (7)

(வேறு)

இந்த வாய்மைக ளெம்பெரு மானரு ளியம்பச்
சிந்தை மாமகிழ் சிறந்தல கருள்புரி கவுரி
அந்த விந்திர கிலமே லகனி யமர
எந்தை மாமுக மினிதுபார்த் தியம்புத லுற்றாள். (8)



பரம னேயருட் பரவையாய் விரவிய பதியே
வரமு றிந்திர கீலமா மாண்பெயர் மருவித்
தரணிமீ துளதலத் தினுமி ருவருஞ் சததம்
மருவி யின்பொடு வசிக்குதும் வருகென வருத்தாள். (9)

(வேறு)

அந்தவார்த் தையினைக் கேட்டே யகமகிழ்ந் தருளின் வைப்பாம்
இந்தணி சடையெம் மண்ண லினிதென வம்மை யோடும்
சந்தமால் விடையி லேறித் தரணியின் மருவித் தென்பால்
இந்திர கீலந் தன்னி லிருந்தருள் புரிந்தா னன்றே. (10)

(வேறு)

புகழுறு நயிமி சாரணி யத்திற் புனிதமா முனிவர்காள் கேண்மின்
அகமகிழ்ந் தினிது கேட்பவர் வினைக ளகற்றியே போகமோக் கங்கள்
தகவினி லருளு மிந்திர கீலத் தலத்தின்மான் மியமிது சுருக்கிப்
புகலுத லுற்றேன் முழுதுமே விரித்துப் புகலுற வல்லவ ரெவரே. (11)

(வேறு)

சூதமுனி யோதியவை யன்பிற் கேட்டே
சுகநயிமி சாரணிய முனிவ ரெல்லாம்
மேதகைய வாகந்த விழிநீர் வாரவியனுடலின்
மயிர் சிலிர்ப்பத் தொழுதே யெந்தாய்
பூதலமே லோதுபல தலங்க ளுள்ளே
புத்தியொடு முத்தியருள் விசேட மான
எதமிலிந் திரகீல மேன்மை யின்றே
யினிதறிவித் தருளினையுய்ந் தனமு மென்றார். (12)

(வேறு)

எத்தலங் கபில னற்றலம் பலகா லியற்றியே யமுதரு வுதித்த
உத்தம லிலிங்கம் பத்தியால் வழிபட் டுறுபல பகலியோ கமர்ந்தான்
அத்தலத் துமையாம் சத்தியோ டுற்றே யவற்குநன் மறையுப தேசம்
வைத்தவ னமரு நித்தனும் பதிபால் வண்ணகா தன்கழல் போற்றி. (13)

எந்தநற் றலத்திற் பவச்சுவாமியென்பா னிருந்தவம் புரிந்தரு
[ளடைந்தான்
எந்தநற் றலத்திற் காசியபன் றவஞ்செய் திந்திராதியர்களைப் பெற்றான்
அந்தநற் றலமா மிந்திரகீலத் தடியவர்க் குமையொடு மருள்செய்
வந்தவெம் பெருமான் சந்தமார் தருபால் வண்ணநாதன்கழல் போற்றி.

தலமெதிற் கௌசி கன்ற னஞ்சயனுந் தவம்புரிந் திருந்தரு ளடைந்தார்
தலமெதில் வாச வேயயா கஞ்செய் தனனருள் கவுதமன் பெற்றான்
தலமதாய் விளங்கு மிந்திர கீலந் தனிலுமை யொடுநனி வாழ்ந்தே
வலமுற வெவர்க்கு மருளினைச் செய்பால் வண்ணநா தன்கழல் போற்றி.

(வேறு)

பூமியெலா மாமழைவிண் பொழிந்து வாழ்க
புரவலர்கள் பரவுசெங்கோல் புரந்து வாழ்க
மாமறையா கமநெறியே வளர்ந்து வாழ்க
வளம்புலவு முளத்திகழ மகிழ்ந்து வாழ்க
எழுமுறு தமிழ்வேத மினிது வாழ்க
இனியபல புராணவகை யெல்லாம் வாழ்க
நாமமிகு சிவபூசை யடியார் பூசை
நற்றவதா னங்களெங்கும் வாழ்க வாழ்க. (16)

முடிபுரை முற்றிற்று. ஆக (276)

(திருக்கழிப்பாலைப் புராணம் முற்றுப்பெற்றது.)

திருச்சிற்றம்பலம்.

இது, கலியத்தம் 5014-க்குச் சரியான (1912)
பரிதாப௵ ஆவணிமாதத்தில்
நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதர்
பாடியது.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இந்திரகில புரப்பெயர்த் திருக்கழிப்பாலைப் புராண வசனச் சுருக்கம்.

## (1) கடவுள் வாழ்த்து.

காப்பு.

திங்களங் கலைநதி திகழுஞ் செஞ்சடைச்
சங்கரன் மலைமக டனயன் யாவரும்
மங்கல வினையின்முன் வழுத்த வேயருள்
ஐங்கரன் மலரடி யகத்திற் கொள்ளுவாம்.

இந்நூலாசிரியர் இருபது பாடல்களால் ஆகிய இக்கடவுள் வாழ்த்தில்:- விநாயகர், சிவபெருமான், நடராஜா, சிவகாம சுந்தரி, பால்வண்ணநாதர், வேதநாயகி, செல்வ விநாயகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், தக்ஷிணாமூர்த்தி, திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர், திருத்தொண்டர் சுவகுரவர் முதலானவர்களைத் தொழுது போற்றி "மாதமும் மாரி பெய்க" என்னும் வாழ்த்துப்பாவுடன் இனிது விளங்கச் செய்கின்றனர்.

## (2) அவையடக்கத்தில்.

ஆறு பாடல்களால் ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திர மான்மிய உத்தர காண்டத்திருந்து மொழி பெயர்த்ததையுங் கூறுகின்றனர். அன்றியும் இதில் இந்நூல் ஆசிரியரது அடக்கம் முதலிய அருங் குணங்களும் புலப்படுகின்றன.

## (3) சோழநாட்டுச் சிறப்பு.

இதில் 51 செய்யுட்களால் மழை, யாறு, நாடு நகரம் முதலியவற்றைச் சிறப்பிப்பதோடு, காவிரி நதி, சையகிரி மலையிற் றோன்றி குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலையாகிய ஐவகை நிலங்களிலும் பாய்ந்து வளப்படுத்தி உயிர்களைக் காப் பாற்றி வருந் தோற்றம் பரமசிவனைப் போன்றும் பார்வதி, கணபதி, குமரன், மகாவிஷ்ணு, இந்திரன், பிரமதேவன்

போன்றும் விளங்குகின்றது என்று கூறி அவைகளுக்குத் தக்கவாறு கற்பனைசெய்து அமைத்திருப்பது பார்த்து மகிழத்தக்கதாகும். காவிரியின் உற்பத்தி கூறுமுகத்தான், இந்திரன் பொருட்டுக் கணபதி, அகத்தியர் கமண்டல நீரைக் கவிழ்த்தல் என்று கூறும் பாடல் மிக அழகுடையது-காவிரியை-பொன்னி-பெரும் புனல் என்னும் பல பெயரால் உலகர் அழைக்கின்றனர். இந்த நதி பாயும் நாட்டைச் சோழர் பரம்பரையினர் அரசாண்டனர். சிதம்பரம்-நாகை-சீர்காழி-திருவாவடுதுறை முதலிய தலங்களை உடையது சோழநாடு. திருஞானசம்பந்தர் தண்டியடிகள். அப்பூதி நாயனார் சண்டேசுரர் ருத்திர பசுபதிநாயனார் முதலிய திருத்தொண்டர்கள் அவதரித்த நாடு சோழநாடு. சூரனுக்கு அஞ்சி இந்திரன் மனைவியோடு வந்து தங்கி நல்வாழ்வு வாழ்ந்த புகலித்தலத்தை யுடையது சோழநாடு என்பதும் தெளிவாகிறது. அந் நாட்டு மாந்தர் பதி பசு பாச இலக்கணம், முத்தி சாதனம், ஆகமப் பயன், சித்தாந்த சைவம், பன்னிரு திருமுறைகளின் பாராயணம், சைவசீலம் முதலியன பொருந்தி யுள்ளவர்களாய் இருப்பதால், இந்த நல்ல நாட்டில் உள்ள எல்லாச் சிவத்தலங்களுள்ளும் வாசித்தி தரவல்ல சிதம்பரத்தின் கீழ்பால் விளங்கும் இந்திரகீலப் புரப்பெயர்த் திருக்கழிப்பாலை மிக மிகச் சிறந்த ஸ்தலமாகும் என்றும் கூறப்பெறுகின்றது.

## (4) புராண வரலாறு.

புராண வரலாற்றில்:- வெண்மையான சந்திரனையணிந்து பார்வதியம்மையை இடப்பாகத்திலுடையவராகிய சிவபெருமானை வழிபடுகின்றவர்களும், வெண்ணீறு, உருத்திராக்கம் முதலிய சிவ சின்னங்களைத் தரித்தவர்களும், ஐந்தெழுத்தையே ஜபமாகக் கொண்டுள்ளவர்களும், மான் புலி முதலியவற்றின் தோலை ஆசனமாகக் கொள்ளுபவரும், தருப்பைப் பவித்திரங்களையுடையவர்களும், முத்தீ வேட்பவர்களும், சதா சிவபெருமானுடைய அருள் திறங்களைப் போற்றுபவர்களும், மூர்த்தி, தலம், தீர்த்த மாகிய வற்றுள் பேரன்புமிக்கவர்களும் ஆகிய சவுனகாதி ரிஷிகள் தங்கள் தங்குமிடமாகிய நைமிசாரணியத்தில் சத்திர யாகஞ் செய்வதற்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

அச்சமயம் வியாச முனிவர் மாணவரும் அவர்பால் புராணங்கள் எல்லாவற்றையும் அறிந்தவரும், சிவமே பரம்பொருளென்பவரும், சிவ சின்ன தாரணரும், ஐந்தெழுத்



தோதுபவரும், நல்ல கல்வி கேள்வி அறிவு ஒழுக்க ஞானங்களிற் சிறந்தவருமான சூதபுராணிகர் அவ்விடம் வந்தார்.

அவரது வருகை கண்ட நைமிச முனிவர்கள் சிந்தையிற் பொருந்திய அன்புமிகுந்து உபசரணைகள் பலவுஞ்செய்து, அவர் பொன்னார் திருவடியிற் சிரமுறத் தாழ்ந்து வணங்கி ஐயனே! பரிசுத்த பேரறிவுடையவரே! புராணிகரே! சந்தேகமில்லாமல் சித்தாந்த நூல்கள் யாவும் அறிந்தவரே! சங்கரனை வழிபடுபவரே! குருபரனே! நீர் நீடுவாழ்வீராக. சரணம் சரணம் பன்முறை சரணம் என்று துதித்துத் தேவரீர் முன்னொரு காலத்தில் பல க்ஷேத்திர தீர்த்த மூர்த்தி மஹாத்மியங்களைத் திருவாய் மலர்ந்தருளியபோது சிதம்பரத்திற்குச் சமீபத்தில் சூய்யதீர்த்தமும், அதன் கீழ்பக்கம் இந்திரகீலமெனும் தலமும் உண்டென்று உரைத்திருக்கின்றீர்கள். எனவே, யாங்கள் எல்லாருமேயன்றி இவ்வையகம் முழுவதுமே உய்யுமாறு தெரிவித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள்.

அம்மொழிகேட்ட அக்கணமே, பக்தியும் அருளும் பாந்த பாங்கராய் அம்மையப்பர் திருமால் வடிவ வியாசர், சாஸ்வதி முதலானோரைத் துதித்துச் சவுனகாதிகளைப் பார்த்துத் தபோதனர்களே கேண்மின்! இத்தல மகிமை கேட்டோர் எல்லாரும் சிவமேயாவர். ஏனெனில் இது எல்லாத் தலங்களினுஞ் சிறந்தது. இன்னும் சொல்லப்புகின் ஸ்ரீ சிதம்பர நடராஜமூர்த்தி இவ் விந்திரகீலக்ஷேத்திரத்தைப் பார்த்த வண்ணமாகவே குற்றமில்லாத ஆனந்தத்தாண்டவம் புரிகின்றார். அன்றியும் நாம் நம் குருநாதன்பால் கேட்டறிந்தது மன்றிப் பின்னும் பல மகிமைகளையும் சொல்லுகிறோம் கேளுங்கள். இது முக்கண் மூர்த்தி உமையம்மைக் குரைத்தபடி வான் முறையாக வந்த வாறும் காண்கவென்று தலவிசேஷம் கூறுவாராயினர்.

## (5) தலவிசேடம்.

திருக்கயிலாய சிகரத்தே தேவர் இருஷியர் இயக்கர் முதலாயினார் இறைஞ்சி ஏத்த உமையம்மையோடு திருவோலக்கங் கொண்டுள்ள தேவ தேவன்பால் கருணை யுருவாகிய ஸ்ரீ பார்வதி தேவியார் எழுந்தருளி வணங்கி எல்லாம் வல்ல இறைவ! உலகிலுள்ள ஜீவாத்துமாக்கள் தத்தம் பாசமகன்று

உயர்ந்த பேறடைதற்குச் சாதனம் யாதென்று பணிந்துகேட்க, பரமபதி கீழ்க்காணுமாறு சொல்லியருளுகின்றார்.

ஞானம் ஒன்றே வீட்டுப் பேற்றினை நல்கும். இது ஆகம முடிபு. அது மித்தையாம் பற்றினை விடுத்து நிற்பது. இது தூயமனத் தொண்டர்பால் நண்ணுவது. இந்த ஞானம் அடைதற்கு வேதியர், சைவர், வேதம், ஆகமம், புராணம் முதலாயினவிடத்துத் தீவிர பக்தி வேண்டும். இன்னுமோர் திறனுமுண்டு அஃதாவது நம் தலத்தில் எவர் தம் உடலை விடுகின்றனரோ அவர் ஞான கைவல்யம் அடைவர். ஆதலால் விசேடித்த ஸ்தலங்களே நலம் பயப்பன.

இப்படிப்பட்ட ஸ்தலங்களில் பிரமகத்தி முதலிய தீவினை புரிந்தவர்களுக்கும் நல்லுபதேச வாயிலாக நன்மையே செய்விப்போம். உலகில் இவ்வாறான தலங்கள் பல இருப்பினும் அவற்றுள் சிறந்தனவாய் விளங்குவன கயிலை, காசி, காளத்தி, அண்ணாமலை, காஞ்சி, திருமுதுகுன்றம், சிதம்பரம் முதலியனவும் பிறவுமாம். இவற்றுள் விராட்டெனும் நம்முரு பொருந்திய இருதயத் தானமாய்ப் பிரகாசிப்பது சிதம்பரமெனுந் தில்லையம் பதியே யாகும். இதில் சிவகங்கையென்னுந் திவ்விய தீர்த்தமும் கங்கையாதி தீர்த்தங்கள் யாவற்றுள்ளும் சிறந்ததாய் விளங்குகிறது. இதற்குத் தென்பால் விளங்குவது சிற்சபையென்னும் பொற்சபையே யாகும். இதில் நாம் பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலாயினோர் துதித்தேத்த ஆனந்தத் தாண்டவமாடி உலகிலுள்ளோர் இன்பம் அடையச் செய்கின்றோம்.

இத்தலத்திற்குக் கீழ்த்திசையிலே சந்திர மண்டலம் போல விளங்குவது இந்திரகீலமென்னும் ஸ்தலமாகும். இது அனந்தம் விளைப்பதாகும். இதிற்றான் முன்னொரு காலத்திலே கபில முனிவன் பலகாலம் தவம் செய்யக் கன்னியே நின்னோடு அவனுக்குக் கருணை பாலித்ததால் அன்னோன் சிறந்த சாங்கியமென்னும் நூலினை முறையாக வகுத்தான்.

மேலும் கேட்பாயாக தேவியே! முன்னொரு காலத்திலே சகரபுத்திரர்களாகிய சாகரர்கள் இங்கு வந்து தோண்டிய போது புற்று வடிவில் நின்னொடு சச்சிதானந்த மூர்த்தமாய்க் காட்சியும் தந்துள்ளோம். அன்றியும் காசிபன் அதிதி வாயிலாய்த் தேவர்களைத் தோற்றுவித்தனன். வில்வலன்-வாதாவியை





அழித்த அகத்தியனும் பூசித்துப் பாவ விமோசனம் பெற்றுள்ளான். பவச்சுவாமி என்றழைக்கப் படுகிற நாராயணன் இலக்குமியோடு வந்து நம்மை வழிபட்டு மறையின்மாபாடியமும் செய்துள்ளான். இவனே வேதவியாசனுமாம்.

இமக்கொடியே! இன்னுங் கேட்பாயாக நாம் திருவிடைமருதூர், திருக்குடந்தை, மாயூரம், திருவையாறு, திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம், திருமறைக்காடு, திருவலஞ்சுழி, திருவாரூர், மதுரை, சேது முதலான பற்பல தலங்களினும் நின்னோடு அமர்ந்து ஆன்மாக்களுக்கு நல்லருள் பாலித்து வருகிறோம்.

எனினும் இவற்றுளெல்லாம் மிக்க இஷ்டசித்தியும் வரம் பலின்பமும் தரவல்லதாய் விளங்குவன, சிதம்பரம் காசி இந்திரகீலம் இம் மூன்றுமேயாம். இன்னும் இம் மூன்றுள்ளும் இந்திரகீலமே உத்தமோத்தம தலமாகும். எனவே, இவ் விந்திரகீலத்தைப் பேசக்கேட்போர், பார்ப்போர், இதில் வதிவோர், பூசிப்போர் முதலானோர் பேதகு புத்தியும் முத்தியும் பெறுவர் என்று திருவாய் மலர்ந்தருளினர் எனச் சூதபுராணிகர் சௌனகாதி இருடிகளுக்கு மொழிந்து மேலும் உரைப்பாராயினர்.

## (6) தீர்த்த விசேடம்.

ஹே! தேவி. பதஞ்சலியென்பான் நாம் சிதம்பரத்தில் செய்தருளும் திருநடனந்தரிசித்த பாக்கியத்தால் இவ் விந்திரகீலபுரமாம் திருக்கழிப்பாலை அடைந்து மாபாடியமாம் மோடியோக நூலையும், சயிமினி முனிவன் பூர்வமீமாஞ்சை கரும காண்டம் ஆகிய நூலையும் செய்துள்ளார்கள். ஆகவே, இக் கழிப்பாலை ரகசியத்துத் தானமாய் விளக்கந் தருவது. நீயும் நானுமாய் ஏகபோகமாய் மகிழ்ந்திருக்கும் இடம் இதுவேயன்றி ஏனைய வல்ல.

இந்த க்ஷேத்திரத்திற்கு வட திசையில் சதானந்தபோதினி தீர்த்தமும், யமதிசையில் சிவபுட்கரணி தீர்த்தமும் இருக்கின்றன. இவற்றுள் சதானந்தபோதினி அகிலலோக தீர்த்தங்கள் எல்லாவற்றுள்ளும் மேலானது. இவை இரண்டற்கும் இடையே கிழக்குத் திசையில் கங்கை, சரஸ்வதி, யமுனை தீர்த்தங்களினும் சிறந்ததான பூரணானந்தாமிர்தம் என்னும்

புண்ணியதீர்த்தம் ஒன்றுண்டு. அதன் பக்கத்தில் பக்தர்கள் தத்தம் பேர்களால் அமைத்த தருமச்சாலைகள் அநேகம் உண்டு.

திருவாலயத்திற்கு மேற்கில் அற்புத மிக்க சாம்பவ தீர்த்தம் ஒன்றுண்டு. அதில் நாராயணன் தனது பன்னி இலக்குமியோடு ஆடிச் சிறந்த சித்தியெல்லாம் பெற்று இருக்கிறார். இன்னும் அங்கே காபில தீர்த்தம், அகத்திய தீர்த்தம், அயித்திராவருண தீர்த்தம், இந்திர தீர்த்தம், காசிப தீர்த்தம், காணபத்திய தீர்த்தம்; தாரன்க தீர்த்தம் முதலியனவும் விளங்கி பல ஆன்மாக்களின் பவப்பிணிகளையும் போக்கியுள்ளன. மேற்கண்ட நாராயண தீர்த்தத்திற்கும் பக்கத்தில் இலக்குமி தீர்த்தம் மேலானதாகும். அதில் வேதாகமவிதிப்படி முழுகி திருவைந்தெழுத்தைச் செபிப்பவர்கள் தாம்மாத்திரமன்றி தமது மரபினர்கள் எல்லாரும் அரிய பண்டிதர்களாமாறு விளங்குவார்கள். இதற்கு வடபக்கலில் மிக விசேஷ தீர்த்தம் ஒன்றுண்டு இவ்விரண்டிற்கும் மத்தியில் உள்ள குய்ய தீர்த்தத்திற்குச் சமீபமாக இருக்கும் மணல்களெல்லாம் உண்மைச் சிவலிங்கங்களாகவே தரிசிக்கத்தக்கனவாம். இன்னும் சுருங்கச் சொல்லப் புகின் பசுக்கால் குளம்புபதிகுழி நிறைய நீரும் உலகத்திலுள்ள உயரிய தீர்த்தங்கள் யாவற்றுள்ளும், புனிதமானதென்று புலனையே நீ புந்தியில் கொள்வாயாக!

ஏ பார்வதி! இன்னும் கேட்பாயாக! இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் தேவர்கள், சித்தர்கள் முதலாய விண்ணோர்கள் எல்லாரும் நம்மைத் தரிசிக்கவேண்டி மரங்களாகவும் செடிகளாகவும், கொடிகளாகவும் விளங்கி வசிக்கின்றார்கள். அக்கினிட்டோமம் குளங்களமைத்தல், தர்மங்கள் செய்தல் முதலிய பதிபுண்ணிய பசுபுண்ணியங்களில் ஈடு பட்டோர் பெறும் பேறுகளைப் பார்க்கிலும் இத்திருத்தலம் என்று மனத்தில் பத்தியோடு நினைப்போர் பெறும்பேறு சிறந்ததேயாகும். இங்கு வந்து வசிப்பவர்கள் சாஸ்வதமாக இதிலேயே உள்ளவர்கள் நம்மைத் தரிசிப்பவர்கள், கங்காஸ்நான, சேதுஸ்நான பலன்களிலும் மிக்க வாசித்திபெறுவர். இதில் கொஞ்ச நேரம் தங்கிப் புறப்படுவர்களும்கூட மறு பிறப்பையடைய மாட்டார்கள். அன்றியும் அவர்கள் தர்மார்த்தகாம மோக்ஷங்களையும் அடைவர். இவ்வூர்ப் பெரியோர்களில் ஒருவரை தரிசிப்போர் அஸ்வமேதம் முதலிய யாகாதிகளின் பலன்களினும் மிக்க பலன்



களைப் பெறுவர். இவ்வூர்ச் சைவ சீலர்களைக் கண்டால் இயமதூதர்கள் விரைந்தோடுவர். இத்தலத்தை நினைத்தமாத்திரத்தே பிரம்மஹத்தி ஓட்டெடுக்கும். வேறு தலங்களில் செய்த தீமைகளும் இங்கே அழிந்தொழியும். அத்தல வாசிகளின் மேற்பட்டு வீசும் காற்றுப்பட்டோர் எல்லாரும் பாவ நிவாரணிகளாவார்.

சித்திரை மாதம் முழுவதும் காபில தீர்த்தத்தில் மூழ்கித் தருப்பணாதிகள் செய்வோர்களின் பிதிர்கள் நன்மை பெறுவார்கள். உத்தர காவேரி யென்னும் கொள்ளிடத்தில் மகர மாச சூரியசங்கிரம காலத்திலும் பூரணை நாட்களிலும் ஆகம விதிப்படி ஸ்நானஞ் செய்பவர்கள் ஏ! சங்கரீ நாமேயாகிப் பிரகாசிப்பார்கள். மேஷராசியிலே சண்டன் விளங்கும்போது சித்திரா நட்சத்திரமும் பூரணையும் கூடிய காலத்தில் ஆனந்த போதினியில் மூழ்குவோர்கள் மோக்ஷம் அடைவார்கள். பிரதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் விதிப்படி காபில தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோர்கள் வேதம் நான்கும் மனனம் பண்ணும் வேதபாரகர்களாய் விளங்குவார்கள். அன்றியும் பன்னூல்கள் இயற்றும் பான்மையருமாவர். இவ்வாறுமல்லாமல் அநுதினமும் மூழ்குவோர் நல்ல வாக்குப் பலிதராகி பல்வகைச் சித்தியுமெய்தி முடிவில் முத்தியும் பெறுவர். ஒவ்வொரு வெள்ளியிலும் முறைப்படி இலக்குமி தீர்த்தத்தில் முழுகுவோர்கள் வித்தகக் கவிராயர்களாகப் பிரகாசிப்பார்கள் என்று பிஞ்ஞகன் பிராட்டியாருக்கு உரைத்தவண்ணம் நைமிசாரணிய வாசிகளுக்குச் சூதமாமுனிவர் கூறிக் கபிலன் தவநிலையைக் கீழ்க்காணுமாறு சொல்லத் தொடங்கினர்.

## (7) கபிலன் தவநிலை.

உமையே! முன் ஒரு காலத்திலே நமது கட்டளையின்படி திருமால் ஞானசக்தியின் சொரூபியாய் உணர்தற்கரிய கபிலன் என்னும் திருநாமமுடையனாய்த் தோன்றினன். அவன் மகா யோகியாய், உலகம் புகழும் திரிபுண்டரம் உருத்திராக்கம் முதலிய சிவ சின்னதாரணங்களும், சிவ பஞ்சாக்கர மனனமும், திரண்ட சடாமுடியும், மரவுரியும், தருப்பாசனமும், ஒருயரிய தண்டமும், புண்ணிய தீர்த்தங்கள் நிரம்பிய கமண்டலமும் அடங்கிய ஐம்பொறிகளையும், சதா நம்பால் தியானத்தையும் உடையவனாய் விளங்கினன். மேலும் அவன் சிறந்த தவம்,

மெலிந்த தேகம், ஞானநூல் பயிற்சியினால் விளங்கிய விரக்தி முதலியன வுடையனாய், நல்ல ஞானநூல் ஒன்றெழுதியுலகுக் களிக்கத்தக்க புண்ணியம் வேண்டித் தவஞ்செய்யத் தகுதியான தலம் யாதென்றெண்ணிப் புராணங்களை யெல்லாம் ஆய்ந்து, அத்திறத் தலம் இந்திரகிலமே யென்றறிந்து கொண்டனன்.

மேருகிரியில் இருடியர்கள் புடைசூழ இருந்த இத்தவசி காசியம்பதிக்கு வந்து நம்மைத் தரிசித்துப் பின் காஞ்சிபுரத்தை யடைந்து பாலாற்றில் மூழ்கி மாவடியில் விளங்கும் நம் அடி போற்றிப் பூசையுஞ் செய்து, நின்னையும் பிரமவித்தையால் அருச்சித்து, அருணாசலத்தை அடைந்து போற்றி, விருத்தாசலம் சிதம்பரம் முதலிய புநிதத் தலங்களையும் தரிசிப்பானாயினன். தில்லைக்கு வந்தவுடனே சிவகங்கையில் ஸ்நானம் செய்து நின்னைத் தரிசித்தபோது பதஞ்சலியை நின் சந்நிதியிற்கண்டு தனது சடாமகுடங் குலுங்க ஆடி ஆனந்த பரவசமுற, அந்தப் பதஞ்சலியும் தனது சடைமுடி குலுங்கக் குலுங்க ஆடிப் பாடிப் பேரானந்தப் பெருவாரியுட் டிளைத்தான்.

பின்னர் நந்திருக் கூத்தைக் காண்பிப்பான் வேண்டித் தன திருக்கைக் கழைத்துச் செல்ல, அங்கு வியாக்கிரபாதனும் வந்த கபிலனுக்கு நல்லுபசாரங்கள் செய்தனன். அங்கத் தபோ தனர்கள் புடைசூழத் தனது சீடர்களோடு பொன்னம்பலங் கண்டு நம்மைத் தரிசித்துப் பின் அவ்விருடியர் இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டு, தனது மாணவர்களோடு தென்கீழ் திசைக்கண் பூம் பொழில்கள் நிறைந்த இந்திரகிலபுரமாம் திருக் கழிப்பாலையை எய்தி, சீடர்களாலமைக்கப் பெற்ற ஆச்சிர மத்தில் தங்கிச் சிவபுஷ்கரணியில் ஆகம விதிப்படி மூழ்கித் தேவர், மாதவர், பிதிரர் முதலானவர்களுக் கெல்லாம் தருப் பணம் செய்தான்.

அதன்பின் பஞ்சாக்கினி மத்தியில் ஐப்புலனு மடக்கிக் கால்விரலை யூன்றிக் கடுந்தவமியற்றிய பின்னர் இயமம், நியமம், பிராணத்தியானம், பிரத்தியாகாரம் தாரணை முதலியன புரிந்து பதுமாசனத் தமர்ந்து நிர்க்குணத் தியானம் செய்து ஆயிரம் தேவ ஆண்டு பெருந் தவஞ் செய்தான். குண்டலி முதலிய ஆறுதாரங்கண்டு சுழிமுனையில் உண்டான வழியாகச் செல்வ தாகிய வாயுவோடு விளங்க ஒளிசெய்யும் தீபமாகிய பிரமரந்திர புரத்தினைப் பேதஞ்செய்துவந்த சந்திராமிருதப் பெருக்கால் அவன் முன்பாக ஒப்புயர்வற்ற அமுதலிங்க மொன்று



தோன்றிற்று. அது கண்டு புளகாங்கிதங்கொண்டு அநுதினமு மருச்சித்துச் சின்னாட் பணிந்து வர, அங்கே அவன் உருத்தெரியா வண்ணம் புற்று மூடிக்கொண்டது. பின்னர் விமல மூர்த்த மாகிய அவ்விலிங்கமு மவனுமாக விஷமிக்க நாகர் வாழ் பிலத்திற்சேர மாயை மறைத் தொளித்து வைத்தது. இவ்வாறாய குருநாதனை அன்னானுடைய சீடர் காணாராகித் திகைத்து நின் றனர். கபிலனோ புற்றான் மூடப்பெற்று ஆதிசேடனை யொத்து விளங்கா நின்றனன். இக் கோலம் ஆதிசேடனது கவசம் போல் விளங்கிற்று.

இத்திறப் பெருந்தவ மிழைக்கின்றது கண்ட அண்டர் நாதனாம் இந்திரன் தனது இந்திர பதவியை விரும்பித் தவம் செய்கின்றான் என்றெண்ணி அரம்பைய ராதியரை விடுத்து அவன் தவத்துக்கு இடையூறு செய்யுமாறு ஏவினன். அவர்கள் யாவரும் மன்மதனுக்கேற்ற வசந்தமும் வரும் அந்தக் காலத்தில் குயிலை யொத்த குரலாலும் மயிலையொத்த சாயலாலும் வெருட்டி மயக்கி இசையும் பாடி நடனமும் செய்து, வண்டுகள் மொய்க்குங் கூந்தல்கள் அவிழ்ந்து மணம் வீச ஆடினார்கள். இவ் வாறாக அவர்கள் தங்கள் சாகசங்களால் பலவகைப் பிரயத் தனங்கள் செய்தும் கபிலன் தவத்தினைக் கெடுக்க முடியாமற் போயிற்று.

பிறகு அவர்கள் தேவேந்திரனை அணுகி ஐயனே! நாங்கள் இந்த மூன்று லோகத்தையும் வசிகரித்து விடத்தக்க தன்மை யுடையோமாயினும் அந்தக் கபிலன் தவத்தைச் சடுகளவேனும் கலைக்க முடியாதென்று கூறிவிட்டார்கள். மலைமகளே! நமது கபிலன் இப்படியாகத் தனது தவத்தை மேலும் மேலும் ஓங்கச் செய்து வந்தான். அதனாலே அந்தலம் கபிலன் ஆச்சிரமம் எனப் பெயர்பெற்று விளங்குகிறது. எனவே, தேவி! இச் சரிதம் படிப்பார் கேட்பார் யாவரும் பிறவாப் பேறெய்துவர் என்று திருவாய் மலர்ந்தருளிய சிவபெருமானை அடியவர் சிந்தாமணியே! எந்த வகையில் இந்த க்ஷேத்திரத்திற்கு இந்திர கிலப் பெயர் எய்தியதோ அதனைத் தேவரீர் திருவாய் மலர்ந் தருள வேண்டுமென்று உமாதேவி கேட்க இறைவன் கீழ்க் காணுமாறு உபதேசிக்கலாயினர்.

(கபிலன் றவநிலை முற்றிற்று.)

## (8) இந்திரகீல நாமகரணம்.

இந்திரன் கபிலன் பாங்கர் இனிதுற நாட்ட லுற்ற
அந்தமில் கீல,மென்னும் ஆணியிற் குதிரை தன்னைப்
பந்தனஞ் செய்த வாற்றால் பாரிலத் தலத்தின் நாமம்
இந்திர கீல மென்றார் இருடிகள் சிவையே யோர்தி.

பார்வதி! முற்கூறியபடி கபிலன் தவத்தழுந்தி சமாதி பெற்றிருக்கும்போது, சூரிய வம்ச குலச் சிரேஷ்டனான சகரச் சக்கரவர்த்தி சேது முதல் இமயம் வரை செங்கோல் நடத்தித் தனது மனு வமிசம் விளங்குமாறு அரசாண்டு வந்தான். இவன் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனன். ஏழைக் கிரங்குபவன். புலவர்க்கு வரையாது கொடுப்பவன். இவன் சார்வபௌம சக்ரவர்த்தியாகலின் அவன் கீர்த்தி எங்கும் பரவிற்று. அவன் அநேக தான தர்மங்கள் செய்யும் தகைமையன். வாவி கூபங்கள் வகுத்த பான்மையன். ஆலயம் பூங்கா முதலியன அமைத்து அந்தணர் அறவோர் முதலியவர்களை ஆதரித்து வருபவன். முத்தி சாதன முறைகள் ஆய்ந்து சித்தாந்த செந்நெறிக்கண் நிற்க வல்லவன். நுண்ணிய தருப்பை நுனியை ஒத்த கூர்த்த அறிவினன்.

இத்திறத்தனாகிய இம்மன்னர் மன்னன் அசுவமேதயாகமொன்று செய்வான் வேண்டித் தனதெண்ணத்தை அமைச்சர்க் கறிவித்தான். அவர்களும் இது நன்றே யாமென்று உடன்பட்டு அவ்யாகம் இனிது முடிவதற்கான யாவும் செய்ய ஆரம்பித்தார்கள். வசிஷ்டபா முனிவரும் ஏனைய மாதவர்களும் ஒருங்குகூடி குலகுருவாகிய தவச்சிரேஷ்ட வசிஷ்டரையே பிரதான ஆசாரியராகக் கொண்டு யாகசாலை நிர்மாணித்துத் தொடங்க ஆரம்பித்துப் பிரதம பூஜாதிகளைப் புரிந்தார்கள். சுப லட்சணம் மிக்கதோர் குதிரையைத் தனது மைந்தர்கள் பாதுகாப்பில் வெளியிற் செல்ல விடுத்தனன் சகரச் சக்கரவர்த்தி. இதனைக் கண்ணுற்ற அமரேசனாகிய தேவேந்திரன் மாயையால் மறைத்து அக்குதிரையைக் கபிலன் தவச்சாலைக்கண் அவன் ஐந்தும் அவித்து யோக நிட்டையில் கண்ணிறவா திருக்கும் வேளையில் கொண்டுபோய்க் கட்டிவிட்டனன்.

இது செய்தியறியாத சகரமைந்தர்கள் சஞ்சல சித்தராய்ப் புகைபுகா இடங்களிலுங் கூடக் குதிரையைத் தேடிப் பார்த்தார்கள். பூமி முழுவதும் துருவினார்கள். ஆகாசத்தின்



அண்டங்கள் எங்குந் தேடினார்கள். அங்கெங்கும் காணாராயினர், வருந்தினர். சிதப்பாத்திற் கணித்தாய் வந்த இந்தக் குதிரை எங்ஙனம் மாயமாய்ப் பறந்தது என்று மயங்கினர் தங்களால் ஆனமட்டுந் தேடிப்பார்த்துங் காணாராய் இதனைப் பிதாவுக் கறிவித்தனர். தீட்சிதனாயிருந்த அம்மன்னர் மன்னன் அது கேட்டு மூர்ச்சித்துப் போனான். வசிட்டாதியோர் சயித்தியோபசாரத்தால் அம்மூர்ச்சையைத் தெளிவித்தனர்.

மூர்ச்சை நீங்கிய மன்னன் தனது மக்களைப் பார்த்து நீங்கள் இன்னுமொருதரம் தேடிப்பாருங்கள். எங்கேனும் பள்ளமாகிய பிலத்தைக் காணின் அவ் வழியே யுண்ணுழைந்து சென்று நமது பரியினைக்கொண்டு வாருங்கள் என்று சொன்னான். அதுகேட்ட மைந்தர்கள் வனங்கள் மலைகள் அவையடுத்த சாரற் பிலங்கள் குன்றுகள் புதர்கள் பள்ளத்தாக்குகள் ஆகிய இடங்கள் எல்லாவற்றையுந் துருவித் துருவித் தேடிக் காணாதவர்களாய்த் துயர்கொண்டு மனஞ்சோர்ந்து நீர் வேட்கை மிக்குடையராய்ச் சிந்தனையும் செல்லுவதற்கு முடியாத ஒரு அருமையான கிணற்றையும் அதையடுத்து தாமரை நூலினும் நுண்ணியதாகிய நெருக்கம் மிகுந்த வழியொன்றையும் கண்டு அதனை விசாலப் படுத்திக்கொண்டுபோக அங்கொரு புற்று இருக்கவும் அதன் மத்தியிலே விளங்குகின்ற வெள்ளை சுதை போன்றதொரு காட்சியையும் காண்கிறார்கள். அச்சுதை கறுப்புத் துணியால் மூடப்பெற்றது போன்ற புற்றினுட் டோன்றும் அமிர்தலிங்கமென்றும் அறியாதவர்களானார்கள். அதை உடைத்துச் சில்லி சில்லியாகத் தகர்க்கவேண்டுமென்று கோபாவேசமுடையவர்களாய்த் தோண்டி வெட்டி அப்புற்றின் பக்கத்தில் உடைத்தார்கள் ஆணியடிக்கப் பட்டுக் கட்டப் பட்டுள்ள தறியில் தங்கள் யாகப் பசுவாகிய குதிரை இருப்பதையுங் கண்டார்கள். அது பார்த்த சகரபுத்திரர் குதிரையைக் கண்டதால் மகிழ்ச்சியும், அது கபிலன்பால் கட்டப் பட்டிருப்பதால் அவனே திருடியிருப்பான் என்ற மருட்சியும், உடையவர்களாய் உக்கிர கோபங்கொண்டு இச் சித்தனே கள்வன். இக்கிழவனே திருடன் என்று பல்வகையாகத் தூஷித்துப் பேசி அக்கபிலன் முன்னர் அமைந்துள்ள அமுத ரூபலிங்கத் துச்சியில் இருந்த அமிர்தத்தைக் கையால் எடுத்தார்கள்.

தன்னைப் பலவாறு நிந்தித்துக்கொண்டு அந்தத் தேவாமிர்தத்தை எடுக்க முயலும் அம் மூடர்களை மவுனியாய்க் கண்

முடித் தவமிழைத்துக் கொண்டிருந்த கபிலன் கண்டு அன்னார் அநுசிதப்பொருளைச் சீறியுருத்து நோக்க அவ்வனல் விழி நோக்கால் சகர மைந்தரனைவரும் சாம்பராயினர். இவ்வாறு புத்திரர் அழிவைக் கேட்ட சகரன் மிக நைந்தனன். பின்னர் அம்மன்னன் நம்மருளால் குதிரையொன்று பெற்று யாகத்தை இனிது முடித்து நம் பதவி யடைந்தனன். இதன் பின் சகரன் வழி வந்தவனான பகீரதன் என்பான் கடல் நீராடி நம்மைப் பூசித்துக் கங்கைபெற்று அச் சாம்பல் புழுதியை நனைத்துத் தருப்பணாதிகள் செய்ய அன்னார் யாவரும் உயிர்பெற்றுய்ந்து சுவர்க்கம் புகுந்தனர் என்று சிவபெருமான் உமையம்மைக்கு ஓதி யருளினர்.

## (9) கபிலன் அருட்பேறு.

அடிய னெடிது துன்பா லலமரு நிலைகண் டேநாம்
கடிதினின் மலைவ ளர்ந்த கன்னியே நின்னோ டன்று
படியிலிந் திரகீ லத்திற் பண்டுமே தோன் றிலிங்கத் தூடே
படர்மிகு கபிலன் காணும் படிவெளிப் பட்டா மன்றே.

வ தேவி சகராதியர் நலம் பெற்ற பின்னர் கருணைமிக்க கபிலன் அம்மைந்தர் அழுதக்கொள்ள நம்முருவின் மீது ஊகவைத் தமைக்காற்றாது அலமந்த காலை அந்தத் தேவாமுதப் பால்வண்ணமாம் அவ்விலிங்கத்தினின்று மெழுந்தருளி *மணவாளநம்பியெனப் போற்றப் பார்வதி பரமேசுவர சகளத் திருவுருவினமாய்த் திருக்கோலக் காட்சியளித்துத் துன்பந் துடைத்தவழி நம்மைத் தரிசித்துப் புளகாங்கிதங் கொண்டனன். உடல் பூரித்தான். மணவாள நம்பியே என்று மனமும் பூரித்தான். கண்ணீர் உகுத்தான், துதித்தான், தொழுதான், ஆடினான், பாடினான், ஆனந்த பரவசனுமாயினன்.

---

* கர்ப்பக்கிருகத்தில் எழுந்தருளி இருக்கும் பால்வண்ணநாத லிங்கத்திற்குப் பின்புறம் பார்வதி பரமசிவம் இருவரும் நின்ற கோலமாகக் காட்சி யளிக்கின்றார்கள். அவரே மணவாளநம்பி என்றழைக்கப்படுகின்றார். அவ்வுரு இன்றும் அவ்வாலயத்திற் காணலாம். இவ் அழகிய திருவோலக்கம் மூலலிங்கத்தை யண்மி மேற்பால் கருப்பக்கிருகத்தில் இன்றும் தரிசிக்க நற்பலன் விளைப்பதாய் இருக்கின்றது.





இவ்வாறாய விளைவுகள் யாவும் நீமறந்தனை போலும். அச் சமயம் தீத்தொழில் புரிந்த அம்மைந்தர்களால் நம் இலிங்கத்துக்கு ஒரு குறையேற்பட்டிருந்தும் அன்பால் நீ முன் கம்பையில் அணைத்த குறிகளைக் கொண்டுள்ளது போலவே அவர்கள் கோபாவேசங்கொண்டு சிதைத்த குறியினையும் நங்குறிக் கண் கொண்டுள்ளோம். எனினும் நாம் அவ்வமுதலிங்கமாம் பால்வண்ண மேனியினின்று எப்போதும் நம்மைத் தரிசிப்பார்க்கு இன்னருளே பாலித்தருள்வோம். உமா பார்வதி! எவனொருவன் நமதடியிணை நினைந்து அருளானந்தம் மூழ்கிக் காமியம் நீக்கி ஆகம வழியே நித்திய நைமித்தியங்கள் முதலியன புரிகின்றானோ, எவனொருவன் பேற்சண்டனவுங் கொண்டு சாந்திய சாந்தியா தீதங்களைக் கொள்கின்றானோ, எவனொருவன் சிவதீக்கை பெற்றுத் தன் குருநாதன் கூறியாங்கு வேதாந்த உயர் வாக்கியத்தின் உண்மையை விசுவாசிக்கின்றானோ, எவன் ஒருவன் பரகதியில் இச்சை வைத்து உபதேசம் உன்னி சமாதியிலமர்ந்து வினைதீர்ந்தவனாய் எம்பால் கபிலனைப்போல் உளமுருகி ஒழுகுவானோ அவனுக்கு நாம் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்த அரும் பொருளையுந் தெளிவித்தருள்வோமென்று சிவபெருமான் தேவிக்குபதேசித்தருளினர் என்று சூதமுனிவர் நைமிச முனிவர்களுக்கு உபதேசித்தார்.

## நூற்பயன்.

வேதநாயகி! இன்னும் இப்புராண பயனைச் சிறிதுரைக்குதும் கேட்பாயாக. இந்த ஒப்புயர்வற்ற உயரிய புனிதத் தன்மை வாய்ந்த தலம் தீர்த்தம் மூர்த்திப் பெருமைப் பிரதாபங்கள் உரையில் அடங்காதன. எனவே, இவ் விந்திரகீல மான்மியங் கேட்போர் சிந்திப்போர் இதில் உறைவோர் இதனைச் செப்பஞ் செய்தோர் எழுதினோர் வெளியிட்டோர் வெளியிடுவித்தோர் பூசிப்போர் வணங்குவோர் ஆதியோரைக் கண்டோர் கேட்டோர் எல்லாரும் நன்மையே எய்துவர். மறையவன் அன்போடு ஓதின் சதுர்மறைப் பொருள் முழுதும் ஓர்ந்துணர்ந்தோனே யாவன். அவன் நம் பதவியில் பன்னெடுங் காலம் வதிவோனுமாவன். மன்னவன் ஓதின் பொன்னும் பொருளும் மிகுந்தவனாய் நீண்ட நாள் செங்கோலோச்சி நம் முலகடைவன். வணிகன் ஓதியுணரின் தொழிலில் அபிவிருத்தி யடைந்து பொன் நிறைந்தவனாய் வாழ்ந்து முடிவில் நம் முத்தி யுறுவன். வேளாளன் ஓதியுணரின் வேளாண்மை செய்யுந்

தாளாளனைத் தானிய தவச சம்பன்னனும் ஐம்புலத்தாரும் திருப்திகொள்ள விருந்து ஓம்பி வாழ்ந்து, முனிவனாய், சிவன் முத்தனாய் விளங்கி நம் பதம் அடைவான். முனிவர் சித்தர் முதலாயினோரும் அவ்வாறே யாவர் என்று பால்வண்ணனாம் பரமபதி உரைத்தருள உமாமகேசுவரியாம் அம்மை சிவபெருமானை நோக்கிக் கருணைப் பெருங்கடலே நாமிருவரும் அப்புனித க்ஷேத்திரத்தில் சர்வ சதாகாலங்களிலும் பிரியாது விளங்கிச் சகல ஆன்மகோடிகளுக்கும் நலம் பாலிக்க வேண்டுமென்று விண்ணப்பிக்க இறைவன் இடபாரூடராய்ச் சத்தியோடு இந்திரகீலப்புரத் தெழுந்தருளி இப்போதுங் கூடக் காட்சி தந்து வேண்டினர் வேண்டியாங்கு வரமீந்து வருகிறார் என்று சூத புராணிகர் நைமிச முனிபுங்கவர்களுக்கு உபதேசித்தருளினர்.

இந்தப் பரிசுத்த மான்மிய சிரவணஞ் செய்த முனிவர்கள் யாவரும் ஆனந்த பரவசராய் அத்தலம் வந்து புராணத்திற் கூறியாங்கு நல்ல தீர்த்தங்களிற் படிந்து சிவனையும் அம்மையையும் ஆகம விதிப்படி அருச்சித்து முத்தியின்பந் துய்த்தனர். இவர்களேயன்றி கவுசிகன், தனஞ்செயன் முதலாயினோரும் பூசித்துப் பேறு பெற்றனர். கவுதமன் வாசபேய யாகஞ் செய்து நலம் பல வெய்தினன். எனவே நாமும் அப்பால் வண்ணநாதர், வேதநாயகி, பைரவமூர்த்தி இவர்களைப் பூசித்து இஷ்டசித்திகள் பெற்றுய்வோமாக.

## வாழ்த்து.

பூமியெலா மாமழைவிண் பொழிந்து வாழ்க
புரவலர்கள் பரவுசெங்கோல் புரந்து வாழ்க
மாமறையா கமநெறியே வளர்ந்து வாழ்க
வளம்பலவு முளந்திகழ மலிந்து வாழ்க
ஏமுறு தமிழ்வேத மினிது வாழ்க
இனியபல புராணவகை யெல்லாம் வாழ்க
நாமமிகு சிவபூசை யடியார் பூசை
நற்சைவ சித்தாந்த மெங்கும் வாழ்க.

(திருக்கழிப்பாலைப் புராண வசனச் சுருக்கம் முற்றிற்று.)

திருச்சிற்றம்பலம்.

---

135 135

சிவமயம்,
திருச்சிற்றம்பலம்.

# பன்னிரு திருமுறைப் பாராயணம் செய்வோர்க்குப் பயன்படும் பொருட்டு அத்திருமுறைப் பாசுரங்களிற் சில தொகுத்து இங்கே சேர்க்கப் பட்டிருக்கின்றன.

## சுந்தரர்—தேவாரம்.

எங்கே னுமிருந் துன்னடியே னுனை நினைந்தால்
அங்கே வந்தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே யென்வினையை யறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

## திருவாசகம்.

உடையாளுன் றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியாமுதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருக்கோவையார்.

ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயி ரீருருக்கொண்(டு)
ஆனந்த வெள்ளத் திடைதிளைத் தாலொக்கு மம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாதிவ் வணிகலமே.

## திருவிசைப்பா.

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே.

## திருப்பல்லாண்டு.

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

## திருமந்திரம்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

உ

# பதினோராந் திருமுறை

## திரு ஆலவாயுடையார் அருளிச்செய்த

## திருமுகப் பாசுரம்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற(கு)
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்(கு)
உரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லெனபா லன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

## திருத்தொண்டர் புராணம்.

(பெரிய புராணம்)

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்(று)
ஆதியாரரு ளாதலின் அஞ்செழுத்(து)
ஓதி யேறினார் உய்ய உலகெலாம்.

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்.

## சேக்கிழார் துதி.

தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கினாற் சொல்ல வல்லபிரா னெங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்.

திருச்சிற்றம்பலம்.

---



உ

# திருக்கழிப்பாலை தேவஸ்தானத்தில் உபயம் செய்துவரும், சிவபுண்ணியச் செல்வர்களின் பெயரும், கட்டளை, விபரமும்.

திருவாளர் ஆதி பழநியப்ப முதலியார் 1-வது A ஷெடியூலில் குறித்தபடி நித்தியபடி, சாயரக்ஷை காலம், அர்த்தயாம காலம் ஆலயத் தொண்டு செய்யும் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுத்தல் 13 கார்த்திகை, நடராஜர் அபிஷேகம் 6, தைப்பொங்கல், தைப்பூசத் தயிர்ப்பாவாடை, சிவராத்திரி, காலம் முதலியன. செய்துகொண்டு வந்தார்.

அவருக்குப் பிறகு ஷை யார் மூத்தமகன் ப இராஜரத்தினவேலு முதலியார் மேற்பார்த்து வந்தார். அப்போது நால்வர்க்கும் சேக்கிழாருக்கும், அவரவர்கள் திருநக்ஷத்திரத்தன்று அபிஷேக ஆராதனை செய்தார். அவருக்குப் பிறகு ஷை யார் அம்மான புத்திரர் சிவசங்கர சின்னைய முதலியார் ஷை தருமங்களை மேற்பார்த்து வருகிறார். இவர் காலத்தில் புதிதாகச் செய்துவரும் அறக் கட்டளைகள்.

1. தமிழ் வருஷப் பிறப்பு வழிபாடு, விநாயகருக்கு அபிஷேக அர்ச்சனை.
2. வைகாசிமீ மிருகசீரிஷமாகிய தனது ஜென்ம நக்ஷத்திரத்தில் ஸ்ரீ பால்வண்ணநாத சுவாமிக்கு அபிஷேக ஆராதனை அர்ச்சனை முதலியன.
3. புரட்டாசிமீ நவராத்திரி வேதநாயகியம்மாள், துர்க்கை அபிஷேகம் அர்ச்சனை முதலியன.
4. ஐப்பசிமீ கந்தஷஷ்டி சண்முகருக்கு அபிஷேக அர்ச்சனை முதலியன.
5. கார்த்திகைமீ அஷ்டமி திதியில் வயிரவர்க்கு அபிஷேக அர்ச்சனை முதலியன.
6. வருஷத்தில் ஒரு தடவை லக்ஷார்ச்சனை.
7. ஆதி பழநியப்ப முதலியார், ப. இராஜரத்தினவேலு முதலியார், ப சிவசங்கர முதலியார் இவர்கள் சிவபதமுற்ற நாட்களில் அபிஷேக ஆராதனை முதலியன
8. குருபெயர்ச்சி தினத்தில் தக்ஷிணாமூர்த்திக்கு அபிஷேக அர்ச்சனை முதலியன.
9. சனிப்பெயர்ச்சியன்று சனீஸ்வரருக்கு அபிஷேக அர்ச்சனை.
10. ஜய வரு கார்த்திகைமீ 21உ 6—12—64) ஸ்ரீ ஞானதண்டாயுதபாணி பிரதிஷ்டை முதலியன செய்தும் செய்துகொண்டும் வருகிறார்கள்.

1. ஆதி பழநியப்ப முதலியார் B ஷெடியூலில் குறித்தபடி.
2. சிவசங்கர முதலியார்,
3. சி. பழநியப்ப முதலியார் அவர்கள் செய்யும் கட்டளைகள். காலசந்தி, உச்சிக்காலம்; தீபாவளி அபிஷேகம், சிப்பந்திகளுக்குத் தீபாவளி, பொங்கல், இனாம்கள், மார்கழிமீ திருப்பள்ளி யெழுச்சி முதலியன.

 104820

1. ஆச்சான்புரம், பண்டாரி முதலியார் (ஆதி பழநியப்ப முதலியார் தங்கை சுந்தரத்தண்ணியின் கணவர்) பிரதோஷகட்டளை. பித்தர்புரம், சி. இராமலிங்க முதலியார் (இவர் ஆதி பழநியப்ப முதலியாரின் இளைய குமாரர் சிவசங்கர முதலியாரின் இரண்டாவது குமாரர்) இதை வார்சு முறைபற்றி, இவர் செய்து வருகிறார்.

2. பால் நைவேத்தியமும், சிவராத்திரியில் 25 ரூபாய் திட்டத்தில் அபிஷேக நைவேத்தியமும். தேவகோட்டை ரும. அரு. அரு. ரும. அருணாசலம் செட்டியார் வகையரு (இக் கோயிலைத் திருப்பணி செய்தவர்) செய்துவருகிறார்கள்.

3. தினம் தேசாந்திரிகட்டளை, மாதந்தோறும் ரேவதி நக்ஷத்திரத்தில் குளித்தளிகை நைவேத்தியம், அக்கினி நக்ஷத்திர அபிஷேகம், புரட்டாசிமீ நவராத்திரி விடையாற்றி உற்சவம், கார்த்திகைமீ முதல் சோமவாரத்தில் அபிஷேகா, நைவேத்தியம் முதலியன சிவபுரி இராமசாமி படையாச்சி குமாரர் நடராஜ படையாச்சி செய்து வருகிறார்.

1. வருஷப்பிறப்பு உற்சவம், நவராத்திரி முதல் நாள் உற்சவம், மேலைத் திருக்கழிப்பாலை சொக்கலிங்க முதலியார் (ஆதி பழநியப்ப முதலியாரின் தங்கை இரத்தினத்தண்ணியின் கணவர்) செய்துவந்தார் அதன் பிறகு ஷை யார் மகன் விஸ்வநாத முதலியாரும், அவருக்குப்பின் அவர் குமாரர் சாமியப்பா முதலியாரும் செய்துகொண்டு வருகிறார்.

2. சித்திராபௌர்ணமி, மேலைத்திருக்கழிப்பாலை குப்புசாமி முதலியார் மகன் பால்வண்ணநாத முதலியார் செய்து வருகிறார்.

3 அக்ஷய திருதியை, சிவபுரி சண்முகம்பிள்ளை குமாரர் செல்லையாப்பிள்ளை செய்து வருகிறார்.

4. விநாயக சதுர்த்தி, நவராத்திரி 2-ம், 3-ம் நாள்கள் கீழப்பரம்பை பாலசுப்பிரமணிய முதலியார் மகன் சிவலோக முதலியார் செய்து வருகிறார்.

5. நவராத்திரி 4, 5, 6, 7 நாட்கள் கீழப்பரம்பை மாணிக்க முதலியார் மகன சின்னையா முதலியார் செய்து வருகிறார்.

6. நவராத்திரி அம்பு போடும் உற்சவம், சிவபுரி S. நாராயணசாமி படையாசசி, M. முத்தையாராஜா

7. அன்னாபிஷேகம், மருதூர் சுப்பராய முதலியார் 1, இலந்தடிமேடு சுப்பையா முதலியார் 2.

8. கார்த்திகை முதல் சோமவாரம் எரி முருகப்ப முதலியார்.

9. கார்த்திகை இரண்டாவது சோமவாரம் இலந்தடிமேடு சுப்பையா முதலியார்.

10 கார்த்திகை 3-வது சோமவாரமும், பங்குனி உத்தரமும், வீரன்கோயில்திட்டு கோவிந்தசாமி படையாச்சி வகையரு.

11. கார்த்திகை 4-வது சோமவாரம் கீழப்பரம்பை சொக்கலிங்க முதலியார் குமாரர் சுந்தரராஜு முதலியார் வகையரு.

12. தைப்பூசம், அன்னத்தண்ணி (கீழப்பரம்பை முருகப்ப முதலியார் மனைவி.) இவ்வாறு உபயம் செய்து வருகிறார்கள்.

139

## பிழை திருத்தம்.

| முன் எண். பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 30 | திருக்கழிப்பாலையிலுன் | திருக்கழிப்பாலையினுள் |
| 4 | 12 | எழியாரிமையோ | கெழியாரிமையோ |
| 7 | 9 | காலி | காவி |
| 13 | 22 | ஒளிவிடடு | ஒளிவிட்டு |
| 16 | 1 | சஙரீனும் | சங்கீனும் |
| 22 | 17 | குறதி | குருதி |
| 23 | 1 | அமைநதது | அமைந்தது |
| ,, | 8 | கற்றோ | கற்றோர் |
| 25 | 6 | மாதி | மாமதி |
| 28 | 8 | நீஙகி | நீஙகி |
| 34 | 6 | பாரட்ட | பாராட்ட |
| 35 | 3 | உமமை | உம்மை |
| ,, | 10 | எனது | எமது |
| ,, | ,, | நாயாகிய | நாயகியாகிய |
| ,, | 11 | தத்தற | தத்துறவு. |
| ,, | 16 | நாயகன் | நாயகர் |
| ,, | 27 | என்பவற்று | என்பவற்றுனு |
| ,, | 30 | அத்துவிதன் | அத்துவிதம் |
| 36 | 15 | தீர்து | தீய்ந்து |
| 38 | 3 | நினற | நின்ற |
| ,, | 23 | அங்குச | அங்குச் |
| 39 | 25 | தென்றிசை | தென்முக |
| 40 | 22 | வயிரவக்கடவுட்கு | வயிரவக்கடவுளர்க்குப் |
| 42 | 1 | எனை | ஏனை |
| ,, | 7 | எனின் | எனின் |
| ,, | 20 | எனனுது | என்னுது |
| 43 | 12 | காலததாற் | காலத்தாற் |
| ,, | 18 | ணைமை | ண்மை |
| 44 | 24 | உணர்த்ததும் | உணர்த்தும் |
| 46 | ,, | தொனறன்று | தொன்றன்று |
| 49 | 9 | சேறும். | சேறும் |
| 51 | 35 | மென்பது | மென்பது |

Q23:38-91193
N54²
140

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 54 | 16 | நித்தமாய | நித்தமாய் |
| ,, | 25 | மூன்று | மூன்றும் |
| 55 | 15 | வலியுறுத்றுதலின் | வலியுறுத்துதலின் |
| ,, | 25 | ஈண்டு | ஈண்டுக் |
| 58 | 11 | என | என. |
| 60 | 24 | படைக்குமாறினி | படைக்குமாறி |
| 60 | 21 | இன்ரோரன்ன | இன்னோரன்ன |
| 64 | 21 | பயின்னறிந்த | பயின்றறிந்த |
| 65 | 13 | நோக்நன் | நோக்கன் |
| 66 | 3 | காக்கனையே | காத்தனையே |
| 74 | 1 | சங்கதத்தினும் | சங்கீதத்தினும் |
| ,, | 5 | தாக்தார் | தாக்தார் |
| ,, | 10 | கோட்டதுப் | கோட்டத்துப் |

பின் எண்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 10 | செக்தெற் | செக்கெற் |
| ,, | 28 | யாாந்தகலும் | யார்ந்தகலும் |
| 24 | 19 | வழியா | வழிபா |
| 25 | 2 | நன்ளுளதாம் | நன்குளதாம் |
| 27 | 24 | அறிவையே | அரிவையே |
| ,, | 26 | அறிதுணர் | அரிதுணர் |
| 33 | 14 | எனவாம் | எனவாம் |
| ,, | 22 | யுடனனைக் | யுடனனைக் |
| ,, | 24 | பத்து | பத்று |
| 41 | 1 | துன்பங் | துன்பம் |
| 54 | 24 | ஒருக்குகூடி | ஒருக்குகூட |
| 56 | 2 | அதுசிதம் | அநுசிதம் |
| ,, | 14 | ம்லைவளர்ந்த | மலைவளர்த்த |
| ,, | 24 | மணவான | மணவாள |
| 57 | 16 | உன | உள |
| 58 | 4 | அவவாறே | அவ்வாறே |

இவையல்லாத தவறுகளையும் ஒற்றர்கள் பதியாவிடங்களையுக் தயைசெய்து திருத்திப் படித்துக்கொள்ளுமாறும் வேண்டுகின்றனம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருப்புகழ்.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன்—அடிபேணி
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை—கடிதேகும்.
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய—மதயானை
மத்தள வயிறனை யுத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு—பணிவேனே.
முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய—முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடிசெய்த—அதிதீரா.
அத்துயர் அதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை—இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள்—பெருமாளே.

## கந்தர் அநுபூதி.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
* தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

(அருணகிரியார்)

உ

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்.

## மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

தொடுக்குங் கடவுட் பழம் பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

## முத்துக்குமரசுவாமி பிள்ளைத்தமிழ்.

உலகு குளிர வெமது மதியி லொழுகு மமுத கிரணமே
உருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழுந லுதயமே
கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி னிலயமே
அறிவு ளறிவை யறியு மவரு மறிய வரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யனைய மதலை வருக வருகவே
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே.

(குமரகுருபரர்)

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியா ரெல்லாம்.

(கச்சியப்பர்)

திருச்சிற்றம்பலம்.